# முத்துலட்சுமி ராகவன்



# எங்கிருந்தோ ஆசைகள்...

## பாகம் – 2

# முத்துலட்சுமி ராகவன்
# எழுதிய

# எங்கிருந்தோ ஆசைகள்...

## பாகம் - 2


**லட்சுமி பாலாஜி பதிப்பகம்**

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி. நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் : bchandar24@yahoo.com

website : www.muthulakshmiraghavan.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# எங்கிருந்தோ ஆசைகள்... பாகம் - 2

உரிமை : **ஆசிரியருக்கு**


| | | |
|---|---|---|
| பொருள் | : | நாவல் |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2013 |
| வெளியீடு | : | **லட்சுமி பாலாஜி பதிப்பகம்**<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி. நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |
| நூலின் அளவு | : | 1x8 கிரவுன் |
| தாள் | : | 11.6 kg புக் பிரிண்ட் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| மொத்தப்பக்கங்கள் | : | 400 |

**விலை : ₹ 200/-**

லேசர் டைப் செட் : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

அச்சிட்டோர் : **கணேஷ்பாலாஜி அச்சகம்,** சென்னை–6.

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது.... இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்...

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ... திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

இப்படிக்கு
முத்துலட்சுமி ராகவன்

# ஆசிரியர் கடிதம்...

## நிலாச் சோறு...

சின்னஞ்சிறு வயதில் நிலாச் சோறு சாப்பிடும் அனுபவத்தை என் பிறந்த வீடு எனக்கு உணர்த்தியது.. பௌர்ணமி இரவுகளில் மொட்டை மாடியில்.. நடுவில் அம்மா அமர்ந்து எல்லோருக்குமான உணவு வகைகளைத் தட்டில் பரிமாறிக் கொடுக்க.. அம்மாவைச் சுற்றி அரை வட்டமாக அமர்ந்து நிலாச் சோறை சாப்பிடுவோம்.. என் பிறந்த வீடு எனக்கு உணர்த்திய 'நிலாச் சோறு..' அனுபவத்தை என் மகனுக்கு உணர்த்த என்னால் முடியவில்லை.. திருமணத்திற்கு பின்பு நிலவொளியில் சோறுண்ணும் அனுபவம் எனக்கு வாய்க்காமலே போய் விட்டது...

அதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம்.. நிற்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருந்த எங்களின் வாழ்க்கை முறை காரணமாயிருக்கலாம்.. திருமணமான புதிதில் குடியிருந்த வீடு வாடகை வீடாக இருந்ததும் காரணமாயிருக்கலாம்.. இருந்தும்.. எங்களுக்கென்று சொந்த வீடு வந்த பின்பும் நிலாச் சோற்றை நான் கேட்டதில்லை.. அந்த நினைவை என் உடல்நிலை மறக்கடித்து விட்டது...

கடந்து போன நாள்களில் எனை விட்டுப் போனது நிலாச்சோறு மட்டும்தானா...?

அபத்தமான பேய் கதைகளுடன் அன்பைப் பொழிந்த பாட்டி.. எனக்காக நல்லெண்ணை ஊற்றிய வெள்ளைச் சாம்பார் தயாரித்து கொடுத்த பாட்டி... அந்தப் பாட்டியுடன் ஒரு தடவை பக்தி திரைப் படத்திற்குப் போய் விட்டேன்.. திரைப் படத்தையே பார்த்திராத பாட்டி பண்ணிய அட்டூழியத்தையும்.. அது பயமுறுத்திய நள்ளிரவு குடுகுடுப்பைக்காரனைப் பற்றிய நினைவுகளையும் சேர்த்து நான் எழுதிய சிறுகதைதான் 'தூங்கா விளக்கு...'

அந்தச் சிறுகதை 'தேவி' வார இதழில் பிரசுரமானது..

அந்தப் பாட்டி இப்போது என்னுடன் இல்லை.. பேதமை நிறைந்த அதன் பேச்சுக்கள் மட்டுமே நினைவில் இருக்கின்றன..

என் அப்பாவைப் பெற்ற பாட்டியின் முகத்தையாவது என்னால் கடைசியாக ஓர் முறை பார்க்க முடிந்தது.. என் அம்மாவைப் பெற்ற தாத்தாவின் முகத்தைப் பார்க்கவே இல்லை.. அவர் இறந்த போது நான் உயிருக்கு போராடிய நிலையில் திருச்சி சுந்தரம் ஹாஸ்பிடலில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தேன்.. எனக்கு துணையாக இருந்த அம்மாவை வேறு ஒரு காரணம் சொல்லி அழைத்துக் கொண்டு போனார்கள்.. என் தாத்தா இறந்து விட்ட விவரம் எனக்கு ஒரு வருடம் கழித்து அவரது 'திதி' வந்த போதுதான் தெரிந்தது...

தாத்தா அருமையானவர்.. பாட்டிக்கு நேர் எதிரான குணாதிசியம் கொண்டவர்.. இவரிடம் அபத்தமான பேய் கதைகள் இருக்காது.. ஆழமான பக்தி இருக்கும்.. ஆன்மிகத்தை அறிய வைத்தது தாத்தாதான்.. இதிகாசங்களில் ஈடுபாடு உடையவர்.. ராஜாஜி எழுதிய 'சக்கரவர்த்தி திருமகனை'யும்.. 'வியாசர் விருந்தையும்..' நான்தான் தாத்தாவுக்கு படித்துக் காட்டுவேன்.. அப்போது விழுந்த வித்து பிற்காலத்தில் நான் எழுத ஆரம்பித்தபோது விழுதாக மாறி நின்றது...

தாத்தா பெற்ற என் பெரிய மாமா.. அவரை விட அருமையானவர்.. இவரிடம் ஆழ்ந்த நேசம் எனக்கு உண்டு.. என் வேலை சம்பந்தமான நெருக்கடிக்கு ஆலோசனை கேட்க இவரைத் தேடிப் போனேன்.. பெரிய ஆபிசராக இருந்து பணி ஓய்வு பெற்றவர் கிராமத்தில் இருந்தார்.. வயதான அத்தை எனக்காக கவனம் எடுத்து சமைத்துப் போட்டதை அவர் விரும்பிப் பார்த்தது இன்னமும் என் கண்ணுக்குள் நிற்கின்றது.. அன்று அவர் காட்டிய வழியில் சென்ற நான் அந்த நெருக்கடியைக் கடந்தேன்.. கால ஓட்டத்தில் அவரை மறந்த போது ஓர்நாள் சென்னைக்கு ஓடினோம்.. அவர் முகத்தைப் பார்த்தேன்.. என்னுடன் பேச முடியாத மீளாத் துயிலில் அவர் இருந்தார்..

மாமா அம்மாவுடைய அண்ணன்.. என் சித்தப்பா என் அப்பாவுடன் பிறந்தவர்..

எல்லோரையும் வசீகரிக்கும் ஓர்விதமான கம்பீரம் என் சித்தப்பாவிடம் குடி கொண்டிருக்கும்.. அவர் இருக்குமிடத்தில் அவரே நாயகனாக இருப்பார்.. எப்படி அவர் இதை சாத்தியமாக்கினார் என்று இதுவரை எனக்குத் தெரியவில்லை...

அவர் ஒரு ஆசிரியர்.. மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்தவர்.. அவர் நடந்து வரும் போது… வகுப்பு வித்தியாசம் பார்க்காமல் எதிர்படும் மாணவ.. மாணவிகள்.. முகம் நிறைய சிரிப்போடு அவருக்கு வணக்கம் சொல்வார்கள்.. அந்த தோழமையை பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை உண்டாக்கியவர் அவர்…

அவருக்கும் எனக்கும் இருந்த சொந்தத்தில் சில மனத்தாங்கல்கள் இருந்தன.. எனக்கு என் சித்தப்பாவை மிகவும் பிடிக்கும்.. ஆனாலும் கூட எங்களுக்குள் மனதளவில் இடைவெளி இருந்தது.. அதனால்தானோ என்னவோ.. என் சித்தப்பா மரணப் படுக்கையில் இருக்கிறார்.. என்னைக் கடைசியாக ஒருமுறை பார்க்க விரும்புகிறார் என்று மற்றவர்கள் சொன்னதை நான் நம்ப மறுத்தேன்…

ஆஜானுபாகுவான.. கம்பீரமான… என் சித்தப்பாவை நோய் அண்டுமா…?

இந்த நம்பிக்கை.. எழும்பும் தோலுமாக.. வாழ்வின் கடைசி நொடிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நோயாளியாக என் சித்தப்பா கட்டிலில் அமர்ந்திருப்பதைப் பார்த்தபோது உடைந்து சிதறியது…

அன்று நான் அவரைக் கட்டிக் கொண்டு அழுத போது சிந்திய கண்ணீர் வெள்ளத்தில் என் சித்தப்பாவின் கண்ணீரும் சேர்ந்து கலந்தது… என் மகனை விசாரித்தார்.. பாசத்துடன் அவனிடம் 500 ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார்… இன்றும் அந்த ரூபாய் நோட்டை நான் பத்திரமாக வைத்திருக்கிறேன்…

அதுதான் நான் என் சித்தப்பாவை கடைசியாக பார்த்தது…

வாழ்க்கையின் சுற்றில் நான் இழந்து விட்ட உறவுகளை நினைத்துப் பார்க்கும் போது… ‘நிலாச் சோறு’ அனுபவத்தை இழந்து விட்டது ஒன்றும் பெரிதாக தோன்றவில்லை..

– நட்புடன் –

**முத்துலட்சுமி ராகவன்**

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
website : www.muthulakshmiraghavan.com

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# 'எங்கிருந்தோ ஆசைகள்'

பாகம் - 2

## 36

**கைதொட்ட கள்வனே...**
**என் கணவனாக ஆசைகொண்டேன்...**

**சு**வர் கடிகாரத்தின் ஒலி 'டிக்.. டிக்..' என்று கேட்டுக் கொண்டிருந்தது.. தெருவில் சந்தடி அடங்கிய பின்பும் லேசான நடமாட்டம் தென்பட்டது.. தூரத்தில் சைக்கிளின் பின் பக்கத்தில் பால்கேனைக் கட்டியிருந்த பால்காரன் வருவது தெரிந்தது.. இரவு நேரத்து மதுரையின் நிசப்தமில்லாத நிசப்தத்தை ரசிக்க முடியாமல் ஜன்னல் கம்பிகளில் சாய்ந்து நின்றிருந்தாள் காவ்யா...

அவள் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவள் கன்னம் தொட்டு நனைத்து.. ஜன்னல் கம்பிகளில் விழுந்து தெறித்துக் கொண்டிருந்தது.. சப்தமில்லாமல் அழுதவளின் மனதில் பாரமில்லாததை அவள் கவலையுடன் உணர்ந்தாள்...

அவள் மனதில் துக்கம் இருந்தது.. அந்தத் துக்கத்துக்குள் கடலளவு சந்தோசமும் கலந்திருந்தது... அது ஏனென்று தெரிந்திருந்ததால்தான் அவள் மௌனக் கண்ணீரை உகுத்துக் கொண்டிருக்கிறாள்..

மாலையிலேயே அவள் முகவாடலைக் கண்ட அன்னபூரணி...

“ஏண்டி ஒரு மாதிரி இருக்கிற..? காய்ச்ச.. கீய்ச்ச.. அடிக்குதா..?” என்று கேட்டபடி மகளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்...

யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டிருந்த கண்ணதாசன் திரும்பிப் பார்த்தான்.. தங்கையின் முக வாடலில் எதையோ தேடி அலைந்தன அவன் கண்கள்.. காவ்யா அவன் கண்களைச் சந்திப்பதைத் தவிர்த்தாள்.. அவன் புருவங்கள் முடிச்சிட்டன...

அழகர் கோவிலில் இருந்து திரும்பியதிலிருந்து அவள் இப்படித்தான் இருக்கிறாள் என்ற நினைவில் செல்போனை அணைத்துவிட்டு அவளருகில் வந்தான் கண்ணதாசன்...

“காய்ச்சலாம்மா..?” காவ்யாவைப் பார்த்தபடி அன்னபூரணியிடம் வினவினான்...

“இல்லையேடா தம்பி.. நெத்தி சில்லுன்னு இருக்கே.. இதுக்குத்தான் கடையைத் தவிர மத்த இடத்துக்குப்

போகாதன்னு நான் தலப்பாடா அடிச்சுக்கிறது.. நான் சொல்றதை யாரு கேட்கிறாங்க..? என்னமோ இவள நானு வீட்டுக்குள்ளப் போட்டு பூட்டி வைக்கிறதப் போலயில்ல பேசி வைக்கிறா.. நீயும் சிபாரிசுக்கு வர்ற.. இப்பப்பாரு.. அலைச்சல் தாங்காம வாடிப் போய் வந்து நிக்கிறா... இவ உடம்புக்கு அலைஞ்சா ஆகுமா..? வேலைக்குப் போனோமா.. வீட்டுக்கு வந்தோமா.. ஒரு வாய் கஞ்சியைக் குடிச்சோமான்னு இருக்கனும்.. அத விட்டுட்டு.. கூட வேல பாக்கறவன் கல்யாணம் பண்ணிக்கிறான்னு விட்ட விடிகாலையிலயே அழகர் கோவிலைப் பாக்க ஓடக் கூடாது.. அவனுக கல்யாணம் பண்ணிக்கிட்டா நமக்கு என்ன... இல்ல.. காதைக் குத்திக்கிட்டாத்தான நமக்கு என்ன.. நம்மளுக்கு நம்ம சோலின்னு இருந்துட்டுப் போகாம பெரிய மனுஷிபோல இவ கலந்துக்கப் போனாளாம்... இப்ப காய்ச்சல் இல்லாத காய்ச்சலில விழுந்துட்டு வந்திருக்காளாம்.. இத எங்கே போய் சொல்றது.. இந்தாடி.. சூடாக் காபித் தண்ணியவாது குடி...”

‘காய்ச்சல் இல்லாத காய்ச்சல்...’

தாயின் வார்த்தைகளில் எதையோ உணர்ந்தவனாக தங்கையின் முகத்தை கூர்ந்து பார்த்தான் கண்ணதாசன்..

அதே வார்த்தையில் அலை பாய்ந்த அவளும்.. தமையனின் முகத்தை கலக்கத்துடன் பார்த்தாள்..

“என்னம்மா..?”

“ஒன்னுமில்லேண்ணே...”

“ஏன் வாடிப் போயிருக்க..?”

“அலைச்சல்ண்ணே...”

“கல்யாணத்துக்குத்தான போன..? மதியமே வந்திருக்கலாமே..?”

“வந்ததுதான் வந்தோம். மலை மேல ஏறி.. பழமுதிர் சோலையில முருகனையும் பார்த்துட்டுப் போகலாம்ன்னு பாவனா சொன்னா...”

“கேட்டுக்கிட்டியாடா கண்ணா.. இவ ஊரைச் சுத்தியிருக்கா...”

“இல்லம்மா.. மலையைத்தான் சுத்தியிருக்கு.. விடு போய் ரெஸ்ட் எடுக்கட்டும்...”

“விடாம என்னடா பண்ணப்போறேன்..? இவள வீட்டக் கூட்டச் சொல்லப் போறேனா..? பண்டபாத்திரத்தை தேய்ச்சுக் கழுவச் சொல்லப் போறேனா..? இல்ல.. அடுப்பங்கரைக்குள்ள போயி ஆக்கிப் போடுடின்னு தான் சொல்லப் போறேனா...? அத்தனை வேலையயும் நானே பார்த்துக்கிட்டு இவள சும்மாதான இருக்கச் சொல்றேன்..? இவ அதையும் செய்யாம நோக்காட்ட இழுத்துக்கிட்டு வந்தா கோபம் வராம எப்படிடா இருக்கும்...?”

“சரிசரி.. எல்லாத்தயும் நாள பின்ன பேசிக்கலாம்.. நீ போ காவ்யா.. ரெஸ்ட் எடு..”

அன்னபூரணியிடமிருந்து காவ்யாவுக்கு கண்ணதாசன் விடுதலை வாங்கிக் கொடுத்தான்.. நன்றியுடன் தமையனைப் பார்த்து விட்டு மாடிப்படிகளில் சோர்வாக ஏறிப் படுக்கையில் விழுந்தாள் காவ்யா.. கண்களை மூடியவளுக்குள் தூக்கம் வரவில்லை.. துக்கம்தான் வந்தது.. அந்தத் துக்கம் அவளுக்கு உவப்பானதாகவும் இருந்தது...

‘நோக்காடு...’

நோயைக் குறிக்கும் மதுரை வட்டாரத்தின் சொல்..!

காவ்யா எந்த நோக்காடில் விழுந்திருக்கிறாளோ.. அந்த நோக்காடை அவள் சந்தோசமாக உணர்கிறாள் என்பதை அறிந்தால் அன்னபூரணி என்ன சொல்லுவாள்..?

இரவு உணவை மாடிக்கே கொண்டு வந்த தாயின் கரிசனத்தில் நெகிழ்ந்து விட்டாள் காவ்யா...

போலியான கடுமையுடன்.. மகளை உருட்டி மிரட்டியபடி.. சாப்பாட்டைப் பிசைந்து ஊட்டி விட்ட தாயின் பாசத்தில் நனைந்தபடி.. தாய்ப்பறவையின் சிறகுக்கடியில் ஒன்றியிருக்கும் சேய்ப் பறவையாக சாப்பிட்டு முடித்தாள் காவ்யா...

“உன்னையெல்லாம் நாலு போடு போட்டாத்தான் என் மனசு ஆறும்டி.. சொல் பேச்சக் கேக்கறியா..?”

அன்னபூரணி எழுந்து கொள்ள முனைந்தபோது...

“அம்மா..” என்று அவள் கைபற்றித் தடுத்தாள் காவ்யா...

“ராணி மங்கம்மாவுக்கு இன்னும் என்ன வேணுமாம்..?” அன்னபூரணி பொய்யாக அதட்டினாள்..

‘ராணி மங்கம்மா...’ காவ்யாவின் உடலில் லேசான அதிர்வு தோன்றியது.. அவள் மனதை ஊடுருவும் சங்கதிகளை உணராமலே அன்னபூரணி உணர்ந்து கொள்வதின் மாயமென்ன என்று அவளுக்கு பிடிபடவில்லை..

“உன் மடியில நான் படுத்துக்கவாம்மா..?” இறைஞ்சும் குரலில் கேட்டாள் காவ்யா...

“என் மகளுக்கு வயசு திரும்புதாக்கும்..?”

அன்னபூரணி மகளை மடிசாய்த்துக் கொண்டாள்.. தாயின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்ட மகளின் முடி கோதி விட்டவளின் முகத்தில் தாய்மையின் பரிவு பொங்கி வழிந்தது...

தாயின் இடுப்பை வளைத்திருந்த காவ்யாவின் மனதில் தவிப்புப் பெருகியது.. கட்டுக் காவலுடன் வளர்ந்த

மகளின் மனதில் எந்த யூதம் புகுந்திருக்கிறது என்பதை அறிந்தால்.. அன்னை என்ன சொல்லுவாளோ... என்று அவள் மனம் நொந்தாள்...

ஒருவழியாக மகளைத் தட்டிக் கொடுத்துத் தூங்கப் பண்ணிவிட்டு கீழே இறங்கிப் போன அன்னபூரணி.. எதிரே படியேறிவந்த மகனிடம்...

“ஆளுதான் வளந்திருக்கா.. ஆனாலும்.. இன்னும் பச்சப்புள்ளயாட்டம்தான் இருக்கா.. இவளக் கல்யாணம் கட்டிக் கொடுத்தா போகிற வீட்டில எப்படித்தான் குப்பை கொட்டப் போறாளோ...” என்று அங்கலாய்த்தாள்...

“அதுக்காக.. கல்யாணம் பண்ணாமலே நாம வைச்சிருக்க முடியுமா..?” என்றான் கண்ணதாசன்...

“கண்ணா.. நீயாடா இதைச் சொல்ற...?”

அத்தனை நாள்களாக தங்கையின் திருமணப் பேச்சை எடுத்தாலே அதைத் தள்ளிப்போட்டு விடும் மகனைப் பூரிப்புடன் பார்த்தாள் அன்னபூரணி...

“நான் தான் சொல்றேன்...” என்ற கண்ணதாசனின் மனதில் சஞ்சலம் தோன்றியிருந்தது.. அவன் முகம் பார்ப்பதை தவிர்த்த தங்கையின் முகத்தில் புதிதான எதையோ கண்டிருந்தான் அவன்...

‘இவ பழைய காவ்யாவா இல்ல..’

நிச்சயத்துடன் அவன் நினைத்தான்.. பழைய காவ்யா அவளுடைய அண்ணனை முறைப்பாள்தான்.. ஆனால் அவன் பார்வையைச் சந்திக்க அஞ்ச மாட்டாள்.. எடுத்தெரிந்து பேசுவாள்தான்.. அந்தப் பேச்சை யோசிக்காமல் பேசுவாள்.. இப்படி பேசமுடியாமல் திக்கித் திணற மாட்டாள்...

‘என்னவோ நடந்திருக்கு...’

அவன் சஞ்சலத்துடன் தங்கையின் அறைக்கதவைப் பார்த்தான்.. அது அவளின் மனத்தைப் போலவே இறுக்கமாக மூடியிருந்தது..

மூடப்பட்டிருந்த தங்கையின் மனதிற்குள் ஒளிந்திருக்கும் எண்ணங்கள் என்னவாக இருக்கக்கூடும் என்ற சிந்தனையுடன் அவன் தூங்கப் போனான்..

தூங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது காவ்யா மட்டும்தான்..

படுத்தவுடனே உறங்கி விடுவதற்கு வரம் கிடைத்திருக்க வேண்டும்.. அந்த வரம் சில மாதங்களுக்கு முன்பு வரை காவ்யாவுக்கு கிடைத்திருந்தது.. இப்போதோ.. அந்த வரத்தை தொலைத்து விட்டவளாக.. தூக்கத்தை

தொலைத்து விட்டு.. அவள் தூக்கமின்றி தவித்துக் கொண்டிருக்கிறாள்...

எப்போது அவளின் தூக்கம் தொலைந்து போனது என்பதை நினைத்துப் பார்த்தாள் காவ்யா...

என்று அர்ஜீன் என்ற கம்பீரமான ஆண் மகனை அவள் சந்தித்தாளோ.. அன்றிலிருந்துதான் அவளின் தூக்கம் தொலைந்து போனது என்பதை அவள் மனம் ஓர் அதிர்வுடன் நினைத்துப் பார்த்தது...

'எவ்வளவு தைரியமா என்னைத் தொட்டுட்டான்...'

அவள் உடல் நடுங்கியது.. அர்ஜீன் தொட்ட அந்த வினாடிகளில் உறைந்து போனவளால் படுக்க முடியவில்லை.. எப்படி அன்னபூரணியின் கைகளால் சமைக்கப்பட்ட சுவை மிகுந்த சாப்பாட்டை அவளால் உண்ண முடியாமல் போனதோ.. அதைப் போல.. திறந்திருந்த ஜன்னலின் வழியாக வந்த தென்றல் காற்றின் குளுமை அறை முழுவதும் நிரம்பியிருந்தும் அவளால் தூங்க முடியாமல் போனது...

*'தூண்டிற் புழுவினைப் போல் – சிறு*
*சுடர் விளக்கினைப் போல்*
*நீண்ட பொழுதாக*
*என் நெஞ்சம் துடிக்குதடி...'*

மனதிற்குள் பாரதியின் பாடல் ஒலித்தது... எழுந்து ஜன்னலருகே சென்றாள்.. கம்பிகளில் சாய்ந்தாள்.. கட்டுக்குள் அடங்காமல் தறிகெட்டுப் பாயும் மனதை அடக்க முடியாதவளாக கண்ணீரைப் பெருக்கியபடி.. அன்றைய மாலை நேரத்து மயக்கத்தின் நினைவில் புதைந்து போனாள்...

அவளைத் தொட்டு இழுத்து.. முரட்டுத்தனமாக கட்டித்தழுவி.. அவளுடைய உதடுகளில் தன் உதடுகளைப் பதித்து அழுத்தமான முத்தத்தை அர்ஜீன் கொடுத்தபோது காவ்யா நிலை குலைந்து போனாள்...

'என்ன..? இவன் என்ன செய்கிறான்..?'

அவள் நடந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொள்வதற்குள் அர்ஜீன் முன்னேறி விட்டான்.. அவளை இறுக்கி அணைத்து அவள் கழுத்தில் முகம் புதைத்து முத்தம் பதித்தான்...

காவ்யா உடல் நடுங்கிப் போனாள்.. கழுத்தில் உணர்ந்த அவன் மூச்சுக் காற்றின் வெப்பம்.. நடந்து கொண்டிருப்பது கனவல்ல.. நனவு.. என்பதை அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது..

அவள் என்ன செய்ய வேண்டும்..?

யோசிக்க திராணியில்லாமல் அவள் மூளை செயலற்று அந்த நொடியின் மயக்கத்தில் கலந்து நின்ற போது.. முகம் விலக்கிய அவன்.. அவள் முகத்தை கைகளில் ஏந்தி.. அவள் முகமெங்கும் ஆவேசமான முத்தங்களைப் பதித்தான்...

காவ்யா அலைமேல் துரும்பானாள்.. அனல் மேல் மெழுகானாள்.. அவன் கை தொட்டவுடன் விலக்கி விட முடியாமல் தொய்ந்து.. பற்றுக்கோட்டைத் தேடும் கொடிபோல அலைக்கழிந்து அவன் மீதே சரிந்தாள்..

"காவ்யா.." வெற்றியாளனாக அவன் அவள் காதுகளில் முணுமுணுத்தான்..

"நானாக நானில்லைடி..."

இதுஎன்ன.. அவள் சொல்ல வேண்டிய வார்த்தைகளை அவன் சொல்லுகிறானே என்றிருந்தது அவளுக்கு...

"உன்னை எனக்கு அந்த அளவுக்கு பிடிச்சிருக்குடி.. நீயில்லாம நானில்லைன்னு நினைக்கிற அளவுக்கு பிடிச்சிருக்கு.. உன்னைத் தேடித்தான் மதுரைக்கு நான் ஓடி வருகிறேண்டி.. நீ எனக்கு வேணும் காவ்யா..."

அவள் காதோரமாக கிசுகிசுத்த அவன் குரலில் காற்றில் கரையும் கற்பூரமாக அவள் கரைந்து கொண்டிருந்த

போது.. அவன் அவளை விடுவித்தான்.. தடுமாறி நின்றவளின் கலைந்த முடியை சீர்செய்து அவள் நெற்றியில் முத்தமிட்டான்..

“நான் போகனும்.. இல்லேன்னா தேவையில்லாத சந்தேகம் வரும்..” அவள் கன்னத்தில் தட்டினான்...

“இன்னைக்கு இதைச் சொல்லியே ஆகனும்னு நான் தீர்மானிச்சிருந்தேன் காவ்யா.. கண்ணாமூச்சி விளையாட்டு போதும்.. எனக்கு நீ வேணும்.. என் காதலியா.. எனக்கே உரிமையானவளா.. என்னைத் தேடி.. இந்த மதுரையில எனக்காக நீ காத்திருக்கனும்.. அந்த நினைவோடு உலகத்தின் எந்த மூலையில் நான் இருந்தாலும்.. உன்னைத் தேடி ஓடி வரனும்டி..”

அவள் பதிலை எதிர்பார்க்காமல் அவன் போய் விட்டான்.. புயலில் சிக்கிய பூங்கொடியாய் அதிர்ந்து போனவளாக காவ்யா உட்கார்ந்து விட்டாள்...

# 37

*கன்னி மனதின் சலனங்களை - நீ*
*கண்டு கொள்ள ஆசைகொண்டேன்..*

**கா**வ்யாவின் கைவிரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.. விரல்களை இறுக்கிப் பிடித்து.. அவற்றைச் சமனப்படுத்த முயன்று தோற்றாள் அவள்.. கலகலத்துப் பேசிச் சிரித்தபடி வேனுக்குள் ஏறிய பாவனா அவளின் அரண்டு போன தோற்றத்தைக் கண்டதும் புருவங்களை உயர்த்தினாள்...

“என்னடி.. பேயடிச்சதைப் போல உட்கார்ந்திருக்க..?”

பேய்தான் அடித்துவிட்டது என்று மனதிற்குள் துக்கப்பட்டாள் காவ்யா... அவளின் உடலெங்கும் பரவியிருந்த இன்ப அலைகளின் ஆர்ப்பரிப்பிலிருந்து இன்னும் அவள் மீளவில்லை.. பார்வைகள் புதிதாய்.. பரிபாஷைகள் புதிதாய்.. புதியதோர் உலகத்தில் இருந்தவளுக்கு.. அந்த ஸ்பரிசங்கள் புதிதாக மிரட்சியை வரவழைத்தன...

*“இதற்கு இது என்று இங்கு*
*யார் நினைத்தது...?*
*கதை இங்கு வந்து முடியுமென்றால்*
*யார் தடுப்பது..?”*

வேனுக்குள் பாடல் பரவ ஆரம்பித்தது.. காவ்யாவின் நெற்றியில் கை வைத்துப் பார்த்த பாவனா...

“நாம போகும்போது நல்லாத்தானே இருந்தா..?” என்று அர்ஜீனிடம் கேட்டு வைத்தாள்..

‘நீதாண்டி போன.. அவன் போன வேகத்தில் திரும்பி வந்திட்டான்..’ மனதில் நினைத்ததை வெளியில் சொல்ல முடியாமல் உதட்டைக் கடித்தபடி வேனின் தரைத்தளத்தைப் பார்த்தாள் காவ்யா...

அர்ஜீனின் விழிகள் அவள் மேல் படிவதை அவன் முகம் பார்க்காமலே அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. அவள் முகத்தில் பிரதிபலித்த மிரட்சியைப் புரிந்து கொண்டவனாக...

“விடுங்க பாவனா.. டயர்டா இருக்கும்..” என்று மென்மையுடன் அவன் சொன்னான்...

“டயர்டா இருக்குன்னுதானே காபி.. டிபன் சாப்பிடப் போனோம்.. இவளும் கூட வந்திருக்கலாமில்ல..?” மனத்தாங்கல் ப்பட்டாள் பாவனா...

“அவங்களுக்கு விருப்பமில்ல போல..” அவன் யோசனையுடன் பேசினான்...

எதில் விருப்பமில்லையென்று சொல்கிறான் என்ற நினைவில் அவளின் உடல் அதிர்ந்தது.. அவன் தொட்டதில் விருப்பமில்லையென்று சொல்கிறானா..? இல்லையென்றால்.. அவளின் காதோடு அவன் காதல் சொன்னதில் விருப்பமில்லையென்று சொல்கிறானா..?

இரண்டிலுமே அவளுக்கு விருப்பா.. அல்லது.. வெறுப்பா.. என்று அவளுக்கே தெரியவில்லை.. தன்னைத்தானே புரிந்து கொள்ள முடியாமல் தத்தளித்தாள் அந்த பேதை...

அவனே சொன்னதைப் போல.. அவளும்.. அவனும்.. உணர்வு பூர்வமான கண்ணாமூச்சி விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தது உண்மைதானே...?

அந்த விளையாட்டை முடித்து வைத்து அடுத்த கட்டத்திற்கு அவன் முன்னேறினால் அவள் ஏன் அரண்டு போகிறாள்..?

“விருப்பமில்லையா..? நீங்க வேற.. இவ பிடிவாதக் காரி சார்...” உற்சாகமாகப் பதில் சொன்னாள் பாவனா...

தூரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்த முதலாளியுடன் சரிசமமாக உட்கார்ந்து பேசிப் பழக வாய்ப்பு

கிடைத்த உற்சாகம் அவளுக்கு.. அதை திறமையாக பயன்படுத்திக் கொள்ளவும் செய்தாள்.. என்னவோ வெகு காலமாக பேசிப் பழகியிருந்தவளைப் போல இயல்பாக அவள் பேசிச் சிரித்ததை அர்ஜீனும் ரசித்தான்.. நத்தை ஓட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்வதைப் போல.. தன் உணர்வுகளை வெளிக்காட்டாமல் அவற்றுக்குள் புதைந்திருந்த காவ்யாவுக்கு... இப்படியொரு தோழி எப்படி வாய்த்தாள் என்ற ஆச்சரியம் அவனுக்குள் முளைத்திருந்தது..

சண்டைக்கு காவ்யா தயாராக இருந்தாள்... அவளே சொல்வதைப் போல... எக்குத்தப்பான சின்ன வார்த்தையிலும் சீறி எழுந்து போர்முரசைக் கொட்ட அவள் தயங்கியதில்லை...

துர்வாச மாமுனிவர் பிடிசாபம் என்று இருந்ததைப் போல அவள் பிடி சண்டையை என்று இருந்தாள்.. கோபமும்.. ரோசமும் அவளின் உடன் பிறப்புக்களாக இருந்தன...

எந்த ஒரு சமயத்திலும் அவளின் கோபத்தை அவள் மறைத்ததில்லை.. அவற்றை வார்த்தைகளில் வெளிப்படுத்த அவள் தயங்கியதில்லை...

அப்படிப்பட்டவள் தன் காதலை மட்டும் ஏன் மறைக்கிறாள் என்ற கேள்விதான் அர்ஜீனின் நெஞ்சில்

இருந்தது.. அவன் அந்தக் கடைக்கு சொந்தக்காரனாக ஆகி ஆறுமாதங்களுக்கு மேல் ஆகின்றன.. இந்த ஆறுமாத காலத்திலும் அவன் மீதான காவ்யாவின் தேடல் படிப்படியாக அதிகரிப்பதை அவன் உணர்ந்திருந்தான்.. அவனுக்கான அவளின் தேடலை பார்ப்பதற்காகவே எத்தனை கோடி லாபம் தரும் வியாபாரமாக இருந்தாலும்.. அதை மறந்து மதுரைக்கு அவன் ஓடிவருவான்.. அவன் வரவைக் கண்டதும் அவள் கண்களில் மின்னுமே.. ஒரு மின்னல்.. அதற்கு ஈடாக இந்த பிரபஞ்சத்தில் எதுவுமே இல்லையென்று அவன் நினைத்தான்...

அந்த மின்னலை அதற்கு முன்னால்.. எந்தப் பெண்ணின் விழிகளிலும் அவன் பார்த்ததில்லை... அவனிடம் மயங்கிய மயக்கத்தை அவள் கண்கள் சொல்லியபோது அவன் கொண்ட வெற்றிப் பெருமிதத்தை.. கோடிகோடியாய் கொட்டிக் கொண்டிருந்த லாபப் பணம் கொடுத்ததில்லை...

அவள் அவனிடம் மயங்கினாள்.. அவன் அந்த மயக்கத்தில் மயங்கினான்.. எவருக்கும் அஞ்சாத.. யாருக்கும் கட்டுப்படாத.. காற்றைப் போன்ற பிடிவாத குணமுள்ள அந்த துடுக்குக்காரி.. அவனின் ஒரு பார்வையிலே கட்டுண்டு நின்று விட்டதில் அவனின் ஆண்மை கர்வம் கொண்டது...

முதல் சந்திப்பிலேயே.. தன் வெடுக்கென்ற பேச்சினாலே அவனை வசீகரித்த அந்த வசீகரியை அவன் காதலித்தான்.. அவளும் அவனைக் காதலிக்கிறாள் என்று நிச்சயமாக அவன் மனதுக்குத் தெரியும்.. பார்வைகளினால் அதை உணர்த்தியவள்.. பேச்சுக்களில் அதை வெளிப்படுத்தவில்லை.. ஒப்புக் கொள்ளவும் இல்லை...

அவன் எட்ட நின்றால் கள்ளப்பார்வை பார்த்தாள்.. கிட்டப் போனால் எட்டடி தள்ளி நின்றாள்...

அர்ஜீனால் அதைத் தாங்க முடியவில்லை.. அவனுடைய உடலும் மனமும் அவளைத் தேடின.. அந்த கள்ளமலர் சிரிப்புக்காரியின் கடைக்கண் பார்வையில் அவன் சிறைபட்டிருந்தான்.. சிறைமீட்க அவளால் மட்டுமே முடியும் என்றிருக்கும் போது.. அவள் விலகி நின்று விளையாடிய கண்ணாமூச்சி ஆட்டத்தில் அவன் களைத்துப் போய் விட்டான்...

கண்ணாடித் தடுப்புக்கு அந்தப்பக்கமிருந்து அவன் கண்ஜாடை காட்டி என்ன பயன்..? அவளைத் தொட்டு விடமுடியாமல் அவளின் பிம்பத்தைத் தொட்டே எத்தனை நாள்தான் அவன் காலம் கழிப்பது..?

இரும்புச் சுவரையே உடைக்கும் வல்லமை படைத்த அர்ஜீனை.. அவள் கட்டி வைத்திருந்த கண்ணாடிச் சுவரால் தடுத்துவிட முடியுமா..?

அவன் அந்தக் கண்ணாடிச் சுவரை உடைக்க முடிவெடுத்தான்.. அவனின் உணர்வுகளோடு விளையாடிக் கொண்டிருக்கும் அவளின் உணர்வுகளுக்கு அவனின் ஸ்பரிசத்தை அறிமுகப்படுத்த முடிவெடுத்து விட்டான்...

அது சென்னையல்ல.. மெலிதான மெழுகுவர்த்தியின் மங்கலான மஞ்சள் வெளிச்சத்தில்.. இதமான ஆங்கில இசை தவழ்ந்து கொண்டிருக்கும் அற்புதமான சூழலில்.. யாருடைய தனிமையிலும்.. யாரும் நுழையாத நாகரிக உலகத்தில்.. அவள் விரல்பற்றி முத்தமிட்டு... ‘நான் உன்னைக் காதலிக்கிறேன்..’ என்று சொல்வதற்கு...

அது மதுரை.. சாதாரண காபியைக்கூட.. கடைக்குள் இருந்துதான் குடிப்பேன்.. உன்கூட ஹோட்டலுக்கு வந்து குடிக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கும் அவனின் காதலி வசிக்கும் ஊர்...

அங்கே அவன் நினைத்தபடி அவளிடம் காதலைச் சொல்லிவிட முடியாது.. அதற்கான தனிமை அவனுக்கு கிடைக்கவில்லை.. பத்துப்பேரின் மத்தியிலே.. கள்ளப் பார்வை பார்க்கத் தெரிந்திருந்தவளுக்கு.. அவன் காதல் சொல்ல தனிமையைக் கொடுக்க மனமில்லை...

மற்றவர்கள் இருந்தால் அவள் ஓரவிழிப்பார்வையிலே அவனை சுண்டியிழுப்பாள்.. வேலை செய்வதைப் போல பாவனை காட்டியபடி.. இமை உயர்த்தி அவனைப்

பார்த்துக் கொண்டேயிருப்பாள்.. அந்த மயக்கத்தில் திளைப்பவனுடன்.. இரண்டு நிமிட தனிமை கிடைத்து விட்டால்.. அவசரமாக வெளியே போய் விடுவாள்.. ஏமாற்றத்துடன் அவன் சிடுசிடுத்தால்.. கடையின் விற்பனைக்கான கணக்கைக் கேட்கப் போனதாக ஆதாரம் காட்டுவாள்...

'இவ என்கூட விளையாடிப் பார்க்கிறாளா..?'

கோபத்துடன் கண்கள் இடுங்க முறைப்பவனை காதலுடன் பார்த்துவிட்டு எதுவுமே நடக்காததைப் போல.. வேலை செய்ய ஆரம்பிப்பவளை என்ன செய்தால் தகுமென்று அவன் கொலைவெறிக்கு ஆளாகாத நாளே இல்லை எனலாம்...

அந்தச் சூழ்நிலையில்தான் இளங்கோவின் திருமணம் வந்தது.. அர்ஜீன் தெளிவாக காய் நகர்த்தினான்.. எல்லோரையும் அவரவர் வீட்டுக்குச் சென்று அழைத்துக் கொள்ளலாம் என்ற அவனின் யோசனையை எடுத்த எடுப்பிலேயே காவ்யா நிராகரித்து விட்டாள்..

அர்ஜீனின் திட்டமே அதுதான்.. எல்லோருக்கும் முன்னால் காவ்யாவை அழைத்துக் கொள்ள வேண்டும்.. பாவனாவின் வீட்டிற்குச் செல்லும் வழியில் டிரைவருக்கு ஏதாவது வேலை கொடுத்து அனுப்பி விடவேண்டும்..

அவன் திரும்புவதற்குள் காவ்யாவிடம் அவன் நினைத்திருந்த விதத்தில் காதலைச் சொல்லி விடவேண்டும்.. திரும்பும் போதும் கடைசியாக காவ்யாவின் வீட்டிற்குப் போக வேண்டும்.. போகும் வழியில் டிரைவருக்கு வேலை தந்து விட்டு.. அந்த இடைபட்ட நேரத்தில்.. காலையில் சொல்லிய காதலை உறுதி செய்து கொள்ள வேண்டும்..

அழகான அவனின் திட்டத்தின் அடிப்படையை அவனின் காதலி தகர்த்து விட்ட பின்னாலும் அவன் நம்பிக்கை இழக்கவில்லை.. அவன் கையில் முழுதாக ஒரு நாள்.. இருந்தது.. அந்த ஒருநாளில் வேலையின் பரபரப்பில்லாமல்.. விழாநாளின் உற்சாகத்தோடு.. ஒர்விதமான விடுதலையுணர்வோடு.. சுற்றுலாவுக்கு செல்பவளைப் போல அவனுடன் காவ்யா வரப் போகிறாள்.. அவனுக்கு அதுவே போதுமானதாக இருந்தது...

அர்ஜீன் கெட்டிக்காரன்.. அவனுக்கென்று ஒர் நிமிடத்தைக் கொடுத்தால் கூட அவன் நினைத்ததை முடித்து விடுவான்.. இங்கோ முழுதாக ஒருநாள் இருந்தது.. காவ்யாவும் கூட இருந்தாள்.. காத்திருக்கும் கொக்கைப் போல அவனும் சரியான நேரத்திற்காக காத்திருந்தான்..

திரும்பும் வரை அவனுக்கு.. அவன் தேடிய தனிமை கிடைக்கவில்லை.. ஆனாலும்.. அந்த எரிச்சல் தெரியாமல்

அவன் பக்கத்திலேயே காவ்யா இருந்தாள்.. அனைவரையும் இறக்கி விட்ட பின்பு.. பாவனாவின் வீட்டை நோக்கி வேன் போய் கொண்டிருந்தபோது.. அர்ஜீன் காபி சாப்பிட அனைவரையும் அழைத்தான்.. அவனுக்குத் தெரியும்.. காவ்யா அவனுடன் வரமாட்டாளென்று.. அவன் நினைத்ததுதான் நடந்தது.. காவ்யா அவர்களுடன் செல்ல மறுத்தாள்.. அர்ஜீன் நினைத்ததை நடத்திவிட்டான்...

பாவனாவின் வீட்டில் காவ்யா இறங்கிக் கொண்டபோதும் அர்ஜினின் முகம் பார்க்கவில்லை.. அவளின் பார்வையை சந்திக்க விரும்பி.. அவள் முகத்திலேயே விழிபதித்திருந்த அர்ஜீன்...

“ஓகே காவ்யா.. நாளைக்கு கடையில பார்க்கலாம்..” என்றான்...

அப்போதும் அவள் நிமிராமல் போகவும்... பொறுமையிழந்தவனாக..

“காவ்யா..” என்று அழுத்தமாக அழைத்தான்...

அதற்கு மேலும் அமைதியாக இருந்தால் பாவனா கண்டுகொள்வாள் என்பதினால்.. வேறு வழியின்றி தலை நிமிர்ந்தாள் காவ்யா.. அர்ஜீனின் பார்வையைச் சந்தித்தாள்.. அவன் கண்கள் பேசிய செய்தியில் அவள் உடலில் மின்சாரம் பாய்ந்தது...

ஓர் சொந்தத்துடன் அவளைப் பார்த்து தலையசைத்தான் அவன்.. காவ்யா உடல் நடுங்க பாவனாவைத் திரும்பிப் பார்த்தாள்.. அவளோ.. அர்ஜீன் வந்திருக்கும் செய்தியை அவளுடைய அம்மாவிடம் சொல்வதற்காக உள்ளே ஓடியிருந்தாள்...

நிதானமாக அவளை நெருங்கிய அர்ஜீன்.. பேன்ட் பாக்கெட்டில் கையை விட்டபடி அவள் கண்களுக்குள் பார்த்தான்.. அவள் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. சிவந்து போன அவள் முகத்தையே ஆசையுடன் பார்த்தவன்...

"காவ்யா.." என்று தாபத்துடன் அழைத்தான்..

அவள் தலைகுனிந்து.. கைவிரல்களை எண்ண ஆரம்பித்து விட்டாள்...

"ஏய்ய்..."

"....."

"பேச மாட்டியா...?"

"....."

"என்னைப் பாருடி..."

"....."

"ஏன் காவ்யா..? என் முகத்தைப் பார்க்கப்-பிடிக்கலையா...?"

அவள் சட்டென்று அவன் முகம் பார்த்துவிட.. யுக்தி பலித்த வெற்றிச் சிரிப்புடன் தலையசைத்தான் அர்ஜீன்...

“இப்ப என்ன நடந்திருச்சுன்னு இப்படி என்முகம் பார்க்காம வெட்கப்படற..? ம்ம்..?” அவன் உல்லாசமாக கேட்டான்...

‘எதுவும் நடக்கலையா..?’ அதைக் கேட்க முடியாத சங்கடத்துடன் மௌனித்தாள் காவ்யா...

“ம்ப்ச்.. இதானே வேண்டாம்கிறது.. ஐ லவ் யு காவ்யா.. புரிஞ்சுக்க.. இன்னமும் உன்கூட கண்ணாமூச்சி விளையாட்டை விளையாட என்னால் முடியாதுடி.. எனக்கு நீ வேணும்...”

இதைத்தான் அவன் வேனிலும் சொன்னான் என்பதை நினைவுகூர்ந்தாள் காவ்யா.. அவனுக்கு அவள் வேண்டுமாமே.. அவனுக்கு எது வேண்டுமாம்..? அவளின் உடலா..? இல்லை.. மனமா...?

அதைத் தெரிந்து கொள்ளாத வரைக்கும்.. அவனிடம் பதிலுக்கு ‘ஐ லவ் யு’ சொல்ல அவளால் முடியாது என்று அவளுக்குத் தோன்றிவிட்டது...

# 38

*எனை நினைக்கும் ஓர் சொல்லை...*
*நீ சொல்ல ஆசைகொண்டேன்...*

**சூ**டான இட்லிகளைப் பரிமாறி.. சட்னியை ஊற்றினாள் அன்னபூரணி.. குனிந்த தலை நிமிராமல்.. சாப்பிட்டுக் கொண்டிருந்த தங்கையை உற்றுப் பார்த்தான் கண்ணதாசன்.. அவள் விழிகளில் தெரிந்த கலக்கத்தில் அவன் மனம் அழுந்தியது...

‘இவ ஏன் இப்படியிருக்கா...?’

இதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளாவிட்டால் அவனால் நிம்மதியாக வேலையில் ஈடுபட முடியாது போலத் தோன்றிவிட.. கண்ணதாசன் சாப்பிடாமல் கிளம்பி விட்டான்...

“கண்ணா..” அன்னபூரணி குரல் கொடுத்தாள்...

“ஒரு சின்ன வேலைம்மா... முடிச்சுட்டு வந்து சாப்பிடறேன்...”

காரில் ஏறியவன்.. புயல் வேகத்தில் தங்கராஜின் வீட்டை அடைந்தான்.. தங்கராஜின் அண்ணன் கண்ணதாசனின் அலுவலகத்தில்தான் அட்டெண்டராக வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.. அண்ணனைப் பார்க்க தங்கராஜ் அலுவலகம் போகும் போது கண்ணதாசனையும் பார்த்திருக்கிறான்.. அந்த அறிமுகத்தில் அவன் கண்ணதாசனை வரவேற்றான்...

"வாங்க சார்.. வணக்கம் சார்..."

"கனகராஜ் எங்கே..? ஒரு முக்கியமான வேலைக்கு அவரை அனுப்பனும்..."

"அண்ணன் கடைக்கு போயிருக்கு சார்..."

"அப்படியா..? அப்பச்சரி.. நான் வேறு யாரையாவது அந்த வேலையைப் பார்க்கச் சொல்லி அனுப்பிக்கிறேன்.."

"சரிங்க சார்..."

"நேத்து உங்ககூட வேலை பாக்கிறவருக்கு கல்யாணமாமே.. என் தங்கச்சி சொல்லுச்சு..."

"ஆமா சார்.. அவன் பேரு இளங்கோ..."

"ஓஹோ.. நீங்களும் போயிருந்தீங்களா..?"

"நாங்க எல்லோரும் ஒன்னாத்தானே வேனில் போனோம்..? காவ்யா மேடம் சொல்லலைங்களா..?"

'இல்லையே..' அவன் பார்வை கூர்மையானது...

முதன்முறையாக அவன் தங்கை அவனிடம் உண்மையைச் சொல்லாமல் மறைத்திருக்கிறாள்.. அவள் கோபக்காரிதான்.. ஆனால் மனதில் எதையும் மறைத்து வைத்துப் பேசத் தெரியாதவள்...

'அவளா மறைத்தாள்..?'

கண்ணதாசனால் நம்ப முடியவில்லை.. அவன் பாவனாவின் வீட்டில்தானே காவ்யாவை விட்டுவிட்டு வந்தான்..? அதை தங்கராஜிடம் சொல்ல முடியாமல் பொத்தாம் பொதுவாக...

"சொல்லுச்சு.. சொல்லுச்சு.." என்று சமாளித்தான்...

"காவ்யா மேடம்.. பாவனா மேடத்தோட வீட்டுக்கு வந்துட்டாங்க.. அவங்கதான் சிநேகிதப் புள்ளைகளாச்சே.." என்றான் தங்கராஜ்...

'இது எனக்குத் தெரியாதா..' என்ற கடுப்புடன்

"ஆமாமாம்.." என்று ஆமாம்சாமி போட்டான் கண்ணதாசன்...

"கடையிலயும் ரெண்டு பேரும் சேர்ந்துதான் இருப்பாங்க..."

'நீ அதையேண்டா கவனிக்கிற...?'

"நேத்துக் கூடப் பாருங்க.. எங்க எல்லாரையும்.. அவரவர் வீட்டில வந்து வேனில் கூப்பிட்டுக்கிட்டுப் போனாங்க.. காவ்யா மேடமும்.. பாவனா மேடமும் மட்டும் நாங்க தனித்தனியா வரமாட்டோம்ன்னு சொல்லிட்டாங்க.. அதனால ரெண்டு பேரையும் ஒரே வீட்டில இருக்கச் சொல்லி முதலாளி சொல்லிட்டாரு.."

'என்னது...?!...' கண்ணதாசன் முகம் மாறினான்...

"உங்க முதலாளியும் உங்ககூடவே வேனில் வந்தாரா...?"

"ஆமாம் சார்.. எங்களுக்கெல்லாம் ஆச்சரியமான ஆச்சரியம்.. அம்மாம்பெரிய வெளிநாட்டுக்கார வைச்சிருக்க மகராசன்.. தனியா காரில வந்து போகாம.. எங்ககூட இணையா வேனில உக்காந்துக்கிட்டு வந்ததை நினைச்சுப் பாத்தா புல்லரிக்குது சார்..."

'மாடு மேயப் போகுது.. போர்த்தித் தொலை..' பல்லைக்கடித்த கண்ணதாசன்...

"பரவாயில்லையே..." என்று வெளியே சொல்லி வைத்தான்...

"அது மட்டுமா.. கல்யாணம் முடிஞ்சதும்.. அரக்கப் பறக்க கிளப்பிக்கிட்டு வராம.. எங்ககூட பழமுதிர்

சோலையைச் சுத்திப்பார்த்து சாமி கும்பிட்டார்.. எங்களுக்கெல்லாம் இது கனவா.. இல்ல நனவான்னு இருந்துச்சு...”

அதற்கு மேல் கேட்கப் பிடிக்காதவனாக கண்ணதாசன் கிளம்பிவிட்டான்.. அவன் மனதில் புயலடித்துக் கொண்டிருந்தது.. நடந்திருக்கும் செயல் நல்லதிற்கானதல்ல என்று அவன் மனம் கூறியது.. அர்ஜீனைப் போன்ற ஒரு கோடிஸ்வரன்.. மதுரையிலிருக்கும் கடையைப் பார்க்க வருவதே பெரியவிசயம்.. அப்படியிருக்கையில்.. அவனோ கடையில் வேலை பார்க்கும் தொழிலாளியின் திருமணத்தில் கலந்து கொள்கிறான்.. அதையும் அவனின் வெளிநாட்டுக் காரில் செல்லாமல்.. தொழிலாளியோடு தொழிலாளியாக இணைந்து வேனில் அமர்ந்து செல்கிறான் என்றால்.. அதன் பின்னனியிலிருக்கும் அவனது நோக்கம் எதுவாக இருக்கக்கூடும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா..?

வீட்டுக்கு அவன் திரும்பியபோது.. காவ்யா மாடிப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தாள்.. அவள் முகத்தையே ஊடுறிவிப் பார்த்தபடி கண்ணதாசன் படிகளில் ஏறினான்.. அண்ணனும்.. தங்கையும்.. மாடிப்படிகளின் மத்திய பகுதியில் சந்தித்துக் கொண்டனர்..

கண்ணதாசனின் பார்வையில் காவ்யாவின் முதுகுத்தண்டு ஜில்லிட்டது.. அதற்கு முன்னால்.. அது போன்றதொரு பார்வையை.. கண்ணதாசனிடம் அவள் கண்டதில்லை...

“அண்ணே...?”

“நேத்து அழகர் கோவிலுக்கு எப்படிப் போன..? பாவனா கூட ஆட்டோவில போறதா சொன்னியே.. அப்படியா போன...?”

கண்ணதாசனின் கேள்வியில் காவ்யா அதிர்ந்து விட்டாள்.. அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் அவள் தலைகுனிந்தது..

“நேர் கொண்ட பார்வையும்.. நிமிர்ந்த நன்னடையுமாய் இருந்த என் தங்கச்சி எங்கேம்மா..? அவ எங்கே தொலைஞ்சு போனா..?”

“அண்ணே...”

“உன்னால என் முகத்தப் பாத்துப் பதில் சொல்ல முடியலையே.. ஏம்மா..?”

“அண்ணே...”

“நாம சின்ன வயசில படிச்ச பாட்டு உனக்கு ஞாபகத்தில இருக்கா காவ்யா..?”

எந்தப் பாட்டு என்று அவள் நினைவுக்கு வரவில்லை.. எதுவாக இருந்தாலும்... அது அவளைச் சுடும் பாடலாகத்தான் இருக்கப் போகிறது என்ற நிச்சயத்துடன் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றாள்...

*"உள்ளம் நிறைவிலோர்..*
*கள்ளம் புகுந்திடில்..*
*உள்ளம் நிறைவாமோ..*
*தெள்ளிய தேனிலும்..*
*சிறிது நஞ்சையும்..*
*சேர்த்த பின்..*
*தேனாமோ...?"*

கண்ணதாசன் அட்சர சுத்தமாக அந்தப் பாடலைப் பாடினான்..

இவ்வளவு தெளிவான ஞாபகசக்தியுடன் இவன் இருந்திருக்கக்கூடாது என்று காவ்யாவுக்குத் தோன்றியது.. இப்படிப் பாட்டாலேயே அவளைத் தாக்கினால்.. அவள் எங்கே ஓடி ஒளிவாள் என்ற எண்ணம் கொஞ்சமாவது அவனுக்கு இருக்க வேண்டாமா என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள் அவள்...

"உன் மனசில கள்ளம் புகுந்திருச்சு காவ்யா.. அதனாலதான் என் கண்ணைப் பார்த்துப் பேச உன்னால முடியலை.." குற்றம் காட்டினான் கண்ணதாசன்...

காவ்யாவுக்கு அழ வேண்டும் போல இருந்தது.. அவள் அழுது பழக்கமில்லாதவள்.. அவளுக்குப் போய் இப்படிப்பட்ட நிலைமையா வந்து சேர வேண்டும்..?

“எல்லாரும் போனாங்கண்ணே...” கெஞ்சும் குரலில் அவள் சொன்னாள்..

“எல்லாரும்ன்னா..?” அவன் புருவங்களை உயர்த்தினான்...

“எல்லாரும்ன்னா.. எல்லாரும்தாண்ணே...”

“கடையில வேலை பார்க்கிற எல்லாருமா.. இல்ல.. உன் முதலாளியும் கூடச் சேர்ந்த எல்லாருமா..?” சரியான கேள்வியைக் கேட்டான் கண்ணதாசன்...

“முதலாளியும்தான் கூடவந்தார்...” காவ்யா மென்று விழுங்கினாள்..

“இதையேன் நீ முன்னாடியே சொல்லலை..?” அவன் பார்வை அவளைச் சுட்டது...

“சொன்னா அம்மா விடாது...”

“நான் மட்டும் விடுவேனா..?”

“இது சின்ன விசயம்ன்னு நினைச்சேண்ணே...”

“அப்படி நினைக்கிறவ.. எதுக்காக சாமி முன்னாடி சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்த..?” கண்ணதாசன் மடக்கி விட்டான்..

"அண்ணே.." தப்பிக்கும் வழி தெரியாமல் கண் கலங்கிவிட்டாள் காவ்யா...

கண்ணதாசன் சங்கடத்துடன் அவளுக்கு வழி விட்டு விலகிநின்றான்.. அவசரமாக இறங்க முயன்றவளை...

"காவ்யா..." என்று தடுத்து நிறுத்தினான்...

அவள் ஏனென்று கேட்காமல் நின்றாள்...

"சுட்டெரிக்கும் சூரியனைத் தள்ளி நின்னு பார்த்தா.. தொட்டு விடலாம் போல அழகாத்தான் இருக்கும்... கிட்டப் போனாத்தான் தெரியும்... அதத் தொட்டா அழிஞ்சுருவோம்ன்னு..."

"அண்ணே..." அதிர்ந்து நோக்கினாள் காவ்யா...

'என்னவெல்லாம் பேசறான்..' அவள் மனம் குமுறியது...

"பெரிய பெரிய பேச்சையெல்லாம் பேசாதே.. நீ உன் பிரண்ட்ஸ்கூட ஊரச் சுத்தப் போனதில்லையா..? அதையே நான் செய்தா மட்டும் தப்பா..? உனக்கொரு நியாயம்.. எனக்கொரு நியாயமா..? ஏன்னா நீ ஆம்பளை.. நான் பொட்டப்புள்ள.. அப்படித்தான..? படிக்கிறதிலதான் நீ கொடுத்து வைச்சவன்னு நினைச்சேன்.. எல்லாத்திலயும் நீ கொடுத்துத்தான் வைச்சிருக்க.." பெரிந்து விட்டாள்..

பழைய காவ்யாவாக மாறி அவள் பொரிந்து தள்ளியதில் அவனுக்கும் சந்தோசம்தான்.. ஆனால்.. அவன் எதற்காகச் சொல்லுகிறான் என்பதை உணராமல் அவள் பெரிந்ததில்தான் அவனுக்கு வருத்தம் உண்டானது...

“இந்தக் கோபம் எதுக்காக காவ்யா..? பாவனாவோட ஊரைச் சுத்திட்டு வான்னுதான நான் அனுப்பி வைச்சேன்..?”

“இப்ப என்ன..? கடையில வேலை பாக்கிற எல்லாரும் ஒரே வேனில் போனோம்.. இது ஒரு குத்தமா..?”

“இல்லேன்னு நினைச்சா எங்ககிட்ட அதை நீ சொல்லியிருக்கலாமே..?”

“தப்புத்தான் சாமி.. தப்புத்தான்.. இனிமே நான் தும்மறதா இருந்தாக்கூட.. உன் கிட்டயும்.. அப்பாம்மா-கிட்டயும் சொல்லிட்டுத்தான் தும்முவேன்.. போதுமா சாமி..?”

காவ்யா விருவிருவென இறங்கிப் போய்விட்டாள்.. அவள் கோபத்தின் திரை மறைவில் தன்னை மறைத்துக் கொள்கிறாள் என்பதைக் கண்ணதாசனால் புரிந்து கொள்ள முடிந்தது...

‘எல்லாம் அந்த அர்ஜீன் பயலால் வந்தது..’ கண்ணதாசன் ஆத்திரத்துடன் நினைத்துக் கொண்டான்...

‘அவனுக்கு கடலை போட வேற பெண்ணே கிடைக்கலியா..? அதான்.. நாடு.. நாடாச் சுத்தறானில்ல.. அங்கே போய் எவளையாவது வெள்ளைக்காரியாய் பார்த்துப் பிடிக்க வேண்டியதுதானே.. இவன் ஆடுகிற ஆட்டத்துக்கு அவள்தானே தோதா இருப்பா... அத விட்டுட்டு மதுரைப் பக்கம் எதுக்காக வந்து தொலைச்சான்..?’

அவனை என்ன செய்தால் தேவலாம் என்ற சிந்தனையோடு அலுவலகம் செல்லக் கிளம்பினான் கண்ணதாசன்...

**அ**ர்ஜீன் காத்திருந்தான்.. அவனுக்கு காவ்யாவின் வெட்கிச் சிவந்த முகத்தைப் பார்க்க வேண்டியிருந்தது.. அவன் தொட்டதும்.. துவண்டு.. குழைந்த அவளின் நினைவில் அவன் உடல் சூடேறியது...

‘இன்னும் வராம என்னத்தக் கிழிக்கிறா...’

அவன் எரிச்சல்பட்டான்.. கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.. கடையின் வேலைநேரம் ஆரம்பித்திருக்க வில்லை...“”

‘ம்ஹீம்.. அவளுக்கு முன்னாலேயே வந்து உட்கார்ந்து விட்டு அவள் வரலைன்னு குற்றம் சொன்னா எப்படி..? நேரத்துக்குத்தானே அவ வருவா..?’ அவன் மனம் கேட்டது..

'ஏன் இன்னைக்கு சீக்கிரமா வந்தா ஆகாதா..?' அவன் கோபப் பட்டான்..

அதிக நேரத்துக்கு அவனைக் கோபப்பட வைக்காமல் காவ்யா வந்து விட்டாள்.. கூடவே.. கண்ணதாசனிடம் மாட்டிக் கொண்டதால் உண்டான கோபமும் வந்திருந்தது...

அந்த எரிச்சலுடன் அர்ஜீனின் முகம் பார்க்காமல் சேரை இழுத்துப் போட்டாள்.. டேபிள் டிராயரை இழுத்து மூடினாள்.. சுவர் அலமாரியிலிருந்த ஃபைல்களை கத்தையாகத் தூக்கி தொம்மென்று சப்தம் எழுப்ப டேபிளின் மீது கடாசினாள்...

'யார் மேலயோ இருக்கிற கோபத்தை வேலை மேல காட்டறா...'

அந்தக் கோபம் அவன் மீதானது என்று அவனுக்குத் தோன்றிவிட்டது...

'அடேங்கப்பா.. ராணி மங்கம்மாவுக்கு தெனாவெட்டு ஜாஸ்திதான்.. சம்பளம் கொடுக்கிற முதலாளி இங்கே உட்கார்ந்திருக்கேன்.. இவ அதைக் கண்டுக்காம.. என் கடையைப் போட்டு உடைக்கிறா...'

அதற்கு மேலும் பொறுமை காத்தால்.. காவ்யா கம்யூட்டரையே உடைத்து விடுவாள் என்று தோன்றிவிட..

“ரிலாக்ஸ் காவ்யா..?” என்றான் அர்ஜீன்..

அவனைத் திரும்பிப் பார்த்த காவ்யாவின் விழிகளில் தெரிந்த ஆவேசத்தில் அர்ஜீனின் புருவங்கள் முடிச்சிட்டன...

# 39

*அலைபாயும் என் மனதை...*
*நீயறிய ஆசைகொண்டேன்...*

“ரிலாக்ஸா..? எதை ரிலாக்ஸ் பண்ணனும்..? உங்களாலே.. இத்தனை நாளாய் என் அண்ணனின் முகம் பாத்துப் பேசுகிறவளுக்கு.. அவன் முகம் பார்க்க முடியாமப் போச்சு.. இதையா நான் ரிலாக்ஸ் பண்ணனும்..?”

‘அண்ணனா..?’ அர்ஜீனுக்கு புரியவில்லை...

இதில் காவ்யாவின் அண்ணன் எங்கு வந்தான்..? எதற்காக வந்தான்..? அர்ஜீனுக்கும்.. காவ்யாவுக்குமான காதல் உணர்வுகளுக்கு இடையில் தேவையில்லாமல் கண்ணதாசனைப் பற்றிய பேச்சு எதற்காக நுழைய வேண்டும் என்று அவன் நினைத்தான்...

“இதோ பார்.. வீட்டுப் பிராப்ளத்தை வீட்டிலேயே விட்டுவிட்டு வந்து விடனும்.. இது ஆபிஸ்... இங்கே வேலை மட்டும்தான் நினைவிலிருக்கனும்.. அண்டர்ஸ்டாண்ட்..?”

“எல்லா ஸ்டாண்டும் எங்களுக்கும் தெரியும்.. வீட்டுல வந்த பிரச்னையே உங்களாலதானே...”

“வாட்...? என்னால பிராப்ளம் வந்திருக்கா..? ஜோக்கடிக்காதே காவ்யா.. உனக்கு உன் அண்ணனின் முகம் பார்த்துப் பேச முடியலைன்னா அதுக்கு நான் பிணையா..? உன் அண்ணன் முகம் பார்க்கிற மாதிரி இல்லைன்னா அதுக்கு நானென்ன பண்ணுவேன்..?”

காவ்யாவுக்கு.. அவளின் அண்ணன் மீது இருக்கும் பாசத்தைப் பற்றித் தெரிந்திருந்தும் இடக்காக இதைச் சொன்னான் அர்ஜீன்.. காவ்யா பற்களை நறநறத்தாள்...

“என்னது..? என் அண்ணன் முகம் பாக்கிறதைப் போல இல்லயா..? ஆமாம் சாமி.. உங்க முகம்தான் அழகு முகம்.. பாக்கறதைப் போல இருக்கிற முகம்.. எங்க முகமெல்லாம் இப்படித்தான் இருக்கும்.. இந்த முகத்தைப் பாருங்கன்னு உங்ககிட்ட நாங்க வந்து நிக்கலை...”

“வெயிட்.. வெயிட்.. இப்ப உன் அண்ணன் முகத்தைப் பத்தித்தானே பேச்சு..? இதில நாங்கன்னு ஏன்

கூட்டணி போடற..? உன் முகத்தைப் பத்தி நான் ஏதாவது சொன்னேனா...?"

"அடேங்கப்பா.. அழகு மன்மதராஜா விளக்கம் சொல்ல வந்திட்டாரு... ஏன்... சொல்லித்தான் பாருங்களேன்..."

"நான் சொல்லவே இல்லைன்னு சொல்றேன்.. அதுக்கப்புறமும் சொல்லித்தான் பாருங்களேன்னு எதுக்காக ராகம் பாடற..?"

"வேணாம்.. விட்டுருங்க..."

"அதெல்லாம் விடமுடியாது.. விடறதுக்கா உன்னைத் தொட்டு அணைச்சேன்..?" அர்ஜீன் கண்சிமிட்டினான்..

முதல்நாள் மாலையின் தொடுகையினால் அவன் எடுத்துக்கொள்ளும் உரிமையை காவ்யாவினால் புரிந்து கொள்ள முடிந்தது...

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு அவனின் அந்த உரிமையான பேச்சைக் கண்டு கொள்வேனா என்று பிடிவாதம் பிடித்தாள்...

"என் அண்ணன்வேற.. நான் வேற இல்ல.. என் அண்ணனைச் சொன்னா.. என்னைச் சொன்னது மாதிரிதான்.." காவ்யா சண்டைக்கு வந்தாள்...

‘விட மாட்டாளே..’ அர்ஜீனுக்கு ஆயாசமாக இருந்தது.. அவனுக்கு அவளின் சண்டையைப் பிடிக்கும் தான்.. ஆனால்.. அவளுடைய அண்ணனுக்காக வரிந்து கட்டிக்கொண்டு.. அர்ஜீனிடமே அவள் சண்டைக்கு வந்ததை அவன் ரசிக்கவில்லை..

“நீங்க இரண்டு பேரும் ஒன்னாவே இருங்க.. அதை என் கடைக்குள்ள மட்டும் கொண்டு வராதீங்க...” கண்டிப்புடன் சொன்னான்..

“யாரும் கொண்டு வரலை.. நீங்கதான் ரிலாக்ஸ்.. ரிலாக்ஸீன்னு பீட்டர் விட்டிங்க...”

“ஆமாமாம்.. நீ பெரிய எலிஸபெத் மகாராணி பாரு.. உன்கிட்ட பீட்டரில் பிளந்து கட்டினேன்.. ரிலாக்ஸீன்னு ஒத்தைச் சொல்லைச் சொல்லிட்டேன்.. உடனே சங்கத் தமிழ் மதுரைக்காரி சிலிர்த்துக்கிட்டு சண்டைக்கு வந்துட்ட.. இங்கே நீதான் வேலை பார்க்கிற.. உன் அண்ணன் வேலை பார்க்கலை...”

“அதுக்கு என்ன தலைவிதி..? அதுவே பெரிய ஆபிசர்.. இந்த வேலைக்கு வரனும்னுதான் அது தவ்வுதாக்கும்..?”

“தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக உன் அண்ணனின் பேச்சை இங்கே வந்து பேசற..?”

"நானாப் பேசல.. நீங்க பேச வைச்சிருக்கீங்க..."

"இது என்ன புதுப்பழி..?"

அர்ஜீன் மெலிதான கோபத்துடன் கேட்டான்... அவன் மனதிலிருந்த உல்லாசம் வடிந்து கொண்டிருந்தது.. முதல்நாளின் முத்தத்துக்கு பின்னாலும்.. அவனிடம் அடங்க மறுத்த அந்த அல்லிராணியை எப்படி அடக்கித் தன்வசப்படுத்துவது என்று புரியாமல் அவன் பல்லைக் கடித்தான்..

"பழியெல்லாம் என் மேலதான வந்திருக்கு..? உங்களுக்கென்ன நீங்க ஆம்பளை சிங்கம்.." காவ்யாவின் கண்கள் கலங்கிவிட்டன..

"ஏய்ய்.." அர்ஜீன் கோபத்தை மறந்தவனாக எழுந்து விட்டான்...

"ஆறுதல் சொல்லுகிறேன் பேர்வழின்னு யாரும் பக்கத்தில வரவேணாம்.." அவள் சுதாரித்துக் கொண்டவளாய் இமைகளைச் சிமிட்டி கண்ணீரை அடக்கினாள்...

அவளின் சுதாரிப்பில் அவனுக்குச் சிரிப்பு வந்தது..

"இதில மட்டும் அலர்ட்டா இரு... ஏன்..? நான் ஆறுதல் சொல்ல உன் பக்கத்தில் வரக்கூடாதா..?" உல்லாசமாக கேட்டான்...

'இவனும்.. இவன் உல்லாசமும்..' காவ்யாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"ஒரு ஆறுதல் கழுதையையும் நீங்க சொல்ல வேணாம்..." அதே எரிச்சலுடன் சொன்னாள் காவ்யா...

"கழுதைன்னு யாரைச் சொல்ற..? என்னையா..?" அவன் கோபம் போலக் கேட்டான்...

"இப்பத்தானே உங்களை ஆம்பளை சிங்கம்ன்னு சொன்னேன்..? வம்பிழுக்கறிங்களா..?" அவள் முறைத்தாள்..

கோபத்திலும் அவனைக் கொண்டாடும் அவள் மனதில் அவள்மீதான அவனின் காதல் அதிகமானது.. அவளின் ஒப்புதலுக்காக அவன் காத்திருந்தான்... அவன் மனதைச் சொல்லிய பின்பும்.. அந்த நினைவே இல்லாதவளைப் போல அவள் நடந்து கொண்ட முறையில் அவனுக்க கோபம் வந்தது...

"இதையெல்லாம் சொல்லத் தெரியுது.. நான் கேட்கிறதைச் சொல்லத் தெரியல..." தாபத்துடன் அவளைப் பார்த்தான் அவன்...

"எதைச் சொல்லச் சொல்றிங்க..?" புரியாதவளைப் போல கேட்டபடி ஃபைலைப் புரட்ட ஆரம்பித்தாள் காவ்யா..

“நீ வேலையில கெட்டின்னு தெரியும்.. அதுக்காக நான் பேசிக்கிட்டு இருக்கிறப்ப நீ ஃபைலை புரட்டனும்னு அவசியமில்லை.. என் கேள்விக்கு பதிலைச் சொல்லிட்டு அப்புறமா வேலையை ஆரம்பிக்கலாம்...”

“நீங்க என்ன வாத்தியாரா..? நானென்ன கத்துக்க வந்திருக்கிற ஸ்கூல் புள்ளயா...? நீங்க கேள்வி கேட்டா நான் பதிலைச் சொல்லித்தான் ஆகனுமா...?”

“ஆமாம்னுதான் வைத்துக்கயேன்.. இதுவும் பாடம்தான்.. நான் உனக்குக் கற்றுக் கொடுக்கிற டீச்சர் தான்.. நீயும் என் ஸ்டூடன்ட்தான்.. என்ன ஒன்னு.. உனக்கு பேஸிக்கே தெரியலை.. பிரி.கே.ஜி யைக்கூட தாண்டாதவளா இருக்கே.. உனக்கு பேஸிக்கில இருந்து எல்லாத்தையும் சொல்லிக் கொடுத்தாகனும்.. அதுதான் எனக்குப் பிரச்னையா இருக்கு.. ஒன்றைச் சொல்லிக் கொடுத்தா அதைக் கப்புன்னு பிடிச்சுக்கிட்டு அடுத்த கட்டத்திற்கு முன்னேற வேண்டாமா..?”

அவன் கண்களில் தெரிந்த சங்கேத பாஷையில் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவன் சொல்ல வருவது எதையென்று அவளுக்குப் புரிந்து விட்டது.. முதல்நாள் மாலையில் அவன் முத்தமிட்டதை நினைவு

படுத்துகிறான்.. காதல் பாடத்தில் அவளுக்கு அரிச்சுவடி கூடத் தெரியாதாம்.. ஐயாதான் அதைக் கற்பிக்கும் ஆசிரியராம்...

‘போடா.. டேய்ய்..’ என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்...

“நாங்க அப்படித்தான்... அதனால சொல்லிக் கொடுக்கிற வேலய விட்டுப்புட்டு.. வேற வேலையிருந்தா பாருங்க...” வெடுக்கென்று சொல்லிவிட்டு.. கம்யூட்டரின் மேல் முகத்தைப் பதித்துக் கொண்டாள்...

அந்த அளவுக்கு ஆழமாக அவள் கம்யூட்டரின் திரையில் கண்களைப் பதித்திருக்கிறாளாம்.. அவளுக்கு வேலை இருக்கிறதாம்.. அதை அவள் பார்க்க வேண்டுமாம்.. அர்ஜீனைப் பார்க்க முடியாதாம்...

‘இதுதான் மேட்டரா...’ அவன் உதட்டைச் சுழித்தபடி அவளை ஊன்றிப் பார்த்தான்...

“இப்படிச் சொன்னா எப்படி..? ஆரம்பித்த வேலையை அந்தரத்தில விட முடியுமா..? அந்தரம்ன்னா என்ன அர்த்தன்னு உனக்குத் தெரியும்தான..?”

“இது சங்கத்தமிழ் வளர்த்த மதுரை.. நாங்க அந்தரத்துக்கும் அர்த்தம் சொல்லுவோம்.. அதுக்கு மேலேயும் அர்த்தம் சொல்லுவோம்...”

“அதுக்கு மேலேன்னா எதைச் சொல்ற..? அந்தரங்கத்தைச் சொல்கிறயா..?”

காவ்யா அவனை மேல்பார்வை பார்த்தான்.. அதற்காகவே காத்திருந்தவன் புருவங்களை சங்கேதமாக உயர்த்தினான்...

‘உன் புத்தி இப்படித்தான போகும்..’ அவள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்...

“உன் அந்தரங்க மனசில என்ன எண்ணம் ஓடுது காவ்யா...?” அவன் ஆழ்ந்த குரலில் வினவினான்...

அதைச் சொல்லிவிட்டால் எல்லாம் தீர்ந்து விடுமா என்ற நினைவுடன் மனம் வலிக்க மௌனம் சாதித்தாள் காவ்யா.. கண்ணதாசனின் குற்றம் சாட்டும் பார்வை அவள் நினைவுக்கு வந்தது..

*‘உள்ளம் நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்..*
*உள்ளம் நிறைவாமோ...’*

என்ற அவனின் குரல் அவள் காதுகளில் ஒலித்தது..

“பேசுடி..” ஆயாசத்துடன் அவன் சொன்னான்...

“வாடி.. போடின்னு பேசறதெல்லாம் இங்கே வேணாம்...” அவன் முகம் பார்க்காமல் கடினமான குரலில் அவள் சொன்னாள்...

“இங்கே வேண்டாம்ன்னா.. எங்கே பேசலாம்..? சென்னையில ஆயிரம் இடமிருக்கு.. மதுரையைப் பத்தி நீதான் சொல்லனும்.. சொல்லு எங்கே போகலாம்..?” அவளின் குரல் மாறுபாட்டை கண்டு கொள்ளாதவனைப் போல அவன் கேட்டான்...

‘இவனென்ன லூஸா...?’

“ஸ்ஸ்ஸ்..” என்று அலுப்புப் பெருமூச்சை விட்டாள் காவ்யா...

“என்ன ஆச்சு..? தலை வலிக்குதா..? காபி கொண்டு வரச்சொல்லட்டுமா..?” அக்கறையுடன் விசாரித்தான் அர்ஜீன்...

‘இவனா லூசு..? இவன் இருக்கிற எல்லாத்தையும் லூஸாக்கிட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பான்...’

அவள் கோபத்துடன் கையிலிருந்த ஃபைலை டொம்மென்று சப்தம் எழும்ப டேபிளின் மீது வைத்தாள்..

“பார்த்து.. கையில பட்டிறப் போகுது...”

“பட்டா படட்டும்.. இது என் கை...”

“ஊஹீம்.. நேத்து சாயங்காலத்துக்குப் பின்னால அது என் கை...”

‘ஓ.. நீ அப்படி வருகிறயா..?’

காவ்யா ஒரு முடிவுடன் அவனைப் பார்த்தாள்... அவன் கண்களில் கேள்வி வந்தது.. புருவங்கள் சுருங்க.. அவளையே பார்த்தான்.. அந்தப் பார்வையில் என்ன கண்டாளோ காவ்யா உதட்டைக் கடித்தபடி பார்வையை விலக்கிக் கொண்டாள்..

“நேத்து நடந்ததை என் வீட்டில் சொல்லியிருந்தா என்ன ஆகியிருக்கும் தெரியுமா..?” அவன் முகம் பார்க்காமல் கேட்டாள்...

“என்ன ஆகியிருக்கும்...?” அவன் அலட்டிக் கொள்ளவில்லை...

“வெட்டரிவாளும்.. வீச்சுக் கம்புமா.. இந்நேரத்துக்கு உங்க கடையை எங்க வீட்டாளுக சுத்தி வளைச்சிருப்பாங்க..”

“அது எதுக்கு..?”

“வீடு கட்டத்தான்..”

“ஓ.. மதுரையில எனக்கு வீடு கட்டித் தருவாங்களா..? வீணாய் சிரமப் படுத்திக்க வேணாம்ன்னு சொல்லு.. நான் நினைச்சா.. இந்த நிமிசமே ஒரு வீட்டை வாங்கிருவேன்..”

“கொழுப்பு...?”

“யெஸ்...”

“அடக்கி வாசிங்க.. இல்லைன்னா எங்க ஊரு ஆளுக அடக்கிருவாங்க...”

“ஏன் அடக்கலை...?”

“புரியலை..”

“ஏன் நீ உன் வீட்டில் நடந்ததைச் சொல்லலை..?”

அமர்த்தலாக அவன் கேட்ட கேள்வியில் அவள் தடுமாறிப் போனாள்...

ஏன் அவள் நடந்த நிகழ்வை வீட்டில் சொல்லவில்லை..? சொல்லியிருக்கலாமே.. இப்படி கள்ளன் போல அவன் வேனுக்குள் வந்தான்.. என்னைத் தொட்டான்.. முத்தம் கொடுத்தான்.. ஐ லவ் யு என்று காதில் சொன்னான்.. கட்டிப் பிடித்தான் என்று ஆதியோடு அந்தமாக அத்தனையையும் பிட்டுப் பிட்டு வைத்திருக்கலாமே... ஏன் அவள் அதைச் செய்யவில்லை..?

‘உன் மனசுல கள்ளம் புகுந்துருச்சு காவ்யா...’

கண்ணதாசன் சொன்ன வார்த்தைகள் காற்றோடு கலந்து வந்து அவள் காதுகளுக்குள் புகுந்தன...

அவன் சொன்னதையே வேறு வடிவில் சொன்னான் அர்ஜீன்...

“ஏன்னு நான் சொல்லவா..?” அர்ஜீன் நிதானமாகக் கேட்டபோது..

‘வேணாம்... சொல்லாதே... என் அண்ணன் பேசினதையே என்னால தாங்கிக்க முடியல.. நீயும் கூட்டுச் சேராதே...’ மனதுக்குள் புலம்பினாள் காவ்யா...

“உன் மனதில் காதல் புகுந்து விட்டது...” அழுத்தமான குரலில் அவன் இதைச் சொன்னபோது.. அவளாக அவளில்லை...

“போதும்..” பொறுக்க முடியாமல் அவள் சீறினாள்..

“காவ்யா..” புருவங்கள் இடுங்க.. அவன் அதட்டினான்...

“யார் சார் நீங்க..? எங்கிருந்தோ வந்தீங்க.. கடையை வாங்கினவரு கடை வேலயப் பாக்காம.. காதல் செய்யற வேலயில எதுக்காக இறங்கறிங்க..?”

அவளின் படபடப்பை அவன் சுருங்கிய புருவங்களுடன் ஊன்றிப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்...

# 40

*காற்றினிலே நான் கலந்து - உன்*
*கன்னம் தொட ஆசைகொண்டேன்..*

"அர்ஜீனன்னு பேரிருந்தா போற இடத்தில எல்லாம்.. ஒரு பொண்ணைக் கணக்கு பண்ணனும்னு சட்டம்.. கிட்டம் இருக்கா...?"

காவ்யாவின் கேள்வியில் அவன் கண்கள் இடுங்கின..

"என்ன பேசுகிறேன்னு புரிஞ்சுதான் பேசுகிறயா..?"

"நான் சின்னப்பப்பா பாருங்க.. என்ன பேசறோம்.. ஏது பேசறோம்ன்னு புரியாம பேசறதுக்கு.."

"நீ சின்னப் பாப்பான்னு அந்தச் சின்னப் பப்பா கூடச் சொல்லாது... என்னைப் பார்த்தா போகிற இடத்தில எல்லாம் பெண்ணைத் தேடறவன் போலவா இருக்கு..?"

"அப்புறம் எதுக்காக என்னைத் தேடறிங்க..?"

"உன்னைத் தேடினா.. ஊருக்கு ஒருத்தியைத் தேடினேன்னு அபாண்டமாய் பழி போடுவியா..?"

“நான் அப்பவே சொல்லிட்டேன்.. பழி போடறதைப் பத்தி நீங்க பேசக்கூடாதுன்னு.. உங்களாலே எனக்குத்தான் பழிவந்து சேர்ந்திருக்குன்னு.. இளங்கோ கல்யாணத்துக்கு எல்லாருமா சேர்ந்து வேனில் போகலாமுன்னு யாரைக் கேட்டு முடிவு பண்ணினீங்க...?”

“கடையில இருக்கிற எல்லோரையும்.. முக்கியமா உன்னையும் கேட்டுத்தான் முடிவு பண்ணினேன்.. நீதான் அந்த வேனையும் அரேன்ஜ் பண்ணின.. மறந்து போச்சா..?”

“அன்னைக்கே நாங்க சொன்னோம்...”

“நாங்கன்னா..?”

“நானும்.. பாவனாவும்..”

“என்ன சொன்னீங்க..?”

“அவங்வங்க வசதிப்படி கல்யாணத்துக்கு போயிட்டு வந்துக்குவோம்ன்னு.. நீங்க திட்டம் போட்டு காரியத்தை சாதிச்சிட்டிங்க...”

அவள் குமுறினாள்.. அர்ஜீனின் முகம் கல்லானது.. இந்த அளவுக்கு அவள் குமுறுவதாக இருந்தால்... அவளின் பார்வைகளுக்கான அர்த்தம் எதுவென்று அவன் யோசித்தான்..

அவன் காதல் சொன்னதைப் பிடிக்காமல் அவள் துடிப்பதாக இருந்தால்.. அவன் தினமும் கண்களின் வழியாக உணர்த்திய காதலில் துடித்திருக்க வேண்டுமே.. அவன் தொட்டது பிடிக்காமலிருந்தால் அவன் தொட்ட போது தள்ளி விட்டிருக்கலாமே.. மாறாக... தொய்ந்து அவன் கைகளில் சரிந்தாளே..

அவள் விழிகளில் வழிந்த மயக்கத்தை அவன் மறக்கவில்லை.. அவளா இப்படிப் பேசுகிறாள்..?

“எதைப் பேசினாலும் யோசித்துப் பேசறது பெட்டர்.. இது கடை... பலர் வந்து போகிற இடம்.. நீ பேசறதைக் கேட்கிறவங்க.. என்னவோ நான் திட்டம் போட்டு உன் கற்பை சூறையாடி விட்டேன்னு கதை கட்டி விடப் போகிறாங்க.. ஒரு முத்தத்துக்கா இத்தனை பேச்சு..?”

“என்னது..?” காவ்யா வெகுண்டு விட்டாள்..

அந்நிய ஆண்களின் மூச்சுக் காற்றுக் கூடப் படாமல் தள்ளி நின்று பேசிப் பழகுகிறவள் அவள்.. மற்றவர்களின் விரல் நுனிகூட அவளைத் தீண்டியதில்லை.. அப்படிப் பட்டவளைத் தொட்டு முதன் முதலாக ஒரு ஆணின் ஸ்பரிசத்தை அவளுக்கு உணர்த்தியவன் அவன்.. முதல் முத்தத்தையும் தந்து அதிர வைத்தவன் அவன்..

அவனுடைய மூச்சுக் காற்றின் வெப்பத்தில் அவளை நடுங்க வைத்தவன் அவன்.. அப்படி அவளைத் தொட்டு விட்டவன் சொல்கிறான்.. ஒரு முத்தத்துக்கா இத்தனை பேச்சு என்று...

அவனறிவானா.. அவனின் விரல்நுனி அவள்மீது பட்டதே அவளுக்கு பெரிதான ஒரு விசயமென்று.. அதையும் தாண்டி அவனுடைய இதழ்களை அவள்மீது பதித்துவிட்டு.. அதை எளிதான ஒன்றைப் போல எப்படி அவன் கூறுகிறான்..?

அவளை அவன் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று அவளுக்குத் தோன்றிவிட்டது...

"நினைச்சேன்..."

"எதைடி நினைச்சே..."

"இந்த 'டீ' போட்டுப் பேசற வேலையெல்லாம் இங்கே வேணாம்..."

"ஏன்.. நான் உன்னை அப்படிப் பேசக் கூடாதா..?"

"கூடாது.. உங்களுக்கு அதுக்கான உரிமையும்.. தகுதியுமில்லை..."

"ஏய்.. நான் உன்கிட்டக் காதல் சொன்னவன்டி..."

“நீங்க சொல்லிட்டா.. நான் உடனே ஏத்துக்கனுமா..? நீங்க பெரிய பணக்காரரா இருந்தா அது உங்க மட்டுக்கு.. பணத்தைப் பாத்து மயங்கற ஆள் நானில்ல..”

“நீ என் பணத்தைப் பாத்து மயங்கலைடி.. என்னைப் பாத்து மயங்கின...”

இவன் அடங்கவே மாட்டானா என்றிருந்தது காவ்யாவிற்கு...

அவனை வெட்கம் கெட்டுப் போய் ரகசியப் பார்வையிட்ட தினங்களை நினைத்து.. தன்னைத்தானே திட்டிக் கொண்டாள்..

‘அதனால்தானே இவன் இம்புட்டுத் தெனாவெட்டா பேசறான்...’

“நீங்க பண்ற அலப்பறைக்கு.. இந்த ஊரே உங்களப் பாத்து மயங்குதுன்னு நீங்களா நினைச்சுக்கிட்டா அதுக்கு நான் பொறுப்பில்ல...”

“நினைச்சேண்டி.. உன்பேச்சு ஒரு தினுசா இருக்கும் போதே நினைச்சேன்.. நீ கழன்டுக்க நினைக்கிறேன்னு நினைச்சேன்.. தள்ளி நின்னா கள்ளப் பார்வை பார்க்கிறது.. கிட்ட வந்து தொட்டுட்டா.. குய்யோ முறையோன்னு சத்தம் போடறது.. இததானேடி நீ...”

“உங்களைக் கள்ளப்பார்வை பார்த்துட்டாலும்...”

“நீ பார்க்கலையா..”

“சும்மா சொன்னதையே சொல்லும கிளிப்பிள்ளை போல.. அதையே ஒப்பிச்சுக்கிட்டு இருக்காதீங்க... கள்ளப் பார்வை பார்த்தேன்.. கழுதைப் பார்வை பார்த்தேன்னு.. இந்தக் கழுதையைத்தான் என் அண்ணனும் கேட்டுச்சு..”

“என்னன்னு..?”

“உன் மனசில கள்ளம் புகுந்துருச்சுன்னு.. இத்தனை நாளில இது போல ஒரு வார்த்தையை என்னைப் பாத்து அது கேட்கிறாப்புல நான் நடந்துக்கிட்டது இல்லை.. இன்னைக்கு அது நடந்திருச்சு...”

‘ஓ.. இதுதான் இவளோட கோபமா..?’

அர்ஜீனின் மனம் லேசானது.. அதுநேரம் வரை அவள் மனதிலிருக்கும் காதலை மறைத்து வைத்துப் பேசுகிறாள் என்ற கோபத்துடன் இருந்தவன் கோபம் தணிந்தான்..

“உன் அண்ணனுக்கு எப்படித் தெரியும்..?”

“தெரியலை.. யார் சொல்லியிருப்பாங்கன்னும் புரியலை.. பாவனா கிட்டக் கேட்டால் அவள் சொல்லலைன்னு சொல்றா..”

“அவளுக்கு எப்படித் தெரியும்..? வேனுக்குள் நடந்தது உனக்கும்.. எனக்கும் மட்டும்தானே தெரியும்..? நீதான் உன் வீட்டில் எதுவும் சொல்லலையே...”

அவன் யோசனையுடன் சொன்னான்.. அவள் கனல் பறக்க முறைத்துப் பார்த்தாள்...

‘எதுக்கு முறைக்கிறா..?’ அவனுக்கப் புரியவில்லை..

“நீங்க அந்த ஒன்னில்தான் நிப்பிங்களா..? அதைத் தாண்டி வெளியே வரவே மாட்டிங்களா..? நீங்க பண்ணி வைச்ச அநியாயத்தப்பத்தித் தெரிஞ்சிருந்தா என் அண்ணன் என்னை வெட்டிக் கொன்னு புதைச்சுட்டு அதே அரிவாளோட உங்களையும் தேடி வந்திருக்கும்...” அவள் கொதித்துக் கொண்டிருந்த போது...

“உன் அண்ணன் போஸ்ட் கிராஜிவேட்.. ஸ்டேட் கவர்ண்மென்டில ஹையர் ரேன்ஜில இருக்கிற ஆபிசர்.. அப்படி இப்படின்னு சொன்ன..? கடைசியில பாத்தா.. அவர் அருவாளைத் தீட்டறவரா இருக்காரே...” என்று அவன் எக்குத்தப்பாக கேட்டுவைத்தான்...

“நீங்க ஒரு முடிவோடதான் மதுரைக்குள்ள காலை வைச்சீங்களா..?”

“என்ன முடிவுன்னு நீயே சொல்லிரு.. நான் மாற்றிச் சொல்லிட்டா வம்பு...”

“வம்புக்கு பயந்த ஆள்தான் நீங்க..”

“ஒரு முத்தத்தக் கொடுத்ததுக்கு குற்றவாளிக் கூண்டில் ஏத்தாதே...”

இவனுக்கு முத்தமென்றால் அவ்வளவு எளிதாகப் போய்விட்டதா என்ற கோபத்தீ அவளுக்குள் மூண்டது...

"உங்களுக்கு அது ஈஸிதான் சாரே.. எங்களுக்குத் தான் அது கஷ்டம்..."

"எங்களுக்குன்னா.. யார்.. யார்..? நான் உனக்கு மட்டும் தானே முத்தம் கொடுத்தேன்..."

"ச்சே.. பெரிய ரோதனையாப் போச்சு.. யாரைக் கேட்டு கொடுத்தீங்க..? முத்தம் கொடுங்கன்னு நானா கேட்டேன்...?"

"ஓகே.. லீவ் இட்.. இதுதான் உன் கோபம்ன்னா.. ஐ ஆம் வெரி ஸாரி.. ஃபார் தட்.. நீ வேணும்னா நான் கொடுத்த முத்தத்தைத் திருப்பிக் கொடுத்துரு.. கணக்கு நேராகிரும்..."

அவன் சிரிக்காமல் கேட்டான்.. அவள் திணறிப் போனாள்.. இப்படி ஒரு கணக்கு பரிவர்த்தனையை எங்கேயும் அவள் கேட்டதில்லை...

"என்ன பேசாமல் இருக்கிற.. உன் விருப்பமில்லாம அதை உனக்குக் கொடுத்திருக்கக் கூடாதுதான்.. உனக்கு அது பிடிக்கலைன்னு தெரிஞ்சு போச்சு.. இதுக்குப் பின்னாலேயும் என் முத்தம் உன்கிட்ட இருந்தா சரியா இருக்காது.. ஸோ.. நீ என் முத்தத்தை திருப்பிக் கொடு.."

“விளையாடறிங்களா..?”

“நோ.. நோ.. பி சீரியஸ் காவ்யா.. நான் பக்கா பிஸினெஸ் மேன்.. அக்கவுண்ட்ஸ் மேட்டரில் நான் கறாரா இருப்பேன்னு உனக்கே தெரியும்தானே.. அக்கவுண்ட்ஸில் செட்டில்மென்ட் கரெக்டா இருக்கனும்.. இப்ப நான் ஒன்னை உனக்குக் கொடுத்திருக்கேன். உனக்கு அது தேவையில்ல.. உன் விருப்பத்தைக் கேட்காம அதை நான் உனக்குக் கொடுத்திட்டேன்னு சொல்ற.. அதுக்கு மேலேயும் அது உன்கிட்ட இருக்கக் கூடாது.. இட்ஸ் நாட் குட்.. ஸோ.. ப்ளீஸ்.. அந்த முத்தத்தைத் திருப்பிக் கொடுத்துரு...”

“வேணாம்.. இந்தப் பேச்சை இதோட நிறுத்திக்கங்க.. வீணா என்ன கொலைவெறிக்கு ஆளாக்காதீங்க...”

கையிலிருந்த பேனாவை கத்தியை ஆட்டுவதைப் போல ஆட்டி அவனை எச்சரித்தாள் காவ்யா.. அவன் அதை ரசித்து...

“ஹா... ஹா...” என்று சிரித்தான்...

“எங்க வீட்டில நான் வேனில் போனது தெரியாது...”

“அதான் தெரியுமே.. உன் வீட்டுக்கு வரவிடாம பாவனா வீட்டுக்கு வரவைச்சவதான நீ...”

“அண்ணனுக்கு அதுதான் தெரிஞ்சு போச்சு...”

"ஓ.. அப்ப உனக்கு நான் கடனாக் கொடுத்திருக்கிற முத்தத்தைப் பத்தித் தெரியாதா..?"

"என் அண்ணனுக்கு மொத்தத்தான் தெரியும்.. அந்தக் கொடுமையில உங்களை இழுத்துவிட வேணாம்ன்னு பாக்கறேன்.. அதணால..."

"ஸோ..?"

"அடக்கி வாசிங்க வாத்தியாரே..."

அவன் கடன் கொடுத்ததை சொல்லிக் காட்டி.. அதைத் திருப்பிக் கேட்ட கலாட்டாவில்.. அவள் மனதிலிருந்த கோபம் மறைந்து விட்டது.. கள்ளப் புன்னகையுடன் அவள் வேலையில் ஆழ்ந்தாள்...

எதையோ கேட்க வாயெடுத்த அர்ஜீன்.. ஏகாம்பரத்தைக் கண்டதும் வாய் மூடிக் கொண்டான்.. கைகட்டி.. வாய் பொத்தாத குறையாக அவர் பணிவோடு நின்று கணக்குப் புள்ளி விவரங்களை சொல்லி விட்டு நடையைக் கட்டியதும் அவளைத் திரும்பிப் பார்த்தான்...

அப்போதுதான் இமைகளை உயர்த்திய அவளும் அவனைப் பார்த்தாள்...

அர்ஜீனும் நோக்கி.. காவ்யாவும் நோக்கிக் கொண்டிருந்த போது.. அவர்களை நோக்கியபடி பாவனா அறைக்குள் வந்தாள்...

‘இவ கண்டு பிடிச்சுருவாளே...’

காவ்யா அவசரமாய் பார்வையை விலக்கிக் கொண்டாள்.. அர்ஜீன் லேசான புன்னகையுடன்...

“வாங்க பாவனா..” என்றான்..

அவனிடம் கையொப்பம் வாங்க வேண்டிய கடிதங்களில் கையொப்பம் வாங்கிவிட்டு.. காவ்யாவை நோக்கி மர்மப் புன்னகையொன்றை வீசிவிட்டு பாவனாவும் போய்விட்டாள்...

‘அப்பாடா.. இனிப் பேசலாம்...’

அர்ஜீன் காவ்யாவின் பக்கம் திரும்ப முனைந்த போது...

“சார்..” என்று கந்தசாமி வந்து சேர்ந்தார்...

அவரை அனுப்பி வைத்ததும்.. தங்கராஜ் வந்து சேர்ந்தான்.. அவனையும் அனுப்பிவிட்டு அர்ஜீன் திரும்பிய போது.. காவ்யா மதிய உணவுக்காக அறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள்...

‘இவளுக்கு நான் முக்கியமில்லை.. நேரத்துக்கு கொட்டிக்கனும் அதுதான் முக்கியம்..’

எரிச்சலுடன் எழுந்தவனுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.. எனவே அவனும் கொட்டிக் கொள்ளச் சென்றான்.. மதிய உணவுக்குப் பின்னால் காவ்யா திரும்பி

வந்த போது அர்ஜீன் அறையில் இல்லை.. அவன் திரும்ப வந்தபோது காவ்யா அறையில் இல்லை.. பாவனாவிடம் முக்கிய விவரமொன்றைக் கேட்பதற்காக போயிருந்தாள்..

'என்னடா இது..'

அர்ஜீனுக்கு எரிச்சல் வந்து விட்டது...

தெரியாத்தனமாய் மதுரையில் பிறந்து வளர்ந்த ஒருத்தியைக் காதலித்து விட்டக் கொடுமைக்காக அவன் இத்தனை லோல் பட வேண்டுமா...?

'நான் பெரிசா என்னத்தைக் கேட்டுட்டேன்..? நான் சொன்ன ஐ லவ் யுவுக்கு பதிலாய் ஒரு ஐ லவ் யுவைக் கேட்டேன்.. ஒரு காதலனாகப் பட்டவனுக்கு இதற்குக் கூட உரிமையில்லையா..?' மனதுக்குள் பொருமினான்...

கொஞ்சம்கூட.. முதல்நாளின் நினைவுகளின் சாயல் இல்லாதவளாக எப்படி அவளால் நடமாட முடிகின்றது அவனுக்கு புரியவில்லை.. இதுதான் காதலா.. இதுதான் காதலா.. என்று கேட்கும் திரைப்படக் கவிஞர்கள்.. மட்டும் காவ்யா படுத்தும் பாட்டைப் பற்றிக் கேள்விப் பட்டால்.. இதுதான் இவளின் காதலா என்று பின்னங்கால் பிடறியில் பட ஓடிப் போயிருப்பார்கள் என்ற முடிவுக்கு அவன் வந்தபோது.. அவள் அன்றைய வேலை முடிந்தது என்று வீட்டுக்குக் கிளம்பிப் போய் விட்டாள்...

# 41

## கண்ணாமூச்சி விளையாட்டை - நீ கைவிடவே ஆசைகொண்டேன்...

“**ஸ்**ஸ்.. அப்பாடா..” என்றபடி வீட்டுக்குள் வந்தார் துரியோதனன்...

செம்பு நிறைய தண்ணீருடன் அவர்முன் பிரசன்னமான செல்வி “இந்தாங்க..” என்று தண்ணீர் செம்பை அவரிடம் நீட்டினாள்...

வாங்கி மடமடவென்று அதைத் தொண்டைக்குள் சரித்துவிட்டு தண்ணீர் செம்பை திருப்பிக் கொடுத்தவர்.. ஆசுவாசத்துடன் சோபாவில் சரிந்தார்...

கணவனின் தளர்ந்த கோலத்தைக் கண்ட செல்வி மின் விசிறியைச் சுழல விட்டாள்.. கருத்தறிந்து மனைவி செய்த பணிவிடைகளில் துரியோதனனின் உள்ளம் நெகிழ்ந்தது...

‘சும்மாவா பெரியவங்க சொல்லி வைச்சிருக்காங்க.. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்ன்னு..’

காதலுடன் மனைவியைப் பார்த்தவர் வாசலில் கடாமுடாவென்று லாரி வந்து சரளைக்கற்களைக் கொட்டுவதைப் போன்ற சப்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்...

அங்கே லாரியும் இல்லை.. சரளைக் கற்களும் இல்லை... அதற்கு மாறாக.. அவர் பெற்ற அருந்தவப் புதல்வன்தான் வாசல் கேட்டை இடித்து நொறுக்கியபடி வந்து கொண்டிருந்தான்...

‘இவனைப் பெத்தது யார் கொடுத்த வரம்..?’

நொந்து போனவராக முகம் சுளித்தார் துரியோதனன்.. கணவனின் முகத்திலிருந்த அவர் மனதைப் படித்தவளாக செல்வி...

“இப்போத்தான் வெளியே போனான்..” என்று அவசரமாகச் சொன்னாள்..

“அவன் எப்போப் போவான்.. எப்போவருவான்னு உன்னவிட எனக்கு தெளிவாத் தெரியும்டி...” என்று முறைத்தார் துரியோதனன்...

தடபுடா என்று வீட்டுக்குள் வந்த தேவராஜன் தகப்பனைக் கண்டதும் தேங்கி நின்றான்...

“எங்கேடா போயிருந்த..?” கோபத்துடன் அதட்டினார் துரியோதனன்...

“எங்கே போனா உங்களுக்கென்ன..? அதான் வித்த கடைப் பக்கமும் போகக்கூடாது... புதுசா திறந்திருக்கிற கடைப்பக்கமும் வரக்கூடாதுன்னு உத்தரவு போட்டுட்டீங்கள்ல.. அதுக்கு மேல எதுக்கு கேள்வி கேக்கறிங்க..?” பதிலுக்கு முறைத்தான் தேவராஜன்...

“வித்த கடையில உனக்கென்னடா சோலியிருக்கு..? அந்த பார்த்தசாரதியோட மகன் போனைப் போட்டு சத்தம் போடறான்.. தேவையாடா எனக்கு..? ஏற்கனெவே அவனுக என்னத் தோக்கடிச்சுட்ட ஆணவத்தில இருக்கானுக.. இதில நீயும் வேற சேந்துக்கிட்டு ஏண்டா என் உயிரைக் குறைக்கிற..? நீ பண்ணி வைச்சதெல்லாம் போதாதா..? இன்னும் சேர்ந்துக்கனுமா...?”

“அப்பா போனதையே சொல்லிக் காட்டாதீங்க.. நானும் திருந்திப்புடலாமுன்னுதான் ஜவுளிக்கடைக்கு வந்தேன்.. என்னை உள்ளார நுழைய விட்டிங்களா..?”

“அறைஞ்சேன்னா ஒட்டு மொத்தப் பல்லும் ஒன்னா உதிர்ந்து போயிடும்.. படவா ராஸ்கல்.. நீ எதுக்காக வந்தேன்னு தெரியாதா..? கடையைக் கவனிக்கலாம்கிற பொறுப்பிலயா வந்த..? கடைக்கு துணிமணி வாங்க வர்ற பொம்பளைக கூட்டத்தப் பாத்து அங்க வந்த.. இல்லேன்னா உன் பொறுப்பப் பத்தி எனக்குத் தெரியாதா..?”

துரியோதனனின் கோபத்தில் தேவராஜன் வாயை மூடிக் கொண்டான்.. தலையைப் பிடித்தபடி வாய்க்குள் மொண மொணவென்று மகனைத் திட்டிக் கொண்டிருந்தார் துரியோதனன்..

“அப்பா...” என்ற அன்பான அழைப்புடன் தேன்மொழி வந்தாள்...

“வாசலில நீ வர்ற சத்தமே கேட்கலையேம்மா.. எப்படி வந்த..?” ஆச்சரியத்துடன் கேட்டார் துரியோதனன்..

“சுவரேறிக் குதிச்சு வரலை.. கேட்டைத் திறந்துக்கிட்டுத்தான் வந்தேன்.. இது என்னப்பா இப்படிக் கேட்கறிங்க...?”

“உன் அண்ணன் வந்த லட்சணம் அப்படி...” அலுத்துக் கொண்டார் துரியோதனன்...

“இது கூடப் பொறந்துட்டேங்கிறதுக்காக.. இதுகூட என்ன இணக்கூட்டிப் பேசாதீங்கப்பா..” முகம் சுளித்தாள் தேன்மொழி..

“அத்தைச் சொல்லு.. இந்த லட்சணத்தில இவன நானு கடைக்குள்ள விடலையாம்.. கம்யூட்டரை வித்தப்ப.. கடையைப் பாத்துக்க வாடான்னு நானும் காட்டுக் கத்தலா கத்துவேன்.. காதிலேயே போட்டுக்க மாட்டான்.. தினமும் காலையில ஒருதரம்.. சாயங்காலம் ஒருதரம்ன்னு

ஆஜராவான்.. ஆனா அடங்கிக் கடையில உக்கார மாட்டான்.. அப்ப பொத்துக்கிட்டு வராத கரிசனம் இப்ப மட்டும் எங்கிருந்து பொத்துக்கிட்டு ஊத்துதாம்..?"

"கதையே வேறப்பா.. கம்யூட்டர் வாங்க வர்றவங்க எல்லாருமே பொம்பளைகளா இருக்க மாட்டாங்க.. அதோட.. ஜவுளிக்கடையில் குமியற அளவுக்கு வேற எந்தக் கடையிலயும் பொம்பளைக குமிய மாட்டாங்க..."

தேன்மொழி நமட்டுச் சிரிப்புடன் போட்டுக் கொடுத்தாள்..

"அதச் சொல்லு.. அந்த மட்டிலும் ஒரு நிம்மதிதாம்மா.."

"என்னப்பா..?"

"அந்தக் கடையை விக்க வைச்சதைப் போல இந்தக் கடையை விக்க வைக்க மாட்டானில்ல..."

"ஹா... ஹா.. ஆமாம்பா..."

தகப்பனும் மகளும் கூட்டணி போட்டுக் கொண்டு தேவராஜனை தாக்கோ தாக்கென்று தாக்கிக் கொண்டிருக்க.. அவன் அதற்கெல்லாம் அயர்வேனா என்று அத்தனை சொல்லடிகளையும் தாங்கி நின்று.. எதையும் தாங்கும் வைர நெஞ்சம் அவனுக்கிருப்பதை நிருபித்தான்...

காபியுடன் வந்த செல்வி.. மகனைப் பார்த்தாள்.. இவன் இப்படி இருக்கிறானே என்ற கோபம் கலந்த வேதனை அவளுக்குள் கொப்பளித்தது...

“இந்தா பாரு தேன்மொழி.. ஆயிரம்தான் இருந்தாலும் இவன் உனக்கு அண்ணன்.. நாளக்கி உனக்கு கல்யாணமாகி புள்ளை குட்டின்னு நிக்கிறப்ப தாய்மாமன் சீரு செய்ய இவன்தான் உனக்கு வந்து நிக்கனும்... அதனால அப்பாகூடச் சேந்து வாயடிக்காம அடக்க ஒடுக்கமா இருந்து பழகு...” அவள் மகளைக் கடிந்து கொண்டாள்...

“இப்ப அண்ணனை என்னம்மா சொல்லிட்டேன்..? அப்பா கூட விளயாட்டாப் பேசிச் சிரிச்சா உடனே நீ உபதேசம் பண்ணக் கிளம்பிருவியே...” தேன்மொழி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு உள்ளே போனாள்..

“காபியைக் குடிச்சுட்டு போ...” அதற்கும் செல்வி அதட்டினாள்..

“இப்படி முன்னாடி வசவு.. பின்னாடி காபின்னு குடு.. தொண்டையிலே இறங்கிரும்..” தேன்மொழி சலித்துக் கொண்டாள்...

“ஏன் செல்வி.. புள்ளயப் போய் திட்டற..? அது உன் மகனை என்ன சொல்லுச்சு..? உள்ளதத்தான சொல்லுச்சு..

உன் மகனப் போல உதவாக்கரையா ஊரைச் சுத்தினா நீ பேச வேண்டியதுதான்.. அது புத்தியோட காலேஜீக்குப் போயி பட்டப்படிப்பை படிச்சு முடிச்சபுள்ள.. அதப்போயி பேசக் கண்டோமா..?" துரியோதனன் மனைவியை கோபித்தார்..

"இப்பப் பேசற வாய்தான் நாலு பேரு இருக்கிறப்பவும் பேசச் சொல்லும்.. இவளே இவ அண்ணனப் பத்தி இப்புடிப் பேசினா.. நாளபின்ன இவனுக்கு யாரு பொண்ணு கொடுப்பாங்கன்னு சொல்லுங்க..." கவலையுடன் பேசினாள் செல்வி...

"யாருடி இவ.. வீட்டில கல்யாண வயசில பொம்பளப்புள்ளய வைச்சுக்கிட்டு இந்த தடிமாட்டு தாண்டவராயனுக்கு பொண்ணுத்தேடக் கிளம்பிட்டா.. அந்தப் பேச்சே இந்த வீட்டுக்குள்ள வரக்கூடாது.. என் பொண்ண கரையேத்திட்டுத்தான் மத்ததைப் பத்தி நான் யோசிப்பேன்.." தீர்மானமாகச் சொன்னார் துரியோதனன்..

தேவராஜன் ஒரு யோசனையை யோசித்து வைத்திருந்தான்.. அந்த யோசனையை தகப்பனாரின் காதுக்குள் போட்டுவிட அதுதான் நல்ல தருணமென்று அவனுக்குத் தோன்றிவிட்டது...

தேவராஜன் தகவல் சேகரித்திருந்த வகையில்.. அர்ஜீனுக்கு காவ்யாவின் மீது ஒரு கண் இருப்பது

தெளிவாகியிருந்தது.. போதாக்குறைக்கு இளங்கோவின் திருமணத்துக்கு வேன் பிடித்து மொத்த கடையும் ஒன்றாக இன்பச் சுற்றுலா போல் கிளம்பியதையும்.. அந்த ஜோதியில் அர்ஜீனனும் ஐக்கியமாகியிருந்ததையும் அவன் அறிந்திருந்தான்.. அவனால் அந்தச் செய்தியை தாள முடியவில்லை...

"கடைநிர்வாகம் மொத்தமும் காவ்யா கைக்கு போயிருச்ச தேவராஜா.. இப்ப கடையில அது வைச்சதுதான் சட்டம்.. முதலாளி கள்ளுக்குடிச்ச சிங்கங்கணக்கா அது பின்னாலேயே சுத்தறாருன்னா பாரேன்..."

போட்டுக் கொடுத்த தங்கராஜ் விவரங்களை பிட்டுப் பிட்டு வைத்திருந்தான்.. அத்தனையையும் கேட்டுக் கொண்ட தேவராஜனுக்கு.. தங்கராஜ் அர்ஜீனை சிங்கமென்று அழைத்ததை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை..

"கள்ளுக் குடிச்ச குரங்குன்னு சொல்லுவியா.. அத விட்டுட்டு அவனைப் போயி சிங்கம்கிற.." என்று சண்டைக்குப் போனான்..

"உன்கூட இது ஒன்னு இருக்கு தேவராஜா.. எதுனாலும் நீ முட்டாத்தனமாத்தான் பேசி வைப்ப.. அவர் இருக்கிற அழகுக்கும்.. வாட்டசாட்டத்துக்கும் அவரப் போயி

குரங்குன்னு சொன்னா.. அழகர்கோவில் மலையில இருக்கிற குரங்குக் கூட்டமே கோவிச்சுக்கிட்டு சண்டைக்கு கிளம்பி வந்துருமப்பா.. ஒத்தச் சொல்லச் சொன்னாலும் அதப் பொருந்தச் சொல்லுற மதுரையில பிறந்தவனப்பா.. என்னால ஆணழகனையெல்லாம் குரங்குன்னு சொல்லிற முடியாது.. நீ வாங்கிக் கொடுக்கிற பிரியாணிக்கும்.. சரக்குக்கும்.. நடக்கிற நடப்பச் சொல்றேனா இல்லியா.. அத மட்டும் பாரு.. அதுக்கு மேலே இன்னாரை ஆனைன்னு சொல்லு.. இன்னாரை பூனைன்னு சொல்லுன்னு சொல்லிக் கொடுக்கிற வேலய எல்லாம் எங்கிட்ட வைச்சுக்கிராதே.. நான் மதுரைக்காரன்...”

‘நான் மட்டும் செவ்வாய் கிரகத்துக்காரனா...’

தேவராஜனுக்கு பற்றிக் கொண்டுதான் வந்தது.. ஆனாலும் அதை பற்றிவிட்டு.. புன்னகை மன்னனாய் தங்கராஜைத் தழுவிக் கொண்டான்.. மறக்காமல்...

‘ம்ஹீம்.. அந்தக் கடைய மட்டும் எங்கப்பன் விக்காம இருந்திருந்தா.. இவன் என் காலத் தொட்டுக் கும்பிட்டிருப்பான்.. இப்படிக் கட்டித் தழுவிக்கிட்டு நிக்க மாட்டான்..’ என்ற பெருமூச்சையும் விட்டுக் கொண்டான்..

“ஆமா தங்கம்.. அந்தக் காவ்யாவோட வீட்டில கட்டுக்காவல் ஜாஸ்தியாச்சே.. அதெப்படி.. ஒரு நாள்

பூராவும் அது இன்பச் சுற்றுலா போதை கண்டுக்காம விட்டாங்க..” என்று கிண்டிக் கிழங்கையும் எடுத்தான்...

“அந்தக் கூத்தை ஏன் கேக்கிற.. அதோட அண்ணன்.. என் அண்ணனுக்கு ஆபிசராச்சே.. அண்ணனைத் தேடி வந்தவரு வாய நான் கிண்டினேன்.. அவருக்கு அவரோட தங்கச்சி கடையில வேல பாக்கிறவங்களோட சேந்து கல்யாணத்துக்கு வேனில போனது தெரியாது போல இருக்குப்பா...”

‘அட..’ தேவராஜீக்கு ஒரு பிடி கிடைத்துவிட்டது...

“அப்புறம்..?” ஆவலாக விசாரித்தான்...

“அப்புறம் என்னாச்சுன்னு எனக்குத் தெரியாது.. ஆனா அவரு கடைப்பக்கமா வந்தா முதலாளிய வெட்டவா இல்ல குத்தவான்னுதான் பாத்து வைப்பாரு...”

‘இது வேறயா..’ லட்டு மேலே லட்டாக கிடைத்ததில் மகிழ்ந்து போனான் தேவராஜன்...

“இன்னைக்கு நீ வாங்கிக் கொடுத்த சரக்குக்கு இம்புட்டுத்தான் கக்க முடியும்..” தங்கராஜ் கழண்டு கொண்டான்...

அவன் சொன்னவைகளை சேர்த்துக் கோர்த்து மனதுக்குள் ஒருவழி பண்ணிக் கொண்டிருந்தவனுக்கு..

அர்ஜீனை அவன் பாதையிலிருந்து அகற்ற ஒருவழி கிடைத்திருந்தது...

அந்த வழியை முயன்று பார்க்க நேரம் காலம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவனுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்து விட்டார் துரியோதனன்..

“நீங்க நினைச்சா தங்கச்சியை நல்ல இடத்தில கட்டியும் கொடுக்கலாம்.. உங்க மனசு வருத்தத்தையும் மாத்திக்கலாம்பா...” வினையமாக சொன்னான் அவன்...

ஆனால் அவன் சொன்னதினாலேயே.. அதிலிருந்த வினயம் மறக்கப்பட்டு அது விகடப் பேச்சாக ஆகிவிட்டது..

“ஏண்டி.. எனக்கு கொஞ்சநாளா சறுக்கல்தான்.. நான் இல்லேங்கலை.. அதுக்காக இவனெல்லாம் யோசனை சொல்ற அளவுக்கா நான் சறுக்கிட்டேன்..?” மனைவியிடம் கேட்டார் துரியோதனன்...

“வாய வைச்சுக்கிட்டு சும்மா இருக்க மாட்டியாடா..? உன் யோசனையெல்லாம் உன்கூட வைச்சுக்கனும்.. அத விட்டுப்புட்டு.. அப்பா தலையில அதை நுழைக்கனும்னு பாத்த.. நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்..” செல்வி சீறினாள்...

“ஏம்மா.. இப்ப நான் என்னத்த சொல்லிப்புட்டேன்னு புருசனும் பொண்டாட்டியும் இந்தக்குதி குதிக்கறிங்க..?

அண்ணன்காரனா லட்சணமா.. தங்கச்சி கல்யாணத்தப் பத்தி ஒரு வார்த்த சொன்னா அது தப்பாம்மா..?" தேவராஜன் நியாயம் கேட்டான்..

"தப்புத்தாண்டா.. உன் லட்சணம் என்னான்னுதான் ஊருக்கே தெரியுமே.. இதில நீ கொண்டு வர்ற மாப்பிள்ளக்கி என் பொண்ணக் கொடுத்தா என்னா கதியாகும்ன்னு எனக்குத் தெரியாதா..?" கடுகடுப்புடன் உள்ளே செல்லப் போனாள் செல்வி...

"பொறும்மா.. நான் ஒன்னும் ஏப்ப.. சாப்பயான மாப்பிள்ளயப் பாத்து கை காட்டலை.. பெரிய படிப்புப் படிச்ச கோடிஸ்வரனத்தான் கை காட்டறேன்.. அவனுக்குப் பொண்ணக் கொடுத்தா.. நம்ம சுத்துப்பட்டியில நமக்குத்தாம்மா பெருமை.." தாயை வழிமறித்தான் தேவராஜன்...

"இவன் என்னத்தைடி சொல்றான்..?"

அவன் பேசிய பேச்சில்.. இத்தனை நாள்களாய் அவனிடம் தென்படாத புத்திசாலித்தனம் தென்பட்டதில் துரியோதனன் ஆச்சரியமாகிப் போனார்.. மகன் சொல்லச் சொல்ல அதைக் கேட்டவருக்கு ஆச்சரியம் இன்னமும் அதிகமானதாக ஆனது...

# 42

*என் கொழுசு சப்தத்திலே - நீ*
*எனைத்தேட ஆசைகொண்டேன்...*

‘இவன் நான் பெற்ற மகனான தேவாங்கு எனப்படும் தேவராஜன்தானா...?’

துரியோதனனின் முகத்தில் பிரமிப்பு எழுந்தது.. தேவராஜன் பேசிய விசயமும்.. அவன் அதைப் பேசின விதமும் அப்படிப்பட்டது...

“பாருங்கப்பா.. நாம நம்ம ஊரு திருவிழாவுக்கு போனப்ப பாரதகதய நாடகமா போட்டாங்களா இல்லயா..?” தேவராஜன் கேட்டான்...

“ஆமாண்டா அதுக்கென்ன..?” என்ற துரியோதனனின் மனதில் சட்டென்று ஒரு பயம் வந்துவிட்டது...

அவரைச் சொல்லிக் குற்றமில்லை.. தேவராஜன் கொண்ட வந்து விட்ட வம்பு வழக்குகள் அவரை அப்படிப் பயமுறுத்தி வைத்திருந்தன...

“ஏண்டா மகனே..! அதில வேசம் கட்டின பொம்பள புள்ளைககூட சகவாசம் வைச்சுத் தொலைச்சிருக்கியா..? யாராச்சும் வம்பு வழக்குன்னு வந்து நின்னா படியளக்க எனக்கு திராணியில்லடா...”

‘இதத்தவிர வேற எந்த நல்லதையும் என்கூட இணைகூட்டி நினைச்சுராதீங்க..’ பல்லைக் கடித்தான் தேவராஜன்..

“அப்படியெல்லாம் ஒன்னுமில்லப்பா...” என்று ஒரு தடவைக்கு ஆயிரம் தடவை அவன் அடித்துச் சொல்லிய பின்பே அவர் சமாதானமானார்..

நடந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த தேன்மொழி வாயைப் பொத்தித் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.. அதைக் கவனித்த தேவராஜன் இன்னும் கொஞ்சம் நொந்து நூலாகிப் போனான்...

“அப்புறம் எதுக்குடா.. நாடகக் கதையெல்லாம் நடுவீட்டுக்குள்ள கொண்டு வர்ற..?” செல்வி திட்டித் தீர்த்தாள்...

விட்டிருந்தால் கணவன் கண்கள் நிலைகுத்த நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாரே என்ற பயம் அவளுக்கு...

“காரணமாத்தான் கதை சொன்னேம்மா.. அந்த பாரதக் கதையில வர்ற அர்ச்சுனன்.. துருபத ராஜாவோட சண்டை போட்டுத் தோக்கடிச்சுருவான்...”

“இப்ப இது ரொம்ப முக்கியம்.. ஏங்க.. நீங்க வாங்க.. சாப்பிடப் போகலாம்.. இவன் வாயப் பாத்துக்கிட்டு இருந்தா இப்படித்தான் கதை சொல்லுவான்...”

“பொறு செல்வி.. பயபுள்ள பாரதக்கதயெல்லாம் போட்டுத் தாக்காறான்.. அத என்னான்னுதான் கேப்போமே..”

“எனக்கென்ன.. நான் சொல்லுறதச் சொல்லிட்டேன்.. அப்புறமா இவன் எசகு பிசகா பேசிப் புட்டான்னு நெஞ்சைப் புடிச்சிக்கிட்டு உக்காரக் கூடாது...”

“யம்மோவ்.. என்னபப்பத்தி நல்லதாவே நினக்க மாட்டியா...”

“நீ நினக்க விடலியேடா மகனே..”

“விடு செல்வி.. நீ சொல்லுடா தேவா...”

“தோத்துப் போன துருபத மகாராசா என்னா செஞ்சான் தெரியுமா..?”

“என்னத்தைச் செஞ்சான்..? பொண்ணைக் கட்டிக் கொடுத்து அந்த அர்ச்சுனனை அவனுக்கு மாப்பிள்ளையாக்கிக் கிட்டான்...”

"அதையே நீங்களும் செஞ்சா என்ன...?"

"டே.. ய்ய்.. தேவா..."

அதிசயப்பட்டுப் போனார் துரியோதனன்..

'இந்த யோசனை ஏன் எனக்குத் தோணலை..?'

"நினைச்சுப் பாருங்கப்பா.. அந்த அர்ச்சுனனுக்கு நம்ம தேன்மொழியக் கட்டிக் கொடுத்துட்டா.. அந்தக் கடை நம்ம தங்கச்சியோட கடையாகிரும்.. அதை வித்துப்புட்டோம்.. உங்க சிநேகிதன்கிட்டத் தோத்துப் புட்டோம்கிற வருத்தம் உங்கள விட்டு ஓடிப்போயிரும்..."

"வாஸ்தவம்தாடா.." தாடையைத் தடவியபடி யோசித்தார் துரியோதனன்..

"நல்லாயிருக்கு உங்க நாயம்.. இவன்தான் போகாத ஊருக்கு வழி சொல்றான்னா.. அத ஊம் போட்டுக் கேட்டுக்கிட்டு இருக்கீங்களே.. நடக்கிற கதயப் பேசுங்க.."

"நடக்காதுன்னா நீ நினைக்கிற...?"

"என்னங்க நீங்க.. அவங்க வேற ஜாதி.. நாம வேற ஜாதி... சாதிவிட்டு சாதி அவங்க பொண்ணுக் கட்டுவாங்களா..?"

"வெளிநாட்டுக்கெல்லாம் போய் படிச்சுட்டு வந்தவன் சாதியப்பத்தி பேசுவானாடி..?"

“சரி.. அத விடுங்க.. அவங்க எப்பேற்பட்ட கோடிஸ்வரங்க..! நம்ம கடய நாம அவங்களுக்கு வித்திருக்கோம்.. அவங்களும் இத பத்தோட பதினொன்னு.. அத்தோட இது ஒன்னுன்னு வாங்கிப் போட்டிருக்காங்க.. அப்பேற்பட்ட பெருங்கொண்ட பணக்காரங்க நம்ம வீட்டில பொண்ண எடுப்பாங்களா..?”

துரியோதனனுக்கு மனைவியின் பேச்சு ரசிக்கவில்லை.. அவர் அதிருப்தியுடன் சூள் கொட்டினார்..

“ம்ப்ச்.. என்னடி பேசறவ..? நாம என்ன நடுரோட்டிலயா நிக்கறோம்..? அவன் இன்னைக்குத் தாண்டி பெருங்கொண்ட பணக்காரன்.. அந்தக் காலத்தில எங்கூட படிக்கிறப்ப.. அவனவிட நான்தாண்டி பணக்காரன்.. அவனோட தாத்தன்கடய வித்துப் பொழப்பு நடத்தினப்ப.. எங்க தாத்தன் கால்மேல காலப் போட்டு உட்கார்ந்து மரவியாபாரம் செஞ்சவருடி...”

இந்தப் பெருமையைக் கேட்ட செல்வி.. முகவாயை தோள்பட்டையில் இடித்துக் கொண்டாள்...

“உக்கும்.. இந்தப் பெருமையப் பேசித்தான அந்த ஆளோட விரோதத்த வில கொடுத்து வாங்கியிருக்கீங்க..”

“அடிப்போடி பைத்தியக்காரி.. பொழைக்கிறவனுக்கு ஆணவம் இருக்கத்தாண்டி செய்யும்.. அத வருசக்கணக்கா

மனசிலேயே வைச்சிருந்து அவன் வஞ்சம் தீர்ப்பான்னு நான் கனவா கண்டேன்..?"

"அப்படி வஞ்சம் தீர்த்ததினால என்ன கெட்டுப் போச்சு..? மத்தவங்களவிட சரிபாதி விலயக்கூடக் கொடுத்துத்தான வாங்கியிருக்காரு.. அதனாலதான் நாம கடனையும் அடைச்சு.. புதுக்கடையையும் ஆரம்பிச்சிருக்கோம்.. நினப்பில வையுங்க..."

"அது எதுக்கான வில செல்வி..? அதிக வில கொடுத்தாத்தான்.. வாங்கப் போறவன் யாரு... எவருன்னு ஆராய்ஞ்சு பாக்காம நாம கடையைக் கொடுத்துடுவோம்-கிறதுக்காக கொடுத்த விலதான் அது.."

"எப்படியோ தொலயட்டும்.. இப்ப எதுக்காக அந்தப் பேச்ச இழுக்கனும்..? இனிமேயாவது நம்ம பொழப்பப் பாக்கலாமில்ல.."

"பாக்காம என்ன செய்யப் போறேன் செல்வி.. ஆனாலும் தேவா சொல்றதப் போல செஞ்சுபாத்தா என்னன்னு என் மனசுல கேள்வி ஓடுதுடி..."

"அத ஓடஓட விரட்டுங்க.. சாதிவிட்டு சாதி பொண்ணக் கட்டிக் கொடுத்தா.. நம்ம சாதிசனம் என்ன பேச்சு பேசுவாங்கன்னு கொஞ்சமாச்சும் நினச்சுப் பாத்தீங்களா...?"

“எடுத்துச் சொல்லலாம்.. அவன்கிட்டயிருக்க பணத்துக்காக பொண்ணைக் கொடுக்கல.. அவன ஜெயிக்கனும்ன்னு பொண்ணைக் கொடுத்தேன்னு சொன்னாக் கேட்டுக்கப் போறாங்க...”

செல்வி கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் துரியோதனனிடம் பதில் இருந்தது.. நடந்து கொண்டிருந்த பேச்சு தன்னைப் பற்றியது என்ற கவலை சிறிதுமின்றி.. டிவியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த நகைச்சுவைக் காட்சியை ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்த மகளைக் கவலையுடன் பார்த்தாள் செல்வி...

ஆண்களின் போட்டி பொறாமைகளுக்கு பெண்பிள்ளைகளின் வாழ்வு பணயமாக்கப்படுவதா என்ற துயரம் அவளுக்குள் எழுந்தது.. அந்தக் கவலையுடனே சமையலறைக்குச் சென்றாள் அவள்.. பாத்திரங்களில் உணவு வகைகளை அவள் எடுத்து வைத்துக் கொண்டிருந்த போது...

“அம்மா..” என்று அங்கே வந்தாள் தேன்மொழி...

“தேனு...” செல்வியின் குரல் தழதழத்தது...

“விட்டுத் தள்ளும்மா.. அண்ணனே ஒரு காமெடி பீஸ்.. அது உடுக்கடிக்குதுன்னா.. அப்பாவும் கூடச் சேர்ந்து ஆடறாரு...”

“இது உன் வாழ்க்கைடாம்மா..”

“என் வாழ்க்கைக்கு ஒன்னும் ஆகாது.. எனக்கென்னவோ இதில ஏதோ ஒரு ‘உள் குத்து’ இருக்குன்னு தோணுது...”

“என்னடி..?”

“அண்ணன் எதுக்காக திடிர்ன்னு அப்பாவோட கௌரவத்தில அக்கற காட்டுது...? இதில ஏதோ இருக்கும்மா..”

“எனக்கும் அப்படித்தான் தோணுது.. புத்திசாலிப் புருசன்னு நான் நினைச்சுக்கிட்டு இருந்த உன் அப்பாவே அவன் விரிக்கிற வலயில தானாப் போயி சிக்கிக்கிறாருன்னா இத நான் எங்கே போய் சொல்ல..?”

“என்கிட்ட சொல்லு.. நான் எதுக்கு இருக்கேன்..? நீ சொல்றத ஊம் போட்டுக் கேக்கத்தான இருக்கேன்..?” கண்சிமிட்டிச் சிரித்தாள் தேன்மொழி...

அந்தச் சிரிப்பில் மனம் நெகிழ்ந்தாள் செல்வி...

“ஏங்கண்ணு.. உனக்கு பயமா இல்லயா..?” துக்கத்துடன் கேட்டாள்...

“எதுக்கு பயப்படனும்..? அப்பா பொண்ணு கொடுக்கிறேன்னு சொன்னவுடனே அவங்க தவ்விக்கிட்டு ஒப்புக்குவாங்களா..? போம்மா வேலைப்பாத்துக்கிட்டு..”

“தேன்மொழி...”

“அண்ணன் தூண்டிவிடுது.. அப்பா ஆசைப்படறாரு.. அவர் ஆசையைக் கெடுப்பானேன்..? விட்டுரும்மா.. அவர் போக்கில விட்டுரு.. போய் கேக்கட்டும்.. அவங்க சரின்னு சொன்னாத்தான நம்ம சாதி சனத்துக்கு என்ன பதிலைச் சொல்றதுன்னு கவலப்படனும்..? அதெல்லாம் அந்த பயபுள்ளைக சரிகொடுக்காதுக...”

“எதைவைச்சுச் சொல்றடி...”

“அப்பாவுக்குத்தான் பைத்தியம் பிடிச்சிருக்குன்னா அவங்களுக்குமா பைத்தியம் பிடிச்சிருக்கப் போகுது..? அதைவைச்சுத்தான் சொல்றேன்...”

“நடக்காதுன்னு உனக்கும் தெரியுது.. எனக்கும் தெரியுது.. அப்புறம் எதுக்காக இவரு ஆடிக்கிட்டு பொண்ணு கொடுக்கறேன்னு முந்திக்கிட்டுப் போகனும்..? நாம கேட்டோம்.. அவங்க மாட்டேன்னுட்டாங்கன்னு பேரு வருகிறதுக்கா..?”

“அதுக்குத்தான் அண்ணன் பிளான் போடுதுன்னு நானும் நினைக்கறேம்மா.. எதனாலயோ.. அண்ணன்.. அப்பாவுக்கும் அவங்களுக்கும் இடையில இருக்கிற பகையை ஊதிப் பெரிசாக்கப் பாக்குது.. பாக்கலாம்.. என்னைக்கிருந்தாலும் பூனைக்குட்டி வெளியில வந்துதான ஆகனும்..?”

"இதில உன்பேரு அடிபடுதே தேன்மொழி..."

"விடும்மா.. இதயெல்லாம் பெரிசா எடுத்துக்கிட்டு.."

"நாள பின்ன யாராச்சும் இதப்பத்திக் கேட்டா என்னன்னு பதில் சொல்லுவேன்..?"

"அவங்கதான் பொண்ணு கேட்டாங்க.. நாங்க சாதி விட்டு சாதி பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டோம்ன்னு சொல்லு.. இது ஒரு பெரிய விசயமா..?"

"தேன்மொழி.. அசத்தறடி..."

செல்வி.. மகளின் கன்னத்தில் கைவைத்து திருஷ்டி கழித்தாள்.. அவள் மனதில் நிம்மதி வந்திருந்தது.. தேன்மொழியிடம் இருந்த தெளிவைப் பார்க்க பார்க்க.. பெற்ற இரண்டில்.. ஒன்றாவது உருப்படியாய் அறிவுடன் இருக்கிறதே என்று அவள் மனம் தேறினாள்...

சாப்பிடும் போதே.. தகப்பனும் மகனும். தேன் மொழியின் திருமணத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள்.. எந்த மண்டபம் நல்ல மண்டபம் என்பது வரைக்கும் தேவராஜன் போக.. துரியோதனனோ சொந்த பந்தங்களில் யார் யாருக்கு என்ன விலையில் துணி எடுக்க வேண்டும் என்று பட்டியலிட ஆரம்பித்து விட்டார்...

செல்விக்கு தலை வேதனையாய் இருந்தது.. புத்திசாலிப் புருசனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கும் இறுமாப்பில் இருந்தளுக்கு.. அந்தப் புருசனின் புத்தி சுவாதீனத்தின் மீது சந்தேகம் எழுந்தது...

'இத்தன நாளும் இந்த மனுசன் வேசம் கட்டியிருந்தாரோ...'

சந்தேகத்தின் தீவிரத்தில் சாப்பிட்டு முடித்த மனிதருக்கு வெற்றிலை பாக்கைக் கொடுக்க மறந்து உள்ளே போய் விட்டாள்.. அதை வெற்றிகரமாக கைப்பற்றிய தேவராஜன்.. தகப்பனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தபடி.. திட்டம் போட ஆரம்பித்தான்...

"என்னத்தடி பேசிக்கிறாங்க..?" எரிச்சலுடன் கேட்டாள் செல்வி...

"ஸ்கெட்ச் போடறாங்கம்மா..." என்றாள் தேன்மொழி..

"எதுக்காம்..?"

"வேற எதுக்கு..? மாப்பிள்ளயத் தூக்கத்தான்.."

"தூ.. பொண்ணத் தூக்கிக்கிட்டு வந்து தாலி கட்டற பரம்பரையில பொறந்துட்டு.. மாப்பிள்ளயத் தூக்க திட்டம் தீட்டுதுகளே.. இதுகள்ளாம் உருப்படுமா..?"

“அம்மா.. ரொம்பத்திட்டாதே.. அதில உன் புருசனும் சேர்ந்திருக்கார்...”

“நேத்து வரைக்கும் இந்த மனுசன் நல்லாத்தானேடி இருந்தாரு..?”

“நாளைக்கு நல்லா ஆயிருவாரு...”

“அப்ப.. இன்னைக்கு கதை..?”

“இன்னைக்கு கதைய விட்டுத்தள்ளு.. நாளக்கி எப்படி இருக்கப் போகிறாருங்கிறது மட்டும்தான நமக்கு முக்கியம்..?”

“தேனு...”

“விடும்மா.. இதுகள வேடிக்க பாத்துக்கிட்டு தூக்கத்த கெடுத்துக்காம தூங்கப் போ.. இதுக ரெண்டும் முழிச்சுக்கிட்டே கனவு காணட்டும்..”

தேன்மொழி இலகுவாகச் சொல்லிவிட்டு தூங்கப் போய் விட்டாள்...

# 43

*நீசிரிக்கும் மென்சிரிப்பில்...*
*நிலவுவர ஆசைகொண்டேன்...*

**க**ழுத்தில் படிந்திருந்த டையின் முடிச்சை சரி செய்த பார்த்தசாரதி கண்ணாடி பார்த்தார்... லேசாக நரை விழுந்திருந்த மீசையை சிறிய அளவிலான சீப்பினால் சீவிக்கொண்டவரின் பின்னாலிருந்து உதட்டைச் சுழித்து அழகு காட்டிய சுந்தரி...

“போதும் தாத்தா.. என்னதான் சீவி விட்டுக்கிட்டாலும் உங்களுக்கு இளமை திரும்பப் போறதில்ல...”, என்று கிண்டலடித்தாள்...

கண்ணாடிக்குள் தெரிந்த மனைவியைப் பார்த்துக் கண்ணடித்தார் பார்த்தசாரதி.. அவள் முகம் குங்குமமாக சிவந்து விட்டது...

“அட.. பாட்டிக்கு வெட்கத்தைப் பாரேன்..” உல்லாசமாக சிரித்தபடி திரும்பியவருக்கு கோட்டை மாட்டி விட்டபடி..

“அர்ஜீன் போன் பண்ணியிருந்தான்..” என்றாள் சுந்தரி...

“அவன் உனக்கும்.. ஆனந்திக்கும்தானே போன் பண்ணுவான்.. எனக்குப் போன் பண்ணனும்கிற நினைப்புத்தான் அவனுக்கு இல்லையே...” பொறாமையுடன் சொன்னார் பார்த்தசாரதி..

“இதில ஒரு போட்டியா..? அவன்தான் போன் பண்ணனுமா..? ஏன்.. நீங்க அவனுக்குப் போன் பண்ணினா ஆகாதா..?” சுந்தரி முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்..

“பண்ணாம இருப்பேனா சுந்தரி.. எங்கே...? நான் போன் பண்ணினா ஒற்றை வார்த்தையில பதிலைச் சொல்லிட்டு போனை கட்பண்ணிடறானே... அதுவே உன்னிடமும்.. ஆனந்தியிடமும் பேசறதுன்னா மணிக்கணக்கில் பேசறானே...” ஆதங்கப்பட்டார் பார்த்தசாரதி...

எல்லாத் தகப்பன்களிடம் இது போன்ற ஆதங்கம் உண்டு.. கண்டிப்பை மட்டுமே உணர்த்தி வளர்க்கிற தகப்பனிமிருந்து ஒரு காலகட்டத்தில் மகன் விலகி நின்று விடுகிறான்.. அவனால் தாயிடமும்.. சகோதரியிடமும் இயல்பாக பேசிப் பழக முடியும்.. தகப்பனிடம் அதைச் செய்ய முடியாது...

தோளுக்கு மேல் வளர்ந்த மகனைத் தோழனாக நினைக்கும் தந்தையே மகனின் மனதை ஜெயிக்கிறான்.. மகனின் மனஉணர்வுகளைப் புரிந்து கொண்டு அணுக முடிகிற தகப்பனையே எந்த மகனும் விரும்புவான்...

பார்த்தசாரதி பிள்ளைகளிடம் கனிவையும்.. கண்டிப்பையும் காட்டித்தான் வளர்த்தார்.. என்ன ஒன்று.. அந்தக் கனிவை மகளிடமும் கண்டிப்பை மகனிடமும் காட்டி விட்டார்.. தளை போட்டுக் கட்டுப்படுத்த மகன் என்ன கன்றுக்குட்டியா..? கன்றுக் குட்டியே தளையை அறுத்துக் கொண்டு துள்ளி விளையாடும் போது.. மகன் மட்டும் எப்படிக் கட்டுக்குள் அடங்கி நிற்பான்..?

அர்ஜீன் கல்லூரிப் பருவத்திலேயே தன் கட்டுக்களை அறுத்தெரிந்து விட்டான்.. எதையும் நேரிடையாக பார்த்த சாரதியிடம் பேசாமல் சுந்தரி மூலம் சொல்லி விட ஆரம்பித்தான்.. அதற்கும் மேலாக.. அப்பாவுக்கும்.. மகனுக்கும் இடையில் பாலமாக நின்றாள் ஆனந்தி.. அந்தப் பாலத்தின் இருமுனையிலும் நின்றிருந்த பார்த்தசாரதியும் அர்ஜீனும் அந்தப் பாலத்தைக் கடந்து நேரடியாக கை குலுக்க முனையவேயில்லை...

தொழில்ரீதியாக பேசும் போது மட்டும் அவர்கள் ஒருவரிடம் ஒருவர் நேரடியாக பேசிக் கொள்ளுவார்கள்.. அதையும் ஒரிரு வார்த்தைகளில்

அர்ஜீன் முடித்துவிடுவான்.. பெரும்பாலான நேரங்களில் இருவருக்குமே மாற்றுக் கருத்துக்கள்தான் இருந்தன.. ஒரு கட்டத்தில் பார்த்தசாரதியின் பிடியிலிருந்து நழுவிய அர்ஜீன் கம்யூட்டர் கம்பெனியொன்றைத் துவக்கினான்.. வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த பார்த்தசாரதிக்கு அதில் கொஞ்சம் கூட விருப்பமில்லை...

“நாம ஷீ எக்ஸ்போர்ட் பண்ற கம்பெனிய நடத்தறோம் சுந்தரி.. கூடுதலா ஹேண்ட்பேக்.. அது இதுன்னும் தயாரிச்சு எக்ஸ்போர்ட் பண்றோம்.. இதிலயே கொள்ளை லாபம் வருது.. அவன் இதை மேற்பார்வை பார்த்தாலே போதுமே...”

இது அர்ஜீனிடம் சொல்ல வேண்டிய விவரம் என்று சுந்தரிக்கு புரியாமலில்லை.. அவள் சொன்னால் அவள் மகன் கேட்பானா..? அதனால் ஆனந்தியிடம் தஞ்சமடைந்தாள் சுந்தரி..

“அம்மா.. இதைப்பத்தி அர்ஜீன்கிட்ட ஏற்கனெவே நான் பேசிட்டேன்.. நம்ம கம்பெனிக்கு டாடிதானே முதலாளின்னு அவன் சொல்றான்ம்மா.. தனிச்சு இயங்கனும்னு விருப்பப்படறான்.. அவன் நினைக்கிறதும் நியாயம்தானே..?”

ஆனந்தி சொன்னதை அப்படியே பார்த்தசாரதியின் காதுகளுக்கு கடத்தினாள் சுந்தரி...

“இதுதான் அவன் பிரச்னைன்னா நாளைக்கே அவனை கம்பெனியின் எம்.டியா ஆக்கிடறேன் சுந்தரி.. அவனே முதலாளியாக இருக்கட்டும்.. நான் அட்வைசரா இருந்துட்டுப் போறேன்...”

பார்த்தசாரதியின் வாய்மொழி ஆனந்தியிடம் சென்றது...

“அம்மா.. அவனுக்கு இது பிரச்னையில்லை.. டாடி உருவாக்கின கம்பெனியில அவன் பிள்ளைகள் சொந்தம் கொண்டாடலாம்.. அவன் சொந்தம் கொண்டாடக் கூடாதுன்னு நினைக்கிறான்...”

“புத்தியோடதான் பேசறயா ஆனந்தி.. அப்பாவோட சொத்தில அவர் பெத்த பிள்ளைகளுக்கு உரிமையில்லையா..?”

“அவன் அந்த அர்த்தத்தில சொல்லலைம்மா.. இப்ப நம்ம டாடியையே எடுத்துக்கங்க.. அவரோட பூர்விகம் திருநெல்வேலிதான்.. அவரோட கொள்ளுத்தாத்தா காலத்தில வியாபாரம் செய்ய மதுரைக்கு வந்தாங்க.. அவரோட தாத்தா மதுரையில கடையை ஆரம்பிச்சார்... அது அவரோட அப்பா காலத்து வரைக்கும் இருந்தது.. நம்ம டாடி என்ன பண்ணினார்..? கடையைப் பாத்துக்கிட்டு மதுரையில இருந்திருக்கலாமே.. எதுக்கும்மா சென்னைக்கு வந்து தொழிலை ஆரம்பிச்சாரு...”

"குண்டுச்சட்டிக்குள்ளேயே குதிரையை ஓட்ட முடியுமா ஆனந்தி.. அவர் சென்னைக்கு வராம மதுரையிலேயே இருந்திருந்தா நீயும் அர்ஜீனும் பிறக்கிறப்ப வசதியான குடும்பத்தில வேணும்னா பிறந்திருப்பீங்க.. கோடிஸ்வரக் குடும்பத்தில பிறந்திருக்க மாட்டிங்க..."

"ஏம்மா..? டாடி செய்ய நினைச்சதை அவரோட அப்பா கடையிலிருந்தே ஆரம்பிச்சிருக்கலாமே... அதை மாடலைஸ் பண்ணியிருக்கலாம்.. எக்ஸ்போர்ட் பண்ணியிருக்கலாம்.. இம்போர்ட்டும் பண்ணியிருக்கலாம் அவர் அதைச் செய்யலையே..."

"என்ன ஆனந்தி புரியாம பேசற..? என் மாமனார் கண்டிப்பானவரு.. கல்லாப்பெட்டியில உன் டாடியை உட்கார விட்டாலும் வரவு செலவை கண்காணிச்சுக்கிட்டே இருப்பாரு.. எதைச் செஞ்சாலும் அவரைக் கேட்டுத்தான் செய்யனும்கிறப்ப உன் டாடியால எந்த புதுமுயற்சியையும் செய்ய முடியாதே.. இதுன்னா அப்படியில்லை.. கொஞ்ச பணத்தைக் கொடுங்கன்னு உன் தாத்தாகிட்ட கேட்டு வாங்கி சின்னதாத்தான் இந்த கம்பெனியை ஆரம்பிச்சார்.. என்னைக் கல்யாணம் பண்ணின பின்னாலே என் சொத்தும் சேர்ந்தது இப்ப ஆலமரமா வளந்து கிளை பரப்பி நிக்குது.. இந்தியா பூராவும் நம்ம கம்பெனிக்கு பிரான்ச் இருக்குது.. இதையெல்லாம் உன் தாத்தாகூட இருந்திருந்தா டாடியாலே செய்ய முடிஞ்சிருக்காதும்மா..."

“இதுமட்டும்தானாம்மா.. இன்னும் இருக்கா..?”

“இருக்கு ஆனந்தி.. இப்ப நீயும் அர்ஜூனும் பெருமையா சொல்லிக்கறிங்களே.. இது எங்க டாடி உருவாக்கின கம்பெனின்னு.. அதிலதான் உன் டாடி சந்தோசப் படறார்.. பரம்பரையா ஒருகடையிருந்துச்சு.. அதைக் காப்பாத்தி பிள்ளைக கையில ஒப்படைச்சோம்ன்னு இல்லாம வெளிநாட்டுக்கு ஏற்றுமதிபண்ற கம்பெனியை ஆரம்பிச்சு.. இது எங்க அப்பாவோட கம்பெனின்னு சொல்ல வைச்சிருக்காரு பாரு.. இதிலதாண்டி ஒரு ஆம்பளையோட சந்தோசமே அடங்கியிருக்கு...”

இதைச் சொன்ன சுந்தரியின் குரலில் பொங்கி வழிந்த பெருமையைக் கவனித்தாள் ஆனந்தி.. மெதுவான குரலில் கேட்டாள்...

“இதே ஆம்பளைப் புத்திதான் நம்ம அர்ஜூனுக்குள்ளேயும் ஊறிப் போயிருக்கும்மா...”

“ஆனந்தி..”

சுந்தரிக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது.. அவள் கண்முன்னாலேயே வளர்ந்த மகன் விலகி நின்று விசுவரூபம் எடுப்பதை மலைப்புடன் அவள் உணர்ந்தாள்..

“அவன் சாதிக்க நினைக்கிறான்ம்மா.. அவன் உருவாக்கினதுன்னு அவன் பெண்டாட்டி பிள்ளைகளுக்கு

அடையாளம் காட்ட நினைக்கிறான்.. என் டாடி சம்பாதிச்ச சொத்தில நான் உட்கார்ந்து சாப்பிடல.. அந்த வருமானத்தில இருந்து என் பெண்டாட்டி பிள்ளைகளைக் காப்பாத்தல.. நான் சுயமாய் சம்பாதிக்கிறவன்னு உலகத்துக்கு உணர்த்த நினைக்கிறான்.. ஒவ்வொரு ஆம்பளைக்குள்ளேயும் இந்த வீம்பும் பிடிவாதமும் ஒளிஞ்சிருக்கும்.. அர்ஜீன் மட்டும் இதில் விதி விலக்காகி விடுவானா..?”

“ஆனா ஆனந்தி.. இப்பல்லாம் கம்யூட்டர் கம்பெனி தெருவுக்கு ஒன்னா நிக்குதுன்னு உன் டாடி சொல்றாரே..”

“காம்பெடிசன் இல்லாத பிஸினெஸே இந்த உலகத்தில் இல்லைம்மா.. ஏன்..? டாடி ஒருத்தர்தான் ஷீ தயாரிச்சு எக்ஸ்போர்ட் பண்றாரா..? இந்த பிஸினெஸ்ஸில் காம்பெடிசன் இல்லையா..?”

“டாடி அனுபவசாலி ஆனந்தி.. அவருக்கு இந்தத் தொழிலில் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கு...”

“எடுத்தவுடனேயே அவருக்கு எக்ஸ்பீரியன்ஸ் கிடைச்சிருச்சா..? அனுபவப் பட்டுத்தானே அவரும் அதைக் கண்டிருக்கார்..? அதைப்போல அர்ஜீனும் கண்டுக்குவான்...”

“இப்ப என்னதான் செய்யலாம்கிற..?”

“அவன் கேட்கிற பணத்தைக் கொடுங்கம்மா.. அவன் விருப்பப்பட்ட கம்பெனியை ஆரம்பிக்கட்டும்...”

“டாடிகிட்ட இருக்கிற பணமெல்லாம் அவனோடது தானே ஆனந்தி..? அவன் உரிமையா எடுத்துக்கிறதை விட்டுட்டு கடனாக் கொடுன்னு கேட்கிறானே.. அதுதானே டாடிக்கு பிடிக்க மாட்டேங்குது...”

“அவன் போக்கிலே அவனை விடுங்கம்மா... அவன் சுயமா சாதிக்கனும்னு ஆசைப்படறான்.. அதில தப்பில்லம்மா...”

ஆனந்தி எடுத்துச் சொல்லியதில் அர்ஜீன் கேட்ட பணத்தை அரை மனதாக கொடுத்தார் பார்த்தசாரதி... அதை ஒரே வருடத்தில் வட்டியும் முதலுமாக அர்ஜீன் திருப்பிக் கொடுத்தபோது அவருடைய புருவங்கள் உயர்ந்தன.. அர்ஜீன் அவருடைய கட்டுப்பாட்டை விட்டு நழுவிக் கொண்டிருப்பதாக அவர் உணர்ந்தார்..

அர்ஜீன் கம்யூட்டர் கம்பெனியில் அழுத்தமாக கால் பதித்தான்.. அவனுடைய கம்பெனிகள் விரிவடைந்தன.. வெளிநாட்டில் படித்தவன்.. தொழில் ரீதியாக வெளிநாட்டு கம்பெனிகளுடன் ஒப்பந்தம் போட்டு.. வெளிநாடுகளுக்குப் பறக்க ஆரம்பித்தான்.. நிற்க

நேரமில்லாமல் அவன் ஓட ஆரம்பித்தபோது.. அவனைக் கட்டுப் படுத்தி தன் நிழலுக்குள் வைத்துக் கொள்ள முடியாத ஆதங்கத்தில் பார்த்தசாரதி அமிழ்ந்தார்...

அர்ஜூன் அவரைவிட பெரிய தொழிலதிபனாக உருமாறிக் காண்பித்தான்.. அவருடைய மகன் அவன் என்ற அடையாளம் பின்னுக்குத் தள்ளப்பட்டு.. அர்ஜூனுடைய அப்பா அவர் என்ற அடையாளம் முன்னுக்கு வந்ததில் அவருக்குள் இருந்த தனிமனித ஈகோ சிறிதளவு காயப்பட்டது...

எந்த சந்தோசத்திற்காக அவர் மதுரையை விட்டு புலம் பெயர்ந்து சென்னையில் கால் பதித்தாரோ.. அந்த சந்தோசத்தில் சிறிதளவு குறைவதை அவர் உணர்ந்தார்.. எந்த அடையாளத்திற்காக அவர் தனித்துப் போராடினாரோ.. அந்த அடையாளத்தை மகன் மிஞ்சி விட்டதில் அவருக்குள் சிறிதளவு வருத்தம் ஏற்பட்டது...

‘இது என் குடும்பம்.. என் ஒட்டு மொத்த சம்பாத்தியமும் இவர்களுக்காகத்தான்...’

பார்த்தசாரதி இப்படி நினைத்திருக்க.. உன் வருமானம் எனக்கு வேண்டாம்.. எனக்கும்.. என் மனைவி மக்களுக்கும் என்னால் சம்பாதித்து போடமுடியும் என்று அர்ஜூன் விலகிப் போனதில் அவர் மனம் காயப்பட்டது..

“அவன் கைமீறிப் போறான் சுந்தரி..” தனிமையில் மனைவியிடம் புலம்புவார்...

“அவன் பெரிய ஆளா மாறினதில உங்களுக்கு சந்தோசம்தான் வரனும்.. அதை விட்டுட்டு இப்படிப் புலம்பக் கூடாது..” சுந்தரி அதட்டுவாள்...

அர்ஜீன் பார்த்தசாரதியின் கையை மீறித்தான் போய் விட்டான்.. அவனும்.. அவரும் ஒரே வீட்டில் இருந்தாலும் இருவரும் நேருக்கு நேராகப் பார்த்துப் பேசிக் கொள்கிற சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருந்தன...

“அர்ஜீன் சாப்பிட வரலை..?”

“இப்பத்தான் சாப்பிட்டுப் போறான்...”

“எனக்காக காத்திருக்கலாமில்ல..?”

“அவனுக்கு பிளைட்டுக்கு நேரமாச்சாம்ங்க..”

“எப்ப வருவானாம்..?”

“சொல்ல முடியாதுன்னு சொன்னான்...”

இதையெல்லாம் அவரிடம் ஏன் அவன் பகிர்ந்து கொள்வதில்லை..? ஒருநாளின் இருபத்திநான்கு மணி நேரத்தில்.. ஒரு சிறு மணித்துளியை அவருக்காக அவன் கொடுத்தாலென்ன..? தாயையும்.. தமக்கையையும் நினைக்கிறவன்.. தந்தை என்ற ஒருவனைப் பற்றியும் நினைத்துப் பார்த்தால் என்ன..?

# 44

*நீரோடு செல்லும் ஓடம்போல – உன்..*
*நினைவோடு நான் செல்ல ஆசைகொண்டேன்..*

**'நியு எக்ஸ்போர்ட்ஸ்'** என்ற எழுத்துக்கள் ஒளிர்ந்த கட்டிட வளாகத்திற்குள் பார்த்தசாரதியின் கார் நுழைந்து.. திரும்பி நின்றது.. ஓடிவந்து கதவைத்திறந்த காவலாளியின் வணக்கத்திற்கு லேசாக தலையை அசைத்து விட்டு மிடுக்குடன் படிகளில் ஏறினார் பார்த்தசாரதி...

'இது என்னுடைய கம்பெனி.. நான் இதன் முதலாளி..'

என்ற கர்வம் அவருடைய ரத்த அணுக்களில் கலந்தது.. அவர் இதுபோன்ற கர்வத்திற்கு பழக்கப்பட்டவர்.. அதை விட்டுக் கொடுக்க விரும்பாதவர்.. அதை உணர்ந்திருந்ததினால்தான் அர்ஜீன் தனித்து செயல்பட ஆரம்பித்தான்...

அவனுக்குத் தெரியும்.. பார்த்தசாரதி எப்போதும் முதன்மைப் பதவியை விட்டுக் கொடுக்க மாட்டார் என்பது...

அவர் சொன்னபடி அவனை அந்தக் கம்பெனிக்கு முதலாளி ஆக்கி விடுவார்தான்.. ஆனால் அவனைச் சுதந்திரமாக செயல்பட விடாமல் நிழல்போல பின் தொடந்து கொண்டேயிருப்பார்.. அவரின் கைகளுக்குள் அவனின் கைகளை அடக்கி அவனை அசைய விடாமல் ஆக்ரமித்திருப்பார்..

அர்ஜீன் புத்திசாலி... பதினைந்து வயதிலேயே தகப்பனாரின் குணத்தை எடைபோட்டு வைத்திருந்தவன்.. அவனுக்கு அவரின் கட்டுக்குள் அடங்க விருப்பமில்லை.. தளைகளை அறுத்தெரிய வேண்டிய அவசியமின்றி அவன் பார்த்தசாரதி போட்ட தளைகளுக்குள் அகப்பட்டுக் கொள்ளவேயில்லை...

“குட் மார்னிங் சார்...”

வரிசையாக மரத்தடுப்புகளுக்குள் அமர்ந்திருந்த தொழிலாளிகள் அவருக்கு வணக்கம் சொன்னார்கள்.. மிதப்பான பார்வையுடன் அவர்களைக் கடந்து அவருடைய அறைக்குள் பிரவேசித்த போது ஒரு சாம்ராஜ்யத்தின் மன்னகாக தன்னை அவர் உணர்ந்தார்...

டேபிளின் மீதிருந்த போனை எடுத்து லிஸியை அழைத்தார்..

அடுத்த நிமிடத்தில் அவள் அவர்முன்னால் வந்து நின்றாள்.. அந்த வேகத்தில் திருப்தி அடைந்தவராக

அன்றைய அலுவல்களை கேட்டார்.. அவள் வரிசையாக சொல்லி முடித்ததும்.. மெயில்களை பார்வையிட்டார்... அவற்றுக்கான பதில்களை அவர் சொல்லச் சொல்ல.. மின்னல் வேகத்தில் அவற்றைக் குறித்துக் கொண்டாள் லிஸி.. அவள் போனதும்.. டேபிளில் இருந்த ஃபைல்களை புரட்டி ரிப்போர்ட்டை படிக்க ஆரம்பித்தார்.. போன் ஒலித்தது.. எடுத்து காதுக்கு கொடுத்தார்...

“சார்.. உங்களைப் பார்க்க.. நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி மிஸ்டர் தீனதயாளன் சார் வந்திருக்கிறார் சார்...” என்றாள் லிஸி..

“ஓ... பெண்டாஸ்டிக்... இதுக்கு என்னைக் கேட்கனுமா..? உடனே அவரை அனுப்பி வை..” பரபரத்தார் பார்த்தசாரதி...

அறைக்கதவைத் திறந்து கொண்டு தீனதயாளன் உள்ளே வந்தபோது பார்த்தசாரதி அவருடைய சுழல் நாற்காலியை விட்டு எழுந்து அவருக்கு கை கொடுத்து வரவேற்றார்...

“வெல்கம் மிஸ்டர் தயாளன்.. ப்ளீஸ்.. உட்காருங்க..”

ராஜமரியாதையுடன் அவரை உட்காரவைத்து விட்டுத்தான் தன்னுடைய சுழல் நாற்காலிக்கு திரும்பினார் பார்த்தசாரதி..

“லிஸி...”

இன்டர்காமில் லிஸியை அழைத்து பழச்சாறை அனுப்பி வைக்கச் சொல்லிவிட்டு.. தயாளனின் முகம் பார்த்தார்...

“ஹவ் ஆர் யு..?”

“ஃபைன்..” தலையாட்டிய தயாளனின் முகத்தில் சிநேகிதம் கலந்த சிரிப்பு நிறைந்திருந்தது..

அவர்கள் பொதுவான வியாபார நிலவரங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.. பேச்சு சுழன்று அரசியலுக்கு வந்து.. விளையாட்டிற்கு தாவி.. வானிலையில் நிலை கொண்டிருந்த போது.. லிஸி பழச்சாறுடன் அறைக்குள் வந்தாள்.. அவள் போனதும் பழச்சாறை அருந்திய படி தயாளன் கேட்டார்...

“உங்க சன் எப்படியிருக்கிறார் பார்த்தசாரதி...”

‘இதை.. இதை.. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்..’ பார்த்தசாரதியின் மனம் துள்ளிக் குதித்தது...

அவர் வெகுநாள்களாக இந்த ஒரு கேள்விக்காகத்தான் காத்திருக்கிறார்.. நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் முதலாளியான தீனதயாளனுக்கு நேகா என்ற ஒற்றைப் பெண் மட்டுமே இருந்தாள்.. வெளிநாட்டில்

படித்தவள்.. நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டியாக பொறுப்பேற்றிருப்பவள்...

அவளை பல பார்ட்டிகளில் பார்த்தசாரதி பார்த்திருக்கிறார்.. கண்களில் அலட்சியம் கலந்த ஆணவத்துடன்.. நுனி நாக்கில் ஆங்கிலத்துடன் இருப்பாள்.. இந்தியத்தனமில்லாத.. அமெரிக்கத்தனமான தோற்றம்.. இந்த பிரபஞ்சத்தில் எனக்கு இணையாக யாருமேயில்லை என்பதைப் போன்ற பார்வை...

தீனதயாளனின் அனைத்து சொத்துக்களுக்கும் அவள் ஒரே வாரிசு என்பதினால் மட்டுமில்லாமல்.. அவளிடம் தென்படும் அலட்டலான கவர்ச்சிக்காகவும்.. அவளை ஈர்க்க முயலும் உயர்மட்ட வாலிபர்களின் கூட்டத்தை அவரறிவார்...

நேகா அவர்களைத் திரும்பிப் பார்க்க மாட்டாள் என்று அவரால் சொல்லிவிட முடியாது.. அவளுடன் பேச விரும்புகிறவர்களிடம் அவள் நின்று பேசத்தான் செய்வாள்.. ஆனால்.. அலட்சியம் கலந்த மமதையோடு தான் பேசுவாள்...

'இதையெல்லாம் அவாய்ட் பண்ண முடியாது...'

தனக்குள் சமாதானம் போலச் சொல்லிக் கொள்வார் பார்த்தசாரதி.. நேகா நினைத்திருந்தால் அவர்களுடன்

பேசாமல் தவிர்த்திருக்க முடியும் என்று அவர் மனதில் ஓரத்தில் தோன்றினாலும் அவர் அதை அழித்து விடுவார்..

அதிகப் பணமிருந்தால் இதுபோன்ற திமிர் வருமா என்று அவருக்குத் தெரியவில்லை.. அவரிடமும் அதிக அளவில் பணம் இருந்தது.. ஆனால் அவர் பெற்ற ஆனந்தி நேகாவைப் போல திமிராக இருந்ததில்லையே என்ற எண்ணமும் அவருக்கு வந்துதான் போனது...

‘ம்ஹீம்.. இதெல்லாம் பெத்தவங்க வளர்க்கிற வளர்ப்பு...’

ஆனந்தியை அவர் பாராட்டிச் சீராட்டி வளர்க்கவில்லை.. அதையெல்லாம் சுந்தரிதான் செய்தாள்.. அவரால் முடிந்ததெல்லாம் அவள்மீது பாசத்தைக் கொட்டியது மட்டும்தான்.. மற்றபடி.. மகளைக் கொஞ்ச அவருக்கு நேரம் ஏது..?

தீனதயாளனின் மனைவியான அனுபமா ஒன்றும் அல்ட்ரா மாடர்ன் பெண்ணல்ல.. சுந்தரியைப் போலவே பதவிசானவள்தான்.. ஒற்றை மகளான நேகாவைப் பார்த்துப் பார்த்துத்தான் வளர்த்தாள்.. இருந்தும் நேகா ஆனந்தியைப் போல வளரவில்லையே...

அதைப்பற்றியெல்லாம் பார்த்தசாரதி யோசிக்கவே இல்லை.. அவர் யோசித்ததெல்லாம் ஒன்றே ஒன்றைப்

பற்றித்தான்.. அது தீனதயாளனின் ஒட்டு மொத்த சொத்திற்கும் நேகா ஒருத்தி மட்டுமே வாரிசு என்பதுதான்..

இப்படிப்பட்ட ஒருத்தியைத்தான் அர்ஜீனுக்கு மணம் முடித்து வைக்க வேண்டுமென்று அவர் நினைத்திருந்தார்.. இதை அவர் நினைத்தால் மட்டும் போதுமா..? தீனதயாளனும் நினைக்க வேண்டுமில்லையா..?

அந்த நினைவு தீனதயாளனின் மனதில் வர வேண்டும் என்பதற்காகத்தான் அவர் காத்திருந்தார்.. ஒருவழியாக தீனதயாளனுக்கு அந்த நினைவு வந்து விட்டது போல.. அவரும் பார்த்தசாரதியைத் தேடிவந்து அர்ஜீனின் நலத்தைப் பற்றி விசாரித்து விட்டார்...

“ஓ.. ஹி இஸ் வெரி ஃபைன்.. மிஸ்டர் தயாளன்.. ஹவ் இஸ் நேகா...?”

மிகச்சரியாக அடுத்த அடியை எடுத்து வைத்து விட்டார் பார்த்தசாரதி.. தயாளனின் முகம் மலர்ந்தது.. ஒரே நேர்கோட்டில் அவர்களின் பேச்சு பயணிக்க ஆரம்பித்து விட்டதை அவர்கள் இருவருமே உணர்ந்து கொண்டார்கள்..

“அவளுக்கென்ன.. சூப்பரா இருக்கா.. கம்பெனியை சூப்பரா அட்மினிஸ்ட்ரேட் பண்றா.. உங்க சன் என்ன.. பாரின் பக்கம் பறந்துக்கிட்டே இருக்காரா..?”

“யெஸ்.. யெஸ்.. அவனுடைய பிஸினெஸ் அப்படி..”

“வெல் மிஸ்டர் சாரதி.. லாஸ்ட் வீக் நடந்த பார்ட்டியிலே உங்களைப் பார்த்த போதே இதைப் பற்றி பேசனும்னு நான் நினைத்தேன்.. பட்.. தனிமையான சூழல் கிடைக்கலை...”

“யா.. யா.. சுற்றிலும் சப்தமா இருந்தா நாம பேச நினைத்ததை பேச முடியாதுதான்...”

“கரெக்டா புரிஞ்சுக்கிட்டிங்க.. நேகாவும் அர்ஜீனும் பல பார்ட்டிகளில மீட் பண்ணியிருக்காங்க..”

“மீட் பண்ணித்தானே ஆகனும்..? உங்க பெண்.. நேகா குரு ஆஃப் கம்பெனியின் எம்.டி... அர்ஜீன் நியு எக்ஸ்போர்ட்டின் வருங்கால எம்.டி... ஆர்ச் கம்யூட்டர் சொலுசனின் நிகழ்கால எம்.டி... இவங்க இரண்டு பேரும் கலந்துக்காத பிஸினெஸ் பார்ட்டி சென்னையில் நடந்துவிடுமா..?”

“சரியாச் சொன்னீங்க மிஸ்டர் சாரதி.. நேகா அர்ஜீனை அட்மைர் பண்றா..”

“ஈஸிட்..? இதையேதான் அர்ஜீனும் என்னிடம் சொன்னான்..?”

முழுப் பூசணிக்காயை பிரைட் ரைஸில் அமுக்கினார் பார்த்தசாரதி... ஒருநாளும் அர்ஜீன் அதைப்போல சொன்னவனல்ல..

“ம்ப்ச்.. மிஸ்டர் தயாளன் என்னடாடி இப்படிப் பெண்ணை வளர்த்து வைத்திருக்கிறார்..?” என்றுதான் முகம் சுளித்திருக்கிறான்..

“ஏன் அர்ஜீன்..? ஷி இஸ் வெரி ஸ்மார்ட்..”

“பேசாம இருங்க டாடி.. எதையாவது சொல்லிடப் போறேன்.. பெண்ணா அது..? ரேஸ் குதிரை..!”

இன்னும் சொல்லப் போனால்.. பார்த்தசாரதியிடம் ஒரிரு வார்த்தைகளுக்கு மேலே பேசாதவன் நேகாவைப் பற்றிப் பேசும்போது மட்டும் அளவு கோலை வைத்துக் கொண்டதில்லை...

மகன் அதிகமாகப் பேசுகிறானே என்ற சந்தோசம் ஏற்படாமல்.. இதையெல்லாம் எதற்காக அவன் வேலை மெனக்கெட்டு அவரிடம் வந்து சொல்கிறான் என்ற சந்தேகம்தான் அவருக்குள் எழுந்தது...

‘வருமுன் காத்துக் கொள்ளலாம்னு நினைக்கிறானோ..’

இருந்தாலும் அதை மறைத்து அப்படியே பிளேட்டைத் திருப்பிப் போட்டு தான் ஒரு தேர்ந்த பிஸினெஸ் மேன் என்பதை நிருபித்தார் பார்த்தசாரதி..

“ஹௌ நைஸ்..” தீனதயாளன் மகிழ்ந்து போனார்...

“ஒன் ஆர் டூ இயரா நேகா அர்ஜீனை வாட்ச் பண்ணிக்கிட்டிருக்காளாம்..” என்று அவர் தொடர்ந்து சொல்ல...

‘தெரியுமே.. அதை நான் வாட்ச் பண்ணிக்கிட்டு இருக்கேனே..’ என்று மனதில் நினைத்துக் கொண்டு.. வெளியே...

“அப்படியா..?” என்று வரவழைத்துக் கொண்ட ஆச்சரியத்துடன் கேட்டார் பார்த்தசாரதி...

“யெஸ் மிஸ்டர் சாரதி... நேகா என்ன ஃபீல் பண்றான்னா... அர்ஜீன் அவளுக்குப் பொருத்தமான லைஃப் பார்ட்னரா இருப்பார்ன்னு ஃபீல் பண்றா...”

‘நானும் அதையேதான் ஃபீல் பண்றேன்..’ என்று மகிழ்ந்து போன பார்த்தசாரதி.. திரும்பவும் ஒரு

“அப்படியா..?” வை போலி ஆச்சரியத்துடன் வரவழைத்துக் கொண்டார்...

“ஸோ.. அதனால நான் என்ன நினைக்கிறேன்னா.. நாம ஏன் இந்த மேரேஜை பிக்ஸ் பண்ணி.. நடத்தி முடிக்கக் கூடாது..?”

“வொய் நாட்..? வித் பிளெஷர் மிஸ்டர் தயாளன்..”

அவர்கள் ஒருமனதாக.. அந்தத் திருமணத்தைப் பற்றிப் பேசி முடித்தார்கள்.. காவ்யாவைக் காதலித்த

அர்ஜீன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளும் முடிவோடு இருக்க.. பார்த்த சாரதியிடம் தோற்றுவிட்ட துரியோதனன்... அர்ஜீனுக்கு பெண் கொடுத்து அவனைத்தன் மாப்பிள்ளையாக்கி ஜெயித்து விடும் கனவோடு இருக்க.. சென்னையில் பார்த்தசாரதி அர்ஜீனின் திருமணத்தை முடிவு செய்து விட்டார்...

# 45

*இந்தப் பெண்மானைத் தேடி...*
*நீ ஓடிவர ஆசைகொண்டேன்...*

"**ஆ**ர் யு ஷ்யூர் டாடி...?"

நேகா யோசனையுடன் கேட்டாள்..

"இதிலென்ன சந்தேகம் நேகா..? அர்ஜீன் உன்னை அட்மைர் பண்றதா பார்த்தசாரதியே சொல்றார்..."

"அதை அர்ஜீன் சொல்லலையே டாடி..."

"அவனோட அப்பா சொல்றாரேம்மா..."

"ஐ கான்ட் பிலிவ்..."

“ஏன்..?”

“நானும் இந்த இரண்டு வருசமா டிரை பண்றேன்.. அவன் என்னிடம் நின்று ஒரு வார்த்தை பேசினதில்லை..”

“உன்கூட மட்டுமில்லை நேகா.. அவன் எந்தப் பெண்ணிடமும் நின்று பேசமாட்டான்..”

“மத்தவங்களும்.. நானும் ஒன்றில்லையே டாடி..”

நேகாவின் மனது எதனாலோ சமாதானமடைய மறுக்கிறது என்பதை தீனதயாளனால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவள் இந்த அளவுக்கு மனம் குழம்பிப் போகிறவளல்ல.. இருந்தும் அவள் குழம்பித்தவிக்கிறாளென்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருந்தது..

அது.. அர்ஜீன்..!

நேகாவுக்கு அர்ஜீனைப் பிடித்திருந்தது.. அவனுடைய கம்பீரமான தோற்றம்... வெளிநாட்டுப் படிப்பு.. பார்த்த சாரதியின் மகன் என்ற அடையாளத்தை மீறி.. அர்ஜீனின் தந்தை பார்த்தசாரதி என்று சொல்ல வைத்திருந்த சாதனை... என்று அவன் மீதான ஈர்ப்பு அவளுக்குள் பெருகிக்கொண்டேயிருந்தது..

நேகா அர்ஜீனை விரும்பினாள் என்பதைவிட.. அவனுடைய அந்த ஹீரோயிசத்தை விரும்பினாள் என்றே

சொல்லலாம்.. எந்த ஒரு பார்ட்டியாக இருந்தாலும் அவன் நுழைந்தவுடனே எல்லோரின் பார்வையும் அவன் பக்கமே திரும்பி விடும்.. என்னதான் நேகா விழுந்து விழுந்து ஒப்பனைகள் செய்து கொண்டுவந்தாலும்.. அவளைப் பார்க்காமல் அவனைத்தான் பார்ப்பார்கள்..

அந்த வித்தையை இவன் எங்கு கற்றான் என்ற ஆச்சரியம் அவளுக்குள் எழுந்து நிற்கும்..

அழகும்.. இளமையும்.. கவர்ச்சியும்... பணமும் நிறைந்த பெண்ணை விட்டுவிட்டு.. ஒரு வாலிபனைச் சுற்றியே அனைவரின் பார்வையும் மொய்க்குமானால்.. அந்த அவனிடம் ஏதோ ஒரு காந்தசக்தி இருக்கிறது என்றுதானே அர்த்தமாகிறது...

நேகா அர்ஜீனைப் பார்க்கத் துவங்கினாள்.. அவள் பார்வையைச் சந்திக்க பலர் முயன்று கொண்டிருக்க.. இவள் அர்ஜீனின் பார்வையைச் சந்திக்க பிரயத்தனப்பட்டாள்...

ஒரு நாளல்ல.. இரண்டு நாளல்ல.. முழுதான இரண்டு வருடங்களை அவனைக் கவர்வதற்காகவே செலவளித்தவள்.. அதில் தோல்வியைத்தான் கண்டாள்..

அவளுடைய பிரயத்தனங்களை மிக எளிதாக அர்ஜீன் முறியடித்தான்... அவள் பேச நினைத்து நெருங்கிய போதெல்லாம் மற்றவர்களிடம் பேசுவதைப் போல அவன் நகர்ந்து விடுவான்...

அவள் மட்டுமே உணரும் அந்த புறக்கணிப்பில் நேகாவின் முகம் கருத்துவிடும்.. இவனைத் திரும்பிக்கூடப் பார்க்கக் கூடாது என்று அவள் மனதில் தோன்றும்.. அடுத்த பார்ட்டியில்.. அவன் உள்ளே வரும்போது எழும் ஆரவார அலையில் அந்த வைராக்கியத்தை மறந்து விடுவாள்...

அவள் நெருங்க.. அவன் விலக.. என்று கண்ணுக்குத் தெரியாத கயிறு இழுக்கும் போராட்டம் அவர்களுக்குள் நடந்து கொண்டிருந்தது...

தோற்றுத் தோற்று ஓய்ந்து போனவள்.. கடைசியாக தீனதயாளனை சரணடைந்து விட்டாள்...

“டாட்... ஐ லைக் ஹிம்..”

“இவ்வளவுதானே.. நான் பார்த்தசாரதியிடம் பேசுகிறேன் நேகா...”

“அர்ஜீனுக்கு என்மேல இன்ட்ரெஸ்ட் இருக்கும்ன்னு எனக்குத் தோனலை...”

“அவனோட அப்பாவுக்கு இருக்கு நேகா...”

“ஐ நோ இட்.. பட் டாடி.. அவனுக்கு இன்ட்ரெஸ்ட் இல்லாம இந்த மேரேஜ் நடந்திருமா..?”

“அதை பார்த்தசாரதி பார்த்துக்குவார்.. நீ யாரு..? நேகா குருப் ஆப் கம்பெனிகளோட ஒரே வாரிசு.. உன்னை வேணாம்ன்னு பார்த்தசாரதியோட குடும்பம் சொல்லாது..”

“அவன் சொல்லிட்டா..?”

“அர்ஜீன் கொஞ்சம் அழுத்தக்காரன்தான்... பட் நேகா.. அவனுக்கும் மேரேஜ்ன்னு ஒன்னு லைஃபில நடந்தாகனுமில்ல.. அதுக்கு பெட்டர் சாய்ஸ் நீ மட்டும்தான்..”

“அவன் பிடிகொடுத்து பேச மாட்டான்ப்பா..”

“யு நோ நேகா.. அவனுக்கு லவ் அஃபயர் எதுவும் இல்லை.. அது எனக்குத் தெரியும்...”

சென்னையில் இருந்து கொண்டு.. மதுரை மல்லிகையின் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கும் அர்ஜீனைப் பற்றித் தெரியாமல் சர்வ நிச்சயத்துடன் மகளிடம் சொன்னார் தீனதயாளன்.. அவளும் அதை ஆமோதித்து தலையை ஆட்டினாள்..

அவர்களுக்குத் தெரியுமா.. அர்ஜீன் காவ்யாவை சிறையெடுத்தாவது தாலியைக் கட்டி விடவேண்டும் என்ற உத்வேகத்துடன் இருக்கிறான் என்பது...

‘இவ மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கா..?’ அவன் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தான்..

தினமும் வேலைக்கு வருவதில் தவறுவதில்லை.. டாண் என்று பத்தடிப்பதற்குள் அவன் அறைக்குள் நுழைந்து விடுவாள்.. யாரோ ஒருவனிடம்.. யாரோ ஒருத்தி வணக்கம் சொல்வதைப் போல...

“குட்மார்னிங் சார்..” என்று சலாம் போடுவாள்..

‘சாராமில்ல..’ அவன் பல்லைக் கடித்துக் கொண்டிருக்கும் போது.. வேலைகளைப் பார்க்க ஆரம்பித்து விடுவாள்..

‘போடி.. நீயுமாச்சு.. உன் காதலுமாச்சு..’ என்று விட்டுச்செல்ல அர்ஜீனால் முடியவில்லை...

அவன் அவளுடைய ஓரவிழிப் பார்வையில் சிக்கியிருந்தான்.. அவளின் திமிரில்லாதிமிரில் வசீகரிக்கப் பட்டிருந்தான்.. பெண்மை ததும்பும் அழகில் மயங்கிப் போயிருந்தான்.. அவளின் கள்ளமலர் சிரிப்பின் அழைப்பில் ஈர்க்கப் பட்டிருந்தான்...

அந்த வசீகரியின் பின்னால் அவன் மனம் சுற்றிக் கொண்டிருந்த போது.. அவளை விட்டு விட்டு அவன் எங்கு செல்வது..?

என்ன செய்தால் அவள் அவனிடம் காதல் சொல்வாள் என்ற யோசனையுடனிருந்த அர்ஜீன் பாவனா உள்ளே வந்ததைக் கவனிக்கவில்லை...

“சார்..” மரியாதையுடன் அவள் அழைத்தாள்..

அவனோ.. அந்த நிமிடத்தில் டேபிள் வெயிட்டை உருட்டுவது மட்டும்தான் அவனுடைய பிரதான வேலை என்பதைப் போல.. டேபிள் வெயிட்டை உருட்டியபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்..

‘என்னடா இது...’

பாவனா தர்ம சங்கடத்துடன் காவ்யாவைப் பார்த்தாள்.. அவளோ எனக்கென்று என்று கீ போர்டை டொக்.. டொக்கென்று தட்டிக் கொண்டிருந்தாள்...

“சார்..” திரும்பவும் அழைத்துப் பார்த்தாள் பாவனா..

ஊஹீம்.. அர்ஜீனனின் தவம் கலையவே இல்லை.. சித்தன் போக்கு சிவன்போக்கு என்பதைப் போல அவன் தன் போக்கில் கருமமே கண்ணாக டேபிள் வெயிட்டை ஆராய்ந்து கொண்டிருந்தான்...

‘இவங்க இரண்டு பேருக்கும் என்னாச்சு...’

பாவனா நெற்றியில் ஒற்றைவிரலை தட்டி யோசனை எதுவும் வருகிறதா என்று பார்த்தாள்.. யோசனை வருவேனா என்று மல்லுக்கட்டிவிட்டது..

‘பேசாம திரும்பிப் போய்விடலாமா..’

ஒருவழியாய் அவளுக்குள் யோசனை உதயமாக.. அதுவே சாலச்சிறந்தது என்ற முடிவுடன் அவள் திரும்பிப் போக யத்தனித்தபோது கந்தசாமி மீசையை முறுக்கியபடி உள்ளே வந்தார்..

‘ஆஹா.. சிம்மக் குரலோன் வந்தாச்சு...’

அர்ஜீனனின் தவத்தைக் கலைக்க வந்த மாமனிதரே வருக.. வருக.. என்று மனதுக்குள் கோசமிட்டபடி.. பாவனா மகிழ்ந்து போய் நின்று விட்டாள்...

“சார்...” கந்தசாமியின் குரல் ஓங்கி ஒலித்தது...

பாவனா தயங்கித் தயங்கி அழைத்தபோது தலை நிமிர்ந்து பார்க்காதவன் கந்தசாமியின் ஒற்றைக்குரலில் சட்டென்று தலைநிமிர்ந்தான்...

“என்ன கந்தசாமி..?”

“சரக்கு வந்திருக்கு சார்...”

‘என்ன பிராண்ட்..’ என்று கேட்க ஏகத்துக்கும் ஆசைப்பட்டாள் பாவனா.. கந்தசாமி தனியே சிக்கியிருந்தால் கேட்டிருப்பாள்.. அர்ஜீனின் முன்னிலையில் அப்படிக் கேட்க முடியாதவளாய் சாதுப் பெண்ணைப் போல வேசம் போட்டாள்...

“சரக்கா..?” அர்ஜீன் முகம் சுளித்தான்...

“சரக்குத்தான் சார்..” கந்தசாமி புரியாமல் மீண்டும் சொன்னார்...

“என்ன சரக்கு..? ஃபாரின் சரக்கா.. நம்ம ஊர் சரக்கா..?” காவ்யாவைப் பார்த்தபடி விசமமாகக் கேட்டான்..

அவன் எதிர்பார்த்தபடி அவள் விழியுயர்த்தி அவனை வெட்டும் பார்வை பார்த்தாள்...

“ஃபாரின் சரக்குதான் சார்..” அப்பாவி கந்தசாமி அள்ளிவிட்டார்...

“அப்ப.. ஊத்திக் கொடுக்கறேன்கறிங்க..?” அர்ஜீனின் பார்வை காவ்யாவை விட்டு அகலவில்லை...

அவள் உஷ்ணத்துடன் முறைத்தாள்.. காலையிலிருந்து அவளின் பார்வையைச் சந்திக்க முடியாத அவஸ்தையுடன் இருந்த அர்ஜீனுக்கு ஆனந்தமாக இருந்தது...

“ஊத்திக் கொடுக்கிறதா..?”

கம்யூட்டரை எப்படி ஊற்றிக் கொடுப்பது என்று தெரியாமல் விழியாய் விழித்தார் கந்தசாமி...

‘ஊறுகாய்க்கு எங்கே போவார்னு கேட்டுச் சொல்லுங்க கந்தசாமி..’ என்று கேட்டுவிடத்தான் வாய் திறந்தாள் காவ்யா...

அதை கந்தசாமி ஊர் முழுவதும் ஒலிபரப்பி வைப்பாரே என்ற ஞானோதயம் வந்ததில் அவசரமாக வாயை மூடிக் கொண்டாள்...

“என்ன கந்தசாமி..? பேச நினைக்கறிங்கன்னு தெரியுது.. ஆனா பேச மாட்டேங்கறிங்களே.. ஏன்..? வாயைத் திறந்தா காற்றுத்தான் வருதா..?” கேலியாக கேட்டான் அர்ஜீன்...

‘ஆமாண்டா.. நீ இஞ்சி இடுப்பழகன்.. உன்னைக் கண்டா எனக்கு பேச்சு வரமாட்டேங்குது.. காத்துத்தான் வருது.. போடா.. டேய்..’ தெனாவெட்டாக புருவங்களை உயர்த்தினாள் காவ்யா..

“ஐயா.. என்ன சொல்றீங்கன்னு புரியலிங்களே...” அப்பாவியாக இமை கொட்டினார் கந்தசாமி...

“உங்களுக்கா புரியாது..? புரியாததைப் போல நடிக்கறிங்க..” அர்ஜீன் கூர்மையான பார்வையுடன் காவ்யாவைப் பார்த்தான்...

“நிசமாவே புரியலிங்கய்யா..” கந்தசாமி கூன் போட்டு முதுகை வளைத்தார்..

‘இவனுக்கிருக்க ஏத்தத்தைப் பாரேன்.. இவன் ஜாடை பேச பாவம் இந்த வயசாளிதான் சிக்கினாரா..’ காவ்யா அர்ஜீனை விடக் கூர்மையான பார்வை பார்த்தாள்...

‘பார்க்கிறதைப் பார்.. வண்டு போல கண்ணிரண்டையும் முழிச்சு முழிச்சு பார்த்துக்கிட்டு.. அப்படியே ஆளைக் கிறங்கடிக்கிறா...’ அர்ஜீன் கள்ளுண்ட சிங்கமானான்..

‘யோவ்.. இங்கே பார்க்காதே.. உன் முன்னாடி நிக்கிற கிழவனைப் பாரு..’ காவ்யா பார்வையிலேயே அதட்டினாள்..

‘ஏண்டி.. உன்னைப் பார்த்தா ஆகாதா..?’ அர்ஜீன் சுழல் நாற்காலியில் சுழன்று அவளைப் பார்க்க வாகாக திரும்பி அமர்ந்தான்..

‘இதான் நீ வேலை பாக்கிற லட்சணமா..?’ காவ்யா உதட்டை வளைத்தாள்...

‘ஆமாம்கிறேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற...’ அவன் மிரட்டும் பாவனையில் புருவங்களை உயர்த்தினான்...

பாவனாவுக்கு அப்படியே சினிமா பார்ப்பதைப் போலவே இருந்தது.. அவள் வந்த வேலையை மறந்து விட்டாள்.. சுவராஸ்யமாக அந்த இருவரின் பார்வைப் பரிமாற்றத்தை வேடிக்கை பார்த்தபடி அப்படியே நின்று விட்டாள்...

கந்தசாமி.. இது எதையும் அறியாத அப்பாவி மனிதர்.. அலாவுதீன் பூதம் வேலைக்கு அலைவதைப் போல... அவர் அடுத்தடுத்த வேலைகளைத் தேடி அலைந்து கொண்டிருப்பவர்.. அவருக்கு.. அந்தக் கடையின் தேனி என்ற பட்டப்பெயரை பாவனாவும்.. காவ்யாவும் சூட்டியிருந்தார்கள்...

அப்படிபட்ட கந்தசாமி.. வாசலில் கம்யூட்டர்களை சுமந்து வந்த லாரி நின்றிருக்க.. அதை இறக்கி அடுக்காமல் அங்கே நின்றிருப்பாரா..? அதனால் அவர் ஓங்கி ஒரு குரல் கொடுத்தார்...

“சார்...”

அர்ஜீன் அசையவில்லை..

“ஐயா...” இப்போது சப்தம் கொஞ்சம் கூடியிருந்தது அர்ஜீனின் விழிகளுக்கு காவ்யாவைத் தவிர வேறு யாரையும் தெரியவில்லை...

“சார்.. ஐயா..” கந்தசாமி கத்திய கத்தலில் கடையிலிருந்த அத்தனை பேரும் அறைக்குள் எட்டிப் பார்த்ததில் ஒருவழியாக அர்ஜீன் மோனத்தைக் கலைத்தான்..

“வாங்க.. கந்தசாமி.. வாசலுக்கு போய் பார்க்கலாம்...”

அப்போதும் காவ்யாவை விழிகளால் அழைத்தபடி தான் அவன் வாசலுக்கு நடந்தான்..

## 46

*என் சுட்டும் விழி சொல்லும் மொழியை..*
*நீ உணர ஆசைகொண்டேன்..*

“**உ**ங்க ரெண்டு பேத்துக்கும் நடுவில என்னதாண்டி ஓடிக்கிட்டிருக்கு..” பாவனா புலன் விசாரணையை ஆரம்பித்தாள்..

“என்ன ஓடிக்கிட்டிருக்கு..? வைகை ஆறா ஓடிக்கிட்டிருக்கு..?” ஒன்றும் தெரியாத சின்னக் கன்னியாக காவ்யா வினவினாள்...

“ஏண்டி கேக்கமாட்ட..? ஏர் உழுகிறவன் இளிச்ச வாயனா இருந்தா மாடு மச்சான்னு கூப்பிடுமாம்.. அந்தக் கதைபோல இருக்கு...”

“அத ஏர் உழுகிற இளிச்சவாயன் சொல்லனும்.. ஊருக்குள்ள இருக்க அத்தனை பேரையும் கேணையா மாத்தற நீ சொல்லக் கூடாது..”

“நேத்து வரைக்கும் என்னப்பத்தி நான் அப்படித்தாண்டி நினைச்சுக்கிட்டு இருந்தேன்.. இப் உன்னப் பாத்த பின்னாலதானே தெரியுது.. நீ என்னயே தூக்கிச் சாப்பிட்டுருவன்னு...”

“இந்தாபாரு.. எனக்கு வேல தலைக்கு மேல குமிஞ்சு கிடக்கு.. உன்கூட வாயடிக்க எனக்கு நேரமில்ல.. சொல்லிப்புட்டேன்...”

“நீ இதத்தானே நான் கடைக்கு வந்த நாள்முதல்.. இந்த நாள் வரைக்கும் சொல்லிக்கிட்டு இருக்க.. நீ சொல்றேங்கிறதுக்காக.. நீ நடத்தற நாடகத்த நான் ஏன்னு கேக்காம போக முடியுமா..?”

“ஆமாண்டி.. இங்க அல்லி.. அர்ச்சுனன் நாடகம் நடக்குது.. நீ அதப் பாத்துட்டு நகர முடியாம நிக்கிற..”

“அப்பவும் அல்லி அர்ச்சுனன் நாடகத்ததான் சொல்லுவ.. பவளக்கொடி நாடகத்தப் பத்தி வாயைத் திறந்திர மாட்ட..”

‘நீ பவளக்கொடியாகிறதிலேயே குறியாய் இரு...’ எரிச்சலாகிப் போன காவ்யா நெற்றிக்கண்ணைத் திறந்தாள்..

“வாங்குற சம்பளத்துக்கு கொஞ்சமாச்சும் வேலயப் பாரு பாவனா...”

“உனக்கேண்டி இந்தக் காண்டு..?”

“காண்டு.. கீண்டுன்னு சீண்டிக்கிட்டு இருந்த.. நடக்கிறதே வேற.. யாருடி இவ.. மதுரைக்குள்ள வந்து காண்டுன்னு பேசறா...”

“யம்மா.. மதுரைக்காரி..! இதுக்கெல்லாம் வித்தாரமா பதில் சொல்றயே.. அந்த அர்ஜீனனுக்கும்.. இந்த அல்லிக்கும் நடுவில என்ன ஓடிக்கிட்டிருக்குன்னு மட்டும் சொல்ல மாட்டேங்கறியே...”

“ஒன்னும் ஓடல...”

“பாத்தா அப்படித் தெரியலயே.. யாரு கேள்வி கேட்டாலும் பாஸ் உன்னப் பாத்துக்கிட்டே பதில் சொல்றாரு.. நீ என்னடான்னா ஒரு செகரட்டரியப் போல இல்லாம.. பொண்டாட்டியப் போல அந்த முறை முறைக்கிற.. என்னதாண்டி நடக்குது..?”

"எதுவும் நடக்கலை.. நீ உன் கற்பனைக் குதிரையை ஒட்டாம.. அடக்கி லாயத்தில கட்டு.."

"இது உன் அண்ணனுக்குத் தெரியுமா..?"

"எது..?"

"அதாண்டி.. உனக்கும் பாஸீக்கும் நடுவில ஓடுதே வைகையாறு.. அதப்பத்தி உன் அண்ணன்காரருக்குத் தெரியுமான்னு கேட்டேன்..."

"தெரியாதுன்னா என்ன செய்கிறதாய் உத்தேசம்...?"

"இதைப் பற்ற வைக்கிற சாக்கில பசை போடாம உன் அண்ணன்கூட ஒட்டிக்கிலாம்கிற உத்தேசம்தான்.. வேற என்ன..?"

கண்கள் செறுகப் பேசினவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தாள் காவ்யா.. அவள் எதற்காக அப்படிப் பார்க்கிறாள் என்று அறியாதவளாய் புருவங்களை உயர்த்தினாள் பாவனா..

"நீ பாஸைக் கண்டாலும் பசை போட்டு ஒட்டிக்கிரலாம்ன்னு பிளான் பண்ற.. என் அண்ணன் பேச்சை எடுத்தாலும்.. அங்கேயும் கோந்தை ரெடி பண்ணி வைச்சுக்கிற.. ஏதாவது ஒரு இடத்தை செலக்ட் பண்ண மாட்டியா பாவனா..?"

“நானென்ன பாஸைப் போல தெய்வீகக் காதலியா..? அந்தப் புண்ணாக்கெல்லாம் இங்க இல்லம்மா.. தூண்டில வீசினா எது மாட்டுதோ.. அது..”

“உன்னயெல்லாம் ஓரம் கட்டி அடிக்கனும்டி.. ஆமா.. அவனப் பாத்தா உனக்குத் தெய்வீகக் காதலனப் போல தெரியுதா..?”

“பின்ன.. இல்லையா..?”

“எத வைச்சு இப்பேற்பட்ட அவசர முடிவுக்கு நீ வந்த..”

“ஃபாரினுக்கு பறந்துக்கிட்டிருக்க மனுசன்.. உன்னக் கண்டதும் மதுரையில வந்து பம்மிக்கிட்டு இருக்காரே.. அத வைச்சுத்தான் சொல்றேன்...”

காவ்யா பேசவில்லை.. பாவனா சொன்னதை யோசிப்பவளைப் போல டிபன் டப்பாவில் இருந்த தக்காளி சாதத்தை வாய்க்கு கொண்டு போகாமல் விரல் விட்டு அளைந்தாள்.. பாவனா டிபன் அடுக்குகளைக் காலி பண்ணிவிட்டு.. ஏப்பம் விடாத குறையாக பெருமூச்சு விட்டபடி தோழியைப் பார்த்தாள்.. அவள் அப்போதும் சிந்தனையோடே இருந்தாள்...

“கையில அளையறத வாய்க்குள்ள கொண்டு போடி.. நேரமாகலையா..?”

“ம்ப்ச்.. பொறுடி..”

“நான் பொறுப்பேன்.. ஏகாம்பரம் பொறுப்பாரா..? அவரே பாவம் பெண்டாட்டியோட பிடுங்கல்ல இருந்து தப்பிக்க கடைக்கு ஓடிவந்து ஒளிஞ்சுக்கிறாரு...”

“அப்படி அவர் உன்கிட்ட வந்து சொன்னாரா..?”

“ஊரே சொல்லுது.. இவரு எங்கேயிருந்தாலும்.. அந்தம்மா வந்து பிலுபிலுன்னு பிடிச்சுக்குவாங்களாம்.. கடைக்குள் மட்டும் கால்வைக்க மாட்டாங்களாம்...”

“ஏண்டி.. அவங்களுக்கு அப்படியொரு நேர்த்திக்கடன் இருக்கா..?”

“ஒரு கடனும் இல்லயாம்.. ஒருநா அந்தம்மா வந்திருந்தப்ப நம்ம தேவாங்கும் வந்துட்டாராம்..”

“அதுசரி.. அவனே ஜொள்ளு...”

“அவன் மத்தவங்ககிட்டத்தான் ஜொள்ளைக் காட்டுவான்.. உங்கிட்ட ஜொள்ளைத்தான் காட்டுவான்..”

“வேணாம் பாவனா.. விட்டுடு.. இப்ப என்ன சோலிக் கழுதைக்கு அந்த தேவாங்கைக் கட்டி இழுக்கற..?”

“அவனக் கட்டி இழுத்துட்டாலும்...”

“நீதாண்டி அவன் பேச்ச இழுத்த..?”

“பேச்சைத்தான் இழுத்தேன்.. அவன இழுக்கல.. உனக்கு கோபம் வந்தா நாலு மொத்து மொத்திக்க.. ஆனா

அவன்கூட மட்டும் என்ன இணை கூட்டிப் பேசிராதே காவ்யா...”

“இதப் போலத்தானே எனக்கும் இருக்கும்..?”

“ஆனாலும் என் டேஸ்ட்ட இவ்வளவு மட்டமா நீ எடை போட்டிருக்கக் கூடாது.. இவனப் பாத்தாலே கோந்து பாட்டிலை நான் ஒளிச்சு வைச்சுருவேண்டி...”

“விட்டுத்தொலை.. ஏகாம்பரம் பெண்டாட்டிகிட்ட வா...”

“அதாண்டி அந்தம்மா வந்த நேரத்தில இவனும் வந்திருக்கான்... சரக்கப் போட்டிருந்தானாம்..”

பாவனா கதை சொல்லிக் கொண்டிருக்க.. காவ்யா சரக்கு என்றதும் அது உள்ளூர் சரக்கா.. வெளியூர் சரக்கா என்று கேட்ட அர்ஜீனின் விசமத்தை நினைத்து ரகசியப் புன்னகை பூத்தாள்...

“என்னாச்சு..? பாஸ் நினப்பு வந்திருச்சா..?”

“சிச்சீ...”

“இந்தப் பழம் புளிக்கும்ன்னு நரிதான் சொல்லும்.. நீ சொல்ல மாட்ட...”

“ஏகாம்பரம் பெண்டாட்டி என்னதான் ஆனாங்கடி..?”

“அதையேன் கேக்கற.. தேவாங்கும் நோக்கியிருக்கு.. இந்தம்மாவும் நோக்கியிருக்கு...”

“ஏண்டி அவன் கிழவியக்கூட விட்டு வைக்க மாட்டானா..?”

அருவெறுப்புடன் முகம் சுளித்தாள் காவ்யா.. அவசரமாக அதை மறுத்தாள் பாவனா...

“இது அந்த நோக்கல் இல்லடி.. அந்தம்மா சேலய இழுத்துச் செறுகிக்கிட்டு.. வரும்போதே எங்கே அந்த ஆள்ன்னு கேட்டுக்கிட்டே வந்துச்சாம்...”

“இதப் பாருடா.. அப்புறம்..?”

“இவன் குடிவெறியில இருந்தவன்.. அந்தம்மா சொன்ன அந்த ஆள்.. எந்த ஆள்ன்னு தெரியாம அதுகூட மோதிட்டான்..”

“அடப்பாவமே..”

“யாரச் சொல்ற..?”

“அதுக ரெண்டையும் சொல்லலை.. பொதுவாச் சொன்னேன்...”

“அன்னைக்கு தேவாங்கு கத்தின கத்தல்ல ஓடிப் போனதுதானாம்.. அதுக்கப்புறமா அந்தம்மா இந்தக்கடை இருக்கிற திசைப்பக்கம் கூடத் திரும்பிப் படுத்ததில்லையாம்..”

“நீ கண்ட...”

“நான் காணலைடி.. கண்டவர் சொன்னார்...”

“யாரைச் சொல்ற...”

“ஏகாம்பரத்த்தான் சொன்னேன்.. நீ சாப்பிடப் போறியா இல்லியா..”

காவ்யா அரைமனதாய் சாப்பிட்டுவிட்டு எழுந்தாள்.. கைகழுவப் போனபோது மெதுவாக பாவனா கேட்டாள்...

“நீ பயப்படறியா காவ்யா..?”

காவ்யாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.. அவள் பயப்படுகிறளா..? யாரைப் பார்த்து பயப்படுகிறாள்..?

“அந்த அர்ஜீனைப் பாத்துப் பயப்படறியா..?”

அவனைப் பார்த்தால் பயமா வருகின்றது..? காவ்யாவின் முகத்தில் வெட்கம் கலந்த ரகசிய சந்தோசம் பரவியதில் பாவனாவின் நெற்றியில் சிந்தனையின் ரேகைகள் படிந்தன...

“உனக்கு அவனைப் பிடிச்சிருக்கு போல...”

இதைச் சொன்ன பாவனாவின் வார்த்தைகளில் பொறாமையின் சாயல் லேசாக பரவியிருந்தது...

“அவனைப் போய் பிடிச்சிருக்குன்னு நான் சொல்லுவேனா..? வேலையைப் பாருடி...”

“எல்லாத்தையும்.. பார்த்துக்கிட்டும்.. கேட்டுக்கிட்டும் தான் இருக்கோம்.. அவன் உன்னை பார்வையிலேயே

மேயறான்.. நீ கள்ளத்தனமா பதிலுக்கு பார்க்கிற.. வெளியில மட்டும் பிடிக்காத மாதிரி வேசம் கட்டற.. என்னதாண்டி நடக்குது..?”

“எதுவும் நடக்கல.. நீ வேலையைப் பாரு...”

“இதை நான் நம்பனுமாக்கும்..?”

“நம்பாட்டிப் போ.. எனக்கென்ன..”

காவ்யா போய் விட்டாள்.. பாவனா கையெழுத்து வாங்காமல் விட்டு வைத்திருந்த ஃபைல்களைத் தூக்கிக் கொண்டு இப்போது அவன் எந்த நிலைமையில் இருக்கிறானோ என்ற யோசனையுடன் அர்ஜீனின் அறைக்குள் போனாள்...

நல்லவேளையாக அவன் காவ்யாவைப் பார்க்காமல்.. இறக்கப்பட்டிருந்த கம்யூட்டர்களின் விலைப்பட்டியலைப் பார்த்துக் கொண்டிருந்தான்..

“சார்...” என்ற பாவனாவின் அழைப்புக்கு உடனடியாக தலை நிமிர்ந்து பார்த்துவிட்டான்..

“இந்த ஸ்டேட்மெண்ட்ஸில உங்க சைன் வேணும் சார்...”

பாவனா பவ்யமாக அவன் முன் ஃபைல்களை விரித்தபடி காவ்யாவைப் பார்த்தாள்.. அவள் வேலை

செய்வதை விட்டுவிட்டு.. பாவனாவைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள்..

'கண்காணிக்கிறா...' பாவனாவின் மனதில் சிரிப்பு எழுந்தது...

எல்லா ஃபைல்களிலும் கையொப்பம் இட்டு முடித்த அர்ஜீன் அவளைப் பார்த்து சிநேகமாகச் சிரித்தான்... அழகர் கோவிலுக்குப் போவதற்காக பாவனாவின் வீட்டிற்குப் போய் வந்ததிலிருந்துதான் அவன் அப்படிப்பட்ட சிநேகச் சிரிப்பை சிந்துகிறான் என்ற நினைவில் காவ்யா கனலாகிப் போனாள்...

"உங்க பேரண்ட்ஸ் எப்படியிருக்காங்க..?"

அவனின் இந்தக் கேள்வியில் மகிழ்ந்து போனாள் பாவனா...

"ஓ.. தே ஆர் ஃபைன் சார்..."

"நான் விசாரிச்சேன்னு சொல்லுங்க..."

"ஓ.. ஷ்யூர் சார்..."

பாவனா கால்கள் தரையில் பாவாமல் ஃபைல்களை எடுத்துக்கொண்டு காவ்யாவின் பக்கம் திரும்பாமல்கூடப் போய்விட.. காவ்யா பல்லைக் கடித்தாள்..

'அவளோட பேரண்ட்ஸ் எப்படியிருந்தா இவனுக்கென்ன..?'

கோபத்துடன்.. டம்.. டும்மென்று.. ஃபைல்களைத் தூக்கிப் போட்டபடி அவள் வேலையைப் பார்க்க.. அர்ஜீன் அவளைப் பார்த்தான்... அவளின் கனல் கக்கும் பார்வையில் புருவங்களை உயர்த்தினான்...

"வாட் ஹேப்பன்..?"

"இந்த இங்கிலீஷெல்லாம் இங்கே வேணாம்.. அதையெல்லாம் பாவனாகிட்டயே கொட்டுங்க..."

"ஓ.. அதுதான் கோபமா..?" அவன் உல்லாசமாக சிரித்தான்...

'கண்டு கொண்டானே..' காவ்யாவுக்கு அகப்பட்டுக் கொண்டோமே என்றிருந்தது...

"பாவனா உன்னோட பிரண்ட்..."

"உங்க கடையோட ஸ்டாஃப்.."

"அப்படியும் சொல்லலாம்..."

"அப்புறம் என்னத்துக்காக என் பிரண்டுங்கிறதைச் சொல்லனும்..?"

"அதுவும் உண்மைதானே..?"

"அந்த உண்மையை எதுக்காகச் சொல்கிறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா..?"

“உன் பிரண்டுங்கிறதுக்காக அதிகப்படியா இரண்டு வார்த்தைகள் பேசினேன்.. அது தப்பா..?”

“அடேங்கப்பா.. என்னைச் சேர்ந்தவங்கிறதுக்காக இந்த இம்பார்டன்டாக்கும்..? இந்த இம்பார்டன்ட் என் அண்ணனைக் கண்டதும் எங்கே ஓடிப் போச்சாம்..?”

அவளின் படபடப்பை ரசித்தபடி அவளையே குறுகுறுவென பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜீன்.. அவளின் உரிமை கலந்த கோபம் அவன் மனதை தாலாட்டியது..

‘இவ காண்பிக்கிற இந்த பொஸஸிவ்னெஸ்ஸை இவ அறிவாளா..?’ அவன் மனதில் கேள்வி முளைத்தது...

“ஓ.. ஓன்னு.. அத்தன ஓ போடறாளே.. அதைப் போல எங்களுக்கெல்லாம் பேசத் தெரியாது சார்.. என் அண்ணன் கோவக்காரன்.. அது முகத்தில முள்ளக் கட்டித்தான் வைச்சிருக்கும்...”

“வாட்..?” அர்ஜீன் திகைத்து விட்டான்...

‘முகத்தில் முள்ளைக் கட்டி வைப்பதா..?’ அப்படியென்றால் என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை...

“ம்ப்ச்.. உங்ககிட்ட இது ஒன்னு இருக்கு.. எதுக்கெடுத்தாலும்.. வாட்... வாட்ன்னு உசிரைக் குறைப்பீங்க.. என் அண்ணன் சிடுசிடுன்னு இருக்கும்..

அதைத்தான் சொன்னேன்..” காவ்யா விளக்கம் கொடுத்த போது அவன் ஆச்சரியமாக அவளைப் பார்த்தான்...

“அதை இப்படியா சொல்லுவ..?”

அவ்வளவுதான்.. வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது.. காவ்யா கன கோபத்துடன் கம்யூட்டர் பக்கமாக திரும்பிக் கொண்டாள்.. அர்ஜீன் பேசிய எந்தப் பேச்சுக்கும் அவள் பதில் சொல்லவேயில்லை...

# 47

## உன்னோடு நானுறங்க...
## உளமாற ஆசைகொண்டேன்....

**அ**டுத்த வந்த ஒருவாரம் முழுவதும் காவ்யா மௌன விரதத்தை கடைபிடித்தாள்.. அர்ஜீனும் ஆன மட்டும் முயன்று பார்த்தான்.. அவள் அசைந்தே கொடுக்கவில்லை.. அவன் சென்னைக்கு கிளம்ப வேண்டிய நாள் நெருங்கி விட்டது.. இப்போது போனால் எப்போது திரும்ப முடியுமோ என்ற கவலைக்கு ஆளானான் அவன்..

வெளிநாட்டில் முக்கியமான ஒப்பந்தத்தை அவன் முடிக்க வேண்டியிருந்தது.. அதற்காக அவன் போயே ஆக

வேண்டும். பிரிவின் தாபம் அவன் மனதில் எழுந்தது.. காவ்யாவைத் திரும்பவும் பார்ப்பதற்கு எத்தனை நாள்கள் ஆகுமோ என்ற தவிப்புடன் அவன் அவளிடம் பேச முயன்றான்.. அவள் வழக்கப்படி முகத்தைத் திருப்பிக் கொண்டேயிருந்தாள்...

'இன்னைக்கு எப்படியும் பேசியாகனும்...'

அவன் முடிவு செய்து விட்டான்.. மறுநாள் அவன் கிளம்பியாக வேண்டும்.. இப்படி முகத்தைத் திருப்பிக் கொண்டிருப்பவளை மனதில் நினைத்துவிட்டவன் நிம்மதியாக கிளம்பிப் போக முடியுமா..? அதிக நாள்கள் பிரிந்திருக்க வேண்டுமே என்ற தவிப்பினால்தான் அவன் அதிகநாள்கள் மதுரையிலேயே தங்கியிருந்தான்... ஆனந்தி கூட போனில் அவனிடம் கேட்டாள்..

"நீ மதுரையில இருக்கனும்கிற அவசியமே இல்லையே அர்ஜீன்.. கடையை டேக்ஓவர் பண்ணிட்ட.. அங்கே பொறுப்பான ஆளையும் போட்டுட்டதா சொன்ன.. அதுக்கப்புறமும் அங்கே ஏன் டைமை ஸ்பென்ட் பண்ற..? நீ இருக்க வேண்டிய இடம் சென்னை அர்ஜீன்.. இங்கேதான் கோடிக்கணக்கில் பிஸினெஸ் நடக்குது..."

ஆனந்தி புத்திசாலி.. அர்ஜீனிடம் பார்த்தசாரதி கேட்கச் சொன்ன கேள்வியை இயல்பாக கேட்டுவிட்டாள். பதில் சொல்ல அர்ஜீன் நேரம் எடுத்துக் கொண்டான்...

"அது வந்து அக்கா... எதையும் சரியாச் செய்யனும்.. இல்லையா.."

"ஓ.. ஷ்யூர்.."

"கடையை டேக் ஓவர் பண்ணினா மட்டும் போதாது.. இங்கே வேலை செய்கிறவங்க மனதில் புது முதலாளி நான்தான்கிற எண்ணம் வரனும்..."

"அது வராம எங்கே போகும் அர்ஜீன்..?"

"அப்படிச் சொல்லிவிட முடியாதுக்கா.. இது மதுரை.. இங்கே இருக்கிறவங்களுக்கு மண் வாசனையில அதிகமான பிடிப்பிருக்கு..."

"மண்வாசனையா..?"

ஆனந்திக்கு மண்வாசனை என்றால் என்னவென்று தெரியவில்லை.. அவளைச் சொல்லியும் குற்றமில்லை.. திருநெல்வேலியை பூர்விகம் என்று சொல்லிக் கொள்ளும் பார்த்தசாரதி.. அங்கே நிலை கொள்ளாமல் அவருடைய தாத்தா காலத்திலே மதுரைக்கு புலம் பெயர்ந்ததாகச் சொல்கிறார்.. அங்கேயும் நிலை கொள்ளாமல் அவர் காலத்திலே அவர் சென்னைக்கு தொழில் செய்ய வந்து விடுகிறார்.. சென்னையிலே பிறந்து வளர்ந்த ஆனந்தி மண்வாசனையாக எந்த மண்ணின் வாசனையை நுகர்வாள்..?

பூர்விகம் என்பதினால் திருநெல்வேலி மண்ணின் வாசனையை நுகர்வாளா..? புலம் பெயர்ந்ததால் மதுரை மண்ணின் வாசனையை நுகர்வாளா..? பிறந்து வளர்ந்ததினால் சென்னை மண்ணின் வாசனையை நுகர்வாளா..?

அவளுக்கு மண்வாசனையைப் பற்றித் தெரியாததில் வியப்பொன்றும் இல்லையே...

அர்ஜீனும் அவளைப் போலதான்.. அவளாவது சென்னையில் இருக்கிறாள்.. அவனோ சென்னையிலும் நிலைகொள்ளாமல் வெளிநாடுகளுக்குப் பறந்து கொண்டிருப்பவன்...

அவன் என்ன மண்வாசனையைப் பற்றி பி.எச்.டி யா பண்ணியிருக்கிறான்..? அதைப் பற்றிய அரிச்சுவடி கூட அவனுக்குத் தெரியாதே..

மண்வாசனையைப் பற்றி அவனுக்கு காவ்யாதான் பாடம் எடுத்து வைத்திருந்தாள்...

“இந்தா பாருங்க.. இது மதுரை...”

“நானென்ன சென்னைன்னா சொன்னேன்..?”

“உங்க பருப்பெல்லாம் இங்கே வேகாது..?”

“ஏன்..? வைகைத் தண்ணி உப்புத்தண்ணியா..?”

“வேணாம் சார்.. வம்பிழுக்காதீங்க.. இளநீத் தண்ணிகூட உப்புக்கரிக்கும்.. எங்க வைகைத் தண்ணி தேனாட்டமில்ல இருக்கும்...”

“அப்புறம் ஏன் பருப்பு வேகாது..?”

“உங்களுக்கு டியுசன் எடுத்தே நான் ஓய்ஞ்சு போயிட்டேன்...”

“நீயும் விளங்கப் பேசனுமா.. இல்லையா..?”

“உங்களுக்கு விளக்கிட்டாலும்...”

“என்னமோ வாய்க்கு வாய் மதுரையில சங்கத்தமிழை வளர்த்தாங்கன்னு சொல்லுவியே.. இதுதான் உங்க தமிழா..?”

“உங்களுக்கு புரிஞ்சுக்கத் தெரியலைன்னு சொல்லுங்க.. அதுக்காக எங்க தமிழை குறை சொல்லாதீங்க.. எங்கே போனாலும் எங்களை இன்னார்ன்னு காட்டிக் கொடுக்கிறது இந்தத் தமிழ்தான்.. தெரியுமா..?”

“அப்படியா..?”

“என்ன நொப்படியா..? மதுரை மண்வாசனையைப் பத்தி உங்களுக்கு எங்கே தெரியப் போகுது...?”

“மண்வாசனையா..?”

“ஆமாம்.. மதுரைக்குன்னு ஒரு மண்வாசனை இருக்கு சார்.. மதுரைன்னு இல்ல.. ஒவ்வொரு ஊருக்கும் மண்வாசனை உண்டு.. அதுக்கான தனி அடையாளம் உண்டு..”

“எப்படி..?”

“இப்ப கோயம்புத்தூரில போயி இறங்கினீங்கன்னு வையுங்க.. அங்கே.. என்னாங்கோ அம்முனின்னு கொங்கு நாட்டுப் பாஷை காதில விழுகும்...”

“அட.. ஆமாம்...”

“அது அந்த ஊரோட அடையாளம்.. தூத்துக்குடிப் பக்கம் போனிங்கன்னா.. என்னலே.. என்னத்தப் பண்றேம்பாங்க..”

“அதுவும் நிஜம்தான்...”

“அது அவங்களோட பேச்சு வழக்கு.. கன்யாகுமரிப் பக்கம் போனா பாலக்காட்டுத் தமிழ்தான்...”

“கேட்டியளோ தான..?”

“உம்.. அது போலதான் மதுரையிலயும்.. ஏம்ப்பா ஏய்ய்.. ஆத்தி.. அப்படிம்பாங்க.. இது மதுரையோட மண்வாசனை.. எங்க ஊர் மண்ணுல பிறந்தவங்களுக்கு மண்வாசனை ஜாஸ்திங்க...”

“மத்த ஊருக்கு இது குறைச்சலா..?”

“யார் சொன்னது..? அந்தந்த ஊரில இதே டயலாக்கத்தான் சொல்லுவாங்க.. அவங்கவங்களுக்கு அவங்கவங்க ஊர்தான் உசத்தி.. அந்த மண்வாசனை தான் அவங்களுக்கு உயிர்மூச்சு...”

இப்படியாகத்தானே காவ்யாவிடம் கற்றுக்கொண்ட மண்வாசனையை ஆனந்தியிடம் பிரயோகித்தான் அர்ஜீன்..

“அதுவாக்கா... ஒவ்வொரு ஊரில இருக்கிறவங்களுக்கும்.. அந்த ஊர் மேல ஒரு பிடிப்பிருக்கும்...”

“இருந்துட்டுப் போகட்டும்.. அதுக்கும் நீ உன் வேலைகளை விட்டுட்டு மதுரையில டைம் ஸ்பென்ட் பண்றதுக்கும் என்ன சம்பந்தம்..?”

“இருக்குக்கா.. இந்தக் கடையோட முதலாளியா துரியோதனன் இருந்திருக்கார்.. அவர் மதுரைக்காரர்...”

“இப்ப என்னதாண்டா சொல்ல வர்ற...”

“அவர் மேல விசுவாசமா இருக்கிற வொர்க்கர்ஸ் மனசில நானும் மதுரைக்காரன்தான்னு இடம்பிடிக்க வேண்டாமா..?”

அர்ஜீன் மனதுக்குள் காவ்யாவை நினைத்தபடி சொன்னான்..

“உனக்கெதுக்குடா இந்த வேலை..? டேக் ஓவர் பண்ணப் போகிறதுக்கு டைம் இல்லைன்னு அழிச்சாட்டியம் பண்ணியவன்தான நீ.. இப்ப மட்டும் என்ன மாறிப் போச்சு..? அர்ஜீன்.. டாடிக்காக நீ அங்கே போய் கடையை டேக் ஓவர் பண்ணின.. தட்ஸ் ஆல்.. அதுக்காக நீ அங்கேயே

அதிகநாள் ஸ்பெண்ட் பண்ணி உன் பிஸினெஸ்ஸை கெடுத்துக்கனும்னு நானும் சொல்லலை.. டாடியும் நினைக்கலை.. ஸோ.. நீ சென்னைக்கு ரிடர்னு ஆகிரு...”

“இங்கே கடையிருக்குக்கா...”

“சுண்டைக்காய் கடை.. ஏண்டா.. கடல் போல உன் கம்யூட்டர் பிஸினெஸ் இருக்கு.. மும்பையிலயும்.. பெங்களூரிலயும் அதோட பிரான்சஸ் இருக்கு.. அதவிட்டுட்டு.. மதுரையில இருக்கிற சின்னக் கடையிலயே ஏண்டா குடியிருக்கிற..?”

‘ஏன்னா.. என் மனசில குடியிருக்கிறவ.. இந்த ஊரிலதான குடியிருக்கா...’

மனதில் நினைத்ததை வெளியில் சொல்ல அர்ஜீனுக்கு அதிக நேரம் ஆகாது.. ஆனால்.. அதற்கு முன்னால் அவனிடம் காவ்யா ‘ஐ லவ் யு’ சொல்ல வேண்டுமே.. அதனால்..

“நீதானே அலைச்சலைக் குறைச்சுக்கடா அர்ஜீன்னு சொன்ன..?” என்று சமாளித்தான்...

“அதுக்காக உன்னை மதுரையில போய் ஹோட்டலில் சாப்பிட்டுக்கிட்டு உட்காருன்னா சொன்னேன்.. சென்னையில நம்ம வீட்டில வீட்டுச்சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கிட்டு இருடான்னு சொன்னேன்.. நீ என்னடான்னா டாடி வீம்புக்காக மதுரையில வாங்கி வைச்சிருக்க சின்னக்கடையில போய் உட்கார்ந்திருக்க..”

ஆனந்திக்கு விளக்கம் சொல்வது கடினம்.. அவள் சரியான கோணத்தில் சிந்தித்து சரியான கேள்வியைக் கேட்டிருந்தாள்.. அர்ஜீனைப் போன்ற நிற்க நேரமில்லாத தொழிலதிபன்.. அவனுடைய தந்தை தனது மணரணத்தை ஆற்றிக் கொள்வதற்காக வாங்கிப் போட்டிருந்த சின்னஞ்சிறு கடையில் எப்படி காலத்தை விரயம் பண்ணுகிறானென்றுதான் அவள் கேட்டாள்.. அத்தோடும் அவள் நிறுத்தவில்லை...

“ஆச்சரியமாயிருக்கு அர்ஜீன்..”

“என்னக்கா..?”

“நீயோ டாடியின் உழைப்பில் சொந்தம் கொண்டாட விரும்பாதவன்.. சென்னையில நம்ம ‘நியு எக்ஸ்போர்ட்’ பக்கம்கூட போக மாட்ட.. நீ எப்படி டாடி வாங்கிப் போட்ட சின்னக் கடையில போய் நாள்கணக்கா உட்கார்ந்திருக்க..?”

ஒரு மனிதன்.. தனக்குப் பிடித்த ஊரில்.. பிடித்த பெண்ணிற்காக தங்குவது கூட குற்றமா என்று களைத்துப் போனான் அர்ஜீன்...

‘எல்லாம் இவளால வந்தது...’

அவனுக்கு காவ்யாவின் மீது கோபம்.. கோபமாக வந்தது..

‘இவ மட்டும் பதிலுக்கு ஐ லவ் யுவைச் சொல்லித் தொலைச்சிருந்தா.. இங்கேதான் என் காதலி

இருக்கிறாக்கா.. அம்மா.. டாடியிடம் சொல்லி பெண் கேட்டு வரச்சொல்லு...' என்று அவன் ஆனந்தியிடம் சொல்லியிருப்பானே.. அவளும் தம்பிக்காக பெற்றவர்களிடம் பேசியிருப்பாளே...

அர்ஜீனின் கோபம் முழுவதும் காவ்யாவின் பக்கம் திரும்பியது.. அவன் ஆனந்தியிடம் சமாளித்து விட்டான்..

“என்னமோ தெரியலைக்கா.. எனக்கு இந்த ஊரை ரொம்பப் பிடிச்சிருக்கு.. உலகத்தைச் சுத்திச்சுத்தி என் மூளை சூடேறிப் போயிருக்குக்கா.. இந்த ஊரில் மைன்டை ரிலாக்ஸ் பண்ண முடியுது.. என்னதான் சிட்டியா இருந்தாலும்.. நம்ம பாரம்பரியத்தின் கல்ச்சர் மாறாம பாதுகாத்து வைச்சிருக்கிற இந்த ஊரிலயே கொஞ்ச நாளைக்கு இருக்கலாம் போலத் தோணுதுக்கா..”

இந்தப் பதிலில் ஆனந்தி திருப்தி அடைந்து விட்டாள்.. அப்போதும் அவனுடைய வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றி அவள் நினைவுறுத்தாமல் இல்லை...

“நீ கனடா போகனும்டா.. இந்த முறை திரும்பிவர ரொம்ப நாளாகும்ன்னு சொல்லியிருக்க.. ஸோ.. சென்னைக்கு வந்து அம்மா கூடவும்.. என்கூடவும்.. டூ டேஸாவது ஸ்பென்ட் பண்ணு அர்ஜீன்...”

தமக்கையின் குரலில் இழையோடிய பாசத்தின் ஏக்கத்தில் கரைந்து போய்விட்டான் அர்ஜீன்..

விமானத்தைப் பிடித்தால் போதும்.. அடுத்த மூன்று மணி நேரத்திற்குள் அவள் முன்னால் போய் நின்று விடுவான்.. அப்படி அவனைப் போக விடாமல் தடுப்பது எது..?

அர்ஜீன் யோசித்தபடி சுழல் நாற்காலியின் சுழன்று திரும்பினான்.. அறைக்குள் வந்து கொண்டிருந்த காவ்யாவின் பார்வையைச் சந்தித்தான்.. அவனின் பார்வை எதைச் சொல்லியதோ.. அதில் அவள் எதைக் கண்டாளோ.. லேசான தடுமாற்றத்துடன் அவள் தயங்கி நின்றாள்...

‘இவதான் என்னைக் கட்டிப் போட்டு காவலில் வைச்சிருக்கா..’ அர்ஜீனின் பார்வை அவளை ஊடுறிவியது..

“காவ்யா...”

அவன் எழுந்தான்.. அவள் பக்கமாகச் சென்றான்.. அவள் கலவரத்துடன் திரும்பிப் பார்த்தாள்.. அறைவாசலில் யாருமில்லை.. அந்த நிம்மதியுடன் அவனைப் பார்த்தவள் வரவழைத்துக் கொண்ட கோபத்துடன்...

“என்ன.. என்ன வேணும்..” என்று படபடத்தாள்...

“நீதாண்டி வேனும்..” அவன் நிதானமாக அவளை நெருங்கினான்...

“என்னது.. ‘டீ’ யா..? நானென்ன உங்க பொண்டாட்டியா..? போனாப் போகுது.. அன்னைக்கு தெரியாம வாய் விட்டுட்டிங்கன்னு பொறுத்துப் போனா.. நீங்க அதையே பிடிச்சுக்கிட்டு தொங்கறிங்களா..?

மரியாதை கொடுத்து மரியாதையை வாங்கனும் சார்.. இது உங்க ஊரில்ல.. மதுரை...”

படபடப்பில் அவள் பேசிக் கொண்டே போக.. அவன் அதைப் பொருட்படுத்தாமல் அவளையே பார்த்த வண்ணம் நெருங்கிக் கொண்டிருந்தான்.. காவ்யா பின் வாங்கினாள்.. அவன் நெருங்க.. அவள் பின்வாங்க என்று நகர்ந்ததில் அதற்கு மேல் அவள் பின்வாங்க முடியாமல் சுவர் அவளைத் தடுத்தது...

தடைபோட்ட சுவரின் மீது சாய்ந்து நின்ற காவ்யாவின் விழிகள் கலவரத்துடன் அவனைப் பார்த்தன..

# 48

*உன்மீது கொண்ட ஆசை...*
*நிறைவேற ஆசைகொண்டேன்...*

‘**ஓ**டி விடு காவ்யா...’ அவள் மனம் பலவீனமாக முணுமுணுத்தது...

காவ்யாவினால் அசைய முடியவில்லை.. அவள் அசைந்தால் அர்ஜுனின் மீது பட்டு விடுவாள் என்பது

ஒரு புறமிருக்க.. அவளுக்கு அதற்கான சக்தி இல்லாமல் போயிருந்தது...

உடலிலுள்ள சக்தியெல்லாம் காற்றில் கரைந்த கற்பூரமாய் காணாமல் போய்விட்ட நிலையில் காவ்யா தொய்ந்து சுவரின் மீது சாய்ந்து நின்றிருந்தாள்...

அவள்மீது மூச்சுக்காற்று படும்துண்ணம் நெருங்கி நின்றிருந்த அர்ஜீனின் பார்வை அவளைத் துளைத்தது.. அந்தப் பார்வையின் வேகத்தைத் தாங்க முடியாதவளாக கண்மூடி மனதிற்குள்..

'இப்படி என்னைப் பார்க்காதே...' என்று அரற்றினாள் காவ்யா...

அவள் இமைகளில் அவனது இதழ்கள் பதிந்தன.. அந்த ஸ்பரிசத்தில் பதறிக் கண்விழித்தவளின் கன்னத்திலே அவன் முத்தமிட்டான்.. அவன் மார்பில் கைவைத்து அவள் தள்ளிவிட முயன்றபோது.. மிக எளிதாக அவள் கைகளிரண்டையும் அவன் வசப்படுத்தி... இழுத்து அணைத்து அவனுடன் இறுக்கிக் கொண்டவன்... அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான்...

அடுத்து நடக்கப் போவது என்ன என்று அவளுக்குப் புரிந்து விட்டது.. அன்றைய நாளின் நினைவில் அவள் மேனி நடுங்கியது.. அவள் வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகள் பறப்பதைப் போன்ற இதமான இம்சையை அவள் உணர்ந்தாள்...

அவள் உதடுகளின் மீது அவன் உதடுகள் பதிந்து ஆக்ரமித்துக் கொண்டபோது காவ்யா.. முற்றிலுமாக மயங்கிப் போனாள்... ஓங்கி எழுந்த பேரலை ஒன்று அவள்மீது விழுந்து அடித்துக் செல்லப் படுவதைப் போல அவள் உணர்ந்தாள்... அவனின் இறுக்கமான அணைப்புக்குள் அடங்கி நின்றபோது... அவள் பூட்டிக் கொண்டிருந்த பொய் விலங்குகள் தகர்ந்து நொறுங்கி விழுந்தன.. அவளைச்சுற்றி அவள் போட்டு வைத்திருந்த இரும்பு வேலியை அநாசியமாக உடைத்து அவளைத் தொட்டுத் தழுவி முத்தம் கொடுத்து தன் வயப் படுத்திவிட்டான் அர்ஜீன்...

அறைவாசலில் காலடிச் சப்தம் கேட்டதில் சட்டென்று அவளைவிட்டு விலகி.. சுவர் அலமாரியின் பக்கமாக போய் நின்று கொண்டான்.. அறைக்குள் வந்த கந்தசாமி...

“கொடவுன் சாவி வேணும் சார்...” என்று கேட்டார்...

அவரின் பார்வை நிலைகுலைந்து நின்ற காவ்யாவின் மீது படிவதற்குள்.. அவளை மறைத்து நகர்ந்து கந்தசாமியின் அருகே சென்றவன்...

“தங்கராஜ் வாங்கிப் போனாரே.. உங்களிடம் தரவில்லையா..?” என்று கேட்டான்..

“இல்லீங்களே சார்..”

“இப்பத்தான் வந்து வாங்கிப் போனார்.. ஸ்டாக்கை செக் பண்ணனும்னு சொன்னார்...”

அர்ஜீன் கந்தசாமியிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்க.. தன்னைச் சுதாரித்துக் கொண்ட காவ்யா.. அவசரமாக அவளின் சீட்டில் அமர்ந்து விட்டாள்.. வேக மூச்சுக்களை எடுத்து தன்னைச் சமனப் படுத்திக் கொண்டிருந்தவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி...

“கடையைப் பத்திரமா பார்த்துக்கங்க கந்தசாமி.. நாளைக்கு நான் சென்னைக்கு கிளம்பறேன்.. நாளை மறுநாள் நான் கனடா போக வேண்டியிருக்கு.. இந்த முறை நான் திரும்பிவர ரொம்ப நாளாகும்..” என்றான் அர்ஜீன்...

காவ்யா அதிர்ந்து நிமிர்ந்தாள்.. அத்து மீறி அவளைத் தொட்டு முத்தம் கொடுத்து விட்டானே என்று அவளுக்குள் கனன்று கொண்டிருந்த கோபம் காணாமல் போய் விட்டது.. அவன் கிளம்பப் போகிறான்.. அவனை மீண்டும் சந்திக்க அதிக நாள்கள் காத்திருக்க வேண்டும் என்ற செய்தியை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

அவனில்லாத நாள்களை நினைத்துப் பார்க்கவே அவளால் முடியவில்லை.. கந்தசாமியை அனுப்பி விட்டு காவ்யாவின் பக்கம் திரும்பினாள் அர்ஜீன்...

“இம்பார்டன்ட் மெயிலுக்கு பதில் அனுப்பனும்.. பேனா பேப்பரோட நோட்ஸ் எடுத்துக்க வா..” என்றான்...

காவ்யா.. உதட்டைக் கடித்தபடி பேனாவும் குறிப்போடுமாக அவன் எதிரில் போய் அமர்ந்தாள்.. அவளை உற்றுப் பார்த்தான் அர்ஜீன்...

எதிர்பாராத நிகழ்வினால் கலங்கிச் சிவந்திருந்த அவள் முகத்தையும்.. அவன் கைகளுக்குள் அகப்பட்டு திமிறியதால் கலைந்திருந்த அவளின் முடியையும்... துடித்த அவளின் இதழ்களையும்.. நடுக்கத்தை விடாத விரல்களையும் பார்த்துக் கொண்டே இருந்தான்...

அவனிடமிருந்து வார்த்தைகள் வெளிப்படாததில் விழியுயர்த்தி அவனைப் பார்த்த காவ்யா.. அவனது பார்வையில் தடுமாறிப் போனவளாய் விழி தாழ்த்திக் கொண்டாள்..

“உன்னோட தனியாய் பேசனும்..” நிதானமாகச் சொன்னான் அர்ஜீன்...

“என்னது...” அதிர்ச்சியை விழிகளில் தேக்கி வைத்துக் கொண்டு பதட்டத்துடன் கேட்டாள் காவ்யா...

“நான் சொன்னது உன் தலையில் ஏறலையா..?” அவளை உறுத்துப் பார்த்தான் அர்ஜீன்...

“தனியாச் சந்திக்கல்லாம் நான் வர மாட்டேன்..” பிடிவாதமாக மறுத்தாள் காவ்யா...

“அப்படின்னா உன்னைத் தூக்கிக்கிட்டு போக வேண்டியதுதான்...” அர்ஜீன் அலட்டிக் கொள்ளாமல் சொன்னதும்..

“என்னது..” என்று மீண்டும் அதிர்ந்தாள் காவ்யா...

“எனக்கு வேற வழியில்லடி.. நாளைக்குப் போனா.. நான் திரும்பி வர இரண்டு.. மூன்று மாதமாகும்.. அது உன் மரமண்டைக்கு உறைக்குதா.. இல்லையா...?” கடினமான குரலில் வினவினான் அர்ஜீன்...

“அது.. அது.. வந்து..” காவ்யா தடுமாறினாள்..

பிரிவை நினைவுபடுத்தியதும் அவளிடம் மறுப்பில்லாமல் போனதை கண்டு கொண்ட அர்ஜீனின் கண்கள் மின்னின.. அவன் கனிவுடன் காவ்யாவைப் பார்த்தான்...

“உனக்காகத்தான் நான் இங்கே வர்றேன்.. புரிஞ்சுக்க.. உன்னைப் பார்க்கனும்.. உன் கூடப் பேசனும்.. என்கிறதுக்காகத்தான் நான் மதுரைக்கு வந்து போகிறேன்.. மத்தபடி இந்தக் கடையெல்லாம் எனக்கு ஒரு கணக்கே இல்லை காவ்யா.. ஐ லவ் யு.. அதுக்காக மட்டுமே நான் இங்கே ஓடி வர்றேன்.. எனக்கு நீ வேணும்.. ஐ நீட் யு...” அவன் குரல் தாபத்தில் குழைந்தது...

‘திரும்பவும் இதையே சொல்கிறான்..’ அவள் மனம் அதிர்ந்தது...

‘சும்மா.. சும்மா.. நீ வேணும்.. நீ வேணும்ன்னு சொன்னா.. எதைன்னு நான் மனசில எடுத்துக்கிறது...’

அவள் மௌனமாக விரல்களை ஆராய ஆரம்பித்தாள்.. அவன் புருவங்கள் முடிச்சிட்டன...

“இங்கே பார்...” அவன் அதட்டினான்...

“என்ன..?” அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்...

அவன் விழிகளில் தெரிந்த உரிமை கலந்த கோபம் அவளைத் தாலாட்டி ஆகர்ஷித்தது.. அவனின் அந்த ஆளுமையில் அவள் கிறங்கிப் போனாள்.. அந்தக் கிறக்கத்தை அவளின் விழிஉணர்த்த.. அவனது கோபம் குறைந்தது...

“உன்கூட நான் பேசியே ஆகனும்...”

“பேசுங்க..”

“இங்கேயா..?”

கூர்மையான பார்வையுடன் அவன் கேட்க.. அதன் அர்த்தத்தில் அவள் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. உதட்டைக் கடித்தபடி தலை குனிந்தாள்.. அவளின் வெட்கிச் சிவந்த முகத்தை தொட்டு விடத்துடித்த மனத்தை கடிவாளம் போட்டு அடக்கியபடி அவன் தாழ்ந்த குரலில் சொன்னான்..

“இங்கேதான் பேசனும்னு நீ அடம்பிடிச்சா நான் ரெடி.. எனக்கு ஒன்னுமில்ல.. உன்கூடப் பேசும்போது உன்னைத் தொட்டுப் பேசாமல் தள்ளி நிற்க என்னால முடியாது.. இப்ப

கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே என்ன ஆச்சுன்னு நினைச்சுப் பாரு.. கந்தசாமியிடம் அகப்படாம நாம தப்பினது அதிசயம்தான்.. அதைப் போல ஆகிவிட வேணாம்ன்னு பார்க்கிறேன்.. அதனால என்னன்னு நீ சொன்னா எனக்கு ஓகேதான்.. நான் ஈஸியா சொல்லிட்டுப் போயிருவேன்.. இவ நான் காதலிக்கிற பொண்ணுன்னு…” இலகுவாக அவன் பேசப்பேச..

“உங்களுக்கு எல்லாமே ஈஸிதான்..” என்று சீறினாள் காவ்யா…

“உனக்கு கஷ்டம்ங்கிறயா…?” அமர்த்தலான குரலில் அவன் கேட்டான்…

“ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்…” அவள் படபடத்தாள்…

“எது உனக்குக் கஷ்டம் காவ்யா..? என்னைக் காதலிக்கிறதா..?” அவன் ஆழ்ந்த குரலில் கேட்டதும்.. அவள் வாயடைத்துப் போனாள்…

அவனைக் காதலிப்பது அவளுக்கு கஷ்டமான ஒன்றா..? பேச முடியாமல் திகைத்து விழித்தவளிடம் மிருதுவான குரலில் சொன்னான் அர்ஜீன்…

“நாம பேச வேண்டியது நிறைய இருக்கு.. அதை இங்கே பேச முடியாது.. ஸோ.. நாம தனியா மீட் பண்ணியே ஆகனும்…”

“நான் பாவனா கூடக்கூட தனியாய் எங்கேயும் போனதில்லை...”

“என்கூட வா..”

“எங்கே வர்றது..?”

“புரியலை...”

“தனியான இடம்ன்னு மதுரையில எதுவுமில்லை.. நீங்க தேடினாலும் அது கிடைக்காது.. இது சென்னையில்லை.. மதுரை.. எல்லா இடத்திலும் ஜன நடமாட்டம் இருக்கிற உயிர்ப்பான ஊர்..”

“உன் ஊரோட பெருமை போதும்.. மதுரையைப் பத்தி நிறைய நீ பேசி நானும் கேட்டாச்சு.. இனி நம்மளப் பத்திப் பேசலாம் வா...”

“அது தான் எங்கே...?”

“அதை நான் பார்த்துக்கிறேன்.. மெயின் கோட்டில் காரில் வெயிட் பண்றேன்.. நீ அங்கே வந்துவிடு...”

“வந்து..?”

“காரில் ஏறிக்க.. தனிமையான இடத்துக்குப் போய் பேசலாம்...”

“நான் வரமாட்டேன்...”

“நீ வருகிற...”

“என்னால இப்படியெல்லாம் வரமுடியாது..”

“யார்கூட வர்ற..? என்கூடத்தானே...?”

அவனின் அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல அவளால் முடியவில்லை.. பழக்கமில்லாத செய்கையைச் செய்ய அவள் தயங்கினாள் அந்தத் தயக்கத்தை அவன் உடைக்க ஆரம்பித்தான்...

“நல்லா நினைப்பில வைச்சுக்க.. நாளைக்கு நான் கிளம்பியாகனும்....”

“திரும்பவும் எப்ப வருவீங்க..?” ஏக்கத்துடன் அவள் கேட்டாள்...

“அது நீ சொல்கிற பதிலைப் பொறுத்திருக்கு...”

“புரியலை..”

“உன்னைத் தொட்டு முத்தம் கொடுத்து ஐ லவ் யு சொல்லியிருக்கேன்.. ஒரு தரமில்லை.. இரண்டு தரம்.. இத்தனைக்கும் மேலே நீ என்கூட வர தயங்கினா... நான் உன்னிடம் காதல் சொன்னதில் அர்த்தமேயில்லை காவ்யா..”

“ப்ளீஸ்.. எனக்கு இதெல்லாம் பழக்கமில்ல...”

அவளின் கெஞ்சுதலில் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.. அவனிடம் துடுக்குத்தனமாகப் பேசி சண்டை

போடும் வாயாடிப் பெண்ணா இவள் என்று அவன் ஆச்சரியமாகிப் போனான்..

அவளின் பெண்மை மிளிர்ந்த இந்த பரிணாமத்தில் அவள் மீதான அவனின் காதல் அதிகரித்தது...

“நானும் பழகிப் பார்க்கலாம்.. வான்னு கூப்பிடலை.. நாம பேச வேண்டியது நிறைய இருக்கு.. அதைப் பேசியாகனும்.. வான்னு கூப்பிடறேன்...”

“அதுக்காக ஒளிஞ்சு.. மறைஞ்சு.. திருட்டுத்தனமா போய் பேசனுமா..?”

“காதலிக்கிறவங்க பத்துப் பேரின் மத்தியில நின்னுதான் காதலைப் பத்திப் பேசுவாங்களா..? காதல்ன்னாலே அதில ஒளிவு மறைவு வந்து விடும் காவ்யா...”

அவன் சொன்னதில் இருந்த உண்மையை உணர்ந்து கொண்டவளாய் அவள் ஒரு நிமிடம் மௌனமாக யோசித்தாள்.. அவளை யோசிக்க விட்டு அவன் அமைதி காத்தான்.. ஒரு முடிவுக்கு வந்தவளாக நிமிர்ந்தாள்...

“வேலை நேரத்தில நீங்க கடையை விட்டுப் போகலாம்.. நான் என்ன காரணம் சொல்லி வெளியேற முடியும்..? வீட்டுக்குப் போகிறதா சொல்ல முடியாது.. என் வண்டி இங்கே நிக்குது.. அதை எடுக்காம நான் கிளம்ப

முடியாது.. அதோட அண்ணனுக்கு தெரிஞ்சவங்க இங்கே வேலை செய்கிறாங்க.. நான் வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டு வீட்டுக்குப் போகாம இருந்தா அது பெரிய விபரீதத்தில கொண்டு வந்து விட்டிரும்.. சொல்லுங்க.. நான் எந்தக் காரணத்தைச் சொல்லி வெளியே வருகிறது..?"

அவள் கேட்ட கேள்விகளில் அயர்ந்து போனான் அர்ஜீன்...

## 49

*உன் கட்டுக்காவலை உடைத்து...*
*உனைச் சிறையெடுக்க ஆசைகொண்டேன்..*

**அ**வன் காதலிக்கும் பெண் அவனைச் சந்திக்க வருவதில் இத்தனை இடர்பாடுகள் இருக்கின்றன என்பதை அன்றுதான் உணர்ந்தான் அர்ஜீன்..

அவள் பட்டப்படிப்பை படித்திருந்தாள்.. வீட்டு வாசலைத் தாண்டி வெளியுலகில் வேலை செய்ய வந்திருந்தாள்.. ஆனாலும்.. அவளைச் சுற்றி ஓர் கண்காணிப்பு வளையம் இருந்தது...

இப்படிப்பட்ட கட்டுக்காவலுடன் இருப்பவளை எப்படி வெளியே அழைத்துச் செல்வது என்று யோசித்தான் அர்ஜீன்.. அவனறிந்த பெண்களெல்லாம் சுதந்திரமாக வெளியே சென்று வருபவர்கள்.. இது போன்ற காவல் வளையத்துடன் வளைய வரும் பெண்ணை அதற்கு முன்பு அவன் சந்தித்ததே இல்லை...

அவன் எதுவும் பேசாமல் எழுந்தான்.. வெளியே போய் விட்டான்...

‘இவ்வளவுதானா..?’ காவ்யா ஏமாற்றமாக உணர்ந்தாள்...

‘ம்ஹீம்.. சென்னையில பிறந்து வளர்ந்தவன்.. இப்படியாப்பட்ட பொண்ணக் காதலிச்சு வைச்சுட்டோ-மேன்னு கவலப்பட்டு வெளியே போயிட்டான் போல இருக்கு.. இதுக்கே இப்படின்னா எங்க சொந்த பந்தத்து அருவா மீசையையும்.. அருவாளையும் பாத்தா என்னத்தைச் சொல்வானோ...’

இது வேலைக்கு ஆகாது என்று ஒதுக்க முடியாமல் அவன் பதித்த முத்தம்.. முத்திரையாய் மனதில் உறைந்திருக்க.. சோர்வுடன் கீ போர்டைத் தட்டிக் கொண்டிருந்தாள் காவ்யா...

“காவ்யா...” இளங்கோ வந்தான்...

“என்ன இளங்கோ..?” காவ்யா நிமிர்ந்து பார்த்தாள்...

“உங்களை பேங்க் வரைக்கும் போயிட்டு வரச் சொன்னாரு..”

“யாரு..?”

“முதலாளி...”

‘வழி கண்டு பிடித்துவிட்டான்..’ கண்டு கொண்டாள் காவ்யா...

“எதுக்காம்..?”

“பேலன்ஸ் செக் பண்ணனுமாம்.. முதலாளி கொடுத்த செக் பாஸாகலையாம்.. என்ன விவரம்ன்னு விசாரிச்சுட்டு.. பேலன்ஸ் ஷீட்டை பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுக்கச் சொல்லி வாங்கிக்கிட்டு வருவீங்களாம்...”

“எப்பச் சொன்னாரு...?”

“இப்பத்தான்...”

“என்கிட்டச் சொல்லலையே இளங்கோ...”

“அவரு காருக்குள்ள ஏறினப்பபதான் போன் வந்துச்சு காவ்யா.. அப்ப நான் வாசலிலதான் நின்னுக்கிட்டு இருந்தேன்... செக் பாஸாகலையான்னு கேட்டுட்டு.. என் பக்கமா திரும்பி காவ்யாவை பேங்குக்கு போகச் சொல்லுங்க இளங்கோன்னு சொன்னாரு...”

முதலாளி அவனிடம் மதித்து நான்கு வார்த்தைகள் பேசிவிட்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சியை இளங்கோவின் கண்கள் பிரதிபலித்தன...

'இவன் கில்லாடி...' மனதுக்குள் செல்லமாக சிலாகித்துக் கொண்டாள் காவ்யா...

"ஆட்டோவில போயிட்டு வரச் சொன்னாரு காவ்யா.."

வண்டியை கடையிலேயே விட்டுவிட்டுப் போக காரணத்தை உண்டு பண்ணியிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட காவ்யா...

"ஏனாம்..?" என்று அறியாதவளைப் போலக் கேட்டாள்...

"பெட்ரோல் செலவாகும்ன்னு நினைச்சிருக்கலாம்.. கடைவேலையா வெளியே போனா அதுக்கான ஆட்டோக் கூலியைப் போட்டு எடுத்துக்கலாமில்ல.. நாங்கன்னா சைக்கிள்ல போயி வேலய முடிச்சிட்டு ஆட்டோக் கூலியை பைக்குள்ள போட்டுக்குவோம்.. நீங்க அப்படிச் செய்யற ஆளில்ல..."

"என்னவோ ஒன்னு.. இப்ப நான் பேங்குக்கு போயாகனும்..."

"ஆமாங்க.. அந்த மட்டில் இந்த முதலாளி பழைய முதலாளியப் போலக் கஞ்சத்தனமா இல்லாம தாராளம் தண்ணிபட்ட பாடா இருக்காரு..."

“எனக்கொன்னும் அப்படித் தெரியல...”

“என்ன காவ்யா இப்படிச் சொல்லிட்டிங்க.. பழைய முதலாளி.. ஒரு டீயை வாங்கிக் கொடுக்கனும்னாக் கூட மூக்கால அழுவாரு.. இவரு அப்படியா.. காலையிலயும்.. சாயந்திரமும் பஜ்ஜி வடையோட ஏலக்காய் போட்ட டீ வருது.. அதிகப்படியா வேலை செஞ்சா அதுக்குத் தனியா ஓடி போட்டுத் தர்றாரு.. சம்பளத்தக் கூட்டியிருக்காரு.. என் கல்யாணத்துக்கு நேரிலயே வந்தாருன்னா பாருங்களேன்..”

மற்ற எல்லாவற்றையும் விட.. அர்ஜீன் இளங்கோவின் திருமணத்திற்கு நேரே வந்து நின்றதிலயே இளங்கோ மகிழ்ந்து போயிருப்பதை உணர்ந்து கொண்டாள் காவ்யா...

அர்ஜீன் இவனுக்காக அந்தத் திருமணத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதை மட்டும் இவனறிந்தால் என்ன சொல்வானோ என்ற நினைவுடன்..

“அவர் என்னத்தைச் செஞ்சு என்ன செய்ய..? என் தலையில இல்ல பேங்க் வேலையக் கட்டியிருக்காரு..” என்று அலுத்துக் கொள்வதைப் போல முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள் காவ்யா...

“இதை வேலைன்னு ஏன் நினைக்கறிங்க காவ்யா.. இத்தனை பேரு வேலை செய்கிற கடையில உங்களை நம்பி.. இம்மாம் பெரிய பொறுப்ப அவரு ஒப்படைச்-

சிருக்காரேன்னு சந்தோசப்படுங்க..” ஆறுதல் சொன்னான் இளங்கோ..

காவ்யா கைப்பையுடன் எழுந்தாள்.. பாவனாவின் கண்களில் பட்டுவிடாமல் வெளியில் வந்தாள்...

“ஆட்டோ பிடிச்சுத் தரவாம்மா...” என்ற கந்தசாமியிடம்...

“வேணாம்.. நானே பிடிச்சுக்கறேன்..” என்று மறுத்துவிட்டு நடந்தாள்..

கந்தசாமி திரும்பிய மறுகணம் குறுக்குச் சந்தில் திரும்பி மறைந்தவளுக்கு.. முதல் முறையாக ஏமாற்ற ஆரம்பித்திருக்கும் குற்ற உணர்வு மனதில் எழுந்தது..

மெயின் ரோட்டில் அர்ஜீனின் கார் தெரிந்தது.. விரைந்து நடந்து அவன் காரில் ஏறிக் கொண்டவளுக்கு யாரேனும் பார்த்திருப்பார்களோ என்ற அச்சம் வந்ததும்.. திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.. அர்ஜீன் காரைக் கிளப்பினான்.. வேகமெடுத்த கார் பேங்கிற்கு சற்றுத் தொலைவில் போய் நின்றது...

“என்ன..?” காவ்யா திகைத்து விழித்தாள்...

“செய்கிறதை ஒழுங்காச் செய்யனும்.. நீ வேனில் அழகர் கோவிலுக்கு வந்ததை நீயும் சொல்லலை.. பாவனாவும் சொல்லலை.. பட் உங்க அண்ணனுக்கு

விசயம் தெரிஞ்சிருச்சு... இப்பவும் அதுபோல உன் அண்ணன் செக் பண்ணினாலும் பண்ணலாம்.. நீ பேங்குக்குள்ள போய் பேலன்ஸை வெரிஃபை பண்ணிட்டு பேலன்ஸ் ஸ்டேட்மென்டை வாங்கிட்டு வந்துரு...”

“தெளிவான பிளான்தான்..” எரிச்சலுடன் காரை விட்டு இறங்கிய காவ்யா.. சுற்று முற்றும் பார்த்தபடி பேங்குக்குள் சென்றாள்...

அவளின் முகத்தில் தெரிந்த எரிச்சலைக் கவனித்த அர்ஜீனுக்கு இவளுக்கு தொந்தரவு கொடுக்கிறோமே என்றிருந்தது...

ஆனாலும்.. அந்தத் தொந்தரவைக் கொடுக்காமலிருக்க அவனால் முடியாதே.. அவன்தான் அவளைக் காதலித்து தொலைத்து விட்டானே.. அவளோடு தனித்துப் பேச இது போன்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியாக வேண்டுமென்றால்.... அவன் அதைச் செய்துதானே ஆகவேண்டும்..?

போன வேகத்தில் திரும்பி வந்தாள் காவ்யா வேலை முடிந்து விட்ட திருப்தி அவள் முகத்தில் நிலவியது.. அவளுக்காக கார் கதவைத் திறந்து விட்டான் அர்ஜீன்.. இந்தமுறை இயல்பாக ஏறியவள்...

“நீங்க ஏற்கனெவே போனில் சொல்லியிருந்தீங்களா..?” என்று கேட்டாள்...

“ம்ம்ம்.. எந்த ஏற்பாடும் பண்ணாம உன்னை பேங்குக்குள்ள அனுப்பினேன்னா நினைச்ச...?”

“ஊம்... நேரமாகுமோன்னு பயந்தேன்... நல்ல வேளையா அவங்க பிரிண்ட்அவுட் எடுத்து ரெடியா வைச்சிருந்தாங்க..”

பெரிதாக எதையோ சாதித்து விட்டவளைப் போலப் பேசியவளிடம் “உனக்கு பேங்குக்குப் போகிறதுன்னா பயமா..?” என்று கேட்டான் அர்ஜீன்...

“ம்ம்ம்..” அவள் முகம் சிவக்க ஒப்புக் கொண்டாள்...

“ஏன்..?”

“தெரியலை...”

“இதையெல்லாம் பழகிக்க வேணாமா..?”

“இதைப் பழகி எனக்கென்ன ஆகப் போகுது..? உப்புக்கு ஆகப் போகுதா..? இல்ல.. புளிக்கு ஆகப் போகுதா..?”

அவள் சிடுசிடுத்தாள்.. பழக்கமில்லாத ஒன்றை முதன்முதலாக செய்யத் துணிந்திருக்கும் குறுகுறுப்பிலும்.. குற்ற உணர்விலும் அந்த சிடுசிடுப்பு வருகின்றது என்பதை அர்ஜீனால் புரிந்து கொள்ள முடிந்தது...

லேசாக கண்கள் கலங்கியிருக்க... முகச் சுணக்கத்துடன் அமர்ந்திருந்தவளிடம் அதற்கு மேலும்

வழக்கடிக்காமல்.. காரை விமான நிலையத்துக்கு செல்லும் வழியில் செழுத்தினான்.. மெல்ல.. மெல்ல.. மதுரையின் சந்தடி மிகுந்த இடங்கள் மறைந்து.. இருபுறமும் சின்னச் சின்ன செடிகள் அணி வகுத்திருக்கும் சாலை வந்தது...

"நாம தேடிய தனிமை கிடைச்சிருச்சு.." என்றான் அர்ஜீன்...

விமான நிலையத்தைத் தாண்டி ஒரு மரத்தடியில் கார் நின்றது.. காவ்யா பதட்டத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்..

"என்ன..?" அர்ஜீன் விசாரித்தான்...

"இங்கேதான் பிறந்து வளர்ந்தேன்னு பேரு.. ஆனா இந்த இடத்துக்கெல்லாம் நான் வந்ததே இல்லை.." என்றாள் காவ்யா..

"இது ஏர்போர்ட்.. இங்கே வரவேண்டிய வேலை உனக்கு இருந்திருக்காது..."

அர்ஜீன் என்னவோ யதார்த்தமாகத்தான் இந்த வார்த்தைகளைச் சொன்னான்.. அதைக் கேட்ட காவ்யாவின் முகம்தான் மாறிவிட்டது...

"சொல்லிக்காட்டறிங்களா..?" என்று கேட்டாள்...

"எதை..?" அர்ஜீனுக்கு விளங்கவில்லை..

"நாங்க பிளேனில போகிற அளவுக்கு வசதியும் வாய்ப்பும் இல்லாதவங்கன்னு சொல்லிக்காட்டறிங்களா..?

பிளேனில் போகிற வேலை எங்களுக்குத்தான் இல்லை.. என் அண்ணனுக்கு இருக்கு.. அது அடிக்கடி பிளேனில பறக்கிற ஆளுதான்.. உங்களப் போல நாடுவிட்டு நாடு பறக்காட்டியும்.. ஊரு விட்டு ஊரு பறக்கிற ஆபிசர்தான் அது...” காவ்யா படபடத்தாள்...

“ஏய்ய்.. இப்ப என்ன சொல்லிட்டேன்னு இப்படிப் பேசற...?”

“ஒன்னுமே சொல்லலியா..? எனக்கு இங்கு வரவேண்டிய வேல இல்லதான்.. உங்க லெவலுக்கு நாங்க வர முடியாதுதான்.. அதெல்லாம் உங்களுக்குத் தெரிஞ்ச விசயம்தானே..? அதைச் சொல்லிக்காட்டத்தான் என்ன இங்கே அழைச்சுக்கிட்டு வந்தீங்களா..?”

மூக்கு நுனி சிவக்க.. வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு கிளம்பியவளை இமைக்காமல் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான் அர்ஜீன்... அவன் பார்வையில் அவளின் பேச்சு நின்றது.. உதட்டைக் கடித்துக் கொண்டு பார்வையை தழைத்தாள் அவள்...

“இப்ப சண்டை போடத்தான் இங்கே வந்தோமா..?” அர்ஜீன் நிதானமாக கேட்டான்...

“இத நான் கேட்கனும்.. தனியாப் பேசனும் வா.. தனியாப் பேசனும் வான்னு சொல்லிட்டு.. இங்கே வந்தவுடனே பிளேனு பெருமையை அள்ளி விட்டது

யாரு..?” புருவங்களை உயர்த்தி மிதப்பாக கேட்டாள் காவ்யா..

“ஏண்டி.. நீ அடங்கவே மாட்டியா..?”

“என்னமோ அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில அடங்காத காளையை அடக்க வந்தவரப் போல பேசி வைக்கறிங்க.. என்னை அடங்க வைக்கத்தான் தனியாத் தள்ளிக்கிட்டு வந்தீங்களா..?”

“தள்ளிக்கிட்டு வந்தேனா..?”

அர்ஜீனுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அந்த சுட்டித் தனமான பெண்ணின் வாயாடித்தனத்தை வெகுவாக அவன் ரசித்தான்.. அவளின் சுழித்த இதழ்களை விரலால் அவன் சுண்டிவிட்டபோது.. அவள் முகம் சிவந்து விட்டது...

“இந்தச் சேட்டையை எல்லாம் மூட்டை கட்டி வைச்சுட்டு பேசறதுன்னா நான் காருக்குள்ள இருக்கேன்.. இல்ல.. வில்லங்கமா நீங்க விளயாடிக்கிட்டே இருப்பீங்கன்னா.. நான் காரை விட்டு இறங்கி கடையைப் பாத்து நடயக் கட்டிருவேன்...”

“இப்ப என்னடி செஞ்சிட்டேன்.. இப்படி உன்னைத் தொட்டேனா..” அர்ஜீன் அவள் தோள்களைத் தொட்டான்..

“இப்படி உன் கன்னத்தை தடவினேனா..?” அர்ஜீனின் கைகள் உயர்ந்து அவள் கன்னம் தொட்டுத் தடவின...

“இப்படி முத்தம் கொடுத்தேனா..?”

அவள் கன்னத்தில் அவன் முத்தமிட்டான்.. காவ்யா உடல் நடுங்க விலக முடியாமல் அவன் தோள் சாய்ந்தாள்.. அவளின் தோளின் மீது சுவாதீனமாக படிந்த அவனது கை அவளை அருகே இழுத்து இறுக்கிக் கொண்டது...

“காவ்யா...” மென்மையாக அழைத்தான்...

“ம்ம்ம்...” கண்மூடி அவள் முணுமுணுத்தாள்...

“ஐ லவ் யு காவ்யா... எனக்கு நீ வேணும்டி...”

அவன் கிறக்கத்துடன் அவள் காதோரமாக முணுமுணுக்க.. அவள் சட்டென்று அவன் கைகளை விலக்கி விலகி அமர்ந்தாள்.. அவள் முகம் இறுகியிருந்தது..

“ஏண்டி..?” அவன் அதட்டினான்...

“நான் வேணும்னா என்ன அர்த்தம்..? உங்க ஆசைக்கு நான் ஆளில்லை...”

அழுத்தம் திருத்தமாகச் சொன்னவள்.. கன்னத்தில் பளாரென்ற ஒரு அறையை வாங்கினாள்.. சுருசுருவென்ற வலி கன்னத்தில் பரவ.. கன்னத்தை பிடித்தபடி.. அவனைத் திகைப்புடன் பார்த்தாள்...

50

*நானே நீயாக.. நீயே நானாக...*
*நாநிலத்தில் மாறிவிட ஆசைகொண்டேன்...*

**அ**துவரை அவளை யாரும் அடித்ததில்லை...

‘கன்னத்த பேர்த்திருவேன்...’

அன்னபூரணி அடிக்கடி இந்த வார்த்தைகளைப் பிரயோகித்து அவளை மிரட்டுவதுண்டு...

அதைச் சொன்னவள் ஒர்நாளும் அதைச் செய்ததே இல்லை... சிவதாணு... வேறு ரகம்... திருக்குறளைச் சொல்லிக் கொடுத்து நோகடிப்பாரே தவிர... வார்த்தைகளால் கடிந்தோ... இல்லை... முதுகில் ஒரு அடிபோட்டோ நோகடிக்க மாட்டார்...

கண்ணதாசன் பாசமலரை வளர்ப்பவன்.. மலர்களைப் போல் தங்கை உறங்குகிறாள் என்று பாட்டுப் பாடும் ரகம்.. அவன் செல்லமாகக் கூடத் தங்கையின் தலையில் தட்டியதில்லை...

பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில் காவ்யா எந்த ஆசிரியையிடமும் மாட்டிக் கொண்டு விழித்ததில்லை..

அவர்களின் காதுகளுக்கு எட்டாத வகையிலேயே அத்தனை லூட்டிகளையும் அடித்து முடித்து விடுவாள்.. அதனால் ஆசிரியக் குலத்திடமும் அவள் அடி வாங்கியதில்லை...

அப்படிப்பட்ட காவ்யாவை ஓங்கி ஒரு அறைவிட்டு.. காதுகளுக்குள் ‘நொய்’ என்று வண்டு பறக்கும் சப்தத்தை உருவாக்கி விட்டிருந்தான் அர்ஜீன்...

‘இவன் எப்படி என்கிட்ட கை நீட்டலாம்...’ அவள் வெகுண்டபோது...

“எப்படிடீ இப்படியொரு வார்த்தைய நீ கேட்கலாம்..” என்று அவன் வெகுண்டான்...

“யாரு கேட்டது..? நீங்களா.. இல்ல நானா..?”

“கொலைவெறியைக் கிளப்பாத.. சொல்லிட்டேன்.. என் ஆசைக்கு நீ ஆளில்லன்னா என்ன அர்த்தம்...?”

“அதையேதான் நானும் கேட்கிறேன்... நான் வேணும்னா என்ன அர்த்தம்..?”

“நீ எனக்கு வேணும்ன்னுதாண்டி அர்த்தம்.. அந்த ‘நீ’ என்கிறது உன் மனசுடி.. அதுக்கப்புறம்தான் மத்ததெல்லாம்...”

அர்ஜீனின் கோபத்தில் காவ்யாவின் மனதிலிருந்த கலக்கம் விலகி ஓடியது...

அவன் அவள் மனதைத்தான் வேண்டும் என்று கேட்டிருக்கிறான் என்பதில் அவள் மனதுக்குள் மழைச்சாரல் அடித்தது..

அவள் முகம் கன்றிச் சிவந்ததிலிருந்து அவள் மன நிலையை யூகித்தவனின் கோபமும் மெல்ல வடிந்தது.. அவள் கன்னம் தொட்டுத் திருப்பியவன் அடிபட்ட இடத்தை வருடிக் கொடுத்தான்...

"ஐ ஆம் ஸாரி.." வருத்தத்துடன் சொன்னான்...

"இதுக்கு நான் என்ன சொல்லனும்..? அதனால் என்ன பரவாயில்லன்னு சொல்லனுமா..?" வெடுக்கென்று அவள் கேட்டாள்...

"ஹப்பா.. என் பழைய காவ்யா வந்திட்டா.. உன்னை யாருடி அப்படிச் சொல்லச் சொன்னது.. அதுக்குப் பதிலா வேற ஒன்னைச் சொல்லேன்..." அவன் கொஞ்சினான்...

"என்னவாம்..?" அவள் சந்தேகமாகப் பார்த்தாள்...

"நீ திருந்தவே மாட்டியாடி..? உன் புத்தி உருப்படியாவே யோசிக்காதா..?" அலுத்துக் கொண்டான் அர்ஜீன்...

"ரொம்பத்தான் அலுத்துக்க வேணாம்.. என்னன்னு விளங்கச் சொன்னாத்தான தெரியும்..? அத விட்டுட்டு மொட்டைக் காத்தான் குட்டையில விழுந்துட்டான்னு பேசிவைச்சா நான் என்னன்னு நினைக்கிறது..?"

"அதுக்காக வேற மாதிரி நினைப்பியா..?"

"நான் எந்த மாதிரி நினைச்சேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"இதையெல்லாம் சொல்லு.. நான் கேட்கிறத மட்டும் சொல்லித் தொலைத்திராதே..."

"என்னத்தைச் சொல்லனும்..?"

"ஏண்டி.. வார்த்தைக்கு வார்த்தை நான் உன்னைப் பார்த்து ஐ லவ் யு சொல்றேனில்ல... நீ ஒரு தடவையாவது அதைத் திருப்பிச் சொல்லனுமா வேண்டாமா..?"

அவன் நேரடியாகக் கேட்ட விதத்தில் அவளுக்கு லஜ்ஜையாகி விட்டது.. உதட்டைக் கடித்துக் கொண்டு விரல்களை எண்ணத் தொடங்கினாள்.. அர்ஜீன் அவள் முகத்தை நிமிர்த்தினான்.. விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.. ஊடுருவும் அந்தப் பார்வையில் அவள் சிலிர்த்துப் போனாள்...

"சொல்லு காவ்யா.. என்னைக் காதலிக்கிறயா இல்லையா..?"

"காதலிக்காமலா.. இப்படி யாருக்கும் தெரியாம உங்ககூட ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறத்தில காருக்குள்ளே உக்காந்து கன்னத்தில அடியை வாங்கறேன்..?" அவள் விம்மினாள்...

“காவ்யா...”

அவளை மார்போடு அணைத்துக் கொண்டான் அவன்... அவளுக்கும் அவனுக்குமான உணர்வு போராட்டத்திற்கு ஒரு முடிவு கிடைத்து விட்டதை அவர்கள் இருவருமே உணர்ந்தார்கள்.. திரும்ப முடியாத ஒர்வழிப் பாதையில் தான் அடியெடுத்து வைத்து விட்டதை உணர்ந்தாள் காவ்யா.. யாராலும் வெல்ல முடியாத அந்த சூட்டிகைக்காரியின் மனதை தான் வென்று விட்டதை கர்வத்துடன் உணர்ந்தான் அர்ஜீன்...

கண்ணமூச்சி விளையாட்டின் இறுதியில் அவர்கள் இருவருமே ஒருவரையொருவர் கண்டு கொண்டார்கள்..

அவள் சிந்திய கண்ணீர் துளிகளால் நனைந்த சட்டையினைத் தொட்டுப் பார்த்துக் கொண்ட அர்ஜீனுக்கு.. அந்தக் கண்ணீர்துளிகள் ஒவ்வொன்றும் வைரத்துளிகள் என்று தோன்றியது...

அவை யாராலும் அசைக்க முடியாத ஒரு அழுத்தக் காரியின் மென்மையான மனம் வெளிப்படுத்திய காதலின் வெளிப்பாடு..

“த்ச்சு.. அழாதேடி..” அவள் கன்னம் துடைத்து மிருதுவாக அவளை அதட்டினான்..

“ம்ம்ம்..” முணுமுணுத்தபடி.. அவன் சட்டையில் முகத்தைத் தேய்த்துக் கொண்டாள் அவள்..

அவள் நெற்றியிலிருந்த சிறு குங்குமத்தீற்று.. அவன் சட்டையில் தீற்றி அப்பிக் கொண்டது.. விலையுயர்ந்த அந்தச் சட்டையைப் பார்த்துக் கொண்டவன்..

“இதை வாஷ் பண்ண மனசு வராதுடி..” என்று வாத்சல்யத்துடன் சொன்னான்...

அவன் காதலில் மனம் கசிந்துருகிப் போனாள் காவ்யா.. இவனையா நான் சந்தேகப்பட்டேன் என்று மனதுக்குள் தன்னைத் தானே நொந்து கொண்டாள்...

“ஏனாம்..?” வெட்கத்துடன் கேட்டாள்..

“உனக்குத் தெரியாதா..?” உல்லாசமாய் அவன் சிரித்தான்...

அந்தச் சிரிப்பில் அவள் மனம் சிக்கித் தவித்தது.. அவன் முடியில் கைவிட்டு கலைக்கும் ஆசை மனதில் தோன்ற நினைத்ததை அவள் செய்தாள்...

“ஏய்ய்ய்...”

அவள் கைக்குள் விருப்பமாக தலையைக் கொடுத்தவன் கிறங்கிப் போனான்.. அவள் முகத்தில் பொங்கி வழிந்த காதலில் மயங்கிப் போனான்..

“உனக்கு என்னைத் தொடக்கூட தோணியிருக்கே..” அவன் கை விரல்களில் முத்தமிட்டான்...

காவ்யா விரலால் அவன் நெற்றியில் கோடிழுத்தாள்.. மூக்கை நிரடி.. அவன் இதழ்களை அவள் வருடியபோது.. அவள் உள்ளங்கையை விரித்து அதில் முத்தம் பதித்தவன்..

"கணக்கு வைச்சுக்க.." என்று சொன்னான்..

"கணக்கா..?" அவள் விழித்தாள்...

"கணக்குத்தான்... அக்கவுண்டை கரெக்டா மெயின்டெயின் பண்ணனுமில்ல..?"

"உங்க முதலாளி புத்தியை இங்கே வந்தும் காட்டனுமா..? எந்த அக்கவுண்டை மெயிண்டெயின் பண்ணனுமாம்..?"

"இதுவரைக்கும் நான் கொடுத்த முத்தங்களோட எண்ணிக்கையை உன் மனசில குறிச்சு வைச்சுக்க.. இதையெல்லாம் நான் உனக்கு கடனாத்தான் கொடுக்கிறேன்.. கட்டாயமா நீ எனக்குத் திருப்பித் தந்து விடனும்.." அவன் குறுஞ்சிரிப்புடன் சொன்னான்..

"என்னது.." அவள் விழித்தாள்..

"ஆமாம்டி... எதிலயும் ஒரு கணக்கு இருக்கனுமில்ல.." அவன் கண்சிமிட்டி நியாயம் கேட்டதில் அவள் முகம் சிவந்து போனாள்..

"நீங்கதான் கணக்குப் பண்றதில மன்னனாச்சே..."

“பின்னே.. இல்லையா..? நான் யாரு..? இந்த அல்லியோட மனசை ஜெயித்த அர்ஜீனனாச்சே...”

“அது நிஜம்தான்..” காவ்யா அவன் சட்டையின் பொத்தான்களைப் பிய்த்தாள்..

அவள் எடுத்துக் கொண்ட உரிமையில் அவன் மனம் கிளர்ந்தது.. அவனிடம் இயல்பாக அவள் சரஸமாடியதில் அவன் கிறங்கிப் போனான்.. அவளை இழுத்து அணைத்துக் கொண்டபோது அவள் மறுப்புச் சொல்லவில்லை.. அவள் மேல் அவன் படர்ந்த போது.. இயல்பாக அவளின் கைகள் அவன் கழுத்தை வளைத்துக் கொண்டன..

காவ்யாவின் கூந்தலில் இருந்து வந்த மல்லிகையின் நறுமணமும்.. சீயக்காயின் நறுமணமும் சேர்ந்த கலவை அவன் மனதை மயக்கியது.. அவன் தொட்டதில் கிறங்கிப் போனவளாக அவள் கண்மூடித் தவித்ததில் அவனுக்குள் காதல் பெருகியது.. அவளின் மென்மையான மேனியின் குழைவை அறிந்தவனுக்கு.. அவளை ஆண்டு விடும் தாகம் தோன்றியது.. அவன் தாபத்துடன் அவள் உதடுகளில் முத்தம் பதித்தான்.. அவள் உடலில் தோன்றிய நடுக்கத்தில் அவளிடமிருந்து விலகி அமர்ந்தான்...

காவ்யாவின் கைவிரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.. அவன் கனிவுடன் அவள்

கைவிரல்களுடன் தன் கைவிரல்களைப் பிணைத்து அவற்றில் முத்தம் பதித்தான்...

"கடனைக் கூட்டிக்கிட்டே போகாதீங்க.." அவள் சிணுங்கினாள்..

"அவ்வளவு ரோசக்காரியா இருந்தா நான் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடு.." அவன் சவால் விட்டான்...

"ச்சீய்..." அவள் கன்னம் சிவந்து அவன் கையில் கிள்ளினாள்...

"ஹா.. ஹா.." சிரித்தபடி அவளை சொந்தத்துடன் பார்த்தான் அர்ஜீன்...

அவன் பார்வையில் அவள் ரகசியப் புன்னகையை சிந்தினாள்.. அவர்களுக்கிடையே சொல்லில் அடங்காத.. சொல்ல முடியாத உணர்வலைகள் பின்னிப் பிணைந்திருந்தன...

"காவ்யா..."

"ம்ம்ம்..."

"நாளைக்கு நான் கிளம்பனும்..."

"கடைக்கு வந்துட்டுத்தான போவீங்க.."

"ம்ம்ம்.. உன்னைப் பார்க்காம போவேனா..?"

“எப்பத் திரும்பி வருவீங்க...?”

“குறைந்தது இரண்டு மாதமாவது ஆகலாம்...”

“அவ்வளவு நாளா..?”

காவ்யா மலைத்தாள்.. அதற்கு முன்பும் அவன் இது போல அதிகநாள்கள் வராமல் இருந்திருக்கிறான்.. அப்போது அவளால் அந்தப் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடிந்தது.. இப்போது அதை நினைக்கும் போதே அவளுக்கு நெஞ்சை அடைத்தது...

“எனக்கு மட்டும் உன்னை விட்டுப் பிரிந்திருக்கனும்னு ஆசையா..? வேலைடி...”

“அதுக்காக இத்தனை நாள்கள் பிரிஞ்சிருக்கனுமா..?”

“நீ உம்முன்னு ஒருவார்த்தை சொல்லு.. இப்பவே கோவிலில வைச்சு உன் கழுத்தில தாலியைக் கட்டறேன்.. மேரேஜை ரெஜிஸ்டர் பண்ணிடலாம்.. என்கூட உன்னையும் கூப்பிட்டுக்கிட்டு பறந்துடறேன்.. என்ன சொல்ற...?”

அவன் தீவிரத்துடன் கேட்டான்.. நினைத்ததை முடிக்கும் நிச்சயத்துடன்தான் கேட்டான்.. அவனின் அந்த ஆண்மையில் மெய்சிலிர்த்துப் போனாள் காவ்யா...

“வேணாம்..”

“ஏன்..?”

“எனக்கு வீடு இருக்கு.. அம்மா அப்பா இருக்காங்க.. அண்ணன் இருக்குது...”

“எனக்கு மட்டும் யாருமில்லையா..?”

“உங்களைப் போல வேகமா முடிவெடுக்க என்னால் முடியாது..”

“இதுக்கு என்ன வழி..?”

“முறைப்படி என்னைப் பெண் கேட்டு வாங்க.. அதுதான் வழி...”

“இன்னைக்கே வர்றேன்...”

அவனின் வேகத்தில் அவளுக்கு பெருமைகலந்த சிரிப்பு வந்தது..

“நீங்க மட்டும் தனியா வந்தா என் வீட்டில பெண்தர மாட்டாங்க...”

“பின்னே..?”

“உங்க அப்பா.. அம்மா.. அக்கா.. சொந்த பந்தம்ன்னு.. கும்பலா வந்து இறங்கிப் பெண் கேட்டாத்தான் பொண்ணுக் கொடுக்கலாமா.. இல்ல வேணாமான்னு என் வீட்டில யோசிக்கவே ஆரம்பிப்பாங்க...”

“அதுக்கு நாளாகுமேடி...”

“ஆகட்டும்.. காத்திருக்கேன்...”

“காவ்யா...”

“ஐ லவ் யு...”

“ஏய்ய்...”

“போதும்.. கடனைக் கூட்ட வேணாம்...”

அவன் எதை எதிர்பார்த்து அவளைத் தனிமையில் அழைத்து வந்தானோ.. அதை அவனிடம் அவள் சொல்லிவிட்டாள்..

‘ஐ லவ் யு’ என்ற அந்த மூன்று வார்த்தைகளில் அர்ஜீன் உயிர்த்தெழுந்தான்...

# 51

## *அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டின்.. காளையாக ஆசைகொண்டேன்...*

**வ**ந்தபோது இருந்த விரைவு.. திரும்பும் போது காரில் இல்லை...

அது மெதுவாக சாலையில் ஊர்ந்தது.. இருவருக்குமே திரும்ப மனமில்லை.. அவன் கொடுத்த முத்தத்தில்

அவள் கிறங்கிக் கிளர்ந்து.. அவன் தோளில் சரிந்திருந்தாள்...

அந்த நொடியில் உறைந்து போக அவர்கள் இருவருமே விரும்பினார்கள்.. என்ன பேச.. எப்படிப் பேச என்று தவித்த மனநிலையில் காவ்யாவின் கை தன்னிச்சையாக காரிலிருந்த எப்.எம் ரேடியோவை உயிர்ப்பித்தது...

*“முத்தமோ... மோகமோ...*
*தத்தி வந்த வேகமோ..*
*நித்திரை கொண்டதும்..*
*எத்தனை தோற்றமோ....”*

எல்.ஆர். ஈஸ்வரியின் ஈர்ப்புக்குரலில் அவர்களின் கண்களிரண்டும் சந்தித்துக் கொண்டன.. அர்ஜீனின் விழிகளில் தெரிந்த ரகசிய பாஷையில் காவ்யா கன்னம் சிவந்தாள்.. அவன் தந்த முத்தங்களின் எண்ணிக்கையில் அவளுக்குள் கிளர்ச்சி மிகுந்தது.. அதையுணர்ந்தவனாக அவன் போதையுடன் அவளை நெருங்கினான்...

*“பூவிலே செந்தாமரைப்பூ..*
*போதையில் ஊறுதம்மா..*
*நாவிலே என் தேவையெல்லாம்..*
*நாட்டியம் ஆடுதம்மா...”*

அவன் விழிகள் உணர்த்திய போதையில் அவள் மேனி நடுங்கியது.. ஒரு கையில் ஸ்டியரிங்கை பிடித்திருந்தவனின் மறுகை அவள் தோள் தேடி வளைத்து இழுத்துக் கொண்டது.. அவனின் அந்த அடாவடித்தனமாக செய்கையில் தொனித்த உரிமையில் மனம் நிறைந்தாள் காவ்யா.. அவளின் தோள் தடவிய அவன் கைகளின் ரோமங்களை உணர்ந்தவளுக்கு இனம் புரியாத ஒர் சுகம் உண்டானது.. அவன் கையில் முகம் புதைத்தவளுக்கு.. அப்படியே அவன் பின்னால் போய்விட்டால் தான் என்ன என்று தோன்றியது...

*"உன்னுடனே உறவு கொள்ள*
*பொன்மேனி உண்டானது...*
*என்ன இது.. என்ன இது...*
*எப்போது வண்டாவது..."*

அவளின் மூச்சுக்காற்றில் அவன் கை சிலிர்க்க.. அவன் புதுவிதமான அனுபவத்தை உணர்ந்தான்.. அவன் பெண்களை அறியாதவனல்ல.. ஆனால் இதுபோன்ற ஒர் பெண்ணை அதுவரை அவன் அறிந்ததில்லை.. அவன் பார்த்த பெண்களில் யாரும் அவன் தொட்டவுடன் துடித்துத் தவித்ததில்லை... அவன் கண்களும் கதை பேசியதில்லை.. அவளிடம் அவன் கண்ட இந்த சுகம்

புதிதான ஒன்றாக இருந்தது.. அவன் விழிகளோடு விழிகள் கலந்து அவள் பேசிய போது புதியதோர் உலகத்தில் அவன் இருந்தான்..

*"இதுவரை என் கண்களுடன்*
*எவரும் பேசவில்லை..*
*புதியவள் நீ பார்க்கும்வரை*
*எந்த சுகமும் தெரியவில்லை.."*

பாடல் குழைந்து ஒலித்ததில் இருவரின் மனங்களும் புதியதொரு உலகத்துக்குள் நுழைந்து ஒளிந்து கொண்டன..

*"கட்டழகை தொட்டுவிடு..*
*தட்டாமல் இன்றாவது..*
*தொட்டவுடன் துடிப்பதற்கே..*
*துடியிடை உண்டானது.."*

அவன் காரை நிறுத்தி விட்டு அவளைத் தொட்டு இழுத்து அணைத்து முகம் பார்த்தான்.. அதில் தெரிந்த கலக்கம் கலந்த காதலில் அவன் உள்ளம் நெகிழ்ந்தது.. அவளின் முடிகோதி..

"எதுக்கு பயப்படற..?" என்று வினவினான்...

"எங்க வீட்டில இதை அவ்வளவு சுலபமா ஏத்துக்க மாட்டாங்க..."

“ஏத்துக்க வைக்கலாம்..”

“உங்களைப் போல நாங்க கோடிஸ்வரங்க இல்ல.. ஆனா.. கோபத்தில் உங்கள விட நாங்க குறைஞ்சவங்க இல்ல..”

“நாங்கன்னு பேசினா பல்லைத் தட்டிக் கையில கொடுத்துருவேன்.. இன்னும் நாங்கன்னு உன் வீட்டோட கூட்டுப் போடக்கூடாது.. நாங்கன்னு நீ சொன்னா.. அது நானும்.. நீயும்தான்னு மட்டும் தான் அர்த்தமாகனும்...”

“பேச்செல்லாம் இனிக்கத்தான் செய்யுது...”

“மத்தது இனிக்கலையா..?”

அர்ஜூனின் நாக்கு அவன் உதடுகளைத் தடவியதில் காவ்யாவின் முகம் சிவந்தது.. அவள் நறுக்கென்று அவன் கையைக் கிள்ளினாள்...

“உனக்கு கோபம் வந்தா என் கையில ஒரு கிலோ சதையை பிய்த்தெடுத்திரனும்னு குறிக்கோளை வைச்சிருக்கியா..?”

“ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கிறிங்க...”

“அடேங்கப்பா.. அப்படியே ராணி மங்கம்மாதான்..”

“பயப்படறதப் போல பாவ்லா பண்ணாதீங்க.. உங்களப் பத்தி எனக்குத் தெரியாதா..?”

“என்னத்தைத் தெரிந்து என்ன பிரயோசனம்..? பார்த்த முதல்நாளே உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சுட்டேன்.. அதுக்கு உன்னை ஓகே சொல்ல வைக்கிறதுக்குள்ள ஆறுமாதம் ஓடியே போச்சு..”

“ரொம்பத்தான் அலுத்துக்க வேணாம்.. ஐ லவ் யு சொல்ல வைச்சிட்டு.. டாட்டா காண்பிச்சுட்டு ஓடிப் போகிற ஆள்தான நீங்க..?”

காவ்யாவின் கண்கள் கலங்கிவிட்டன.. அவளின் உணர்ச்சி மிகுதியான ஏக்கத்தில் அர்ஜினுக்கு வெளிநாட்டுப் பயணத்தை ரத்து செய்து விட்டால்தான் என்ன என்று தோன்றிப் போனது..

அதைச் செய்ய முடியாமல் கோடிக்கணக்கான ரூபாய்கள் கண்முன் வந்து நின்றதில்.. அவன் அந்த எண்ணத்தைக் கைவிட்டு.. அவள் கன்னத்தைத் தொட்டு.. கண்ணீரைத் துடைத்து விட்டான்..

“ஓடிப் போகிறேன்னு சொல்லக்கூடாது...”

“வேற எப்படிச் சொல்றதாம்..? பிளேனில பறந்து போகிறிங்கன்னு சொல்லவா...?”

அவள் கண்ணீருடன் வம்பு வளர்த்தாள்.. இதுதான் இவள் என்ற நினைவில் அவன் மனம் மலர்ந்தது..

“காவ்யா.. திரும்பி வந்ததும் உன் வீட்டுக்குத்தான் வருவேண்டி...”

“தனியாத்தான..?”

“அதை இப்பவே செய்திருவேனே.. நீதான் குடும்பத்தோட வந்து நிற்கனும்னு ஆர்டர் போட்டிருக்கயே.. ஸோ.. குடும்பத்தோட வருவேன்...”

“எதுக்கு விருந்து சாப்பிடறதுக்கா..?”

“அதுக்குன்னும் வைத்துக்கலாம்.. பெண் கேட்டு வந்தா விருந்து சமைத்துப் போட மாட்டிங்களா..?”

“அதுக்கெல்லாம் சளைத்தவங்க இல்ல.. ஆனா.. உங்க வீட்டில வந்து பெண் கேட்கனுமே..”

“கேட்பாங்கடி.. நான் கேட்க வைப்பேன்...”

“முடியலைன்னா..?”

“முடியும்.. நான் முடித்துக் காட்டுவேன்...”

அவன் உறுதியில் அவள் மௌனமானாள்.. அவனுடன் அவளுக்கு ஏற்பட்டிருந்த பந்தத்தில்.. அவளுக்குள் ஒர்விதமான பரவசநிலை உண்டாகியிருந்தது.. இதற்கு முன்பும்.. அவளுக்கும்.. அவனுக்குமிடையில் ரகசிய பார்வையின் பரிமாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.. அது வெறும் கண்ணாமூச்சி விளையாட்டு.. இன்று அதையெல்லாம் உடைத்து.. இருவரும் மனம் விட்டுப் பேசி பழகி விட்டார்கள்.. இந்தத் தருணத்தில் அவன்

அவளைப் பிரிந்து செல்வதில் அவளுக்கு உடன்பாடு இல்லை.. அவன் கூடவே இருக்க வேண்டும் போல அவள் மனம் தவித்தது...

அவள் தோளில் படிந்திருந்த அவனது கையை அவள் இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.. அந்த இறுக்கமான ஸ்பரிசத்தில் எதை உணர்ந்தானோ.. அர்ஜீன் அவள் விழிகளுக்குள் ஆழமாகப் பார்த்தான்...

“இப்படியே என்கூட வந்துவிடு காவ்யா..” உறுதியுடன் கேட்டான்...

“ஊஹீம்..” அவள் மறுப்பாக தலையை அசைத்தாள்..

“படுத்தறடி.. இப்படி மறுகினா ஒரு மனுசன் எப்படி நிம்மதியா கனடாவுக்கு போவான்..?”

“யாரு மருகினதாம்..?”

“வேற யாரு..? எல்லாம் இந்த வீம்புக்காரிதான்...”

“நான் ஒன்னும் மருகல.. கனவு காணாம கனடாவுக்கு போய்ட்டு வாங்க...”

“நிஜமாத்தான் சொல்கிறயா..?”

“நிசமாத்தான் சொல்றேன்...”

“என் நினைப்பு உன் மனசில இல்லையா..?”

“இல்லவே இல்லை..”

“அப்ப கனடாவில இருந்து வரப்ப தைரியமா ஒரு வெள்ளைக்காரியைக் கையில பிடிச்சுக்கிட்டு வந்திரலாம்ன்னு சொல்லு...”

“என்னது..?”

காவ்யாவின் கொதித்த பார்வையினை ரசித்துச் சிரித்தான் அர்ஜீன்...

“ஹா... ஹா...”

‘சிரிப்பைப் பாரு...’ மனதுக்குள் பொருமினாள் காவ்யா....

‘என்னவோ ஆடு.. மாடைக் கையில பிடிச்சுக்கிட்டு வாரதைப்போல இல்ல பேசி வைக்கிறான்.. இவனுக்கு பொண்ணுகன்னா அவ்வளவு ஈஸியாப் போச்சா...’

“என்ன..? மனசுக்குள்ள என்னைத் திட்டித் தீர்க்கிறயா...?”

“ஊம்..? மண்டகப்படி நடத்தறேன்...”

“இரண்டும் ஒன்னுதான்.. என்ன சொல்லித்திட்டின..?”

“அதையும் நீங்களே சொல்லிர வேண்டியதுதான..?”

“என்னத்தை சொல்லியிருப்ப.. இவனுக்கு பெண்கள்ன்னா ஈஸியாப் போச்சான்னு திட்டியிருப்ப..”

அவன் இலகுவாகச் சொன்னதில் அவள் ‘ஆ’ வென்று வாய் பிளந்து இமை கொட்டினாள்.. அவன் செல்லமாக அவள் தலையில் குட்டினான்...

“எப்படிக் கண்டு பிடிச்சீங்க..?”

“இதுக்குப் போய் ஷெர்லெக் ஹோம்சையா கூப்பிட்டுக்கிட்டு வரனும்..? நீ என்னைப் பத்தி எவ்வளவு உயர்வா நினைப்பன்னு எனக்குத் தெரியாதா..?”

“நானா நினைக்கலை.. நீங்கதான் வாய் விட்டிங்க..”

“இங்கே பார் காவ்யா.. நான் பாரினில் படித்தவன்.. என்கூடப் படித்தவங்களில வெள்ளைக்காரப் பெண்களும் இருக்காங்க.. அவங்க என்னோட பெஸ்ட் பிரண்ட்ஸ்.. அவங்கள்ல ஒருத்திகூட இந்தியாவுக்கு வருவேன்னுதானே சொன்னேன்..?”

“உங்ககூட வெள்ளைக்கார ஆம்பளைகள்ளாம் படிக்கலையா...?”

“படித்தாங்களே...”

“அவங்க யாரும் உங்ககூட சிநேகிதமாகலையா..?”

“ஆனாங்களே.. அவங்களும் என் பெஸ்ட் பிரண்ட்ஸ்தான்...”

“ஐயாவுக்கு.. அவங்கள்ல யார் கையையும் பிடித்துக்கிட்டு இந்தியாவுக்கு வரனும்னு தோணலையா..?”

அவள் வெட்டும் பார்வையுடன் கேட்க.. அவன் மீண்டும் அதை ரசித்தவனாய் உரக்கச் சிரித்தான்..

“ஹா.. ஹா...”

“பாத்து.. பல்லு கில்லு சுளுக்கிக்கப் போகுது...”

“அப்படின்னா..?”

“அது அப்படித்தான்..”

“ஓகே.. நீ வேணும்னா வந்து சுளுக்கை எடுத்து விடேன்...”

“அந்தச் சாக்கில என் கையை பதம் பார்த்திரலாம்ன்னு ஐடியா பண்ணியிருக்கீங்களா...?”

“ஹா.. ஹா...”

சிரித்துச் சிரித்து அவன் கண்களில் கண்ணீர் துளிர்த்து விட்டது.. தூரத்தில் அவனது கடையிருக்கும் தெருவின் முனை தெரிய.. இறங்க வேண்டிய இடம் வந்து விட்டதை உணர்ந்தாள் காவ்யா...

“காரை நிப்பாட்டுங்க...”

“ஏன்..? கடைவாசலில் வந்து இறங்கிக்க..”

“வேற வினையே வேணாம்...”

“ம்ப்ச்.. இனிமேலும் ஒளிவு மறைவு தேவையில்லை காவ்யா...”

“ஏனாம்..? ஐயா கட்டிய தாலி என் கழுத்தில் தொங்குதோ..”

“அது ஒன்னுதானடி பாக்கி.. மத்தபடி உனக்கு நான்.. எனக்கு நீ தானே...?”

அவனது உரிமை கலந்த அந்த கோபத்தில் காவ்யாவின் மனதில் தென்றலடித்தது.. அவள் அவனைப் பார்த்து இதமாகச் சிரித்தாள்...

“அதை ஊரறியச் சொல்லுங்க.. அதுக்குப் பின்னால உங்ககூட ஜோடி போட்டுக்கிட்டு காரில போய் இறங்கறேன்.. அதுவரைக்கும் இப்படித்தான்...”

“காவ்யா...”

“நான் எங்கேயும் ஓடிப் போயிர மாட்டேன்.. உங்களுக்காக இந்த மதுரையில் காத்துக்கிட்டிருப்பேன்..”

அவன் கை அவளை நோக்கி நீண்டது... அதில் கரம்பதித்து இதமாக அழுத்தியவள் குனிந்து மென்மையான முத்தமொன்றைப் பதித்தாள்..

“ஏய்ய்..” அவன் கண்கள் மின்னின...

“கணக்கில ஒன்னைக் கழிச்சுக்கங்க பாஸ்..” கண்களைச் சிமிட்டினாள்..

“காவ்யா...”

அவன் கிளர்ந்து அவளை இழுத்துக் கொள்ள கை நீட்டியபோது அவன் கைகளுக்குள் அகப்படாமல் நழுவி இறங்கி கார் கதவை மூடினாள்.. கையை அசைத்தாள்.. விரைந்து நடந்தாள்..

“காவ்யா...”

அவள் முத்தமிட்ட உள்ளங்கையை வருடியபடி முணுமுணுத்த அர்ஜீன்.. அதில் முத்தம் பதித்தான்..

கூடிக் குழாவிட ஒரு பத்தினிப் பெண் வேண்டும் என்று பாரதி ஏன் கேட்டான் என்பது அந்த நொடியில் அவனுக்குப் புரிந்தது...

சற்று நேரம் கழித்து அவன் கடைக்குள் நுழைந்த போது.. கடையில் கூட்டமிருந்தது.. புதிதாக திறந்திருந்த தனியார் அலுவலகத்திற்கு மொத்தமாக கம்யூட்டர்களை வாங்க வந்திருப்பதாக இளங்கோ சொன்னான்.. தலையசைத்து விட்டு அர்ஜீன் அறைக்குள் நுழைந்த போது.. அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் காவ்யா தீவிரமான வேலையில் இருந்தாள்.. பாவனாவும் உடனிருக்க.. இளங்கோவும்.. தங்கராஜீம்.. காவ்யாவிடம் ஓடியோடி வந்து விவரங்களைக் கேட்டுப் போனார்கள்...

அன்று மாலைவரை வேலை நெருக்கடியிலிருந்த காவ்யா கிளம்ப முனைந்த போது.. அர்ஜீன் அங்கே இல்லை.. கம்யூட்டகளின் கையிருப்பை சரிபார்க்க கொடவுனுக்கு போய் விட்டான்..

# 52

*மண்மணக்கும் மதுரையிலே - அவள்...*
*மனதைவெல்ல ஆசைகொண்டேன்...*

அந்த இரவு.. முடிவேயில்லாத நீண்ட இரவாக இருப்பதைப் போல காவ்யாவுக்கு தோன்றியது.. ஒவ்வொரு மணித்துளிகளும் மெதுவாக நகர்வதைப் போல அவள் உணர்ந்தாள்...

அவளுக்கு அர்ஜீனைப் பார்க்க வேண்டும்.. அதற்கு பொழுது விடிய வேண்டும்.. அவள் கடைக்கு ஓட வேண்டும்.. அதற்காக அவள் விடிவதற்காக காத்திருந்தாள்..

அவள் காத்திருந்த அந்த இரவினிலே.. கண்ணதாசன் தூங்காமல் வீட்டை விட்டு வெளியேறினான்.. காரை அவன் எடுத்த போது.. வாசலில் விளக்கு எரிந்தது.. கண்ணைக் கசக்கியபடி அன்னபூரணி வந்து நின்றாள்..

“என்னப்பா இந்த நேரத்தில வெளியில கிளம்பற..?” என்று கேட்டாள்..

“ஒரு முக்கியமான வேலை இருக்கும்மா.. நீ போய் படு.. நான் ஆறே நிமிசத்தில் திரும்பி வந்துருவேன்..” என்றான் கண்ணதாசன்..

அன்னபூரணி விளக்கை அணைத்துவிட்டு உள்ளே சென்றாள்.. கண்ணதாசன் காரைக் கிளப்பினான்.. சாலையில் வேகமெடுத்த கார்.. அர்ஜீன் தங்கியிருந்த ஹோட்டல் வாசலில் போய் நின்றது...

அந்த நள்ளிரவிலும் ஹோட்டலின் வரவேற்புப் பகுதியில் நடமாட்டம் தெரிந்தது.. கண்ணதாசன் இயல்பாக அதைக் கடந்து லிப்டிற்குள் நுழைந்தான்.. தங்கராஜின் உபயத்தில் அர்ஜீன் தங்கியிருந்த அறையின் எண்ணை அவன் அறிந்து வைத்திருந்தான்.. மூன்றாவது மாடியில் லிப்டை விட்டு வெளிப்பட்டவன்.. நீண்டிருந்த காரிடாரில் நடந்து அர்ஜீனின் அறைவாசலில் நின்று.. அழைப்பு மணியை அழுத்தினான்.. சிறிது நேரம் கழித்து கதவைத் திறந்த அர்ஜீன் தூக்கத்தின் சாயல் துளிக்கூட முகத்தில் படியாமல் புத்துணர்வோடு இருந்தான்.. கண்ணதாசனைப் பார்த்ததும் அவன் புருவங்கள் சுருங்கின.. அந்த நேரத்தில் அவன் கண்ணதாசனை அங்கே எதிர்பார்க்கவில்லை என்பதை அவனது முகக்குறிப்பு உணர்த்தியது...

“நீங்க காவ்யாவோட அண்ணன்தானே..?”

“யெஸ்.. ஐ வான்ட் டு டாக் வித் யு...”

“இஸ் தட் இம்பார்டண்ட்...?”

“யெஸ்...”

“எனி திங்க் சீரியஸ்..?”

“எனக்கு இது சீரியஸ்தான்.. உங்களுக்கு எப்படின்னு எனக்குத் தெரியாது.. நீங்கதான் உலகம் சுற்றும் வாலிபனாச்சே.. உங்களுக்கு எல்லாமே ஈஸியாத்தான் தோணும்...”

கண்ணதாசனின் காட்டமான பேச்சில்.. அர்ஜீன் முகம் மாறினான்.. எதற்காக இவன் இந்த அளவுக்கு கோபப் படுகிறான் என்று அவனுக்குப் புரியவில்லை.. காவ்யாவுக்கும் அவனுக்கும் இடையில் நடந்த தனிமையான சந்திப்பைப் பற்றி கண்ணதாசனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றே அவன் நினைத்தான்..

‘கொஞ்சம்கூட ஓட்டையில்லாத கச்சிதமான பிளானாச்சே.. அதை இவன் தெரிந்துகொண்டிருக்க முடியாது...’

காரணம் எதுவாக இருந்த போதிலும்.. வந்திருப்பது காவ்யாவின் அண்ணன் என்ற நினைவில்.. அந்த அர்த்த ராத்திரியிலும் கண்ணதாசனை அறைக்குள் அனுமதித்தான் அர்ஜீன்...

“சிட்டவுன்..”

சோபாவை கை காட்டினான்.. அறைக் கதவைச் சாத்தி விட்டு கண்ணதாசனுக்கு எதிரிலிருந்த சோபாவில் அமர்ந்தான்..

அந்த நேரத்திலும் அர்ஜீனுடைய லேப்-டாப்பின் திரையில் ஒளியிருந்ததைக் கவனித்த கண்ணதாசனுக்கு.. இவன் இரவு பகல் பார்க்காமல் வேலை செய்பவன் என்று தோன்றியது...

இருக்கட்டும்.. இவன் எப்படிப்பட்ட தீரனாகவும் இருக்கட்டும்.. அதைப்பற்றி கண்ணதாசனுக்கு ஒன்று மில்லை.. அவனுக்கு அவனின் தங்கையின் வாழ்வு மட்டுமே முக்கியம்..

“இந்த நைட்டில ரூம் சர்வீஸை டிஸ்டர்ப் பண்ண வேணாம்ன்னு நினைக்கிறேன்.. ஸோ.. காபி.. ஆர் டீன்னு சூடா எதையும் தர முடியாது.. பட்.. ரூமில் இருக்கிற பிரிட்ஜில் கூல்டிரிங்க் இருக்கு.. இஃப் யுஹேவ் நோ எனி அப்ஜெக்சன்.. அதில ஒரு பாட்டிலை எடுத்து ஓபன் பண்ணவா..?” நிதானமாக வினவினான் அர்ஜீன்..

“நோ தேங்க்ஸ்.. இந்த மிட் நைட்டில காபி ஆர் கூல்டிரிங் வித் அர்ஜீன்னு குடிக்கிறதுக்காக நான் வரலை.. இதெல்லாம் எங்க வீட்டிலேயே எனக்குக் கிடைக்கும்.. நான் வந்தது வேற ஒன்னிற்காக...”

"அஃப்கோர்ஸ்.. ஐ நோ இட் வெரி வெல்.. மிட் நைட்டுன்னு நீங்களே சொன்ன பின்பு நான் அதைப் பத்திக் கேள்வி கேட்டு ஆகப் போகிறதில்ல.. சொல்லுங்க.. வாட் டு யு வான்ட்..?"

"ஐ வான்ட் ஒன்லி ஒன் மிஸ்டர் அர்ஜீன்.. நீங்க என் தங்கையின் மனசில ஆசையை விதைக்கிறதை நிறுத்தனும்..."

கண்ணதாசன் நேரடியாக போட்டுத் தாக்கியதில் அர்ஜீன் நிதானித்தான்.. எங்கோ ஒரிடத்திலிருந்து விவரம் கசிந்து விட்டதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

"புரியலை.."

"உங்களுக்கா புரியாது..? எவ்வளவு கச்சிதமா பிளான் போட்டு என் தங்கையை உங்ககூட காரில் ஏற வைச்சீங்க..? இத்தனையும் செய்துட்டு புரியலைன்னு சொன்னா எப்படி சார்...?"

கண்ணதாசன் அனைத்தையும் அறிந்து கொண்டு தான் வந்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட அர்ஜீன்.. நிதானமாக.. நிலைமையை எதிர் கொண்டான்...

"ஸோ.. உங்களுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு.."

"யெஸ்.."

"காவ்யாவிடம் விசாரித்தீங்களா..?"

“இல்லை.. இப்ப என்ன சொல்ல வர்றீங்க.. அர்ஜீன்..? நீங்க அடக்கி வைக்க வேண்டியது உங்க தங்கையை.. என்னையில்லன்னு சொல்ல வருகிறீங்களா..?”

“நோ.. நோ.. இதில் காவ்யாவின் தப்பு எதுவுமே இல்லைன்னு தான் சொல்ல வர்றேன் மிஸ்டர் கண்ணதாசன்.. இந்த மேட்டரைப் பொறுத்தவரை ஷீ இஸ் இன்னொஸென்ட்...”

“அது எனக்கும் தெரியும்.. தெரிஞ்சதினாலதான் உங்களைத் தேடி வந்தேன்...”

“அவளை நீங்க எனகொயர் பண்ணினா அவ கில்ட்டியா ஃபீல் பண்ணுவா...”

“அதைப்பத்தி நீங்க கவலைப்படவேணாம்.. என் தங்கையைப் பாத்துக்க எனக்குத் தெரியும்...”

“நாம் எதிரிகளில்லை கண்ணதாசன்..”

“நண்பர்களும் இல்லை...”

“உறவுக்காரங்களா ஆகப்போகிறோம்ன்னு சொல்கிறிங்களா..?”

“அந்தக் கனவை நான் காணமாட்டேன்.. யதார்த்தம் என்னன்னு எனக்குத் தெரியும் அர்ஜீன்.. என் தங்கைக்கும் அது தெரிஞ்சிருக்கனும்.. என்ன சொல்லி அவளை மயக்கினிங்க..?”

“வாட்..? வி ஆர் லவ்வர்ஸ் கண்ணதாசன்...”

“உங்களைப் போல உச்சானிக் கொம்பில இருக்கிறவங்க மேலே என் தங்கைக்கு காதல் வந்தால் என்ன ஆகும்ன்னு எனக்குத் தெரியும் அர்ஜீன்.. வேண்டாம்.. உங்க விளையாட்டுக்கு வேற ஆளைப் பிடிங்க.. என் தங்கையை விட்டுவிடுங்க...”

கண்ணதாசனின் பிடிவாதமான பேச்சில் அர்ஜீனுக்குள் கோபம் மூண்டது.. எதிரே அமர்ந்திருந்தவனைப் பார்த்தான்.. காவ்யாவின் ஜாடையில் கண்ணியம் குறையாதவனாக அமர்ந்திருப்பவனின் மனதில் நெருப்பிருப்பதை புரிந்து கொண்டவனாக அமைதி காத்தான்...

“நீங்க பதட்டப்படறிங்க கண்ணதாசன்...”

“பதட்டப்படாம என்ன செய்யச் சொல்கிறிங்க அர்ஜீன்..? பொம்பளப் புள்ள கூடப் பிறந்தவனாப் போயிட்டேன்.. நெருப்புன்னு தெரியாம அதைத் தொட்டுப் பார்க்க ஆசைப்படறா என் தங்கச்சி.. அது சுட்டு விட்டா.. அவளுக்கு ஏற்படற வலியைவிட ஆயிரம் மடங்கு அதிகமா எனக்கு வலிக்கும் அர்ஜீன்.. அவளுக்கு ஏதாவது ஒன்னுன்னா நான் தாங்கிக்க மாட்டேன்.. அதுக்குக் காரணமானவங்களை கொன்னு புதைச்சிருவேன்..”

கண்ணதாசனின் கண்ணியத்தை மீறி அவன் கண்களில் தெரிந்த நெருப்பின் ஜீவாலையில் அர்ஜீன் உதட்டைக் கடித்துக் கொண்டான்...

‘சும்மாவா.. அவ மதுரை.. மதுரைன்னு சொல்லி பயம் காட்டறா..’ என்று அந்த நிலையிலும் அவனுக்குத் தோன்றியது...

“அந்த அளவுக்கு ஏன் போகனும் கண்ணதாசன்..? உங்க தங்கையை நான் காதலிக்கிறேன்.. அவளை மேரேஜ் பண்ணிக்கனும்னு ஆசைப்படறேன்..”

“சும்மா கதை விடாதீங்க...”

“கதையில்லை கண்ணதாசன் நிஜம்..”

“இதை டிவி ஷோவில வேணும்னா நிகழ்ச்சிக்கு தலைப்பா வைச்சுக்குவாங்க.. நான் என் மனசில வைச்சுக்க மாட்டேன்.. அப்படி நினைக்கிறவரா இருந்தா.. நீங்க முதலில் என்னிடமில்ல பேசியிருக்கனும்..?”

என்னடா இது என்றிருந்தது அர்ஜீனுக்கு...

ஒரு பெண்ணைக் காதலிக்க அவளிடம் காதல் சொல்லாமல் அவளுடைய அண்ணனிடம் காதல் சொல்வதா..?

இப்படியொரு நியாயத்தை எந்த ஊரிலும் அவன் கேட்டதில்லை.. இருந்தாலும் பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு அவன் பேசினான்...

“காவ்யாவிடமே இப்பத்தான் இதைப்பற்றிப் பேசினேன்..”

“பொய் சொல்லாதீங்க.. அழகர் மலைக்கு கடையில வேலை செய்கிற ஆள்களை வேன் பிடிச்சுக் கூப்பிட்டுக்கிட்டுப் போனீங்களே.. எதுக்காக...?”

“இளங்கோவின் மேரேஜை அட்டெண்ட் பண்றதுக்காக...”

“அதை ஊரில இருக்கிற கேணப்பய எவனிடமாவது சொல்லுங்க... கேப்பையில நெய் வழியுதுன்னா.. அப்படியான்னு கேட்டுக்கிற கேணப்பய நானில்லை...”

அர்ஜீனுக்கு கேப்பையையே தெரியவில்லை.. ராகி என்று சொல்லியிருந்தாலாவது அவனுக்குத் தெரிந்திருக்கக் கூடும்.. அந்த நள்ளிரவில் அவனை ஆக்ரமித்த மதுரை மண்ணின் பழமொழியில் அவன் திணறிப் போய்விட்டான்..

“நீங்க யாரிடம் வேண்டும்ன்னாலும் கேட்டுப் பாருங்க கண்ணதாசன்.. அன்றைக்கு இளங்கோ மேரேஜை அட்டெண்ட் பண்ணத்தான் நாங்க போனோம்...”

“நாங்கன்னு மத்தவங்களையும் உங்ககூடக் கூட்டுச் சேர்த்துக்காதீங்க அர்ஜீன்.. மத்தவங்க அதுக்காகத்தான் போனாங்க.. நீங்க எதுக்காக போனீங்க..?”

கண்ணதாசனின் கிடுக்கிப் பிடி கேள்வியில் அர்ஜீனுக்குள் சன்னமான எரிச்சல் தோன்றியது...

‘காதலிக்கிறவன் அவனுடைய காதலியை சைட் அடிக்க நினைப்பது கூடத் தப்பா..?’

“யு ஸீ மிஸ்டர் கண்ணதாசன்.. நான் இன்றைக்கே உங்க வீட்டில் வந்து பேச ரெடியாத்தான் இருந்தேன்..”

“உங்க கையைப் பிடிச்சு யார் தடுத்தது..?”

“காவ்யா..!”

“என்னது..?”

“முறைக்காதீங்க மிஸ்டர் கண்ணதாசன்.. அவ என் கையைப் பிடிச்சுத் தடுக்கலை.. பட்.. இன்றைக்கு வர வேண்டாம்ன்னு அவதான் சொன்னா...”

“இதை நம்ப நான் தயாரா இல்ல அர்ஜீன்..”

“நீங்க நம்பித்தான் ஆகனும்.. என் குடும்பத்தோட வந்து பெண் கேட்கச் சொன்னா.. நானும் ஓகேன்னு சொல்லியிருக்கேன்...”

“ஓஹோ...”

“இதையும் நீங்க நம்பலைன்னு தெரியுது கண்ணதாசன்.. நிச்சயம் நான் என் குடும்பத்தோட வந்து உங்ககிட்ட காவ்யாவைப் பெண் கேட்பேன்...”

“எப்ப..?”

“நாளைக்கு நான் சென்னைக்குப் போகனும்.. நாளை மறுநாள் கனடாவுக்கு பறக்கனும்.. இரண்டு மாதத்துக்கு மேலே அங்கே தங்க வேண்டியிருக்கு.. அங்கேயிருந்து திரும்பியதும் என்டாடியிடம் இதைப் பத்திப் பேசலாம்ன்னு இருக்கிறேன்..”

“அதானே பார்த்தேன்...”

“வேண்டாம் கண்ணதாசன்.. என்னை சந்தேகக் கண்ணோடே பார்க்காதீங்க.. கட்டாயம் ஒர்நாளில் என் குடும்பத்தோடு காவ்யாவ பெண்கேட்டு நான் வருவேன்..”

“அத்தைக்கு மீசை முளைக்கட்டும்.. சித்தப்பான்னு கூப்பிடறதைப் பத்தி அதுக்கப்புறமா யோசிக்கறேன்..”

இதுவும் அர்ஜீனுக்குப் புரியவில்லை.. ஆனால் நடக்காத ஒன்றை அவன் பேசுவதாக கண்ணதாசன் பழிப்புக் காட்டுகிறான் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது...

“நடக்கும் கண்ணதாசன்.. அப்போ உங்களுக்குத் தெரியும்.. இந்த அர்ஜீன் யாருன்னு...”

# 53

*நான் சிந்தி விட்ட வார்த்தைகளில்..*
*நீ எனையுணர ஆசைகொண்டேன்..*

**அ**து ஒரு சபதம்தான்... கண்ணதாசன் சந்தேகத்தில் வெகுண்ட அர்ஜீன்.. தன் காதலின்மீது ஆணையிட்டுச் செய்த சூளுரைதான்.. அவன் அதைச் செய்து முடிக்கும் தீரம் வாய்ந்தவன்தான்.. அதுவரை அவன் நினைத்ததை எல்லாம் நடத்தி முடித்திருந்தவன்தான்...

இருந்தும் காலம் அவனுக்குக் கருணை காட்டுமா என்பதை யோசிக்காத ஆக்ரோசத்தோடு அர்ஜீன் சபதம் செய்து விட்டான்...

அவன் அறியமாட்டான்.. ஓர் நாள்.. அவனைப் பார்த்து கண்ணதாசன் நீ யாரென்று கேட்கப் போகிறான் என்பதை..

அர்ஜீனின் ஆவேசம் மிகுந்த சூளுரையில் கண்ணதாசன் திருப்தி அடைந்து விடவில்லை.. உன்னைப் போல எத்தனை பேரைப் பார்த்திருப்பேன்.. உன் வசனத்தைப் போல எத்தனை வசனங்களைக் கேட்டிருப்பேன் என்ற பாவனையே அவன் முகத்தில் நிலவியது...

“உங்க பேச்சைக் கேட்டு ஏமாந்து போக நான் காவ்யா இல்லை அர்ஜீன்...”

“நான் ஏமாற்றுக்காரனில்லை கண்ணதாசன்...”

“நீங்க யாரா இருந்தா எனக்கென்ன சார்..? எனக்குத் தேவை என் தங்கையின் பாதுகாப்பு...”

“நான் வில்லனில்லை..”

“உங்களை ஹீரோவா நான் நினைக்கவும் இல்லை..”

“உங்க தங்கை நினைக்கிறாளே...”

உன் நினைவைப் பற்றி எனக்கென்ன கவலை என்ற பாவனையுடன் அர்ஜீன் இதைக் கூறியதில் கண்ணதாசனின் முகத்தில் கடுமை அதிகரித்தது..

“என் தங்கை யாருமில்லாத அநாதையில்லை.. வழியில் போகிறவங்களெல்லாம் அவளிடம் சொந்தம் கொண்டாடுவதற்கு.. உங்களை எச்சரிக்கிறேன் அர்ஜீன்.. என் தங்கையிடமிருந்து தள்ளியே நில்லுங்க.. அவ மனசில ஆசையை வளர்க்காதீங்க.. உங்களுக்கும்.. அவளுக்குமிடையில் தூரம் அதிகமிருக்கு.. அதை இல்லாததைப் போல காண்பிச்சு அவளை ஏமாத்த முயற்சி பண்ணாதீங்க..”

“திஸ் இஸ் தி லிமிட் கண்ணதாசன்.. நான் உங்க தங்கையை சீட் பண்ண டிரை பண்றதைப் போலவே

பேசறிங்க.. இப்படிப் பேசாதீங்க.. நல்லாயில்லை.. ஐ லவ் ஹெர்.."

"ம்ப்ச்.. உங்க காதல் என் தங்கைக்கு வேணாம் சார்.."

"அதை அவள் சொல்லட்டும்..."

அர்ஜின் எரிச்சலுடன் சொல்லிவிட்டான்.. கண்ணதாசனின் முகம் மாறியது.. அவன் கண்கள் ஜ்வலித்தன...

"படிச்சுப் படிச்சுக் கிளிப் பிள்ளைக்குச் சொல்றதைப் போலச் சொல்றேன்.. இன்னும் உங்க புத்தியிலே அது ஏறலையே.. எந்த தைரியத்தில இந்த வார்த்தைகளைச் சொல்கிறிங்க.. அர்ஜீன்..? உங்க பின்னாலே அவளை வரவைச்சுட்ட திமிர் உங்களை இப்படிப் பேச வைக்குதா.."

"கூல் டவுன் கண்ணதாசன்..."

"வேணாம் அர்ஜீன்.. எங்க கூட விளையாடாதீங்க.. இது மதுரை.. மண்ணையும்.. பெண்ணையும் யாருக்கும் விட்டுக் கொடுக்காத வீரம் விளைஞ்ச மண்ணு.. எங்க வீட்டுப் பெண்ணை உங்க இஷ்டத்துக்கு நீங்க ஆட்டி வைச்சிர முடியாது..."

"உங்க வீட்டுப் பெண்ணாவே அவ காலம் பூராவும் இருந்துவிட முடியுமா..? ஒருநாள் அவளுக்கும் மேரேஜ்ன்னு ஒன்னு நடந்துதான ஆகனும்..? அந்த மேரேஜ் என்னுடன் நடக்கட்டுமே.."

"போகாத ஊருக்கு வழி தேட நானொன்னும் முட்டாளில்லை.. நானும் பணக்காரன்தான்.. என் தங்கச்சியை வசதியான இடத்தில கட்டிக் கொடுக்கிற அளவுக்கு வசதியும்.. வாய்ப்பும் உள்ளவன்தான்.. அவள காரும் பங்களாவும் இருக்கிற வீட்டில கட்டிக் கொடுக்க என்னால் முடியும்.. ஆனா.. உங்களப் போல.. ஒன்னுக்கு பத்துக்காரை பெருமைக்கு வாங்கி நிப்பாட்டியிருக்கிற வீட்டில கட்டிக் கொடுக்க முடியாது.. அதனால எங்க சுயமரியாதையோட விளையாடாம விலகிப் போயிருங்க.."

"உங்களை நான் குறைவாச் சொல்லலையே..."

"நீங்க சொல்ல மாட்டிங்க.. உங்க வீடு சொல்லும்.."

"நான் விடமாட்டேன்..."

"அது என்ன தேவைக்குன்னுதான் நான் கேட்கிறேன்.. எங்க வாழ்க்கை எங்களோட.. அதில எதுக்கு தலையை நுழைக்கறிங்க.. என் தங்கைக்கு எங்க அளவில மாப்பிளை பார்த்து எங்க சொந்த பந்தம் மெச்ச.. ஜாம் ஜாமுன்னு நான் கல்யாணத்த நடத்துவேன்.. அத விட்டுட்டு எட்டாப் பழத்துக்கு நாங்க எதுக்காக கொட்டாவி விடனும்..?"

என்னடா இது என்றாகிவிட்டது அர்ஜீனுக்கு.. இப்படிப் பழமொழியிலேயே அவனைப் போட்டுத் தாக்கினால் அவனும் தான் என்ன பண்ணுவான்..?

‘ம்ஹீம்.. எதுக்கெடுத்தாலும்.. மதுரை மண்ணின் வெட்டறிவாளப் பத்தியே அவ பெருமை பேசுவாளே.. ஊரைவிட்டு ஆளைத் துரத்த இந்தப் பழமொழிகளே போதுமே.. தனியா அருவா வேற பறந்து வரனுமா..?’

எட்டாப்பழத்துக்கு கொட்டாவி வருமா.. வராதா என்று அர்ஜீனுக்குத் தெரிந்திருக்கவில்லை.. அந்த நள்ளிரவைத் தொட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவனுக்கு கண்களைச் சுழட்டித் தூக்கத்திற்கான கொட்டாவிதான் வந்தது..

“இப்ப என்னதான் சொல்லவர்றீங்க கண்ணதாசன்..?” அர்ஜீன் பேச்சை முடிக்க முயன்றான்..

“நல்லாயிருக்கு சார் உங்க நியாயம்.. விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு.. விடிந்தபின்னால்.. ராமனுக்குத் தம்பி லட்சுமணனான்னு கேட்கிற மாதிரியில்ல உங்க கேள்வி இருக்கு..” கண்ணதாசன் முறைத்தான்...

இவன் இந்த முறைப்பை விட்டுத் தொலைத்தால் தேவலை என்று அர்ஜீனுக்கு ஆயாசமாக இருந்தது..

காதலியின் அண்ணன் என்ற ஒரே காரணத்திற்காக.. கண்ணதாசன் முறைக்கும் முறைப்பினைப் பொறுத்துக் கொள்வது அர்ஜீனுக்கு இம்சையாக இருந்தது..

அறையின் சிட்அவுட்டைப் பார்த்தான்.. மதுரை மாநகரம் விளக்குகளுடன் ஒளிர்ந்து கொண்டிருந்தது..

மதுரைதான் தூங்காது என்றால்.. மதுரைக்கு வந்தவர்களும் தூங்கக் கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறார்களா என்று தெரிந்து கொண்டால் தேவலையென்று அர்ஜீன் நினைத்துக் கொண்டான்...

“நான் சொல்ல வருகிறதெல்லாம் ஒன்னே ஒன்னுதான் அர்ஜீன்...”

‘அந்த ஒன்னே ஒன்னையா இத்தனை மணி நேரமா பேசிக்கிட்டு இருந்த..?’

“என் தங்கச்சி அப்பாவி...”

‘அத என்கிட்டயே சொல்கிறயா..? அவளப் பாத்த முதநாளிலேயே மகராசி.. நடுரோட்டில் என்னை அலறவிட்டாளே...’

“அவ மனசில ஆசையை மூட்டாதீங்க...”

‘அவதானே என் மனசில ஆசைத்தீயை மூட்டிக்கிட்டு இருக்கிறா.. பாத்தா பச்சக்குன்னு ஒட்டிக்கிறதப் போல இருந்துக்கிட்டு.. ஒரு ‘ஐ லவ் யு’வச் சொல்றதுக்கு ஆறுமாதமா அலையவிட்டாளே.. அவ மனதில ஆசைத்தீ பத்திக்கிட்டாலும்...’

“அவவேற.. நீங்க வேற...”

‘ஊஹீம்.. தப்பாச் சொல்ற.. நாங்க இரண்டு பேருமே ஒன்னுக்குள்ள ஒன்னு...’

“வானத்தில மிதக்கிற நிலவை ரசிக்கலாம்...”

‘இப்ப எதுக்காக இவன் இந்த உவமைச் சொல்றான்..? டேய் மச்சான்.. அந்த நிலவை என்னை ரசிக்க விடாம இன்னும் எத்தனை மணிநேரம்டா உபதேசம் பண்ணியே என்னை ஒரு வழி பண்ணுவ...’

“அதக் கையில பிடிக்க முடியாது...”

‘அதை எதுக்கு கையில பிடிக்கனும்..? அந்த நிலாவத்தான் நான கையில பிடிச்சேன்.. என் ராசாத்திக்காகன்னு பாட்டுப் பாடறதுக்கா.. எனக்கெல்லாம் அது மேட்ச் ஆகாது...’

“நீங்க உங்க இடத்தில இருங்க.. நாங்க எங்க இடத்திலே இருக்கிறோம்...”

‘இந்தக் கடையை என்ன செய்கிறது..? கோடிக் கணக்கில் பணம் கொடுத்து வாங்கின கடையை வழிப் போக்கன் எவனுக்காவது எழுதிக் கொடுத்து விடலாமா..?’

அப்படியொரு யோசனையையும் அவன் சந்திக்கும் நாள் வரப்போகிறது என்பதை அறியாதவனாக மனதுக்குள் கேட்டுக் கொண்டான் அர்ஜீன்..

“இனிமேல் என் தங்கச்சியின் வாழ்க்கையில் கிராஸ் பண்ணாதீங்க...”

‘என்னமோ.. ரோட்டைக் கிராஸ் பண்ணாதேன்னு சொல்கிறாப்புல இல்ல.. சொல்லி வைக்கிறான்..’

“நான் கிளம்பறேன்..”

‘ஹப்பாடி கிளம்பிட்டான்...’

அர்ஜீனின் மனதில் சந்தோச ஊற்றுக்கிளம்பியது.. காவ்யா இதை அறிந்தால் என்ன சொல்லுவாள் என்று நினைத்துப் பார்த்தான்...

‘எவ்வளவு நெஞ்சமூத்தமிருந்தா என் அண்ணன் கிளம்பினதுக்கு அப்பாடின்னு நிம்மதியா மூச்ச விட்டிருப்பீங்க.. என் வீட்டாளுகன்னா உங்களுக்கு அவ்வளவு இளக்காரமா போச்சா..? இதுவே உங்க கூடப் பொறந்த அக்காவா இருந்திருந்தா இப்படியா சொல்லியிருப்பீங்க..?’

மனதுக்குள் அவள் தோன்றினாள்.. இடுப்பில் கை வைத்துக் கொண்டு பொரிந்து தள்ளினாள்.. அந்த நினைவு தந்த சுகத்துடன் கதவை மூடிவிட்டு.. படுக்கப் போனான் அர்ஜீன்.. கண்ணதாசனின் நினைவு வர.. சிட் அவுட்டிற்கு சென்று எட்டிப் பார்த்தான்.. அதே நொடியில் காரில் ஏறிக் கொண்டிருந்த கண்ணதாசனும் அண்ணாந்து பார்த்தான்.. இருவிரின் பார்வையும் அந்த இருளிலும் சந்தித்து மீண்டன..

கண்ணதாசன் காரில் ஏறிப் போய்விட.. சிட் அவுட்டில் நின்று கொண்டிருந்த அர்ஜீனுக்கு சிரிப்பு வந்தது...

இந்தப் பார்வையை காதலியுடன் அவன் பார்த்திருக்க வேண்டும் அதை விட்டுவிட்டு... காதலியின் அண்ணனைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்..

இதைக் கம்பர் பாடியிருந்தால் எப்படிப் பாடியிருப்பார் என்று யோசித்தான் அர்ஜீன்...

*'அண்ணலும் நோக்கினான்..*
*அவன் காதலியின் அண்ணனும் நோக்கினான்..'*

மனதுக்குள் கவிதை வரிகள் தோன்ற.. வாய்விட்டுச் சிரித்தபடி.. கட்டிலில் விழுந்தான் அர்ஜீன்.. தூக்கம் சொக்கிய போதிலும் அவனால் விழி மூட முடியவில்லை.. மறுநாளில் காவ்யாவை விட்டுத் தொலைவில் பறக்க வேண்டுமே என்ற நினைவுடன் புரண்டு படுத்தான்...

'இன்னைக்குத்தான் காதல் சொன்னா.. நாளைக்கே நான் கிளம்பித் தொலைக்கனும்..' சலித்துக் கொண்டான்..

'இப்பவாவது வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்னாளே.. இந்த ஒரு வார்த்தையைத் தெம்பாக பிடித்துக் கொண்டு ஒரு வருசம்கூட அவளைப் பார்க்காமல் இருந்துவிடலாம்...'

காவ்யாவின் காதலில் அவனுக்கு நம்பிக்கை இருந்தது.. அவனுக்காக அவள் காத்திருப்பாள் என்ற நிம்மதி இருந்தது...

மூடியிருந்த கண்ணாடி ஜன்னலின் பின்னால் முழுநிலவு தெரிந்தது.. அவன் மனதில் காதல் சுரந்தது.. காலையில் அவளுடன் காரில் இருந்த தருணம் நினைவுக்கு வந்து அவன் தூக்கத்தினைத் துரத்தியது...

*"அன்றொரு நாள்..*
*இதே நிலவில்..*
*அவள் இருந்தாள் என் அருகே..*
*நான் அடைக்கலம் கொண்டேன்..*
*அவள் அழகை..*
*நீயறிவாயே.. வெந்நிலவே..!"*

காருக்குள் ஒலித்த பாடலின் நினைவில் அவன் பாடினான்.. அந்தப் பாட்டைக் கேட்டதும் அவள் முகத்தில் தோன்றிய நாணத்தில் அவள் நினைவு நிலைத்தது...

"காவ்யா.." தாபத்துடன் முணுமுணுத்தான்...

இதே நிலவை அவளும் பார்ப்பாளா..? அவன் தாபத்தை உணர்வாளா..? தூக்கம் பிடிக்காமல் அவன் நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தபோது.. காவ்யா தென்றலை அழைத்து தூது சொல்லிக் கொண்டிருந்தாள்..

# 54

*நான் கண்ட முழுநிலவில் – நீ*
*எனைக்கான ஆசைகொண்டேன்...*

**கா**வ்யாவினால் உறங்க முடியவில்லை.. அவள் ஜன்னலோறமாகத் தெரிந்த தென்னங்கீற்றின் சலசலப்பில் கவனத்தைத் திருப்பினாள்.. அவள் உடல்மீது படிந்த சிலுசிலுப்பான காற்றில் அவளுக்கு இதம் கிடைக்கவில்லை..

*“இந்த மன்றத்தில் ஓடிவரும்*
*இளந்தென்றலைக் கேட்கின்றேன்..*
*நீ சென்றிடும் வழிதனிலே*
*என்தெய்வத்தைக் காண்பாயோ..”*

ஜன்னல் கம்பியில் சாய்ந்து நின்று சன்னக்குரலில் பாடினாள்.. அவள் பாடலுக்கு அசைந்த தென்னங்கீற்றுக் களின் அசைவுகள் அவள் பாடலை ரசித்து தென்னங்கீற்று தலையை ஆட்டுவதைப் போல இருந்தது...

*“வண்ண மலர்களில் அரும்பாவாள்*
*உன் மனதுக்கு கரும்பாவாள்*

*இன்று அலைகடல் துரும்பானாள்*
*என்னும் ஒருமொழி கூறாயோ...”*

மனமுருகப் பாடியபடி திரும்பிப் பார்த்தவள் திகைத்து நின்றாள். அறைக்கதவின் ஓரமாக கண்ணதாசன் கைகட்டி கதவின் மீது சாய்ந்து நின்றிருந்தான்...

“அண்ணே..” அகப்பட்டுக் கொண்ட உணர்வுடன் திக்கித் திணறினாள் காவ்யா..

இப்போதெல்லாம் அவள் கண்ணதாசனின் முன்பு பேச்சு வராமல் திக்கித் திணறுகிறாள் என்ற நினைவில் கண்ணதாசனுக்குள் பெருமூச்சு எழுந்தது...

எப்படியிருந்தவள் எப்படியாகி விட்டாள்..?

நிமிர்ந்த பார்வையும் நேர் கொண்ட நடையுமாக இருந்த அந்தக் காவ்யா எங்கே..?

“தூங்கலையாம்மா...?”

ஜன்னலில் சாய்ந்து பாட்டுப்பாடிக் கொண்டிருப்பவளிடம் இப்படிக் கேட்டால் அவள் என்னவென்று பதிலைச் சொல்லுவாள்..?

“தூக்கம் வரலைண்ணே...”

“ஜாமக்கோழி கூவியாச்சு.. இன்னும் தூக்கம் வரலைன்னு சொன்னா எப்படிம்மா...?”

என்னவோ தூக்கத்தை அவள் ‘போ.. போ’ வென்று பற்றி விட்டுக் கொண்டிருப்பதைப் போல அவன் பேசியதில் அவளுக்கு சுள்ளென்று கோபம் வந்தது..

ஒரு மனுஷிக்கு தூங்காமல் விழித்திருக்கக்கூடச் சுதந்திரம் இல்லையா..? இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரம்.. மதுரையில் பிறந்த காவ்யாவுக்கு கிடைக்க வில்லையென்றால் அவள் இந்தியத் திருநாட்டின் குடிமகள் என்பதில் என்ன அர்த்தம் இருக்கப் போகிறது..? அவள் தூங்காமல் விழித்திருப்பதற்கான சுதந்திரத்தைப் பெற வாதாடத் தொடங்கினாள்..

“ஏண்ணே.. தூக்கம் பிடிக்கலைன்னா அது ஒரு குத்தமா..?”

“தூங்கற நேரத்திலே தூங்கனும்.. விழித்திருக்கிற நேரத்தில விழித்திருக்கனும்.. அதுதான் நார்மல்..”

“அப்ப நான் நார்மலா இல்லன்னு சொல்றியா..?”

“அது உன் மனசுக்கே தெரியும்...”

“அடாவடியாய் பேசாதே.. தூக்கம் வந்தா தூங்கப் போறேன்.. அதுதான் வந்து தொலைக்க மாட்டேங்குதே.. அப்புறம் நான் எப்படித் தூங்குவேன்...?”

“இத்தனை நாளா வந்த தூக்கம் இன்னைக்கு ஏம்மா வராமப் போச்சு..?”

கண்ணதாசனின் கேள்வியில் காவ்யாவுக்கு ‘திக்’கென்று இருந்தது.. கண்ணதாசன் காரணிமில்லாமல் தங்கையை தூண்டித் துருவ மாட்டான்.. அதிலும் அந்த நள்ளிரவு வேளையில் அதைச் செய்ய மாட்டான்.. மனதுக்குள் பயம் சூழ்ந்த போதும் அவள் மதுரை மண்ணிற்கே உரிய தெனாவெட்டுடன் அந்தக் கேள்வியை எதிர்கொண்டாள்...

“அதத் தூக்கத்துக் கிட்டப் போயிக் கேளு.. என்கிட்டக் கேக்காதே...”

கண்ணதாசனின் புருவங்கள் உயர்ந்தன.. அவன் நிதானமான நடையுடன் காவ்யாவை நெருங்கி வந்தான்.. விடி விளக்கின் மெலிதான வெளிச்சத்தில் அவனின் ஊடுறுவும் பார்வையை அவளால் உணர முடிந்தது...

“அந்தத் தூக்கமா.. வேலைக்குப் போகிறதா வீட்டில சொல்லிட்டு... பேங்குக்குப் போகிறதா கடையில போக்குக் காட்டிட்டு.. காரில ஏறி ஏர்போர்ட்டுக்குப் பக்கத்தில போயிட்டு வந்திருக்கு..?”

அவனின் அழுத்தமான கேள்வியில் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.. கைவிரல்கள் தந்தியடிக்க.. வாய் குழற..

“அண்ணே..” என்று பயத்துடன் அழைத்தாள்...

“அண்ணன்தான்.. உனக்கு அண்ணன்தான்.. உனக்கு அண்ணனா நான் கூடப் பொறந்திருக்கேன்.. கீழே

மகளைப்பத்தின விவரம் தெரியாம உன்னைப் பெத்த ஆத்தாளும்.. அப்பனும் தூங்கிக்கிட்டு இருக்காங்க.. இத்தனை பேரு கண்ணிலயும் மண்ணைத் தூவிட்டு நீ இந்த மதுரையிலேயே எல்லை தாண்டிட்டு திரும்பி வந்திருக்க...”

அவனின் ஒவ்வொரு வார்த்தைகளும் சம்மட்டியாய் அவள் தலைமீது இறங்கியது... அவள் அதிர்வுடன் பதில் சொன்னாள்..

“நான் தப்புப் பண்ணலைண்ணே...”

“அது மத்தவங்களுக்குத் தெரியுமா..? மூடின காருக்குள்ள மணிக்கணக்கில ஒருத்தன் கூட உக்காந்து பேசிட்டு வந்திருக்க.. அது பேச்சோட மட்டும் நின்னுருச்சுன்னா சொன்னா யாரும் நம்புவாங்களா..?”

“நீ நம்பலையா..?”

“உன்னை நம்புவேன்.. உனக்கு அவன்மேல இருக்கிற மயக்கத்தையும்.. ஆசையையும் நம்ப மாட்டேன்..”

“அண்ணே...”

“அவன் ஆணழகன்தான்.. ஆறடி உயரத்தில இருக்கிற ஆம்பளைதான்.. வாட்ட சாட்டமா.. அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டுக் காளைய அடக்கற அளவுக்கு வீரமும், தெனாவெட்டும் இருக்கிறவன்தான்.. அதனால

மட்டும் நீ யோசிக்காம சட்டுன்னு அவன்மேல ஆசை வைச்சிரலாமா..?"

"இல்லேண்ணே.. அப்படியில்ல..."

"எப்படியில்ல..? உன் மனசில அவன்மேல ஆசையில்லன்னு சொல்லு பாப்போம்..."

"அண்ணே..."

காவ்யா கண்கலங்கினாள்.. கண்ணதாசனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. இதுபோன்ற விசாரணையை தங்கையிடம் மேற்கொள்ள நேர்ந்ததில் அவன் மனதில் வேதனை எழுந்தது..

"வேணாம்மா.. அவன் ஆகாயத்தில இருக்கிற நட்சத்திரம்.. அதை எட்டிப் பறிக்க உன்னால முடியாது.. அவன் மேல ஆசை வைக்காதே..."

எப்படி முடியும்..? ஆசை வைத்தது அவளா..? அவளது மனமில்லையா..? மனமென்னும் மாயக்குதிரைக்கு கடிவாளமிட அவளால் முடியுமா..? காற்றை விட வேகமாக பறக்கும் மனோசக்தியின் முன்னால் அவளால் என்ன செய்ய முடியும்..? தறிகெட்டு ஓடும் மனக்குதிரையை அடக்கும் வல்லமையை அன்னபூரணி அவளுக்குக் கற்றுத் தந்திருந்தாள்தான்.. பிறந்தது முதல் கட்டுக் காவலிலும்.. கட்டுப்பாடுகளிலும் வளர்ந்த காவ்யாவுக்கு சுயகட்டுப்பாடு அளவுக்கு மீறி இருந்ததுதான்..

ஆனால் அர்ஜீன் அவை அத்தனையையும் வென்று அவள் மனத்தை வசப்படுத்தி விட்டானே...

எல்லை மீறித்ததும்பும் அவன் மீதான ஆசையில் அவள் அலைக்கழிந்து கொண்டிருக்கும்போது அவன்மீது ஆசை வைக்காதே என்று அவளுடைய அண்ணன் கூறுகிறானே.. அவளால் முடிகிற செயலா அது...?

“அண்ணே.. இது வேணும்ன்னே நடந்த செயலில்ல..”

“எனக்கும் தெரியுது.. ஆனா.. ஆரம்பிக்கிறப்பவே நீ அணை போட்டு நிறுத்தியிருக்கலாமில்ல..?”

“எப்படி...?”

“அவனப் பாத்த முதல்நாளிலேயே அவன் மனசை நான் படிச்சிட்டேன்.. அதனாலதான் உன்னை வேற வேலைக்குப் போகச் சொன்னேன்.. நீ பாவனாவோட பிரண்ட்ஷிப்பைக் காரணம் காட்டி மாட்டேன்னு சொல்லிட்ட..”

“என்னை ஓடி ஒளிஞ்சிருக்கனும்னு சொல்கிறயா..?”

“செஞ்சாத் தப்பில்லை.. துரத்துகிற ஆசைகளிடமிருந்து ஓடி ஒளிஞ்சிருந்தா.. இந்த நடுஜாமத்தில நீ தூக்கம் பிடிக்காம பாட்டுப் பாடிக்கிட்டு இருக்கிற அவசியம் வந்திருக்காது.. அழகர்கோவிலுக்குப் போகிற அன்னைக்கு அவனும் வருகிறான்னு

தெரிஞ்சவுடனே நீ வேனில ஏறாம வீட்டுக்குத் திரும்பி வந்திருந்தா.. இந்த வினையும் வந்திருக்காது.. அவனுக்கும் நீ யாருன்னு தெரிஞ்சிருக்கும்..”

‘உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்..’ காவ்யா நினைத்துக் கொண்டாள்..

‘நான் ஏழுகடல்.. ஏழு மலையைத் தாண்டி ஒளிஞ்சிருந்தாலும் அவன் தேடிவந்து என்னை சிறையெடுப்பான்.. அவன் புத்தி தெரியாம அண்ணன் பேசுது...’

அர்ஜீனின் தீரத்தில் அவள் மனதில் படர்ந்த சிலாகிப்பு அவள் முகத்திலும் தெரிந்தது.. மங்கிய விளக்கொளியில் தங்கையின் முகத்தில் தவழ்ந்த அந்த சிலாகிப்பைக் கண்ணதாசன் கண்டுபிடித்து விட்டான்...

“வேணாம் காவ்யா.. உன்னோட இந்த ஆசைக்கு அணைபோடு...”

ஆற்றுநீருக்கு அணை போடலாம்.. கடல்நீருக்கு அணைபோட முடியுமா..? அதை அறியாதவனாக அவன் தொடர்ந்து பேசினான்...

“உன் ஆசைக்கு வேலி கட்டும்மா..”

வீட்டுக்கு வேலி கட்டலாம்.. காற்றுக்கு வேலிகட்ட முடியுமா..? துக்கத்துடன் தமையனின் முகம் பார்த்தாள் காவ்யா...

அதில் தெரிந்த இறைஞ்சல் கலந்த கண்டிப்பில் அவள் மனம் பதறியது.. அவளுடைய அண்ணனுடன் அவள் சண்டையிட்டிருக்கிறாள்.. முகம் கொடுத்துப் பேச மறுத்திருக்கிறாள்.. அப்போதெல்லாம் அவன் சிரித்துக் கொண்டிடுதான் இருந்திருக்கிறான்.. இப்படி இறைஞ்சும் பார்வையைப் பார்த்ததில்லை...

“உன் மனசை அடக்கு.. உனக்குன்னு கட்டுப்பாடுகளைப் போட்டுக்க.. அவன் மேல ஆசைப்படாதே...” கண்ணதாசன் கெஞ்சினான்..

“ஏண்ணே..? அவரு என்னை ஏமாத்திருவாருன்னு சொல்றியா..?” ஏக்கத்துடன் கேட்டாள் காவ்யா...

அத்தனை சொல்லியும்.. அர்ஜீன் மீதான ஆசையை விடாமல் கேள்வி கேட்கும் தங்கையை என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துப் போனான் கண்ணதாசன்...

அவள் குழந்தை..! ஒரு காதல் நிறைவேறி கல்யாணத்தில் முடிய.. அந்தக் காதலன் மட்டும் நல்லவனாக இருந்தால் போதாது.. அவனைச் சேர்ந்தவர்களும் அப்படியிருக்க வேண்டும் என்று அறியாத பேதை..

அவள் துடிப்பானவள்தான்.. புத்திசாலிதான்.. ஆனால் அந்தத் துடிப்பும்.. புத்திசாலித்தனமும் நேர்கொண்ட பாதையில் தானே பயணிக்கின்றன.. அர்ஜீனைப் பெற்ற

பார்த்தசாரதியைப் போலக் குறுக்கு வழியில் அவை பயணம் செய்யவில்லையே...

கண்ணதாசன் அனைத்தும் அறிந்தவன்.. அர்ஜீனின் கண்களில் காவ்யாவின் மீதான சொந்தத்தைக் கண்டதும் சந்தேகப்பட்டான்.. அவனது சந்தேகத்தை உறுதிப் படுத்துவதைப் போல வீட்டில் பாவனாவுடன் அழகர் கோவிலுக்குப் போகப் போவதாக பொய் சொல்லிவிட்டு.. அர்ஜீன் உட்பட கடையில் வேலை செய்த அனைவருடனும் காவ்யா வேனில் போய் திரும்பி வந்தாள்..

‘முதல் பொய்...’

காதலின் முதல்படி கள்ளத்தனம்தான் என்பதை அறிந்து வைத்திருந்த கண்ணதாசன் அவனுடைய தங்கையின் மனதில் அந்தக் கள்ளத்தனத்தைப் புகுத்திய அர்ஜீனைப் பற்றிய விசாரணையை ஆரம்பித்து விட்டான்..

சென்னைக்கும்.. மதுரைக்கும் இடையில் உள்ள தூரம் ஒன்றும்.. பூமியின் விளிம்புகளுக்கிடையில் உள்ள தூரம் போல கடக்க முடியாததில்லையே...

கண்ணதாசன் அந்தத் தூரத்தைக் கடந்தான்.. சென்னைக்கு வேலை சம்பந்தமாகப் போவதாக வீட்டில் சொல்லிவிட்டு.. அர்ஜீனின் குடும்பத்தைப்பற்றி விசாரித்தான்..

அப்போது அவன் தெரிந்து கொண்ட எதுவும் அவன் மனதுக்கு உவப்பானதாக இல்லை...

தொழிலாளர்களுடன் ஒன்றாக வேனில் பயணிப்பவன் அர்ஜீன்.. ஆனால், அர்ஜீனின் தந்தையான பார்த்தசாரதி.. அவரிடம் வேலை பார்க்கும் ஜெனரல் மேனேஜரையே தனக்கு இணையாக நினைக்க மாட்டார் என்பதை அறிந்த போது கண்ணதாசனின் மனதில் பயம் சூழ்ந்தது..

அப்படிப்பட்ட ஒரு மனிதரின் மகன்மீதா அவன் தங்கை ஆசை வைத்திருக்கிறாள்..? எங்கிருந்து இந்த ஆசை வந்து தொலைத்தது..?

# 55

*வானும்.. நிலவும்.. சாட்சியாக - உன்னுடன்..*
*வாழ்ந்து விடவே ஆசைகொண்டேன்..*

**எ**ங்கிருந்தோ வந்த ஆசைகளினால்.. அவனின் செல்லத் தங்கையின் மனம் சின்னா பின்னமாவதா..?

அதனால்தான் வேண்டாம்.. இந்த ஆசைகள் எங்கிருந்து வந்ததோ.. அங்கேயே அவற்றைத் திருப்பி

அனுப்பு என்று தங்கையிடம் முட்டி மோதினான் கண்ணதாசன்..

‘இவளுக்குத் தெரியுமா.. அந்த பார்த்தசாரதி.. மகனுக்கு கட்டி வைக்க ஒரு கோடிஸ்வரியை பெண் கேட்டிருக்கிறான் என்பதை...’

அதைச் சொல்ல முடியாமல் அவன் மனம் தவித்தது.. அதைச் சொல்லி.. தங்கையின் முகத்தில் படியும் நிராதரவான நிராசையின் நிழலைப் பார்க்க அவன் விரும்பவில்லை...

அவனால் அதைக் கண்கொண்டு பார்க்க முடியாது.. கண்ணதாசன் தங்கைக்காக பெரிய இடங்களில் மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனைவிட வசதியான ஒருவனைத் தேடிக் கொண்டிருந்தான்.. அவளுக்குச் சீராகக் கொடுக்க நகைகளைச் சேகரித்துக் கொண்டிருந்தான்.. அவளுக்காக.. மதுரையின் புறநகர் பகுதியில் அழகான பங்களா ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தான்.. அவளுக்குத் திருமணப் பரிசாக கார் வாங்கிக் கொடுக்க நினைத்திருந்தான்...

இதெல்லாம் யாருக்கா..? அவன் தங்கைக்காக...

அந்தத் தங்கை.. அவன் நினைத்ததைப் போல சீரும்.. சிறப்புமாக திருமணம் செய்து கொண்டு... வண்டி வண்டியாய் சீர்வரிசைகளுடனும்.. கழுத்து

நிறைய நகைகளுடனும்.. அவன் சீதனமாகத் தரும் கார்.. பங்களாவுடனும்.. புகுந்தவீட்டில் மதிப்பும்.. மரியாதையுமாக வாழப் போகாமல்.. எவனோ ஒரு கோடிஸ்வரனின் மீது ஆசைப்பட்டு.. அவள் வாழ்வுக்கான அங்கீகாரத்திற்காக போராட வேண்டுமா..?

அவனுக்குத் தெரியும்.. அவன் தரும் இத்தனை சீர்வரிசையும் பார்த்தசாரதிக்கு ஒரு பொருட்டேயில்லை என்பது...

அவர்வீட்டின் கார் டிரைவருக்கே அந்தச் சீர்வரிசை களெல்லாம் போதாது என்று சொல்லக்கூடியவர் அவர்... அவரின் ஒருநாள் வருமானத்தில் கண்ணதாசன் தரும் அத்தனை சீர்வரிசைகளையும் வாங்கிவிடக் கூடிய வசதி படைத்தவர் அவர்...

அவருக்குப் போய் மருமகளாக வேண்டும் என்று காவ்யா நினைத்தும் பார்க்கலாமா..?

காவ்யாவிடம் சொன்னால்... அவருக்கு மருமகளாக வேண்டும் என்று யார்நினைத்தது.. நான் அர்ஜீனுக்கு மனைவியாக வேண்டுமென்றுதானே நினைத்தேன் என்று விதண்டாவாதம் பேசுவாள்...

இரண்டும் வேறுவேறு அல்ல.. ஒன்றுதான் என்று அவளுக்கு யார் புரியவைப்பது..?

“அன்னைக்குச் சொன்னதைத்தான் இன்னைக்கும் சொல்றேன் காவ்யா.. வானத்தில வர்ற வட்டநிலா மேல ஆசைப்படாதே.. அதை எட்டி நின்னுதான் உன்னால பாக்க முடியும்...”

இவன் இதை விடவே மாட்டானா என்றிருந்தது காவ்யாவிற்கு...

‘இப்பத்தான் நட்சத்திரத்தப் பறிக்க முடியாதுன்னு சொல்லுச்சு.. இப்ப வட்டநிலாகிட்டப் போயிருச்சு.. இது ஏன் வானத்துமேலயே கண்ணா இருக்குது..?’

அர்ஜீனின் மீது அவளுக்கிருந்த ஆசை அந்த வானத்தைப் போல பரந்து விரிந்திருந்தது.. அது சொல்லில் அடங்காதது.. ஒரு அண்ணனிடம் தங்கை சொல்லி விடமுடியாதது...

“நிலாவில கால் பதிச்ச மனுசங்களும் இருக்காங்கண்ணே.. முடியாதுன்னு இந்த உலகத்தில எதுவுமே இல்ல.. இத நான் சொல்லித்தான் நீ தெரிஞ்சுக்கனுமா..?”

காவ்யாவின் வார்த்தைகள் அவள் அர்ஜீனின் மீதான ஆசையை விடப் போவதில்லை என்பதை உணர்த்திவிட கண்ணதாசன் சினத்துடன் தங்கையை முறைத்தான்..

“இவ்வளவு நேரமா ஓதறேன்.. உன் மண்டையில ஏறலையா..? இந்த ஆசைவேணாம்.. விட்டுடு...”

“ஏன்னு சொல்லு.. அவரு கெட்டவரா..”

ஆமாம் என்று கண்ணதாசனால் எப்படிச் சொல்ல முடியும்..? அர்ஜீன் நல்லவன் ஆயிற்றே...

‘அதுக்காக..?...’ கண்ணதாசனின் புருவங்கள் முடிச்சிட்டன...

“பாத்தியா.. உன்னாலயே பதில் சொல்ல முடியல..”

“ம்ஹீம்.. உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்.. நான் பதில் சொன்னா நீ தாங்க மாட்ட...”

“எதையும் தாங்கும் இதயம் எனக்கிருக்குண்ணே.. ஒருதாய் வயித்தில பிறந்தும்.. ஆம்பளைங்கிறதுக்காக நீ நினைச்ச படிப்பை படிச்ச.. ஆசைப்பட்ட வேலையை அடைஞ்ச.. பொட்டப்புள்ளயா பொறந்துட்ட பாவத்துக்காக இது ரெண்டையும் செய்ய முடியாம கம்யூட்டர் விக்கிற கடையில கணக்கெழுதற உத்தியோகம் பார்க்கிறேனே.. அதையே தாங்கிக்கிட்டவ நானு.. வேற எதையும் தாங்க மாட்டேனா..? நீ சொல்லு.. நான் தாங்கிக்குவேன்...”

வேண்டுமென்றே காவ்யா அவளுக்கு அவள் வீட்டில் மறுக்கப்பட்டிருக்கும் உரிமைகளைப் பற்றி நினைவூட்டுகிறாள் என்று கண்ணதாசனுக்குப் புரிந்து விட்டது..

அவன் கடிந்து பேச வாய் திறந்தபோது...

"கண்ணா.." என்ற அழைப்புச் சப்தம் கேட்டது...

அது அன்னபூரணியின் குரல் என்பதால் அண்ணனும் தங்கையும் அவசரமாக அமைதியானார்கள்...

"என்ன கண்ணா.. தூங்காம இங்க என்ன பேசிக்கிட்டு இருக்க..?"

விளக்கைப் போட்டாள் அன்னபூரணி.. அறையில் பரவிய வெளிச்ச வெள்ளத்தில் அண்ணனும் தங்கையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

அன்னபூரணியும்.. சிவதாணுவும்.. தரைத்தளத்தில் இருந்த பெரிய படுக்கையறையில்தான் தூங்குவார்கள்.. மாடியிலிருந்த மூன்று படுக்கையறைகளில் இரண்டை கண்ணதாசனும்.. காவ்யாவும் எடுத்துக் கொண்டிருக்க.. மூன்றாவது படுக்கையறை பூட்டப்பட்டிருந்தது.. விருந்தினர் வந்தால்கூட அந்த அறையை அன்னபூரணி திறந்து விடமாட்டாள்...

"அதான் கீழேயே ஒன்னுக்கு ரெண்டா பெட்ரூம் இருக்கில்ல.. அதுக்கு மேல என்னத்துக்கு மாடிமேல ஏறனும்.." என்று வாயை மூட வைத்து விட்டுவாள்..

அதற்கும் மேலே அதிகமான ஆள்கள் வந்து விட்டால்.. ஹாலின் சோபாக்களை ஓரம் கட்டிவிட்டு.. வரிசையாக ஜமுக்காளங்களையும்.. பாய்களையும் விரித்து தலையணைகளைப் போட்டு விடுவாள்..

எந்தக்காரணம் கொண்டும் மாடியில் விருந்தினரைக் கால் பதிக்க விடமாட்டாள்...

"அது புள்ளைகளுக்கு.." என்று சொல்லிவிடுவாள்..

அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளைப் பார்க்க ஆரம்பிப்பதற்கும்.. நடுநிசியைத் தொடும் நேரத்தில் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு தூங்கப் போவதற்கும் அவளுக்கு கீழேயிருந்த படுக்கையறைதான் தோதாக இருந்தது...

"யாராச்சும் வந்துக்கிட்டே இருப்பாங்க.. பதிலச் சொல்லி அனுப்பி வைச்சுக்கிட்டே இருக்கனும்.. மாடியில இருந்து இறங்கி ஓடி வர்றதுக்கு எனக்கென்ன வயசா திரும்பியிருக்கு.. நின்னா உக்கார முடியல.. உக்காந்தா படுக்க முடியல.. அதனால.. என்ன கழுதைக்கு மாடிப்படியில கால வைக்கனும்முன்னு கீழே இருக்கிற பெட்ரூமிலயே தங்கிட்டோம்.." என்று சொல்லுவாள்...

அந்த அன்னபூரணி.. அந்த அர்த்தஜாம வேளையிலே.. குறட்டை விட்டுத்தூங்காமல் மாடிப்படிகளில் ஏறிவந்திருக்கிறாளா..?

"என்னடா.. கேக்கறதுக்கு பதிலச் சொல்லாம கேப்பையத் திருடினவனப் போல இந்த முழி முழிக்கிற..?" அன்னபூரணி மகளை விட்டுவிட்டு மகனைப் பார்த்து அதட்டினாள்..

திருடினது அண்ணனல்ல.. தங்கைதான் என்பதை அறியாமல் அண்ணனைத் தாய் அதட்டுகிறாளே என்ற குற்ற உணர்வில் தவித்துப் போனாள் காவ்யா..

"அம்மா..." என்று அவள்பேச வாய்திறந்த போது...

"காவ்யா.." என்று அதட்டினான் கண்ணதாசன்...

"அவள எதுக்குடா அதட்டறே...?"

"ஒன்னுமில்லம்மா.. என் சிநேகிதனோட வீட்டில தங்கச்சியைப் பொண்ணுக் கேக்கனும்னு ஆசைப்படறாங்களாம்.. அதான் தங்கச்சியோட சம்மதத்தத் தெரிஞ்சுக்கலாம்ன்னு வந்தேன்..."

கண்ணதாசன் பேச்சை மாற்றியதில் நன்றியுணர்வு கலந்த நிம்மதி காவ்யாவின் மனதில் ஏற்பட்டாலும்.. பேச்சின் திசையில் அரண்டு விட்டாள்...

'ஆத்தாடி.. அண்ணன் கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சுருச்சே...'

"உனக்கென்ன புத்தி புல்மேயப் போயிருச்சாடா தம்பி..? புத்திய கடன் கொடுத்திட்டியா..? இந்தப் பேச்ச உந்தங்கச்சிக் கிட்டப் பேசறதுக்கு முன்னாலே எங்ககிட்டயில்ல நீ பேசியிருக்கனும்...?"

"அதுக்கு முதல்ல தங்கச்சிகிட்ட சம்மதம் கேட்டிரலாமுன்னு..."

“எதுக்கு இந்த இழுவை இழுக்கிறவன்..? இவ என்ன பெரிய மனுஷியா..? இவ இஷ்டத்துக்கு ஆட விடறதுக்கா ஆத்தான்னு நான் ஒருத்தி உசிரக் கையில பிடிச்சுக்கிட்டு இருக்கேன்..?”

“அதுக்கில்லம்மா...”

“வேண்டாம்டா தம்பி.. பொம்பளப் புள்ளய தலையில தூக்கி வைச்சுக்கிட்டு ஆடாத.. அது குடும்பத்துக்கு ஆகாது..”

“சரிம்மா...”

“பொண்ணுக் கேட்டிருக்க மாப்பிள்ள வீடு எங்கேயிருக்கு.. யாரு.. என்ன விவரம்ன்னு விடிஞ்சப்புறம் பேசிக்கலாம்.. இப்ப நீ தூங்கப் போ...”

“ஆகட்டும்மா...”

கண்ணதாசன் போய்விட்டான்.. அவன் போய் விட்டதில் அப்பாடி என்ற நிம்மதியுணர்வு மனதில் ஏற்பட்டாலும்.. கடுமையான முகத்துடன் நின்று கொண்டிருந்த அன்னபூரணியைக் கண்டதும் மனதுக்குள் அரண்டாள் காவ்யா...

‘அடுத்தது அம்மாவா...’

நேரத்துக்கு தூங்கியிருந்தால் இந்தக் கொடுமைகளிலிருந்து தப்பியிருக்கலாமே என்ற காலங்கடந்த ஞானோதயம் காவ்யாவுக்கு ஏற்பட்டது..

“என்னடி..?”

“என்னம்மா..?”

“உன் அண்ணன்காரன அரட்டிக்கிட்டு இருந்தியா..?”

“யாரு அரட்டினது..? நானா..?”

காவ்யாவுக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது...

“அண்ணே.. அண்ணே.. என்னப் பொண்ணுக் கேட்டிருக்க சங்கதிய அம்மா காதில போடாதே.. நானு அவிழ்த்து விட்ட கன்னுக்குட்டியா இந்த மதுரையைச் சுத்தி ஊர்வலம் வர்றேன்.. எனக்கு அடக்க ஒடுக்கமா கல்யாணம் வேணாம்ன்னு அவன்கிட்டச் சொல்லிக்கிட்டு இருந்தியா..?”

“இல்லம்மா...”

“ஊரைச் சுத்தற உன் உள்ளங்காலில சூடு வைச்சிருவேன்.. பாத்து நடந்துக்க.. யாருகிட்ட உன் வித்தாரத்தனத்தக் காட்டற..?”

“நிச்சயமா உன்கிட்டக் காட்ட மாட்டேன்ம்மா...”

“அஃது.. அந்த பயம் இருக்கட்டும்.. வித்தாரக்கள்ளி விறகொடிக்கப் போனாளாம்.. கத்தார முள்ளுப்பட்டு கர்ரு புர்ருன்னு கத்தினாளாம்...”

“ஏம்மா.. அவ வீட்டில கேஸ் ஸ்டவ் இல்லியா...?”

“வாயிலயே போட்டிருவேன்.. யாருகிட்ட உன் வாயைக் காட்டற..? உன் கல்யாணத்தத் தட்டிக் கழிச்ச உன் அண்ணன்காரனே இப்ப பச்சைக் கொடியை காட்டிட்டான்..”

“நானென்ன ரயிலாம்மா..? மனுஷிம்மா.. மனுஷி...”

“அடச்சீ.. அடங்கு.. உனக்கென்ன நேத்துத்தான் பிறந்த பப்பான்னு மனசுக்குள்ள நினப்பா..?”

“இல்லம்மா...”

“ஏழு கழுதை வயசாகுது.. இன்னும் தாலியக் கட்டிக்கிட்டு புருசன் வீட்டுக்குப் போயி குடும்பம் நடத்த மாட்டேன்னு அடம் பிடிச்சா என்னடி அர்த்தம்..? உனக்கு மூத்தவன் அவன்.. உன் கல்யாணம் நடந்தாத்தானே அவனுக்கும் ஒரு கல்யாணத்தப் பண்ணிப் பார்க்க முடியும்..?”

“அதுக்கு நான்தான் உங்களுக்கெல்லாம் கிடைச்சேனா..?”

“ஆமாம்கிறேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..? உன் ரவுசையெல்லாம் உன் அண்ணன் காரனோட நிப்பாட்டிக்க.. என்கிட்டக் காட்டாதே.. எப்பேற்பட்ட வித்தாரக் கள்ளியையும் வந்து பாரு வட்டப்பாறைக்குன்னு சொல்றவதான் இந்த அன்னபூரணி.. அத நினப்பில வைச்சுக்கிட்டு இழுத்திப் போர்த்தித் தூங்கற வழியப் பாரு..”

# 56

*உன்மீது நான்கொண்ட ஆசையை..*
*நித்திரையிலும் நீயுணர ஆசைகொண்டேன்..*

ஒற்றைவிரலை உயர்த்தி எச்சரிக்கை செய்து விட்டு அன்னபூரணியும் அகன்றுவிட.. அவசரமாய் கதவை அடைத்து.. விளக்கை அணைத்துவிட்டு படுக்கையில் விழுந்தாள் காவ்யா...

அன்னபூரணிதான் எச்சரித்துவிட்டுப் போயிருந்தாளே..

“பேசாம தூங்கப் போறியா.. இல்ல.. உன் அப்பாவ எழுப்பி உனக்குப் புத்தி சொல்ல அனுப்பி வைக்கவா..? அவரு திருக்குறளுப் புத்தகத்த தூக்கிக்கிட்டு வந்தாத்தான் நீ சரிப்படுவ...”

அதற்கு மேலும் விழித்திருந்து.. விடியவிடிய திருக்குறளைப் படிக்க காவ்யாவுக்கென்ன ஆசையா அலைமோதுகிறது..?

அவள் அன்னபூரணி சொன்னதைப்போல இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டாள்.. காலையில்

கண்விழித்த போதே மனதுக்குள் அர்ஜீனைப் பார்க்க வேண்டும் என்ற பரபரப்பு வந்து தொற்றிக் கொண்டது..

அவசரமாக குளித்து.. உடை மாற்றி.. வேலைக்குச் செல்லத் தயாராகி அவள் மாடிப்படிகளில் இரண்டிரண்டு படிகளாக இறங்கியபோத.. ஹாலில் பேப்பரும்.. காபியுமாக அமர்ந்திருந்த கண்ணதாசன் புருவங்களை உயர்த்தினான்..

காவ்யாவின் மனதில் அபாயமணி அடித்தது.. கண்ணதாசன் சுவர் கடிகாரத்தைப் பார்த்து விட்டு காவ்யாவையும் பார்த்தான்...

“என்னண்ணே...”

“இப்ப மணி என்ன தெரியுமா..?”

“ஏண்னே.. நேரமாகிருச்சா..?”

“அப்படி ஆகியிருந்தாத்தான் அது எப்பவும் போலன்னு நினைச்சுக்கிட்டிருப்பேனே.. இப்ப மணி ஏழுகூட ஆகலை.. இந்த நேரத்தில கடையைத் திறந்திருப்பாங்களா..?”

கண்ணதாசனின் அமர்த்தலான கேள்வியில் காவ்யாவின் முகத்தில் குடம்.. குடமாக அசடு வழிந்தது...

“அதுண்ணே.. கோவிலுக்குப் போகலாம்ன்னு...”

“இன்னைக்கு வெள்ளிக்கிழமையா..?”

“இல்லைண்ணே.. வெள்ளிக்கிழமைதான் கோவிலுக்குப் போகனுமுன்னு சட்டம் எதுவும்மிருக்கா..”

“இல்லைதான்...”

பேப்பரை மடித்து.. நீவி.. நிதானமாக அதை டீப்பாயின்மீது போட்டுவிட்டு நிமிர்ந்த கண்ணதாசன் எழுந்து தங்கையின் அருகில் வந்தான்..

“சட்டம் போட்டு நம்ம மனசக் கட்டுப்படுத்த முடியாதும்மா.. நாமதான் அதைக் கட்டுப்படுத்தனும்.. இன்னைக்கு நீ லீவு போடனுமே...”

“அண்ணே..” ஏறக்குறைய அலறிவிட்டாள் காவ்யா..

“மெல்ல.. இப்ப நான் என்னத்தைச் சொல்லிப் புட்டேன்னு இந்தச் சத்தம் போடற..? அப்பா எழுந்திருச்சிரப் போறாரு.. அம்மா அடுப்படிய விட்டு வந்திரப் போகுது..”

“அரட்டிப் பாக்கறியா..”

“உன்னை அரட்டியெல்லாம் கட்டுப்படுத்த முடியாதுன்னு எனக்கும் தெரியும்...”

“தெரிஞ்சுக்கிட்டே ஏன் வழிய மறிக்கற.. வழிய விடு..”

“நீ எக்கேடோ கெட்டுப் போன்னு உன் வழியில போகவிட என்னால் முடியாது...”

“இன்னைக்கு நான் லீவு போட மாட்டேன்...”

“ஏன்..?”

“முக்கியமான வேலையிருக்கு...”

“எது.. அந்த அர்ஜீனை கனடாவுக்கு அனுப்பி வைக்கிற முக்கியமான வேலையா..?”

அவன் கண்டுபிடித்து விட்டான் என்ற உணர்வில் உதட்டைக் கடித்துக் கொண்டாள் காவ்யா...

“தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக அலற வைக்கிற..? என்னைப் போக விடுண்ணே...”

கண்ணதாசன் தங்கையின் முகத்தையே கூர்மையாகப் பார்த்தான்.. அதில் தெரிந்த கோபத்தில் காவ்யா ஆடிப் போனாள்.. அதுநாள் வரை அவள் சந்தித்திராத அவளுடைய அண்ணனின் இன்னொரு முகத்தில் அவள்மனம் பதறியது...

‘இந்த அண்ணன் என்காதலை ஏத்துக்காதா..?’

“ப்ளீஸ் அண்ணே... வழியை விடு..”

அவள் கண்ணீருடன் கெஞ்சினாள்.. அவள் விழிகளில் தெரிந்த யாசிப்பில்.. பரிதவிப்பில்.. மனத் துடிப்பில்.. கண்ணதாசனின் இதயம் கசிந்து உருகியது...

அவளின் காதலின் தவிப்பில் அவன் கரைந்து நின்றான்...

"என்னடி காவ்யா.. இந்த நேரத்தில எங்கே போற..?" கையில் காபித்தம்ளருடன் சமையலறையிலிருந்து அன்னபூரணி வெளிப்பட்டாள்..

'அம்மா வந்துருச்சே...'

இனித்தப்பித்து ஓட முடியாது என்ற நிலையில் காவ்யாவின் கண்களில் கண்ணீர் குளம் கட்டியது...

"பாவனா வீட்டுக்குப் போகிறதாம்மா..." கண்ணதாசன் காவ்யாவின் சார்பாக பதில் சொன்னான்...

'இதென்ன புதுக்கதை...' காவ்யா திகைத்துப் போனாள்...

அவளைத் தடுத்து நிறுத்தியவனே உதவிக்கரம் நீட்டுகிறானா..?

"காபித் தண்ணியக்கூடக் குடிக்காம அவ வீட்டுக்கு இந்த நேரத்தில இவ எதுக்காக போறாளாம்..?" அன்னபூரணி மகளிடம் காபியை நீட்டியவாறே அதட்டினாள்...

"என்னமோ அவ வீட்டில பூஜையாம்.. நம்ம காவ்யாவயும் கூப்பிட்டாங்களாம்.. இதுக்குத்தான் சாமி கும்பிடறதுன்னா லட்டு ஜிலேபியச் சாப்பிடதப்

போல அவ்வளவு இஷ்டமாச்சே.. அதான் விட்ட விடிகாலையிலேயே ஓடுது.."

"அதுக்காக சாப்பிடாமக் கூடவா ஓடுவாங்க..?"

"அவங்க வீட்டில விருந்து ஆக்குறாங்களாம்..."

"என்னமோ போப்பா.. இவள காலாகாலத்தில ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுத்தாத்தான் எனக்கு நிம்மதி.. என்னான்னு தெரியல.. இந்த ஒரு மாசமா படுத்தா தூக்கம் வர மாட்டேங்குது..." அன்னபூரணி புலம்பினாள்...

தாய் அறியாத சூளில்லை என்ற குற்ற உணர்வில் உதட்டைக் கடித்துக் கொண்டாள் காவ்யா...

அன்னபூரணி சமையலறைக்குள் போய் விட்டாள்.. காவ்யா கண்ணதாசனை அனுமதி வேண்டும் பார்வையினைப் பார்த்தாள்...

"போ..." என்று ஒற்றைச் சொல்லில் அனுமதி அளித்தான் அவன்..

"அண்ணே..." நன்றியுடன் அவனைப் பார்த்து விட்டு ஓட்டமும் நடையுமாக வாசலுக்குப் பாய்ந்தாள் காவ்யா...

அவள் வண்டியை எடுத்துக் கொண்டிருந்த போது கண்ணதாசன் வாசலுக்கு வந்தான்...

‘என்னாச்சு..? மனசைமாத்திக்கிட்டேன்.. நீ போக வேணாம்ன்னு சொல்லப் போகுதா..?’ காவ்யா திகிலடைந்து போனாள்..

கண்ணதாசன் மௌனமாக அவளிடம் ஆயிரம் ரூபாய் நோட்டை நீட்டினான்...

“அண்ணே...” புரியாமல் விழித்தாள் காவ்யா...

“மாசக் கடைசி.. உன் கையில பணமிருக்காது.. காலயிலயும் சாப்பிடாம.. மதியத்துக்கும் சாப்பாட்டைக் கட்டிக்காம கிளம்பிப் போற.. வயித்தைக் காயப் போடாம ஹோட்டலில வாங்கிட்டு வரச் சொல்லி கடையில வைச்சுச் சாப்பிட்டிரு...”

அவனின் கரிசனத்தில் காவ்யாவுக்கு கண்ணீர் வந்து விட்டது.. அதற்கு மேலும் அங்கே தாமதித்தால் அவனின் பாசத்துக்கு கட்டுப்பட்டு வீட்டுக்குள் போய் விடுவோமோ என்ற பயத்துடன் அவள் பேய் போல வண்டியை விரட்டினாள்.. மனதுக்குள் லேசான துயரமும்.. சஞ்சலமும் மையம் கொண்டிருந்தன.. வழியில் இருந்த பெருமாள் கோவிலின் முன்பு வண்டியை நிறுத்தி விட்டு இறங்கினாள்.. கலக்கம் வரும் போதெல்லாம் அவளின் கண்ணீரைத் துடைக்கும் அந்த கார்மேக வண்ணனின் கருணை இப்போது எங்கே போய்விட்டது என்ற கேள்வியுடன் கோவிலுக்குள் நுழைந்தாள்...

அதிகாலையின் கோவில் பிராகாரம் அழகாக இருந்தது.. நீர் தெளித்துக் கோலமிடப்பட்டக் கல் தரையில் நடந்தபோது மனதுக்குள் இருந்த துயரமேகம் விலகி.. அமைதி தவழ்வதை உணர்ந்தாள் காவ்யா...

கோபுரத்தின் மாடங்களில் சிறகடித்த கோவில் புறாக்களைப் பார்த்தபோது.. இதை நின்று பார்க்க.. என்றேனும் நினைத்ததுண்டா என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தது...

பட்டுப் பாவாடையுடன் ஓடி வந்த ஒரு குட்டிச் சிறுமி அவள்மீது மோதி விலகி "ஸாரி.." என்று சொல்லி விட்டுத் தொடர்ந்து ஓடினாள்.. ஒரு சின்னச்சிரிப்புடன் அந்தச் சிறுமியை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள்...

"காவ்யா..." என்ற அழைப்பில் ஆனந்தப் பரவசத்துடன் திரும்பினாள்.. அவள் கண்கள் ஒளிர்ந்தன..

அது அர்ஜினின் குரல்தான் என்று சொன்ன அவள் காதுகள் அவளை ஏமாற்றவில்லை.. அங்கே அர்ஜீன்தான் நின்றிருந்தான்..

"நீங்களா..?"

அவளின் ஆனந்தத்தில் அவன் விழிகளும் ஒளிர்ந்தன.. அவளையே பார்த்தபடி அவளுக்கு வெகு அருகில் நெருங்கி வந்தவன்..

“நானேதான்..” என்றான்..

“உங்களை இங்கே பார்ப்பேன்னு நான் நினைச்சே பார்க்கலை...” சந்தோச மிகுதியில் அழுதுவிட்டாள் காவ்யா...

“ஏய்ய்..” அர்ஜீன் அவளைச் செல்லமாகக் கடிந்து கொண்டு கண்ணீரைத் துடைத்து விட்டான்..

“நைட்டெல்லாம் தூக்கம் பிடிக்கலை.. நீங்க இன்னைக்குக் கிளம்பப் போறிங்களேன்னு விடியக் காலையிலேயே கிளம்பி ஓடி வந்திட்டேன்.. ஆனாலும் கடைதிறக்க நேரமாகுமே.. அதுக்குப் பின்னாலயும் உங்ககிட்ட தனியா ஒத்தச் சொல்ல பேச முடியனுமேன்னு மனசு கிடந்து அடிச்சுக்கிருச்சு...”

அவளின் மனநிலையை காவ்யா விவரித்ததபோது அவன் மனதில் காதல் பொங்கியது.. இப்படிப்பட்டவளை எப்படி விட்டுக் கொடுக்க முடியும் என்று தனக்குள் அவன் கேட்டுக் கொண்டான்...

விழிகளில் அவனுக்கான தேடலுடன் நிற்கும் இவளின் காதலைப்பெற அவன் எத்தனை பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்பதை கண்ணதாசன் அறிவானா என்ற கேள்வி அவன் நெஞ்சில் எழுந்தது...

‘என்னவோ வில்லனை விரட்டறதைப் போல என் தங்கையை விட்டு விடுன்னு மிரட்டறானே.. இது விட்டுவிட முடியாத உறவுன்னு ஏன் அவனுக்குப் புரியலை...’

அர்ஜீன் உதட்டைக் கடித்தபடி காவ்யாவை நோக்கி அவனது உள்ளங்கையை விரித்து நீட்டினான்.. கண்ணீர் துளிகளை உகுத்தபடி அவன் உள்ளங்கையில் தன் உள்ளங்கையை பதித்தாள் காவ்யா.. அர்ஜீனின் உள்ளங்கை அவளின் மலர்போன்ற மென்மையான உள்ளங்கையை தன் வலிய கரத்துக்குள் இறுக்கமாக பொதிந்து மூடிக் கொண்டது.. விடுபட முடியாத.. விடுபட விரும்பாத அந்த இறுக்கமான பிணைப்பில் காவ்யாவின் மனதிலிருந்த சஞ்சலங்கள் விலகி ஓடுவதைப் போல அவள் உணர்ந்தாள்.. அவனின் கரம் தந்த பாதுகாப்பில் அவள் மனம் நனைந்தது...

“போகலாமா..?” அவன் கேட்டான்...

எங்கேயென்று கேட்காமல் சம்மதமாய் அவள் தலையசைத்தாள்.. அந்த நொடியில் அவளை அர்ஜீன் கடத்திச் சென்றிருந்தாலும் அவள் விருப்பத்துடன் உடன் பட்டிருப்பாள்.. அந்த அளவுக்கு மனரீதியாக அவள் நெகிழ்ந்திருந்தாள்...

அவன் அவளை அம்பாளின் சன்னதிக்கு அழைத்துச் சென்றான்..

பெருமாளின் பாதம் பிடிக்கும் பாக்கியம் பெற்ற மகாலட்சுமி கருணையுடன் அவளைப் பார்த்துச் சிரித்தாள்.. தாயாரை சேவித்து விட்டு பெருமாளின் சன்னதிக்கு சென்று சேவித்தார்கள்.. கற்பூர ஆரத்தியில் தெரிந்த கார்மேக வண்ணனின் மலர்முகத்தில் சிரிப்பிருந்தது..

'நீ என்னைக் கைவிடவில்லை...' காவ்யா மனதுக்குள் சொல்லிக்கொண்டாள்...

'விலகி விட்டாயோ என்று நினைத்தேன்.. நீ விலகவில்லை.. உன் மலர்கரம் என்னைத் தாங்கிப் பிடித்திருக்கிறது.. தவற விடவில்லை..'

அர்ஜீன் அவளிடம் குங்குமத்தை நீட்டினான்.. அதை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டவளின் மனதில் சொந்தம் உருவானது.. காலம்காலமாய் அவனை அறிந்தவளைப் போல உணர்ந்தாள் அவள்.. பேச்சுக்கள் தேவையில்லாத மௌனம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது.. அவர்கள் பிரகாரத்தை வலம் வந்தார்கள்...

கோவிலின் உள் பிரகாரத்திலிருந்த மண்டபத்தின் படிகளில் அமர்ந்தான் அர்ஜீன்.. அருகில் அமர்ந்த காவ்யாவின் நெற்றியிலிருந்த குங்குமத் தீற்றை உற்றுப் பார்த்தான்.. மங்கலகரமான தொரு அழகை அது கொடுத்திருப்பதை உணர்ந்தவனுக்கு அவள் மீதான காதல் பெருகியது..

# 57

*உன் கைத்தலம் பற்ற நான் கண்டகனவு..*
*நனவாக மாற ஆசைகொண்டேன்..*

“**கா**வ்யா...”

“ம்ம்ம்...”

“கனடா போக மனசேயில்லடி...”

“அப்புறம் எதுக்காக போகிறிங்களாம்..” அவள் சிணுங்கினாள்...

அந்தச் சிணுங்கலில் தெரிந்த உரிமையை அவன் ரசித்தான்.. அந்த உரிமை அவனுக்குப் பிடித்திருந்தது.. அது மழைச்சாரலாய் அவன் மனதை நனைத்தது.. சில்லென்று அவன் மனம் நனைத்த அந்த வசீகரத் துளிகளில் அவன் மனம் கிறங்கிப் போனான்.. அவன் நேசிக்கும்.. அவனை மட்டும் நேசிக்கும் அவனுடைய காதலியின் அருகாமையில் அவன் மனம் கிளர்ந்தது...

“போய்த்தானே ஆகனும்..? போகாம இருக்க முடியாதுடி..” அவன் கொஞ்சலாக அவளைச் சமாதானப் படுத்தினான்..

"போய்த்தான் ஆகனுமுன்னு நினைக்கிறவர் போக மனசில்லன்னு ஜாலம் பண்ணக்கூடாது..." அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்...

"ஜாலமா..?" அவனுக்குப் புரியவில்லை...

"ஆரம்பிச்சுட்டிங்களா..? உங்க கூடப் பேசனும்னா அதுக்குன்னு ஒரு அகராதியை எழுதிக் கொடுத்துட்டுத் தான் உட்கார்ந்து பேசனும் போல இருக்கு.. இது கூடத் தெரியாதுன்னா எப்படி..?"

"இது போலல்லாம் நான் பேசினதில்லடி.."

"இதப்பாருடா.. இவரே ஜாலக்காரர்.. இவருக்கு ஜாலம்ன்னா என்னான்னு தெரியாதாம்.. இந்தக் கூத்த எங்கே போய் சொல்ல..?"

"எங்கேயும் போய் சொல்லாதே.. நான் எதுக்கு இருக்கேன்..? எங்கிட்டச் சொல்லு.. கேட்டுக்கிறேன்.. அதை விட்டுட்டு.. சொல்ல ஆள் தேடினேன்னு வை.. கன்னம் பழுத்துரும்..."

அவன் அதட்டியதில் அவள் மனம் சிறகடித்தது.. ஆண்மையின் வன்மையை ஆண்டாண்டு காலமாக பெண்மை ரசிப்பதற்கான தாத்பர்யத்தை இதுவரை கண்டு பிடித்தவர் எவரும் இல்லை...

காவ்யா அர்ஜீனின் அந்த ஆண்மை கலந்த கோபத்தை ரசித்தாள்..

“கன்னம் பழுத்துருமா..?”

“ஆமாண்டி.. ஆமாம்...”

“என் கன்னம் என்ன.. பூப்பூத்து.. பிஞ்சாகி.. காயாகி நிக்குதா..? நீங்க வந்து பழுக்க வைக்கிறதுக்கு...?”

கேள்வி கேட்ட காவ்யாவின் கன்னத்தை லேசாக தட்டினான் அர்ஜீன்.. அவளது விரல் உணர்ந்த மென்மையில் அவன் முகம் மிருதுவானது...

“உன் கன்னத்தைப் போய் காய்ன்னு எந்த மடையனாவது சொல்வானா..? அது பஞ்சுடி...”

காவ்யாவின் முகம் பூவானது... பஞ்சு போன்ற கன்னம் சிவக்க அவள் விரலால் மண்டபத்தின் படியில் கோலமிட்டாள்...

அந்த வெட்கத்தை வெகுவாக ரசித்தான் அர்ஜீன்... அவனுடன் சரிக்கு சரியாக.. ஏன்.. அதற்கும் மேலாக வாயடிப்பவள்.. அவனின் ஓர் பார்வையில்.. சிறு பேச்சில்.. வெட்கித் தலைகுனிவதில் அவனுக்குள் இன்பம் சுரந்தது..

அவளது பெண்மையின் பொழிவில் தன் மனதைப் பறிகொடுத்தான் அர்ஜீன்...

“காவ்யா...”

எதற்காக அழைக்கிறோம் என்று தெரியாமலே அவன் அழைத்தான்..

“ம்ம்ம்..”

எதற்காக முணுமுணுக்கிறோம் என்று தெரியாமலே அவள் முணுமுணுத்தாள்...

இது காதல் செய்யும் மாயவேலை...

பேசப்படும் வார்த்தைகளில் அர்த்தம் பொதிந்திருக்கிறதா என்று எந்தக் காதலரும் யோசிப்பதில்லை.. அவர்களின் அர்த்தமற்ற முணுமுணுப்புகளில் பொதிந்திருக்கும் ஆழ்ந்த அர்த்தத்தை அவர்களால் மட்டும்தான் அறிய முடியும்..

“இது புலிமேல் சவாரி காவ்யா.. இறங்க முடியாது..”

இதை எதற்காக வேலை மெனக்கெட்டு அவளிடம் சொல்கிறான் என்று புரியாமல் அவனைப் பார்த்தாள் காவ்யா...

“பணத்தைத் துரத்த ஆரம்பிச்சவனின் ஓட்டத்தை நிறுத்த முடியாதுடி...”

“ம்ம்ம்...”

“என்னை நம்பி என் கம்பெனிகள் இருக்கு.. அதில வேலை செய்கிறவங்க இருக்கிறாங்க.. அவங்க உழைப்பை நான் பயன்படுத்தியாகனும்.. அதுக்கான சேலரியை கொடுத்தாகனும்.. அதுக்கு ஒரிடத்தில நிற்காம நான் பறந்தாகனும்...”

“நான் அப்படியில்ல...” காவ்யா விரல்களைப் பார்த்தாள்..

அவள் பேச விரும்புவதை புரிந்து கொண்டவனாக அர்ஜீன் அவளைப் பேச விட்டான்..

“சொல்லு...”

“நான் பிறந்து வளர்ந்தது மதுரையில.. எனக்கு இந்த மதுரையைத் தாண்டி வெளியுலகம் தெரியாது..”

“அடேங்கப்பா.. வெளியுலகத்தை தெரிஞ்சுக்காதவதான்.. உலகம் சுற்றிப் பறந்துக்கிட்டு இருக்கிற என்னை இந்த மதுரை மண்ணில் காலடி வைச்ச முதல் நாளிலேயே அந்தப் பாடு படுத்தினயா...? உன் லாங்வேஜிலேயே சொல்கிறதா இருந்தா என்ன ஒரு தெனாவெட்டு..! அசந்துட்டேண்டி.. அன்னைக்கு விழுந்தவன்தான்.. இன்னும் எழுந்திரிக்கல...”

“என்னைக்கு எழுந்திருப்பீங்க...?”

காவ்யா பட்டென்று கேட்டு விட்டாள்.. அதில் தெரிந்த மறைபொருளை உணர்ந்து கொள்ளாத அளவிற்கு அர்ஜீன் ஒன்றும் முட்டாளில்லையே...

“கடைசி வரை எழுந்திருக்க மாட்டேன்...”

அவளின் விழிகளையே பார்த்தபடி உறுதியான குரலில் அவன் சொன்னான்.. அவள் விழிகளில் மின்னல் தோன்றி மறைந்தது..

"நம்பலாமா..?"

"நம்பலாம்..."

"என் வேர் இந்த மதுரையிலதான் இருக்கு... இந்த மதுரையைத் தெரிந்தவளுக்கு உலகத்தைத் தெரிஞ்சுக்கனும்ங்கிற அவசியமில்ல.. ஏன்னா.. உலகம் பூராவும் இந்த மதுரைக்குள்ள அடங்கியிருக்குன்னு நினைக்கிறவ நான்..."

"நான் அப்படியில்ல.. என் குடும்பத்தோட பூர்வீகம் திருநெல்வேலிப் பக்கமாம்.. என் தாத்தா காலத்தில அவங்க மதுரையில இருந்தாங்களாம்.. அப்பாகாலத்தில சென்னையில செட்டில் ஆகிட்டோம்.. என் காலத்திலே நான் உலகம் பூராவும் சுற்றிக்கிட்டு இருக்கேன்.. ஒரு இடத்தில வேர்விட்டு நிலைத்து நிற்க என்னால முடியாது.. எங்கே வளர்ச்சி இருக்கோ.. அங்கே இடம் பெயர்ந்துக்கிட்டே இருப்பேன்.. நான் அப்படித்தான் இருந்தாகனும்..."

"அதுதான் என்னோட பயமே..."

"இதில பயப்பட என்ன இருக்கு..?"

"நிறைய இருக்கு.. நீங்களோ உலகம் சுற்றுகிற வாலிபன்.. கோடிக்கணக்கிலே பணம் கொட்டிக் கிடக்கு.. பார்க்கிறதுக்கு வேற அழகா இருந்து தொலைக்கறிங்க..."

“ஈஸிட்..?” அர்ஜீன் கண்களைச் சிமிட்டினான்..

காவ்யாவின் முகம் குங்குமமானது.. அவள் விரல் தானாக கோலத்தைத் தொடர்ந்து போட ஆரம்பித்தது...

“அடேங்கப்பா.. இவருக்கு அது தெரியாதாக்கும்..?”

“எவருக்கு..?”

“பகடியில ஒன்னும் குறைச்சலில்ல...”

“பகடியா..? அப்படின்னா..?”

“ஜாலம்ன்னு அர்த்தம்..”

“ஜாலம்ன்னா..?”

“வித்தாரம்ன்னு அர்த்தம்..”

“வித்தாரம்ன்னா...?”

“நீங்கன்னு அர்த்தம்.. அடேங்கப்பா... இவரு ஒன்னும் தெரியாத சின்னப் பப்பாதான்.. நாங்க அதை நம்பனுமாக்கும்..?”

அவள் பேசுவதை ரசித்தபடி அர்ஜீன் சுற்று முற்றும் பார்க்க காவ்யா விழிகளில் கேள்வியுடன் புருவங்களை உயர்த்தினாள்...

“என்னவாம்..?”

“நாங்கன்னு சொல்றயே.. இங்க நீ ஒருத்திதான உட்கார்ந்திருக்க..? மத்தவங்க எங்கேடி..?”

“ஓ.. ஐயா மனசில அப்படியாப்பட்ட ஆசையெல்லாம் இருக்குதாக்கும்..? இவருக்கு ஒருத்தி போதாதாக்கும்..?”

“அப்படி நான் சொன்னேனா..? நியாயமாய் பேசு.. நீ தானே சொன்ன..”

“கெட்டிக்காரர்தான்.. இதைத்தான் ஜாலம்ன்னு சொன்னேன்...”

“ஓ.. இதுக்குப் பேருதான் ஜாலமா..?”

“வித்தை தெரிஞ்ச மனுசனுக்கு வித்தாரமா பேச சொல்லியா கொடுக்கனும்..?”

அவள் அடுத்த கணையை எறிய அவளின் பேச்சில் தெறித்து விழுந்த கிண்டல் கலந்த கேலியில் கள்ளுண்ட வண்டாக கிறங்கிப் போனான் அர்ஜீன்...

“பேசுடி.. இந்தப் பேச்சிலதான என்னைக் கவிழ்த்த..?”

“யாரு கவிழ்ந்தது..? நீங்களா..? இதை நாங்க நம்பனுமாக்கும்..?”

“திரும்பவும் நாங்களா..? அப்படியே பேசி மயக்கறடி.. பேச்சிலயே என்னைக் கட்டிப் போட்டு காவல் காக்கிற..”

“ஆஹா.. இவரு பேச்சில மயங்கிப் போகிற ஆளுதான்..”

“மயங்கலையா..? உன் மனசைத் தொட்டுச் சொல்லு...”

அர்ஜீனின் ஊடுறும் பார்வையில் தடுமாறிப் போனாள் காவ்யா.. அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் அவள் பார்வை நிலம் பார்த்தது.. அவளின் விரல்கள் நடுங்க ஆரம்பித்தன..

அர்ஜீன் கிசுகிசுப்பான குரலில் கேட்டான்...

“சொல்லுடி.. நீ என்கிட்ட மயங்கலையா..?”

காவ்யா இப்போது மொத்தமாக தலையைக் கவிழ்ந்து விட்டாள்...

நடுங்கிய அவளின் விரல்களின் மீது அர்ஜீனின் கை படிந்தது.. அவள் விரலோடு விரல் கோர்த்துக் கொண்டான் அர்ஜீன்.. நடுங்கிய அவள் விரல்களை அழுந்தப் பற்றித் தைரியம் கொடுத்தன அவனின் விரல்கள்...

***‘மயங்கினேன்.. சொல்லத் தயங்கினேன்..***
***உன்னை விரும்பினேன் உயிரே...’***

காவ்யாவின் மனம் தவித்துப் பாடியது... அர்ஜீனின் விரல்களுக்குள் அடங்கிய அவளின் விரல்கள் நடுக்கத்தைக் குறைக்கவில்லை..

“நீங்க உலகத்தைச் சுத்தறவர்..”

“அதைத்தான் சொல்லிட்டேனே...”

“பல ஊர்களில பல பெண்களைப் பார்த்திருப்பீங்க..”

“பல நாடுகளிலன்னு சொல்லு.. பெண்கள் இல்லாத உலகத்திலேயா நான் இருக்கிறேன்..? நீ சொன்னது உண்மைதான்...”

“அவங்கள்ல யார்கிட்டயும் நீங்க மயங்கலையா..?”

காவ்யாவின் கேள்வியில் உரக்கச் சிரித்தான் அர்ஜீன்.. அவள் கவலையுடன் சுற்றுமுற்றும் பார்த்தாள்.. மற்றவர்கள் கவனித்து விடுவார்களோ என்ற எண்ணம் அவளுக்கு...

“இல்லையே..” அவன் உல்லாசமாகச் சிரித்தான்...

“இதுவரை இல்லை.. இனிமேல் அந்த மயக்கம் உங்களுக்கு வரலாமில்லையா..?” அவள் குரல் நடுங்கியது..

அர்ஜீனின் சிரிப்பு மறைந்தது.. அவன் முகத்தில் தீவிரம் வந்தது.. அவன் மறுப்பாக தலையை அசைத்தான்..

“வராது...” நிச்சயத்துடன் அவன் குரல் ஒலித்தது..

“அதை எப்படி உங்களால உறுதியாச் சொல்ல முடியும்..?”

“முடியும்.. ஏன்னா.. இது மனசு.. ஒருத்திகிட்ட மயங்கின இந்த மனசு இன்னொருத்திகிட்டத் தாவாது...”

"தாவிட்டா..?"

"சூரியன் கிழக்கில உதிக்காம மேற்கில உதிச்சிட்டான்னு அர்த்தம்.. போதுமா..?"

அவன் சுள்ளென்று எரிந்து விழுந்தான்.. காவ்யாவின் கண்கள் கலங்கி விட்டன.. அவனின் அந்த எரிச்சலில் அவள் மனதில் தென்றல் அடித்தது.. சலனப்பட்ட அவள் மனது சமனப் பட்டிருந்தது...

"என்னையே கேள்வி கேட்கிறயே.. இதே கேள்விய நானும் உன்கிட்டத் திருப்பிக் கேட்கலாமில்ல..?"

"என்னத்தைக் கேட்பீங்க..?"

"என்னிடம் மயங்கியிருக்கிற நீ.. இதே மயக்கத்-தோடே என்னைக்கும் இருப்பியா..?"

"புரியலை..." அவள் கூர்மையாக அவனைப் பார்த்தாள்...

"ஹ.." அவள் பார்வையை அவன் அலட்சியம் செய்தான்..

"உனக்கா புரியாது...? இதை வேற யாராவது ஒரு கேத்தரவாடுகிட்டப் போய்ச் சொல்லு.. அவன் கேட்டுக்குவான்.."

"கேத்தரவாடா..?" அவள் விழிவிரித்தாள்..

“யெஸ்... கேத்தரவாடுதான்.. உன்கிட்ட மயங்கிப் போனவனுக்கு உன் லாங்வேஜைப் புரிஞ்சுக்கிட்டு அதைப் போல பேசிப் பழகறதில ஒன்னும் சிரமமில்ல...”

“இதையெல்லாம் புரிஞ்சுக்கிட்டவரு என் மனசைப் புரிஞ்சுக்காததுதான் ஆச்சரியமா இருக்கு... நான் மதுரைக்காரி.. பிடிச்சா ஒரே பிடிதான்.. நினைப்பிருக்கட்டும்..”

“மதுரைக்காரிக்கு மட்டும்தான் நிலையான மனசிருக்கனும்னு ஒன்னும் கட்டாயமில்ல.. உலகம் சுத்தற வாலிபனுக்கும் அது இருக்கும்..”

“இப்ப என்னதான் சொல்லவர்றீங்க...?”

***“என் மனது ஒன்றுதான்..***
***உன்மீது ஞாபகம்..***
***வான் நிலவு ஒன்றுதான்..***
***வான்மீது சத்தியம்..”***

அவன் கண்சிமிட்டிப் பாடியதில் அவளின் காதல் பெருகியது... அதைப் போன்ற அழகான விடியலை அதற்கு முன்னால் அவள் சந்தித்ததில்லையென்று மனதுக்குள் அவள் நினைத்துக் கொண்டாள்...

‘இந்த நாள்.. இனிய நாள்...’

அவனுடன் ஒற்றைச் சொல்லையாவது தனிமையில் பேசிவிட வேண்டும் என்ற தவிப்புடன் ஓடி வந்தவளுக்கு..

கோவில் பிரகாரத்தில் உட்கார்ந்து அவனுடன் இனிமையாகப் பேசும் மணித்துளிகள் கோடிகோடியாய் கிடைத்து விட்டதில் சந்தோசம் ஊற்றெடுத்தது..

“உங்களைத் தனியாப் பார்க்க முடியுமோன்னு பயந்து போனேன் தெரியுமா..?” அவள் சின்னஞ்சிறு குழந்தையாகிப் பேசினாள்..

“உனக்கு மட்டும்தான் அந்த நினைப்பிருக்குமா..? எனக்கு இருக்காதா..? அதான்.. விடிகிறதுக்கு முன்னாலேயே குளித்து முடித்து உன் வீட்டுப் பக்கம் காரை விட்டுட்டேன்...”

அவன் சொல்லச் சொல்ல அவள் கண்கள் மின்னின...

அவன் நினைப்பில் தூக்கத்தைத் தொலைத்து அவள் தவித்துக் கொண்டிருந்ததைப் போல அவள் நினைப்பில் அவனும் தூக்கத்தை தொலைத்து தவித்திருக்கிறான் என்பதில் விண்ணளவு சந்தோசம் அவள் மனதில் முளைத்தது..

# 58

*உன் மனது என் நினைவில்...*
*ஊஞ்சலாட ஆசைகொண்டேன்...*

"நிஜமாகவா..?" அவள் விழிகள் விரிந்தன...

"மெல்ல.. எதுக்காக இந்த முழி முழிக்கற..? உன் வீட்டுவாசலில் காத்திருந்ததாலதான் உன் பின்னாலேயே ஃபாலோ பண்ணி கோவிலுக்கு வந்து சேர முடிஞ்சது.. பெருமாளையும்.. தாயாரையும் உன்கூடச் சேர்ந்து தரிசனம் பண்ணவும் முடிஞ்சது..." அவன் இலகுவாகச் சிரித்தான்..

அவ்வளவு பெரிய கோடிஸ்வரன் விடிகின்ற வேளையிலே அவள் வீட்டு வாசலில் அவளுக்காக காத்திருந்ததில் அவள் மனதுக்குள் பிரமிப்பு ஏற்பட்டது...

எதனால் அது நிகழ்ந்தது..? அவன் கண்களில் தெரிந்த காதல் அதனால் அது நிகழ்ந்தது என்று அவளுக்கு உணர்த்தியது...

"போகலாமா..?"

அவன் எழுந்து நின்று அவளுக்காக கை நீட்டினான்.. அதை இறுகப் பற்றி எழுந்து கொண்டபோது அவள் மனதுக்குள் மகாராணியைப் போன்ற பெருமிதம் தோன்றியது...

அவன் கைபிடித்து வெளியே நடந்த போது அவர்களை யாரோனும் பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை அவளுக்குள் மறைந்திருந்தது...

அர்ஜீன் கார் கதவை அவளுக்காக திறந்து விட்டான். மறுக்காமல் அவள் காரில் ஏறிக் கொண்டாள்.. கார் விரைந்தது.. ஹோட்டலின் முன்னால் போய் நின்றது...

"இறங்கு.." அவன் இறங்கினான்...

"இங்கே எதுக்காக வந்திருக்கோம்..?" அவள் புரியாமல் கேட்டாள்..

"மக்கு.." அவள் தலையில் செல்லமாக குட்டினான் அவன்..

"ஹோட்டலுக்கு எதுக்கு வருவாங்க..? சாப்பிடத்தான் வருவாங்க.. விடிகிறப்பவே உன்னைத்தேடி வந்திட்டேன்.. சாப்பிடலை... பசி வயிற்றைக் கிள்ளுது... நீயும் பட்டினியாத்தான வந்திருக்க.. வா சாப்பிடலாம்..."

அவள் பதிலை எதிர்பார்க்காமல் கை பிடித்து இழுத்தபடி அவன் நடந்தான்.. கூட நடந்தபடி அவள் கேட்டாள்..

“நான் சாப்பிடாம வந்திருக்கேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..?”

“அதான் உன் பாசமலர் அண்ணன் ஆயிரம் ரூபாய் நோட்டை உன்கிட்ட நீட்டினானே.. அவனுக்கு மட்டும் தான் உன் பசியைப் பத்தின கவலையிருக்குமா..? எனக்கு இருக்காதா..?”

இவனுக்கு எப்படி அது தெரியும் என்ற நினைவைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு... இவன் எப்படி அவளுடைய அண்ணனைப் பற்றிப் பேசலாம் என்ற கோபம்தான் முன்னுக்கு வந்தது... அந்தக் கோபத்துடன் அவள் படபடத்தாள்...

“தேவையில்லாம என் அண்ணனைப் பத்திப் பேச வேணாம்...”

“தேவையிருக்கப் போய்தாண்டி பேசறேன்...”

“என்ன தேவை..?”

“நீ எனக்கு தேவை...”

அவள் முகத்தின் முன்னால் குனிந்து அவன் கண்சிமிட்டியதில் அவள் கொஞ்சமாக மலையிறங்கினாள்..

ஏஸி ரூமின் உள்ளே நுழைந்தபோது இதமான குளிர் அவர்களைத் தாக்கியது.. அங்கொருவர்.. இங்கொருவராக

சிலர் மட்டுமே அமர்ந்திருக்க.. மூலையில் இருந்த டேபிளுக்கு அவளை அழைத்துச் சென்றான் அர்ஜீன்...

“நினைச்சேன்...” என்றாள் காவ்யா...

“எதை நினைச்ச..?” புருவங்களை உயர்த்தினான் அர்ஜீன்...

“இப்படி ஒதுக்குப்புறமாத்தான் தள்ளிக்கிட்டு வருவீங்கன்னு நினைச்சேன்...”

“தள்ளிக்கிட்டு வர்றதா..?” அவன் கண்சிமிட்ட...

“ச்சை..” என்று நாக்கை கடித்துக் கொண்டாள் காவ்யா..

“பாரு காவ்யா... இதில என்குற்றம் எதுவுமேயில்லை.. உன் லாங்வேஜைப் புரியாத எனக்கே தள்ளிக்கிட்டு வர்றதுன்னா என்ன மீனிங்குன்னு புரியுது.. உனக்கு அது புரியலைன்னா நான் என்ன பண்ணட்டும்..? நீயே சொல்லு..” நல்ல பிள்ளையாக அவன் நியாயம் கேட்டான்..

“போதுமே..” அவள் முகம் குங்குமமானது...

“ஏண்டி.. காதலிகூடப் பேசனும்னு நினைக்கிறவன்.. நாலுபேர் மத்தியிலே உட்கார்ந்து மைக் பிடிச்சா பேசுவான்..? மத்தவங்க காதில விழுகாம தள்ளி உட்கார்ந்துதான பேசனும்னு நினைப்பான்..? இதை

ஒதுக்குப் புறமாய் தள்ளிக்கிட்டு வருகிறதுன்னு நீ சொல்வியா..?" அவன் விடாமல் வம்பு வளர்க்க.. காவ்யா கையெடுத்து கும்பிட்டு விட்டாள்...

"ஐயா.. சாமி... தெரியாத்தனமா வாய் விட்டுட்டேன்.. நீங்க அதையே பிடிச்சுக்கிட்டுத் தொங்காம வேற பேச்சைப் பேசுங்க..."

"அஃது.. இந்த பயம் இருக்கட்டும்.. என்னவோ மதுரையில பிறந்தவங்கதான் கெட்டிக்காரத்தனமா பேசுவாங்கன்னு அள்ளி விட்டயே.. இப்ப உன் கெட்டிக்காரத்தனம் எங்கே போச்சு..?"

"எங்கேயும் போகலை.. எனக்குள்ளதான் உறங்கிக் கிட்டிருக்கு.. அதை எழுப்பி விட்டு வாங்கிக் கட்டிக்காம சாப்பிடற வழியைப் பாருங்க..."

"இல்லேன்னா..?"

"உறங்கறதை எழுப்பி விட்டுற வேண்டியதுதான்.. மதுரைத் தமிழில மாத்து வாங்கிட்டுத்தான் கனடாவுக்கு பிளேன் பிடிப்பேன்னு நீங்க நேர்த்திக் கடன் வைச்சிருந்தா நானென்ன செய்ய முடியும்..?"

"அப்படிங்களா மேடம்.. நீங்க அப்படியாப்பட்ட லேடி டானா..?"

"லேடி டானா..? அப்படின்னா..?"

காவ்யா விளக்கம் கேட்டதில் அர்ஜீன் மகிழ்ந்து போனான்.. வார்த்தைக்கு வார்த்தை அவனை விளக்கம் கேட்க வைத்தவளையே விளக்கம் கேட்க வைப்பானென்று அவன் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை...

“ஏய்ய்.. உனக்கு உண்மையாவே இதுக்கு அர்த்தம் தெரியாதா..?”

“தெரியலைன்னுதானே கேட்கிறேன்..”

“பெண்டாஸ்டிக்...”

“லேடி டானுக்கு இதுதான் அர்த்தமா..?”

“ஹா.. ஹா...”

“போதும் சாமி.. பல்லு சுளுக்கிக்கப் போகுது.. ஒரு வார்த்தையத் தெரியலன்னு சொல்லிட்டேன்.. அதுக்கு இம்புட்டு சந்தோசமா..?”

“ஏண்டி.. வாயைத் திறந்தா மூடவே மாட்ட.. அப்படிப் பேசித் தள்ளுவ.. உனக்கு இது என்னன்னு தெரியாதா..?”

அவன் மீண்டும் சிரிக்க ஆரப்பிக்க காவ்யாவுக்கு பற்றிக்கொண்டு வந்தது..

“இப்புடி சிரிச்சு மகிழத்தான் என்னை சாப்பிடலாம்ன்னு சாக்குச் சொல்லி இங்கே கூப்பிட்டுக்கிட்டு வந்தீங்களா..?”

“நீ இப்படிச் சொல்லக்கூடாது காவ்யா.. தள்ளிக்கிட்டு வந்தேன்னு சொல்லனும்.. ஹா... ஹா...”

“அடேங்கப்பா.. இவரு ஒன்னைக் கண்டு பிடிச்சிட்டாராம்.. அத நினைச்சு.. நினைச்சு.. சிரிச்சு மகிழ்ந்து போறாராம்.. நீங்க சிரிச்சு மகிழ்ந்துக்கிட்டே இருங்க.. நான் கிளம்பறேன்...”

அவள் எழுந்து கொள்ள முனைய.. அர்ஜீன் சிரித்தபடி அவள் கைபிடித்து தடுத்தான்...

“எங்கேடி போற...?”

“எங்கே போறது..? கடைக்குத்தான் போகனும்.. நீங்கதான் பசிச்ச வயிறுக்கு எதையும் வாங்கிக் கொடுக்கிற மாதிரி தெரியலையே.. அதான் கடைக்குப் போயி.. என் அண்ணன் கொடுத்து விட்டிருக்கிற ஆயிரம் ரூபாய் நோட்டை மாத்தி.. கந்தசாமிகிட்ட பக்கத்து ஹோட்டலில பார்சல் வாங்கிட்டு வரச் சொல்லிச் சாப்பிடனும்...”

நீளமாகப் பேசியவளை முறைத்தான் அர்ஜீன்.. அதற்குள் அவன் ஆர்டர் கொடுத்திருந்த உணவு வகைகள் வந்து சேர்ந்து விட்டன.. டேபிளில் உணவு வகைகளை பரப்பி விட்டு சர்வர் போய்விட்டான்.. அர்ஜீன் அவற்றைக் காட்டினான்...

“உன் அண்ணன் கொடுத்த ஆயிரம் ரூபாய் நோட்டை அப்படியே பத்திரமா வைத்துக்க.. இப்ப நான் வாங்கிக் கொடுக்கிற சாப்பாட்டை சாப்பிடுகிற வழியைப் பாரு..”

“இப்பத்தான சாரு வழி காட்டறிங்க.. இதுக்கு முன்னால பல்லு சுளுக்கிக்கிறதைப் போல சிரிச்சில்ல மகிழ்ந்தீங்க...”

“சிரிச்சா.. நீ உடனே ஓடிப் போகனும்னு நினைப்பியா..?”

“சாப்பிட வான்னு அழைச்சுக்கிட்டு வந்தவரு.. அந்த நினைப்பில்லாம.. பகடி பேசி சிரிச்சு மகிழ்ந்தா வேற என்னத்த நினைப்பாங்களாம்..?”

“போனதை விடு.. இப்ப சாப்பிடு...”

அர்ஜீன் அதட்டியதில் காவ்யா.. ‘அஃது’ என்ற பார்வையோடு உட்கார்ந்தாள்.. அவர்கள் சாப்பிட ஆரம்பித்தார்கள்...

பசியிலும்.. உணவின் சுவையிலும்.. லயித்திருந்தவளுக்கு அர்ஜீனின் மௌனம் உறைத்தது.. அவள் நிமிர்ந்து பார்த்தாள்.. அவளையே பார்த்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தவனின் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவள் மனம் குழம்பியது..

'ஏன் இப்படிப் பார்க்கிறான்...?'

என்னவென்று வாய் விட்டுக் கேட்கவும் அவளால் முடியவில்லை.. வெறும் பார்வையிலே நீ எதைக் கண்டு பிடித்தாய் என்று அவன் கேட்டு விட்டால் அவள் முகத்தை எங்கே போய் வைத்துக் கொள்வாள்..?

அவள் குழம்பித் தவித்து.. குட்டையிலே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அவனாகவே வாய் திறந்தான்...

"ஆக.. நீ என்னை விட்டு ஓடுகிறதுக்கு காரணம் தேடிக்கிட்டே இருக்கிறயில்ல..?"

காவ்யா அதிர்ந்து போனாள்.. அவன் இதற்கு முன்னாலும் இதுபோன்ற குற்றச்சாட்டை அவள்மீது வீசியிருக்கிறான்.. அவனது வார்த்தைகளில் ரோசப்பட்டு அவள் வேலையை ராஜினாமா செய்ய முனைந்த தருணங்களில் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறான்...

அந்தத் தருணங்களுக்கும்.. இந்தத் தருணத்துக்கும் வித்தியாசமில்லையா..?

இதுபோன்ற ஒரு தருணத்தில் அப்போது பேசிய வார்த்தைகளை அவன் பேசலாமா..?

“ஊருக்குக் கிளம்பும்போது சண்டை போட்டுக்கிட்டுப் போகனும்கிற முடிவோட இருக்கீங்களா..?”

“என்னை ஊருக்கு அனுப்பறோம்ங்கிற எண்ணமே உனக்கில்லையே.. அப்புறம் நானென்ன பண்ண..?”

“எண்ணமில்லாமத்தான் விடிஞ்சும்.. விடியாத பொழுதில வீட்டைவிட்டுக் கிளம்பி ஓடி வந்தேனா..?”

“நானும் அப்படித்தான்..”

“உங்களுக்கென்ன.. நீங்க ஆம்பளை சிங்கம்.. தனிக்காட்டுராஜா.. உங்களை கேள்வி கேட்க யாரிருக்கா..? நான் அப்படியா..? கிளம்பும் போதே அம்மா தடுத்துச்சு.. இந்நேரம் கடையைத் திறந்து கூட்டிப் பெருக்கப் போறியான்னு ஆயிரம் கேள்வி கேட்டுச்சு. அதுக்குப் பதில் சொல்லி தப்பிக்க முடியாது...”

“அவங்க யாரு..? உனக்கு அம்மாவாச்சே...” ரசித்துச் சிரித்தான் அர்ஜீன்...

‘அப்பாடி.. சிரிச்சுட்டான்..’ காவ்யா நிம்மதியானாள்.. அதைக்காட்டிக் கொள்ளாமல் பேச்சைத் தொடர்ந்தாள்..

“என் பாட்டைக் கேட்டா உங்களுக்கு சிரிப்பாணியா இருக்கா..?”

“சிரிப்பாணியா..?”

அர்ஜீன் விழிக்க ஆரம்பித்தான்.. காவ்யாவிற்கு அதுதான் தேவையாக இருந்தது.. அதனால்தானே அவள் அந்த வார்த்தையைப் பிரயோகித்தாள்...

“சிரிப்பாணின்னா தெரியாதா..? இதக்கூடத் தெரிஞ்சுக்காமலா நீங்க உலகம் சுத்தற வாலிபன்னு பீத்திக்கறிங்க...”

“தெரியாத்தனமா பெருமைப் பட்டுட்டேன்..”

“ம்ஹீம்.. கூரையேறி கோழி பிடிக்க முடியலியாம்.. இவரு வானத்தில ஏறி வைகுந்தம் போவாராம்...”

“கூரையா.. அது என்னடி..?”

“இந்தா பாருங்க.. இப்ப எதுக்காக இந்த ஹோட்டலுக்கு என்னைக் கூப்பிட்டுக்கிட்டு வந்தீங்க..?”

“அடிப்பாவி.. கதையையே மாத்தாதே.. யார் காதிலயாவது விழுந்து வைத்தா தப்பா நினைக்கப் போகிறாங்க.. இது சாப்பிடுகிற ஹோட்டல்டி.. உனக்கு டிபன் வாங்கிக் கொடுக்கத்தான் கூப்பிட்டுக்கிட்டு வந்தேன்...”

“நீங்க கூப்பிட்டு.. நானும் பசி வயித்தைக் கிள்ளுதேன்னு வந்தாச்சு.. டிபனும் வந்தாச்சு.. அதை வாயில போட்டு வயித்துக்குள்ளே தள்ள விடுவேனான்னு

கங்கணம் கட்டிக்கிட்டு என் வாயைப் பிடுங்கினா என்ன அர்த்தம்ண்ணேன்..?”

அவள் சண்டைக்கோழியாய் சிலிர்த்துக் கொள்ள அவனுக்குள் கங்கணம் என்றால் என்னவென்ற அடுத்த சந்தேகம் முளைத்தது...

# 59

*நீ பேசும் பேச்சுக்களில்...*
*தினம் நனைய ஆசைகொண்டேன்..*

**அ**ர்ஜீனுக்கு சிரிப்பையும் தெரியும்... ஆணியையும் தெரியும்.. இது இரண்டையும் சேர்த்த சிரிப்பாணி யென்றால் என்னவென்று சுத்தமாக அவனுக்குத் தெரியவில்லை..

அதற்கு விளக்கம் கேட்க வாய்திறந்தால்.. அதற்குள் அவள் கூரையைப் பற்றிப் பேசி வைக்கிறாள்.. சரி.. கூரையென்றால் என்னவென்று கேட்டு விடலாம் என்று நினைத்தால்.. அதற்கு இடம் கொடுக்காமல் கங்கணத்திற்கு ஒரே தாவாக தாவுகிறாள்...

சாண் ஏறினால் முழம் வழுக்குகிற கதையாக.. காவ்யாவை பேச்சில் வெல்ல முடியாமல் திணறிப் போனான் அர்ஜீன்...

சற்று நேரத்திற்கு முன்னால் அவளை 'அஃது.. அந்த பயம் இருக்கட்டும்' என்று மிரட்டியவன்.. இப்போது அதை மறந்து போனவனாக.. ஒற்றைவிரலை நெற்றியில் தட்டியபடி ஆழமான யோசனைக்குள் போனான்...

"எதுக்கு இந்த சிந்தனை..?"

வாய்க்குள் உணவை அடக்கியபடி கொழ கொழ வென்று கேட்டாள் காவ்யா.. அவளை ஒரு மௌன பார்வை பார்த்த அர்ஜீன் மௌனத்தைக் கலைத்தவனாக...

"ஒன்னுமில்லை.. நீ உன் வேலையைக் கவனி..." என்றான்...

"நீங்க என்னதான் மனசில நினைச்சுக்-கிட்டிருக்கிங்க..?" காவ்யா சண்டைக்கு வந்தாள்..

"உன்னைத்தாண்டி நினைச்சுக்கிட்டிருக்கேன்.." அர்ஜீன் அலுத்துக் கொண்டான்...

காவ்யாவின் மனதில் காதல் ஊற்றெடுத்தது.. ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு அவனை முறைத்தாள்...

“அத ரொம்ப விசனமா சொல்றாப்புல போல இருக்கே..”

“விசனமா..?” அர்ஜீன் திகைத்துப் போனான்...

அடுத்தடுத்து அவனை நோக்கி வரும் மதுரைத் தமிழின் தாக்குதலில் அவனுக்குத் தலையைச் சுற்றியது...

“பைய முழிங்க.. இப்படி விரசா முழிச்சா நான் என்னத்தைன்னு நினைக்கிறது..?”

தட்டில் உள்ளதை மின்னல் வேகத்தில் காலி செய்தபடி புருவங்களை உயர்த்தினாள் காவ்யா...

அர்ஜீனோ ‘இவள் கையில் இருக்கிற பையைச் சொல்கிறாளா’ என்று அவள் கையைப் பார்த்தான்...

“என்னாச்சு..?” அவள் விசித்திரமாக அவனைப் பார்த்தாள்...

“விரசான்னா என்னடி..?” அவன் பரிதாபமாகக் கேட்டான்...

அவன் கேட்ட விதத்தில் காவ்யாவிற்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது...

“அதைத் தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போகிறிங்க..?” என்று கெத்தாக கேட்டாள்..

"தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காகடி இப்படிப் பேசி என்னை மிரள வைக்கிற..? தெரியாத்தனமா உன் அண்ணனைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிட்டேன்.. அதுக்காடி இந்தக் காண்டு..?"

"திரும்பவும் என் அண்ணன் பேச்சை இழுத்தீங்கன்னா நடக்கறதே வேற.. நானே அம்மாகிட்ட மாட்டிக்கிட்டு கிளம்ப முடியாம முழிச்சுக்கிட்டு இருந்தேன்.. நல்ல வேளையா அண்ணன்தான் கை கொடுத்து காப்பாத்துச்சு..."

கண்ணதாசனின் நினைவில் குரல் நெகிழ்ந்த காவ்யாவை ஒரு மார்க்கமாகப் பார்த்தான் அர்ஜீன்...

"உன் அண்ணனைப் பத்திப் பேசறதுன்னா உனக்கு அல்வாச் சாப்பிட்டதைப் போல இருக்குமே..."

"ஆக.. ஐயா எனக்கு அல்வா கொடுத்துடலாம்கிற முடிவோடதான் இருக்கிறாருன்னு சொல்லுங்க..."

அவளின் நையாண்டியில் அவன் சிரித்து விட்டான்.. அவர்களுக்கு இடையிலிருந்த மெலிதான பனித்திரை உருகி மறைந்து காணாமல் போனது...

"உனக்கு அல்வா கொடுக்கனும்னு எனக்கும் ஆசைதான்.." அவன் கண்களில் கள்ளச் சிரிப்பிருந்தது...

"ஊம்..? ஆசை.. தோசை.. அப்பளம்.. வடை.. ஐயா திருநெல்வேலிக்காரரே..! உங்க ஊர் அல்வாவை உங்க

கூடவே வைச்சுக்கங்க.. நான் மதுரைக்காரி.. உங்க அல்வாவெல்லாம்.. இங்கே செல்லுபடியாகாது.. தெரியுதா..?" காவ்யா கழுத்தைச் சாய்த்து ஒயிலாக அவனைப் பார்த்தாள்..

"அதெப்படி.. மதுரைக்காரியைக் காதலித்தாலும்.. திருநெல்வேலிக்காரனோட பெருமையை விட்டுக் கொடுக்க முடியுமா...?"

"அப்ப.. அல்வாக் கொடுத்தே தீருவேன்னு அடம் பிடிக்கறிங்க..?"

"அப்படித்தான் வைத்துக்கயேன்.. ஏன்..? உனக்கு அல்வா பிடிக்காதா..? அது இனிப்பும்மா.. வாழைப்பழம் திங்காத குரங்குமில்ல.. அல்வாவை விரும்பாத பெண்ணுமில்ல..."

"அதெல்லாம் மத்தவங்களுக்கு.. மதுரைக்காரிக்கு இல்ல..."

"நீ இனிப்புச் சாப்பிட மாட்டியா..?"

"மாட்டேனே.. நானெல்லாம் பச்சை மிளகாயை ரசித்துத் திங்கிற ஆளு.. எனக்குக் காரசாரமா.. உப்பும் உறைப்புமா சாப்பிட்டாத்தான் பிடிக்கும்.. இனிப்பெல்லாம் உவ்வா.."

காவ்யா.. முகத்தைச் சுளித்தபடி கை கழுவ எழுந்தாள்.. அவர்கள் ஹோட்டலை விட்டு வெளியே

வரும்போது என்னவோ வருடக்கணக்கில் அவர்கள் பேசிப் பழகியதைப் போல உணர்ந்தார்கள்...

'இந்த நாளை மறக்கவே முடியாது..' என்று நினைத்துக் கொண்டான் அர்ஜீன்...

அவன் மதுரைக்குள் கால் பதித்த நாளிலிருந்து அன்று வரை காவ்யா.. அவனருகில்தான் இருந்தாள்.. ஆனால் வெகு தொலைவில் அவள் நிற்பதைப்போல விலகி நின்றாள்...

அன்றோ.. அவன் வேறு.. அவள் வேறு என்ற நினைவே வராமல் அவனுடன் மனம் கலந்து விட்டாள்...

அவளுடன் பேசிச் சிரித்து.. முறைத்து.. வம்பிழுத்த அந்த மணித்துளிகளில் அவன் மனம் நிறைந்திருந்தது...

***"நேற்று வரை..***
***நீ யாரோ.. நான் யாரோ...***
***இன்று முதல்***
***நீவேறோ.. நான் வேறோ..."***

அர்ஜீனின் காரிலிருந்த எப்.எம். பாடியது.. இப்போதெல்லாம் அவன் பழைய பாடல்களை விரும்பிக் கேட்பதை அவன் உணர்ந்திருந்தான்.. எதனால் அந்த ஈர்ப்பு என்று அவனுக்குப் புரியவில்லை.. பழமை மாறாத

மதுரையில் பிறந்தவளைக் காதலித்து விட்டதினால் அந்த ஈர்ப்பு வந்ததோ என்று அவன் நினைத்துக் கொண்டான்..

*"மதுரை மருக்கொழுந்து வாசம்..*
*என் ராசாவே உன்னுடைய நேசம்..."*

பாட்டு மாறியதில் அவன் சிரித்துக் கொண்டே காவ்யாவைப் பார்த்தான்.. அதே நொடியில் அவளும் அவனைப் பார்த்தாள்.. கண்கள் கலந்தன.. அர்ஜீன் காரை வெளியூர்களுக்குச் செல்லும் சாலையில் திருப்பினான்...

"பை பாஸீக்கு ஏன் போறிங்க..?" காவ்யா பதறினாள்..

"உன்னைக் கடத்தலாம்ன்னுதான்.." அவன் குறும்பாகச் சொன்னான்...

"காரை நிறுத்துங்க..." காவ்யா அடம் பிடித்தாள்...

அர்ஜீன் காரை நிறுத்தவில்லை.. நான்கு வழிச் சாலையில் விரைத்த கார் விலகி ஒரு மரத்தடியில் ஓரம்கட்டி நின்றது.. அர்ஜீன் காவ்யாவின் பக்கமாக திரும்பினான்.. அவன் முகத்தில் தெரிந்த தாபத்தில் காவ்யா பேச்சிழந்தாள்...

"நீயும் நானும் பார்த்துக்கிட்டோம்.. பேசிக்கிட்டோம்.. ஆனா நம்மைச் சுற்றி நாலு பேர் இருந்தாங்களேடி..."

அவன் சொல்லியதில் இருந்த உண்மையில் காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவள் முகம் தொட்டு தன் பக்கமாக இழுக்க முனைந்தான் அர்ஜீன்.. அவள் இசைந்து கொடுக்கவில்லை..

“ப்ளீஸ் காவ்யா.. தனிமை வேணும்ங்கிறதுக்காகத்தான் இங்கே வந்தேன்.. கனடாவில நான் உன்னை நினைக்கிறப்பல்லாம் இந்த நிமிசங்களும் என் நினைப்பில் வரனும்..”

அவன் முரட்டுத்தனமாக அவள் முகம்பற்றி அவனருகே இழுத்ததில் அவன் மேல் சரிந்தாள் காவ்யா.. அவளை இறுக்கிக் கொண்டவன் அவள் உதட்டில் உதட்டைப் பதித்தான்...

கண்மூடிக் கிறங்கிப் போன காவ்யாவின் மனதில் அர்ஜீன் மட்டுமே இருந்தான்.. அவள் கண்ணதாசனின் கவலையை மறந்தாள்.. அவனது எச்சரிக்கையை காற்றில் பறக்க விட்டாள்.. அன்னபூரணி அவளைச் சுற்றிப் போட்டு வைத்திருந்த காவல்வேலியை சுக்கு நூறாக்கினாள்...

*“காற்றுக்கென்ன வேலி..*
*கடலுக்கென்ன மூடி..*
*கங்கை வெள்ளம் சங்குக்குள்ளே..*
*அடங்கி விடாது...*
*மங்கை உள்ளம் பொங்கும்போது..*
*விலங்குகள் ஏது..?”*

அவள் செவிவழி இறங்கிய பாடலை உணர்ந்து கேட்கும் நிலையில் அவள் இல்லை.. அவள் அர்ஜீனின் கைகளுக்குள் தொய்ந்து அடைக்கலமாகியிருந்தாள்...

“காவ்யா...”

“ம்ம்ம்...”

“ஐ லவ் யு...”

“இந்த வார்த்தை நிலைச்சு நிற்குமா..? இல்ல.. கனடா போனதும் காத்தில கரைஞ்சு போன கற்பூரம் போல மாயமாய் மறைஞ்சிருமா..?”

“அடிச்சுப் பல்லைக் கழட்டி விடுவேன்.. ராஸ்கல்.. யாரைப் பார்த்து என்ன வார்த்தைடி சொல்கிற..?”

“என்னதான் கனடாவுக்குப் பறந்தாலும் நம்ம ஊரு ஆம்பளைகளுக்கு பொம்பளைக பல்லைக் கழட்டற வித்தை மட்டும் மறக்கவே மாட்டேங்குது...”

“உன்னை..!”

அர்ஜீன் அவள் முகத்தில் முகம் பதித்து அவளைப் பேச விடாமல் செய்தான்.. முகம் சிவக்க விலகியவளை வெற்றிகொண்ட பார்வை பார்த்தவன்..

“பேச விட்டாத்தானே.. நீ பேசிக்கிட்டே இருப்பே.. இப்ப என்னடி செய்வ..?” என்று கேட்டான்...

கடைக்கு கார்திரும்பிய போது.. பிரிவின் துயரம் அவர்கள் இருவரின் மனதிலும் நிறைந்திருந்தது.. பேசாமல் அவளுக்குத் தாலியைக் கட்டி.. கையோடு கூப்பிட்டுக் கொண்டு போய் விடலாமா என்று யோசித்தான் அர்ஜீன்.. அதை அவளிடம் சொல்லவும் செய்தான்.. அவளோ...

"இது மதுரை..." என்றாள்..

"இதுக்கும் மதுரைதானா..? இப்ப எதுக்காக உன் ஊரின் பெயரைச் சொல்லி மிரட்டற..? நான் கேட்டதுக்கு பதில் சொல்லு.."

"இந்த ஊரில்தான் மீனாட்சி-சொக்கநாதனின் கல்யாணம் நடந்துச்சு.. அதுக்கு மீனாட்சியோட அண்ணனான அழகர் சீர் கொண்டு வந்தார்..."

"இதை எதுக்காக சொல்கிறேன்னுதான் கேட்கிறேன்.."

"வருசாவருசம் சித்திரைத் திருவிழாவில மீனாட்சி கல்யாணம் நடக்கும்.. தங்கைக்காக சீர் எடுத்துக்கிட்டு அழகரும் ஆத்தில இறங்குவார்.."

"பொறுமையை சோதிக்கற காவ்யா..."

"என் கல்யாணமும் அதுபோல ஊர் பார்க்க நடக்கனும்.. என் அண்ணன் எனக்காக சீர் செய்யனும்.."

"காவ்யா..."

“அது என் கையப் பிடிச்சு உங்ககிட்ட ஒப்படைச்சாத் தான் மனசார நான் உங்க மனைவியாவேன்..”

“இல்லைன்னா..?”

“என்னைக்குமே உங்க காதலிதான்..”

“ஏய்ய்.. உனக்கு என்னைவிட உன் அண்ணன் முக்கியமா போயிட்டானில்ல...” அர்ஜீன் விழி சிவந்தன...

“அதுக்கும் நான் முக்கியம்தான்...”

“ஒருவேளை அவன் மாட்டேன்னு சொல்லிட்டான்னா..?”

“ஒருநாளும் அப்படிச் சொல்லாது.. இப்ப உங்களைப் பார்க்கத்தான் நான் கிளம்பி வர்றேன்னு அதுக்கு நல்லாவே தெரியும்.. தெரிஞ்சிருந்தும் அம்மாகிட்டயிருந்து என்னைக் காப்பாத்தி அனுப்பி வைச்சுச்சு.. உங்களுக்கு அதைப் பத்தித் தெரியாது...”

தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அர்ஜீன் நினைத்தான்...

# 60

## இந்த மீனாட்சியின் சொக்கனாக.. நீயாக ஆசைகொண்டேன்...

**அ**ர்ஜீன் கனடாவுக்கு கிளம்பிப் போய் விட்டான்... அவன் இல்லாத அலுவலகத்தின் வெறுமையில் மனம் நைந்தாள் காவ்யா...

'அவன் ஐ லவ் யு சொன்னப்பவே பதிலுக்கு ஐ லவ் யுன்னு சொல்லியிருக்கனும்.. வெட்டியா முறைச்சுக்கிட்டு நாளைக் கடத்தினேன்..' தன்னைத்தானே நொந்து கொண்டாள்...

'தினமும் பேச வருவான்.. நான்தான் முகத்தைத் திருப்பிக்குவேன்.. பாவம்.. என்கூடப் பேசனும்னு மல்லுக்கு நின்னான்.. கண்டுக்காம காலம் கடத்தினேன்...' பெருமூச்சு விட்டாள்...

'இப்ப பறந்து போயிட்டான்.. அவன் நினைப்பிலயே நெஞ்சம் மறுகுது.. இதுக்கு அவன் இருந்தப்பவே ஒத்த வார்த்தய காலா காலத்திலே சொல்லியிருந்தா

அத்தனை நாளும் வெட்டியாக் கழிஞ்சிருக்காது... பேசிப் பழகியிருக்கலாம்...'

திரும்பத் திரும்ப இந்த நினைவே அவளுக்குள் வந்து இம்சை செய்தது.. பாவனா அவள் பக்கத்தில்தான் இருந்தாள்.. எப்போதும் போல கலகலப் பிரியாவாக சிரித்துப் பேசிக் கொண்டுதான் இருந்தாள்.. காவ்யாவுக்குத்தான் அந்த கலகலப்பில் இணைந்து கொள்ள மனமில்லை...

“என்ன ஏகாம்பரம் சார்... உங்களுக்கு என்கவுண்டர் ஏகாம்பரம்ன்னு யாரோ பட்டப்பெயரை வைச்சிருக்காங்களாமே.. அது நிஜம்தானா..?”

காலையிலேயே மனைவியுடன் ஏற்பட்ட மோதலில் கடையைப் பார்த்து ஓடிவந்து விட்ட ஏகாம்பரம் விரக்தியுடன் பாவனாவை நோக்கினார்...

‘பாவம் இந்த மனுசன் பாக்கிற இந்தப் பார்வையைப் பார்த்தாவது இவ இரக்கப்பட்டு இவர விட்டுத் தொலைக்கலாம்..' பரிதாபப் பட்டாள் காவ்யா...

பாவனாவிற்கு அதுபோன்ற இரக்கமெல்லாம் ஏற்படவில்லை.. அவள் கடமையே கண்ணாக.. ஏகாம்பரத்தை ஒரு வழி பண்ணிவிடும் உத்தேசத்தோடு களம் இறங்கியிருந்தாள்...

"இந்த மாதிரிப் புரளியயெல்லாம் யாரும்மா கிளப்பி விடறது..?" ஏகாம்பரம் எரிச்சலுடன் கேட்டார்...

இத்தனை நாள்களாக பாவனாவுடன் வேலை பார்த்தும் இந்த மனிதர் இந்த அளவுக்கு அப்பாவியாய் இருந்து தொலைக்கக் கூடாது என்று மனதிற்குள் கோபப் பட்டாள் காவ்யா..

பாவனா இருக்கும் இடத்தில் புரளியைக் கிளப்பிவிட புதிதாக ஒருவர் பிறந்து வர வேண்டுமா என்ன..?

அவள் ஒருத்தி போதாதா..?

"இந்தப் பெருமையை இந்த ஊரே பேசுதே சார்.." அலட்டிக் கொள்ளாமல் அள்ளி விட்டாள் பாவனா...

'அடிப்பாவி..' காவ்யா கண்களை அகல விரித்தாள்...

பாவனா அவள் பார்வையை கண்டு கொள்ளவே இல்லை.. அவள் போக்கிலேயே ஏகாம்பரத்தை ஒருவழி பண்ணிக் கொண்டிருந்தாள்...

"ஊரே பேசுதா..? என்னான்னு பேசுது..?" ஏகாம்பரம் யோசனையானார்...

அவர் கவலை அவருக்கு.. தினமும் அவர் வீட்டில் பறக்கும்.. தோசைக் கரண்டியையும்.. பூரிக்கட்டையையும் பற்றி ஊர் பேசுகிறதோ என்ற மிரட்சி அவருக்குள் தோன்றி விட்டது...

“என்னன்னு பேசும்..? நீங்க வல்லவர்.. நல்லவர்.. அப்படி.. இப்படின்னு ஆயிரம் பேசுது ஏகாம்பரம் சார்..”

“இருக்காதே...” ஏகாம்பரம் நம்பவேயில்லை...

அவர் நல்லவர் என்று சொன்னால் ஒப்புக் கொள்வார்.. வல்லவர் என்று சொல்வதை எப்படி அவர் ஒப்புக் கொள்வார்..?

அவரது வல்லமையின் லட்சணத்தைத்தான் அவர் குடியிருக்கும் வளாகமே விளாசித் தள்ளுகிறதே...

“ஏம்ப்பா.. ஏய்ய்.. ஏகாம்பரம்.. உனக்கெல்லாம் யாருப்பா மீசை வைக்கச் சொல்லிக் கொடுத்தது..? பொண்டாட்டியை அடக்கி ஆளத் துப்பில்ல.. முகத்தை மறைச்சு மீசையை மட்டும் வைச்சுக்கிட்டு அலையற.. உன் பொண்டாட்டி உன்னைப் படுத்தற பாட்டைப் பாத்து என் பொண்டாட்டியும் கத்துக்குவாளோன்னு பயமாய் இருக்குய்யா.. உன்னால இந்தக் காம்பவுண்டை விட்டே வீடு மாறிப் போறேன்.. நீதான் அச்சுக்கெட்ட ஆம்பளையாய் இருந்து தொலைக்கிறன்னா.. உன்னாலே மத்த ஆம்பளைகளும் பயந்து ஓடறதைப் போலயில்ல பண்ணி வைக்கிற...”

அவருடைய வீடு இருக்கும் வளாகத்தில் மொத்தம் எட்டு குடித்தனங்கள் வசித்து வந்தன.. அதில் இடம் மாறாமல் அன்றிலிருந்து இன்று வரை ஒரே வீட்டில் குடியிருந்து சாதனை படைத்த ஒரே குடித்தனக்காரர் ஏகாம்பரம் மட்டும்தான்.. மற்ற ஏழு வீடுகளில் எந்த வீட்டில் யார்குடி வந்தாலும் இரண்டே மாதத்தில் வேறு வீட்டைப் பார்த்து ஓடிப் போய் விடுவார்கள்..

ஏகாம்பரத்தின் சகிப்புத் தன்மை அப்படிப்பட்டது...

அவரைப் போன்ற சகிப்புத்தன்மையை தன் மனைவியும் எதிர்பார்த்து விட்டால் என்ன செய்வது என்று பயந்தடித்துக் கொண்டு மற்ற ஆண்மகன்கள் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைக் காலி செய்து விடுவார்கள்...

அப்படிப்பட்ட ஏகாம்பரத்தை வல்லவர் என்று மதுரை மாநகரம் சொல்கிறது என்று பாவனா சொன்னால்.. அதை நம்பி ஏமாறுவதற்கு ஏகாம்பரம் என்ன ஏமாளியா..?

“ஏம்மா பாவனா.. கேப்பையிலே நெய் வடியுதுன்னு ஏம்மா விட்ட விடியாலையிலே வியாக்கினம் பிளக்கிற..? அத நம்ப நானென்ன கேணப்பயலா..?”

‘பின்னே.. இல்லையா..?’ என்று மனதில் நினைத்துக் கொண்ட பாவனா வெளியில் அதை மறைத்தவளாக...

“உங்களைப் போய் கேணைன்னு யாராவது சொல்லுவாங்களா சார்..?” என்று அதிர்ந்து போவதைப் போல பாவனை காட்டினாள்..

“என் பொண்டாட்டி சொல்லுவா...” என்றார் ஏகாம்பரம்...

‘அதுதான் தெரிஞ்ச சங்கதியாச்சே...’ இமை கொட்டி விழித்து மனதை மறைத்த பாவனா...

“அச்சச்சோ.. அப்படியா சார்...? உங்களைப் போயா அப்படிச் சொன்னாங்க.. காவ்யா.. கேட்டாயா இந்தக் கதையை..? சார் எப்படிப்பட்ட ஹி மேன்..! சூப்பர் மேன்..! இவரைப் போயி ஆண்ட்டி கேணை.. கேத்தரவாடு.. உதவாக்கரை.. ஊர்சுற்றி.. சோம்பேறி.. அப்படி.. இப்படின்னு திட்டியிருக்காங்க.. எனக்கு மனசே தாங்கலை...” என்று சோகமாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

‘இவளுக்கு பாவனான்னு பொருத்தமாத்தான் பெயர் வைச்சிருக்காங்க.. என்னமா பாவனை பண்றா...’ காவ்யாவுக்கு சிரிப்பு வந்தது...

“உனக்கு என் பெண்டாட்டியே தேவலாம்மா... அவ கேணைன்னு ஒத்த வார்த்தை தான் சொன்னா.. நீ ஊரில

இருக்கிற அத்தனை வார்த்தையையும் சொல்லி வைக்கிறயே.. உனக்கே இது நல்லாயிருக்காம்மா..?”

“அப்படியா சார்..? உங்க வீட்டம்மா இதையெல்லாம் பேசலையா..? அவங்க பேசி.. அதை நீங்க சொல்லமுடியாம தவிக்கிறிங்களோன்னு நான் ஃபீல் பண்ணிட்டேன்.. காவ்யா.. நம்ம ஏகாம்பரம் சாரை அவரோட மிஸஸ் கேணைன்னு மட்டும்தான் திட்டினாங்களாம்.. கேத்தரவாடு.. உதவாக்கரை.. ஊர்சுற்றி.. சோம்பேறி.. அப்படி.. இப்படின்னெல்லாம் திட்டலையாம்..”

“ஏம்மா பாவனா.. உனக்கு காலங்கார்த்தால காலை வார நான்தான் கிடைச்சேனா..?”

“என்ன ஏகாம்பரம் சார்.. இப்படியொரு வார்த்தைய என்னைப் பார்த்துச் சொல்லிட்டிங்க.. எனக்கு மனசே தாங்கலைசார்...”

“உனக்கா மனசு தாங்காது..? அது எதையும் தாங்கும் வைர மனசும்மா...”

“இதை நீங்க சொல்லக்கூடாது ஏகாம்பரம் சார்.. உங்க நெஞ்சம்தான் எதையும் தாங்கும் வைர நெஞ்சம்ன்னு ஊருக்குள்ள பேசிக்கிறாங்க.. மத்தவங்கன்னா இந்நேரம் காவி வேட்டியைக் கட்டிக்கிட்டு.. சொல்லாம கொள்ளாம

சன்யாசம் வாங்கிக்கிட்டு ஓடியிருப்பாங்களாம்.. நீங்க அப்படியில்லயாம்.. உங்க சகிப்புத்தன்மையை மெச்சி.. பூமாதேவியே வந்து அவார்டு கொடுக்கப் போகிறாங்களாமே...”

“எந்த பூமாதேவிம்மா..?”

“உங்களுக்கு எத்தனை பூமாதேவியைத் தெரியும்..?”

“எங்க பக்கத்து வீட்டில பூமாதேவின்னு ஒரு பொண்ணு இருக்கு...”

“பொண்ணா..?”

“எனக்குப் பொண்ணு.. உனக்கு அம்மா...”

இது என்னமாதிரியான விளக்கம் என்று பாவனாவிற்கு பிடிபடவில்லை.. ஒரே மாது.. ஏகாம்பரத்திற்கு பெண் போலவும்.. பாவனாவிற்கு அம்மா போலவும் எப்படிக் காட்சியளிக்க முடியும்..?

“புரியலையே...”

“இதில புரியாமப் போக என்ன இருக்கு..? உன்னைப் புத்திசாலின்னு இந்தக் கடைக்குள்ள பேசிக்கிறாங்களே.. அது பொய்யா..?”

ஏகாம்பரத்தின் கேள்வியில் காவ்யா வாய் விட்டுச் சிரிக்க.. பாவனா அவரை இமைக்காமல் பார்த்து விட்டு..

“பார்த்தியா கிழபோல்டுக்கு இருக்கிற கொழுப்பை..?” என்று காவ்யாவின் காதோரமாக கிசுகிசுத்தாள்...

“நீதானேடி அவர்கிட்ட வம்பைக்கட்டி இழுத்த..? அப்ப வாங்கிக் கட்டிக்க..”

“மதுரைக் குசும்பு...?”

காவ்யாவை முறைத்த பாவனா.. ஏகாம்பரத்தின் பக்கம் திரும்பினாள்...

“நான் புத்திசாலியோ இல்லையோ.. நீங்க புத்திசாலிதான் ஏகாம்பரம் சார்.. எப்படியாப்பட்ட கண்டு பிடிப்பை சொல்லியிருக்கீங்க.. உங்களைப் போய் கேணைன்னு உங்க வீட்டம்மா சொல்லியிருக்காங்களே.. டூ பேட்.. டூ பேட்...”

“ஆரம்பிச்சுட்டியா..? ஏம்மா.. நீ இதை விடவே மாட்டியா...?”

“மனசு கேட்கலை சார்...”

“இன்னைக்கு பூராவும் இதை வைச்சே ஓட்டிரலாம்ன்னு ஒரு முடிவோட இருக்க போல இருக்கே..”

“என்ன ஓட்டு ஓட்டினாலும் நீங்க அசருகிற ஆளா ஏகாம்பரம் சார்..? உங்க வீட்டம்மாவும் உங்கள ஓட்டிரலாம்ன்னுதான் படாத பாடு படறாங்க..

எங்கே..? நீங்க உங்க காம்பவுண்டில குடியிருக்கிற மீசைக்காரங்களைத்தான் குடும்பத்தோட ஓட்டிக்கிட்டு இருக்கீங்களாமே.. நீங்க ஓடற மாதிரி இல்லையாமே..?"

"அதில உனக்கெதுக்கும்மா இம்புட்டு வருத்தம்..?"

"எதையெதையோ கேட்டுச் சொல்றீங்க.. கூறாமல் சன்யாசம் கொள்ன்னு பெரியவங்க சொன்னதை கேட்டுக்காம போயிட்டிங்களே சார்.."

"ஆக.. என்னை சாமியாராக்கி பத்தி விடனும்கிற கங்கணத்தோடதான் காலங்கார்த்தாலேயே நீ வம்பிழுக்க வந்திருக்கிற...?"

"ஐயோ சார்.. நான் அப்படிச் செய்வேனா...?"

"நீ மட்டும்தாம்மா அப்படிச் செய்வ..."

"உங்க வீட்டம்மா செய்ய மாட்டாங்களா சார்..?"

"உன் பக்கத்தில நிக்க வைச்சா அவ தங்கம்மா..."

"ஏன் சார்.. கல்யாணம் பண்ணிக்கிட்டு.. மாப்பிள்ளை பக்கத்தில நிற்கப் போகிற வயசில இருக்கிற என்னைப் பார்த்து உங்க வீட்டம்மா பக்கத்தில நிற்க வைக்கப் பாக்கறிங்களே.. உங்களை உங்க வீட்டம்மா காய்ச்சி எடுக்கறதில தப்பேயில்லை.. ஆமா.. யாரு அந்த

பூமாதேவி..? அது எப்படி உங்களுக்கு பெண்ணாவும் எனக்கு அம்மாவாகவும் ஆக முடியும்..?"

"அந்தப் பொண்ணுக்கு உன் வயசில ஒரு பொண்ணிருக்கு..."

ஏகாம்பரம் போட்ட போட்டில் அயர்ந்து விட்டாள் பாவனா...

"பாருடி.. இந்த ஆளைப் போய் கேணைன்னு இவரோட பெண்டாட்டி சொல்லியிருக்கே.. இந்த ஆளு விவரத்துக்கு ஊரையே வித்துப்புடுவாரு போல இருக்கே.." காவ்யாவிடம் அங்கலாய்த்தாள்...

"அந்தம்மாதான் கேணை.. ஆளைப் பாரேன்.. எழும்புக்கூட்டைப் போல இருந்துக்கிட்டு.. பக்கத்து வீட்டு அம்மாவ எடை போடறாரு.. ஆசாமி டெர்ரர் கேஸ்டி.." என்றாள் காவ்யா...

"என்னத்தம்மா காதைக் கடிச்சுக்கறிங்க..?" ஏகாம்பரம் வெற்றிலை பாக்கை வாய்க்குள் திணித்தபடி கேட்டார்...

"ஹி.. ஹி.. ஒன்னுமில்ல சார்.. உங்க குணத்துக்கு பூமாதேவி போல ஒரு வொய்ப் வந்து வாய்ச்சிருக்கனும்னு காவ்யாகிட்டச் சொல்லிக்கிட்டு இருந்தேன்.. என்னடி காவ்யா..," பாவனா சமாளித்தாள்...

"ம்ஹீம்.. இதைத்தான் பூமா தேவியும் சொல்லிச்சு.."

ஏகாம்பரம் விட்ட பெருமூச்சில் 'ஆ' வென்று வாய் பிளந்து உட்கார்ந்து விட்டாள் பாவனா...

## 61

*நீயுறங்கும் நேரத்திலே..*
*உன் கனவில் வர ஆசைகொண்டேன்..*

**ஏ**தையும் தாங்கும் இதயம் படைத்த பாவனாவினாலேயே இதைத் தாங்க முடியவில்லை எனும் போது காவ்யா பாவம்.. என்ன செய்வாள்..?

"என்னடி... சார் இப்படிச் சொல்கிறாரு..." அவள் திகிலடைந்து விட்டாள்...

"அதாண்டி எனக்கும் புரியலை.. இந்த எழும்புக்-கூட்டு ஏகாம்பரத்தைப் பார்க்கவும் ஆளிருக்கா..."

"ஆளில்ல... அவருக்கு அது பொண்ணு.. உனக்கு அம்மா..."

"சீச்சி.. கதையை மாத்தாதே.. அந்தாளு பொண்ணுன்னு சொன்னதுக்கு.. அர்த்தமே வேற.. அவர் கண்ணுக்கு அந்த லேடி இளமையா இருக்குதாம்..."

“என்ன கண்றாவியோ...”

காவ்யா முகத்தைச் சுளித்தாள்.. அவள் பேசியதை அரையும் குறையுமாக கேட்ட ஏகாம்பரம்...

“இல்லையே.. பூமாதேவி கண்றாவியாய் இருக்காதே.. அது கண்ணுக்கு லட்சணமான பொம்பளையாச்சே...” என்றார்..

“முடியலை...” வாய்க்குள் முணுமுணுத்தபடி வாசல்பக்கம் பார்த்த பாவனா...

“காவ்யா அலர்ட்டா இருந்துக்கடி...” என்று எச்சரித்தாள்...

“என்னடி ஆச்சு..?” புரியாமல் கேட்டாள் காவ்யா...

“தேவாங்கு வந்துக்கிட்டு இருக்குடி...”

“தேவாங்கா..?”

காவ்யாவின் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல ஆகிவிட்டது.. அவள் அவசரமாக கம்யூட்டருக்குள் தலையைக் கொடுத்தாள்..

அதுவரை வேலையைப் பற்றிய நினைவில்லாமல் அரட்டையடித்துக் கொண்டிருந்தவளுக்கு என்ன ஆனது என்று புரியாதவராக திரும்பிப் பார்த்தவரின் கண்களில் உள்ளே வந்து கொண்டிருந்த தேவராஜன் தென்பட்டான்..

‘இதான் விசயமா..?’

ஏகாம்பரம் காவ்யாவை கருணையுடன் பார்த்தபடி வெற்றிலை எச்சிலைத் துப்பி விட்டு வரலாமென்று எழுந்து நின்றார்.. அதை தனக்குக் கொடுத்த மரியாதையாக நினைத்துக் கொண்ட தேவராஜன்...

“பரவாயில்லை.. உட்காருங்க...” என்று மிதப்பாக சொல்லியபடி காவ்யாவைப் பார்த்தான்...

“இது வேறயா...?” சத்தமாகவே சொல்லி வைத்தாள் பாவனா..

ஏகாம்பரம் தேவராஜனை முறைத்த முறைப்பில் அவனை பஸ்பமாக்கிவிடும் உத்தேசம் இருந்ததில் அவன் அரண்டு போனவனாக வாய் மூடிக் கொண்டான்...

“யாழு.. யாழை.. உழ்காழச் சொழ்முழது...?”

வெற்றிலையை குதப்பியபடி ஏகாம்பரம் கேட்ட கேள்வியை தேவராஜனால் புரிந்து கொள்ள முடியவில்லை..

அவன் இது போன்ற ‘நொழ.. நொழா’ பேச்சுக்களை குடிமகன்களிடம்தான் கேட்டிருக்கிறான்...

ஏகாம்பரம் குடிமகனல்ல.. அதை அவன் நன்றாகவே அறிவான்.. அப்படியிருந்தால்தான் அவன் ஒரு பாட்டிலை

வாங்கிக் கொடுத்து அவரைக் கணக்கு பண்ணி... அவர் மூலமாக காவ்யாவை கணக்கு பண்ண முயற்சி எடுத்திருப்பானே...

என்னதான் இளங்கோ தேவராஜனிடம் தன்மையாகப் பேசினாலும்... தங்கராஜ் அலுவலக நிலவரத்தை பிட்டுப்பிட்டு வைத்தாலும்.. கந்தசாமி வாய் நிறைய புன்னகைத்தாலும்.. அவை அத்தனையும் ஏகாம்பரத்தின் அண்மைக்கு ஈடாகுமா..?

அவர் ஒருவர்தானே அந்தக் கடையில் வேலை பார்க்கும் அழகான இரு இளம் பெண்களின் அண்மையில் அமர்ந்திருக்கிறார்..?

அப்படிப்பட்ட ஏகாம்பரத்தைத்தான் ‘பரவாயில்லை.. உட்காருங்க..’ என்று பொருந்தன்மையோடு சொல்லி வைத்துத் தொலைத்தான் தேவராஜன்...

“எழுழ்ழி ழிழ்ழா ழீ உழ்காழ ழொழ்முழிலா..”

ஏகாம்பரம் எகிறிய எகிறலை பாவனாவினாலேயே தாங்க முடியவில்லை...

“ஏகாம்பரம் சார்.. முதல்ல நீங்க வெற்றிலையைத் துப்பி விட்டு வாங்க.. நீங்க பேசற லூல்லாயியை எங்களாலேயே புரிந்துக்க முடியலை.. இதில பாவம் தேவாசார் என்ன பண்ணுவார்...?”

பாவனா சொன்னதினால் போனால் போகிறதென்று தேவராஜனை விட்டு விட்டு பாத்ரூம் பக்கமாக நடையை கட்டினார் ஏகாம்பரம்...

தேவராஜன் பாவனாவை விட்டுவிட்டு காவ்யாவைப் பார்த்தான்.. அவளோ.. அப்படியொருவன் அங்கே நின்று கொண்டிருக்கும் நினைவே இல்லாதவளாக கம்யூட்டரைப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

“நேரம்டி.. இவனைக் காப்பாத்தினது நானு.. இவன் பார்வையிடறது உன்னையா..? ஏகாம்பரத்து கிட்ட இன்னும் கொஞ்சநேரம் மாட்டிக்கிட்டு ‘லொலலொல’ பேச்சைக் கேட்கட்டும்ன்னு விட்டிருக்கனும்... காப்பாத்தினது தப்பாப் போச்சு..” காவ்யாவின் காதோரமாக முணுமுணுத்தாள் பாவனா...

“உன்னை யாரு தேவையில்லாத வேலையையெல்லாம் செய்யச் சொன்னது..?” தனிந்த குரலில் பல்லைக் கடித்தாள் காவ்யா...

“போனாப் போகுது.. பழைய முதலாளியின் மகனாச்சேன்னு பரிதாபப் பட்டேன்.. அதுக்கு இவன் காட்டற நன்றிக்கடன் இதுதானா..?”

“அடச்சீ.. அடங்கு.. இப்ப உனக்கு என்ன நன்றிக்கடன் வேணும்..? இந்த தேவாங்கு உன்னைத்

திரும்பிப் பார்க்கனுமா..? இந்தக் கொடுமையையா நன்றிக் கடன்னு சொல்கிற...?"

"ஹலோ.. இது மூஞ்சியைப் பார்க்கனும்னு எனக்கென்ன நேர்த்திக் கடனா இருக்கு.. செஞ்சது நானு.. பார்வை அங்கேன்னா எனக்கொரு பதில் தெரிஞ்சாகனுமில்ல...?"

"அதை அவன்கிட்டயே கேளு..."

"கேட்டுட்டாப் போச்சு..."

பாவனா நிமிர்ந்து அது நேரம் வரை பெண்கள் இருவரும் ரகசியக் குரலில் கிசுகிசுத்துக் கொண்டிருந்ததை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த தேவராஜனைப் பார்த்தாள்..

"என்ன தேவா சார்.. எங்கே இந்தப் பக்கம்..?"

பாவனா கேட்டு விட்டால் போச்சு என்று சொல்லும் போதே அவள் தேவராஜனிடம் என்ன கேட்கப் போகிறாள் என்று யூகித்து விட்டிருந்த காவ்யாவின் முகத்தில் சிரிப்பு அரும்பியது...

பாவனா இப்படிக் கேட்பாள் என்று எதிர் பார்த்திராத தேவராஜன் "ஹி.. ஹி.. சும்மா உங்களையெல்லாம் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.." என்று வழிந்தான்..

“உங்களைன்னு யாரைச் சொல்கிறீங்க..? ஏகாம்பரம் சாரையா..?” அறியாதவளைப் போல அப்பாவியாய் வினவினாள் பாவனா...

அத்துடன் நில்லாமல் ஏகாம்பரம் வருகிறாரா என்று வேறு திரும்பிப் பார்த்தபடி...

“அடடா.. இது தெரியாம அவரை விரட்டி விட்டேனே.. இருங்க.. தங்கராஜை விட்டு அவரை கூப்பிட்டு வரச் சொல்றேன்..” என்று வேறு சொல்லி வைத்தாள்...

“என்னது...” தேவராஜன் அலறிவிட்டான்...

“என்னாச்சு தேவா சார்..?” அக்கறையாக கேட்டாள் பாவனா...

“நான் அவரைப் பார்க்க வரலைங்க...”

தேவராஜன் காவ்யாவைப் பார்த்தான்.. உன்னைத் தான் பார்க்க வந்தேன் என்று விழிகளால் சொல்ல முயற்ச்சித்தான்.. கடுப்பாகிப் போன காவ்யா பல்லைக் கடித்தபடி.. கம்யூட்டரில் தீவிரமாக பார்வையை பதித்தாள்..

“நீ இந்தக் கடையோட அக்கவுண்டை டேலி பண்ணப் பாக்கறியா.. இல்ல.. சாப்ட்வேர் இன்ஜினியர் போல புராஜெக்ட் வொர்க்கை முடிக்க டிரை பண்ணிக்கிட்டு இருக்கியா..?” பாவனா கேட்டாள்...

பதிலுக்கு கொலைவெறிப் பார்வை பார்த்தாள் காவ்யா...

“விடுடி...” வெள்ளைக் கொடியை பறக்கவிட்டாள் பாவனா..

ஏகாம்பரம் வருகிற வழியும் தெரியவில்லை.. தேவராஜனுக்கு நகர்ந்து போகும் உத்தேசம் இருப்பதாகவும் தெரியவில்லை... பாவனா கழுத்தைச் சாய்த்து கருடபார்வை பார்த்தபடி...

“ஏகாம்பரத்தையும் பார்க்க வரலைன்னா.. வேற யாரைத்தான் பார்க்க வந்தீங்க...?” என்று கொக்கி போட்டாள்...

“உங்க எல்லாத்தையும் தான்...” என்றான் தேவராஜன்...

“ஏன் சார்.. நாங்க என்ன ஷோ கேஸ் பொம்மைகளா..? சும்மா எங்களைப் பார்த்துட்டுப் போகலாம்ன்னு நீங்க வந்து போகிறதுக்கு..? இது வேலை நடக்கிற இடம் சார்.. நல்ல வேளையா முதலாளி இங்கே இல்ல.. இருந்தா உங்களை உள்ளே வர அலோவ் பண்ணியிருக்கவே மாட்டார்...” எரிச்சலுடன் சொன்னாள் பாவனா...

‘என் அப்பன்காரன் மட்டும் இந்தக் கடையை விக்காம இருந்திருந்தா இவ இந்தப் பேச்சு பேசுவாளா..?’ வெகுண்டான் தேவராஜன்...

“தெரியும்ங்க... எனக்கு எல்லாம் தெரியும்..”

காவ்யாவை காக்காய் பார்வை பார்த்தபடி சொன்னான் தேவராஜன்.. அவள் துணுக்குற்றாள்.. தேவராஜன் பொடி வைத்துப் பேசுவதைப் போல அவளுக்குத் தோன்றியது..

“இவன் ஏதோ வில்லங்கமாப் பேசறாண்டி..” பாவனாவிடம் முணுமுணுத்தாள்..

“அப்படியா சொல்கிற..?” பாவனா தேவராஜனைப் பார்த்தாள்...

தேவராஜனின் கண்களில் தெரிந்தகபடத்தில் அவளுக்கு காவ்யாவின் சந்தேகம் உண்மையானது என்றே தோன்றியது...

“எல்லாம் தெரியும்ன்னா.. என்ன தெரியும் தேவராஜன்..?” என்று அவள் கேட்டுக் கொண்டிருந்த போதே ஏகாம்பரம் திரும்பி விட்டார்...

‘அப்பாடி..’ உதவிக்கு ஆள் வந்து விட்டதில் நிம்மதிப் பெருமூச்சை விட்டாள் காவ்யா...

“என்னம்மா..?” தேவராஜனை முறைத்தபடி கேட்டார் ஏகாம்பரம்...

“இவருக்கு எல்லாம் தெரியுமாம் ஏகாம்பரம் சார்.. அதான் என்ன என்ன தெரியும்ன்னு விசாரிச்சுக்கிட்டு இருந்தேன்...” பாவனா எடுத்துக் கொடுத்தாள்...

“என்ன தெரியுமாம்..? இந்தக் கம்யூட்டர்ல உட்கார்ந்து கணக்கெழுதத் தெரியுமா..? பொம்பளைப் புள்ளைக முன்னாடி நின்னு கடலை போடத்தான் தெரியும்..” வெளிப்படையாகவே திட்டி விட்டார் ஏகாம்பரம்...

“பார்த்துப் பேசுங்க ஏகாம்பரம்.. ஒரு காலத்தில எங்ககிட்ட கைநீட்டிக் காசு வாங்கின ஆளுதான நீங்க.. பழசெல்லாம் மறந்து போச்சா..?”

தேவராஜன் கொதித்ததில் பாவனாவுக்கு கோபம் வந்து விட்டது.. அது எப்படி சம்பளம் வாங்குபவர்களை அவன் குறைவாகப் பேசலாம்...?

“கை நீட்டி காசை வாங்கல தேவா.. சம்பளத்தைத் தான் வாங்கியிருப்போம்.. அது எங்களுக்குச் சொந்தமானது...”

“நான் உங்களைச் சொல்லலைங்க...”

“யாரைச் சொன்னா என்ன..? அவரைச் சொல்கிறதுதானே எங்களுக்கும் பொருந்தும்..? வேலையைப் பார்க்கிறோம்.. சம்பளத்தை வாங்குகிறோம்.. வெட்டியாய் பொழுதை ஓட்டலையே..?” பாவனா மறைமுகமாக தேவராஜனைச் சொல்லிக் காட்டினாள்..

“அட நீ வேறம்மா.. வெட்டியாப் பொழுதை ஓட்டியிருந்தாலும் கடை தப்பிச்சிருக்குமே.. அப்பன் சொத்தை அழிக்கனும்னு கங்கணம் கட்டிக்கிட்டு களவாணிப் பயலுகளோட குடிச்சுப்புட்டு கும்மாளம் போட்டு கடையைத் தொலைச்சுப்புட்டு இப்ப பார்வையிட வந்து நிற்குது...” ஏகாம்பரம் நேரடியாகவே சொல்லிக் காட்டினார்...

தேவராஜனுக்குள் கோபம் கொழுந்து விட்டு எரிந்தது.. காவ்யாவின் முன்னால் அடிமேல் அடி விழுவதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. எவ்வளவு நேரம்தான் அவனும் வலிக்காததைப் போலவே நடித்துக் கொண்டிருப்பான்.. அடி வாங்குவதைவிட.. அதைக் கேட்டு காவ்யா குறும்சிரிப்பு சிரிப்பதைத்தான் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

பதிலுக்கு அடித்தே ஆகவேண்டும் என்ற ஆவேசம் அவனுக்குள் கனன்றது.. காவ்யாவை முறைத்தபடி அவன் பேச ஆரம்பித்தான்...

“போனவாரம் ஏர்போர்ட் பக்கமா போயிருந்தப்ப உங்க முதலாளி காரைப் பாத்தேன்ங்க... அவரு பிளேனைப் பிடிக்கத்தான் போறாரோன்னு பாத்தா அவரு பிளேனையும் பிடிக்கல.. ஏர் போர்ட்டுக்கும் போகல... ரோட்டோரமா மரத்தடியில காரை மணிக்கணக்கா நிப்பாட்டி வைச்சிருந்தாரு.. அது ஏன்னுதான் எனக்குத் தெரியல..”

# 62

## பொத்திவைத்த காதலையே – நீ..
## பாதுகாக்க ஆசைகொண்டேன்...

'இவனுக்கு இது எப்படித் தெரியும்..?'

அதிர்ந்து விழித்தாள் காவ்யா.. அவளுடைய அந்த அதிர்வைத் திருப்தியுடன் பார்த்தான் தேவராஜன்...

'சும்மா அதிருதில்ல...'

இப்படித்தானே அவனுக்கும் இருந்திருக்கும் என்றிருந்தது அவனுக்கு.. பிடித்துப் போய் விட்டது என்று பார்க்க வந்தால் அதற்காக உலக மகாப் பேரழகியைப் போல முகத்தை வைத்துக் கொண்டு அவனைப் புறக்கணித்தால் என்ன அர்த்தம்..? மற்றவர்கள் கேலி பேசுவதை ரசித்துச் சிரித்தால் என்ன அர்த்தம்..? அவளுக்கு அவனைப் பார்த்தால் கோமாளியைப் போல இருக்கிறதா..?

இல்லையென்பதை அவன் உணரவில்லை... காவ்யா அவனை ஒருநாளும் வெறும் கோமாளியென்று நினைத்ததே இல்லை.. அவனை நினைத்தால் அவளின்

முதுகுத்தண்டு ஜில்லிட்டிருக்கிறது.. அவன் குரூரம் நிறைந்த கொடிய வில்லன் என்பதில் அவளுக்கு யாதொரு சந்தேகமும் இருந்ததில்லை...

அவனை அவள் அறிவாள் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை...

“என்னடா இது.. நம்ம கடையை வாங்கின மகராசன் பிளேனையும் பிடிக்கப் போகாம.. மதுரைப் பக்கமும் திரும்பாம ரோட்டோரமா மரத்தடியில காத்து வாங்கறாரே.. அவரு தங்கியிருக்க ஏஸி ரூமில காத்து வரலையான்னு எட்டிப் பாத்தேன்...”

காவ்யாவின் கை விரல்கள் நடுங்குவதை குரூரமாகப் பார்த்தபடி அவன் பேசப்பேச.. ஏதோ இருக்கிறது என்பதை உணர்ந்து விட்டாள் பாவனா...

“தேவா சார்.. வேலைவெட்டி இல்லைன்னா உங்க வீட்டில போய் உட்கார்ந்து கதை பேசுங்க.. நீங்க ரோடு ரோடாய் சுத்தின கதையைக் கேட்க எங்களுக்கு நேரமில்லை... என்ன ஏகாம்பரம் சார்.. இவர் பாட்டுக்கு பேசிக்கிட்டே இருக்காரு.. நீங்க வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கீங்களே.. இதுதான் நீங்க எங்களைக் காவல் காக்குற லட்சணமா..?”

ஏகாம்பரத்தை கொம்பு சீவி விட்டாள் அவள்.. அர்ஜீன் கனடாவுக்கு கிளம்பும் போது.. காவ்யாவை ஜாடையாகப் பார்த்தபடி ஏகாம்பரத்திடம்...

“மிஸ்டர் ஏகாம்பரம்.. நீங்க வயதில பெரியவர்... நம்ம கடையில வேலை பார்க்கிற பெண்களுக்கு நீங்கதான் பாதுகாவலாய் இருக்கனும்..” என்று சொல்லி வைத்திருந்தான்..

அதை பாவனா நினைவுபடுத்தியதில் மெய் சிலிர்த்துப் போனார் ஏகாம்பரம்.. எவ்வளவு பெரிய பொறுப்பை முதலாளி அவரிடம் ஒப்படைத்து விட்டுப் போயிருக்கிறார்.. அந்தப் பெண்மணிகள் இருவரும் அவரின் கண்மணிகள் அல்லவா..? அந்தக் கண்மணிகளின் முன்னால் வந்து நின்று தேவாங்கு கடலை போடுவதா..? அதை கர்ம வீரனான அவர் பார்த்துக் கொண்டிருப்பதா..?

“நீ வேறம்மா.. இவரு பேசினா இவரு வீட்டில காது கொடுத்துக் கேட்பாங்கன்னா நினைக்கிற..? அதது அப்பன் சேர்த்து வைச்சிருக்கிற சொத்தை ஆயிரம் மடங்கா பெருக்கிக் காண்பிக்கும்.. இது அப்படியா..? அழிக்கல்ல பிறந்திருக்கு...”

“ஏகாம்பரம்...”

“என்ன..?”

“பார்த்துப் பேசு...”

“நீ முதல்ல மரியாதையாய் பேசு..”

“வயசுக்குத் தக்கன பேசனும்.. நீ அப்படியா பேசற..? உனக்கெல்லாம் எதுக்கு மரியாதை..?”

“என் வயசுக்குத் தக்க பேச்சத்தான் நான் பேசறேன்.. இங்க இருக்கிற பொம்பளப் புள்ளகளக் கேட்டுப் பார்.. இதுக கிட்ட அப்பன் மாதிரி பழகறேன்னு இதுக சொல்லும்.. நீ அப்படியா..? கடைக்கு வந்தா கடையைப் பாத்துப்புட்டு போயிடனும்.. பொம்பளப் புள்ளக முன்னாடி வந்து நின்னு ஊருக்கதையை பேசிக்கிட்டு இருக்க.. முதலாளிக்குப் போன் போட்டேன்னு வைய்யி.. உன்னக் கழுத்தப் பிடிச்சு வெளியே தள்ளச் சொல்லுவாரு...”

இப்போது தேவராஜன் அதிர்ந்து விட்டான்.. இப்படிப்பட்ட பேச்சுக்களை ஏகாம்பரம் பேசிவிடுவா-ரென்று அவன் எதிர்பார்த்திருக்க வில்லை... என்னதான் அந்தக் கடையின் தற்போதைய முதலாளியாக அவன் இல்லையென்றாலும்.. ஒரு காலத்தில் அவன் அந்தக் கடையின் முதலாளியாக இருந்திருக்கிறான்.. அவனைப் போய் இப்படிப் பேசுவதா..?

அவன் அதிர்வைத் திருப்தியுடன் கவனித்தாள் காவ்யா...

‘சும்மா அதிருதில்ல...’ அவள் கண்கள் கேட்டன...

ஏகாம்பரம் போட்ட சத்தத்தில் கடையில் இருந்த மற்றவர்கள் அங்கே ஓடி வந்தார்கள்...

“என்னாச்சு ஏகாம்பரம்..?”

“உன்னைச் சொல்லனும் கந்தசாமி.. கடைக்கு யார் வந்தாலும் கதவைத் திறந்து விட்டுருவியா..?”

“ஏம்பா ஏய்ய்.. இவரு நம்ம பழைய முதலாளியோட மகன்ப்பா...”

“நான் மட்டும் மருமகன்னா சொன்னேன்..? எங்களுக்கும் அந்தக் கழுதையைத் தெரியுது.. இவரு பழைய முதலாளியோட மகன்தான்.. பழைய முதலாளியில்ல.. இவரை உள்ளே விடக் கூடாதுன்னு நம்ம புதுமுதலாளி சொல்லியிருக்காரா.. இல்லியா..?”

ஏகாம்பரத்தின் கேள்வியில் கந்தசாமிக்கு ‘கெதுக்’ கென்று இருந்தது.. அர்ஜீன் அப்படிப்பட்ட உத்தரவைப் பிறப்பித்திருந்தான்.. ஆனாலும் கந்தசாமிதான் மனது கேட்காமல் தேவராஜன் வரும்போது அவனை கடைக்குள் அனுமதித்து விடுவார்...

‘இத இந்த ஏகாம்பரம் பய முதலாளிகாதில ஓதி விடுவானோ...’

அவர் பயந்துவிட்டார்.. அந்த பயத்தில் எழுந்த கோபத்தில் தேவராஜனை அதட்டி விட்டார்...

“ஏந்தம்பி.. கடையைப் பாக்க வந்தா பாத்துப் புட்டு.. பாத்த சுவடு தெரியாம ஓடிப் போயிர வேண்டியதுதான..? அதவிட்டுட்டு எதுக்காக பொம்பளப்புள்ளக இருக்கிற பக்கமா வந்து நின்னு பேச்சுக் கொடுக்கறிங்க..?”

கடையில் வேலை செய்த மற்ற வேலையாள்களின் முகம் மாறியதைக் கவலையுடன் கவனித்தான் தேவராஜன்.. இதற்குப்பின்னால் அவன் அந்தக் கடைக்கு இயல்பாக வந்து போக முடியுமா..?

“என்ன கந்தசாமியண்ணே இப்படிப் பேசிப் புட்டிங்க.. இந்தப் புள்ளைகள்ளாம் யாரு..? எனக்கு முன்னப்பின்ன தெரியாதவங்களா..? இவங்ககிட்ட இன்னைக்கு நேத்தா பழக்கமிருக்கு..?”

அவன் கந்தசாமியை நியாயம் கேட்டுக் கொண்டிருந்த போது..

“எனக்கு உங்ககூடப் பழக்கமில்ல தேவா சார்...” என்றாள் பாவனா...

“நீங்க ஜஸ்ட் தெரிஞ்சவர்தான்.. கடையோட ஓனரோட மகன்.. அந்த வகையில உங்ககிட்ட முகம் கொடுத்துப் பேசுவேன்.. மத்தபடி நீங்க சொல்றதைப் போல நாம ஒன்னும் பழகிப் பார்த்ததில்லயே.. ஏண்டி காவ்யா.. நீ இவர்கூடப் பழகியிருக்கயா..?”

“சீச்சி..” காவ்யா வெறுப்பைக் கக்கினாள்..

அந்த ஒன்றிற்காகவே அவள் கழுத்தில் தாலியைக் கட்டிவிட வேண்டும் என்ற கொலைவெறிக்கு ஆளானான் தேவராஜன்..

“நீங்க கிளம்புங்க தேவராஜன்...”

என்றைக்குமே அவனைப் பெயர் சொல்லி அழைத்திராத இளங்கோ அவன் பெயரைச் சொல்லிக் கிளம்பச் சொன்னதில் தேவராஜனின் ரத்த அழுத்தம் எகிறியது...

“தங்கராஜ்...”

தேவராஜன் பக்கபலத்திற்கு ஆள் தேடினான்.. தினமும் தேவராஜனின் பணத்தில் தாகசாந்தி செய்து.. புரோட்டாவையும்.. பூரியையும் ஒரு கைபார்க்கும் தங்கராஜ்.. வாரா வாரம் தேவராஜன் படியளக்கும் தங்கராஜ்..

நிச்சயமாக உதவிக்கரம் நீட்டுவான் என்று தேவராஜன் நம்பினான்...

அவனோ.. தேவராஜன் இப்படிச் செய்து வைத்து விடுவான் என்பதை எதிர்பார்த்திருந்தவனைப் போல செல்போனை காதுக்கு கொடுத்து...

"என்ன..? நீங்க பேசறது கேக்க மாட்டேங்குது.. இங்கே டவர் கிடைக்கல.. பொறுங்க.. வாசலுக்கு வந்து பேசறேன்..." என்று கதையளந்தபடி வாசலுக்கு ஓடிப் போய் விட்டான்...

'அடப்பாவி.. வெத்து செல்போனை காதுக்கு கொடுத்து பேசற டிரிக்க எத்தனை இடத்தில நான் யூஸ் பண்ணியிருப்பேன்..? இன்னைக்கு என்னடான்னா எங்கிட்டயே ஒருத்தன் அந்த டகுல்பாச்சி வேலயக் காட்டறானே...'

தேவராஜனுக்கு தங்கராஜின் உதவியும் கிடைக்கவில்லை...

"தேவராஜன்..." இளங்கோ அழுத்தமாக அழைத்தான்...

அவன் புதிதாகக் திருமணம் ஆணவன்.. கடைத் தெருவிற்கோ.. சினிமாவிற்கோ புதுப்பெண்டாட்டியை

அழைத்துச் சொல்லும்போது.. வேறு யாரும் அவளைப் பார்த்துவிடக் கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வுடன் பெண்டாட்டிக்குத் தெரியாமல் கண்காணிப்பவன்.. பெண்களைக் கவால் காக்கும் பொறுப்பை உணர்ந்த பின்னால் தேவராஜனின் வரவு எதற்காக என்பது அவனுக்கு விளங்கிவிட்டது..

“இது கடை தேவராஜன்.. வேலை நடக்கிற இடம்.. இனிமே நீங்க கடைப்பக்கம் வந்தா எங்ககூடப் பேசிட்டுப் போயிடனும்.. கடைக்குப் பின்னாலே இருக்கிற ஆபிசில வேலை செய்யற பொம்பளப் புள்ளககிட்ட கடலை வறுக்கக் கூடாது...”

“நீ வேற இளங்கோ.. இந்த ஆளு கடையைப் பாக்கவா வர்றாரு..? கடலை வறுக்கத்தான வர்றாரு...”

“இத்தன நாளா இது எனக்குத் தெரியாம போச்சே ஏகாம்பரம் சார்..?”

“சொல்லியிருப்பேன்.. இந்தப் புள்ளகை ரெண்டும் புத்திசாலிக.. என்னதான் இந்த ஆளு வருந்தி.. வருந்தி கடலை வறுத்தாலும் திரும்பிக் கூடப் பார்க்காதுகங்கிறதினால பேசாம விட்டேன்..”

“ஆனாலும் கந்தசாமியண்ணே.. முதலாளி சொல்லியிருந்தும் இவரை கடைக்குள்ள நீங்க விட்டது தப்புத்தான்...”

“இப்புடின்னு கண்டேனா இளங்கோ.. ஒரு நா.. ஒரு பொழுதில இவங்கப்பா கையால சம்பளம் வாங்கினோமேங்கிற நினைப்பில இருந்திட்டேன்.. இனிமே சுதாரிப்பா இருக்க மாட்டேனா..”

அவர்கள் கூடிப் பேசிய விதத்தில் பாதிக்கப்பட்ட தேவராஜன் விடுவிடுவென்று நடையைக் கட்டி விட்டான்...

“ஒரு வழியாத் தொலைஞ்சான்..” வெறுப்புடன் சொன்னார் ஏகாம்பரம்...

“தூள் கிளப்பிட்டிங்க ஏகாம்பரம்... நான்கூட உங்களை என்னமோன்னு நினைச்சேன்...”

“என்னன்னு நினைச்சேம்மா..?”

“அடிதடின்னு வந்திட்டா நீங்க மேஜைக்கு கீழே பதுங்கிக்குவிங்கன்னு நினைச்சேன்.. அந்த நினைப்பை பொடிப் பொடியாக்கிட்டிங்க.. போங்க...”

“இப்பவும் என்னை பத்திவிடறதிலதான் நீ குறியாய் இருக்க..?”

“உங்களைப் போய் பத்திவிடுவேனா சார்.. ஆணாணப்பட்ட இடிச்சபுளி தேவாங்கையே பத்தி விட்ட மாவீரனாச்சே நீங்க.. எங்கிருந்து சார் இவ்வளவு வீரம் பொங்குச்சு..?”

“என்னைக்கு என் வீட்டுக்காரியப் பாத்து கடைப்பக்கம் வராதேன்னு இவன் சொன்னானோ அன்னைக்கு பொங்கின வீரம் இதும்மா...”

“என்னது..?!”

பாவனாவும்.. காவ்யாவும் ஒருமித்த குரலில் ஆச்சரியமானார்கள்.. அவர்கள் அந்தப் பதிலை எதிர்பார்த்திருக்க வில்லை..

அந்தப் பாடு படுத்தும் மனைவியை அதட்டினான் என்பதற்காக வருசக்கணக்காக தேவராஜன் மீது ஏகாம்பரம் வன்மம் வைத்திருந்தாரா..?

“நம்ப முடியலை சார்...” பாவனா தன் கையைத் தானே கிள்ளிக் கொண்டாள்...

“இதில நம்பாம இருக்கிறதுக்கு என்னம்மா இருக்கு..? எனக்கும் என் வீட்டுக்காரிக்கும் ஆயிரம் சண்டை இருக்கும்.. நாங்க அடிச்சுக்குவோம்.. கூடிக்குவோம்.. இவன் எப்படிம்மா என்முன்னாடியே என் பொண்டாட்டிய அதட்டலாம்.. அப்புறம் அவளுக்கு புருசன்னு நான் மீசை வைச்சிருக்கிறது என்னத்துக்கு..?”

“ஆஹா.. காவ்யா கேட்டுக்கிட்டயாடி.. இதுவல்லவோ புருச தர்மம்.. புல்லரிக்குது சார்...”

அன்று முழுவதும் பாவனாவும் காவ்யாவும் ஏகாம்பரத்தின் அந்தத் தன்மையைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்...

“கல்லானாலும் கணவன்.. புல்லானாலும் புருசன்னு இதுக்குத்தான் சொல்லியிருப்பாங்களோ...?”

பாவனா சந்தேகம் கேட்டாள்.. அதை ஏகாம்பரத்திடம் கேட்கச் சொன்னாள் காவ்யா...

## 63

***இத்தனை நாளாய் எங்கிருந்தாய்..?***
***என்று நீ கேட்க ஆசைகொண்டேன்...***

**கா**வ்யாவுக்கு உறக்கம் பிடிக்கவில்லை.. தேவராஜனின் சிவந்த விழிகள் உறக்கத்திலும் வந்து அவளை பயமுறுத்தின.. அவன் இந்த அளவிற்கு அவளைக் கண்காணித்திருப்பான் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை.. என்னதான் கண்ணதாசனுக்கு அவளின் காதலைப் பற்றித் தெரியுமென்றாலும் அவனைத் தாண்டி வெளியுலகத்திற்கு அது தெரிவதில் காவ்யாவுக்கு

நடுக்கமிருந்தது.. அப்படித் தெரிய வந்தால் சிவதாணு திருக்குறளை மறந்துவிட்டு.. மகளுக்கு தீவிரமாக மாப்பிள்ளை தேட ஆரம்பித்து விடுவார் என்பதில் காவ்யாவுக்கு யாதொரு சந்தேகமும் இல்லை...

அன்னபூரணியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. அவள் முதல் வேலையாக.. கரண்டியைக் காய வைத்து செல்லமகளின் காலில் சூடு வைத்து விடுவாள்...

"இந்தக் காலுதானே வேலி தாண்டுச்சு...? கண்ணதாசா...? உன் தொங்கச்சி வேல செஞ்சு கிழிச்சது போதும்.. இனிமேப் பட்டு புருசன் வீட்டு அடுப்படியில இவ கிழிச்சாப் போதும்.. காலாகாலத்தில இவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வீட்டை விட்டு விரட்டியாகனும்.." என்று மகனை முடுக்கி விட்டு ஏதாவது ஒரு மீசைக்கார மாப்பிள்ளைக்கு உடனடியாக மகளை நிச்சயம் செய்து விடுவாள்...

இதை ஏன் அவள் உணராமல் போனாள்..?

காவ்யா தன்னைத்தானே கடிந்து கொண்டாள்.. அவள் பிறந்து வளர்ந்த மதுரையைப்பற்றி அர்ஜீனுக்குத் தான் தெரியாது.. அவளுக்குமா தெரியாது..?

ஒருவரின் மூச்சுக்காற்றில்கூட முந்நூறு சுளிவுகளை மதுரை மக்கள் கண்டுபிடித்து விடுவார்களே... அந்த

நினைவில்லாமல் அவள் எப்படி நகரின் எல்லையைத் தாண்டத் துணிந்தாள்..? அர்ஜீனின் காருக்குள் இருந்தால் அவளை யாரும் பார்க்க மாட்டார்களா..? கடைசியில் யார் பார்வையில் படக் கூடாதோ.. அவன் பார்வையில் காவ்யா பட்டு விட்டாளே...

மறுநாள் எழுந்தபோது வீங்கியிருந்த இமைகளைப் பார்த்த கண்ணதாசன் புருவங்களை உயர்த்தினான்...

“என்னம்மா..? நைட் தூங்கலையா..?”

“தூங்கினேனே...”

“பொய் சொல்லக் கத்துக்கிட்டிருக்க..? என்ன பிரச்னை..?”

“ஒன்னுமில்லண்ணே...”

கண்ணதாசன் அவளையே இமைக்காமல் பார்த்தான்.. அவன் பார்வையை சந்திக்க முடியாமல் அவள் நிலம் பார்த்தாள்.. இப்போதெல்லாம் அவளால் அவளுடைய அண்ணனை நேர் கொண்ட பார்வையாய் பார்க்க முடிவதில்லை.. அதை உணர்ந்திருந்த கண்ணதாசனின் விழிகளில் யோசனைவந்தது...

“ஒன்னுமில்லன்னு நினைக்கிறதிலதான் ஓராயிரம் இருக்கும்.. நீ ஒன்ன மட்டும் மனசில வைச்சுக்க..

உனக்குன்னு உன்னோட அண்ணன் இருக்கான்.. எந்த பிரச்னையா இருந்தாலும் பயப்படாம எங்கிட்டக் கொண்டு வா.. நான் பார்த்துக்கறேன்.. நீயாய் மனசைப் போட்டு உழப்பிக்காதே...”

இந்தப் பிரச்னையை எப்படி அவள் அண்ணனிடம் சொல்வாள்..? அண்ணனிடம் தங்கை சொல்லும விசயமா அது..? அண்ணா.. அண்ணா.. நானும் என் காதலனும் தனியாகப் பேச ஏர் போர்ட் ரோட்டுக்குப் போனோம்.. அங்கே மரத்தடியிலே ஓரம் கட்டி காரை நிறுத்திட்டு.. திருட்டுத்தனமா நாங்க மனசு விட்டுப் பேசிக் கொஞ்சிக் குழாவினோம்.. அதை அந்த தடிமாட்டுத் தாண்டவராயன்.. திருட்டுத் தேவாங்கு தேவராஜன் பார்த்து விட்டான்.. பார்த்ததோடு நிற்காமல் கடைக்கே என்னைத் தேடிவந்து மிரட்டிவிட்டுப் போகிறான் என்றா அவள் சொல்ல முடியும்..?

எதுவும் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்து வைத்தாள் காவ்யா...

கண்ணதாசனின் காரை மறுத்து விட்டு ஸ்கூட்டியை மெதுவாக ஓட்டுகிறேன் பேர்வழியென்று உருட்டிக் கொண்டு போனவளைக் கடந்து போன நடந்து போனவர்கள்

அவளை வியப்புடன் திரும்பிப் பார்த்து விட்டுப் போனதை அவள் கவனிக்கவில்லை.. சந்தடி குறைந்திருந்த சாலை வளைவில் கைநீட்டி அவளின் வண்டியை நிறுத்தினான் தேவராஜன்...

‘என்ன தைரியம்..!...’ காவ்யாவின் கண்களில் கனல் பறந்தது..

“வழிய விடு..” பழைய காவ்யாவாக மாறி அவள் சீறினாள்...

“விடலாம்.. விடலாம்.. அதுக்கு முன்னாலே உங்கிட்டக் கொஞ்சும் பேசனுமே...”

‘கொஞ்சம்’ என்ற வார்த்தையை ‘கொஞ்சும்’ என்று மாற்றிச் சொன்னவனை எரித்து விடுவதைப் போல பார்த்தாள் காவ்யா...

“நீ ரொம்பத்தான் எல்லை மீறிப் போற.. கேக்கிறதுக்கு ஆள் இல்லன்னு நினைச்சியா..? என் அண்ணன்கிட்ட ஒத்தச் சொல்ல நான் சொன்னேன்னு வைய்யி.. உனக்குத் திருவிழா கொண்டாடிப் புடும்டி...”

“தெனாவெட்டாத்தான் பேசற புள்ள.. உங்கண்ணன் திருவிழாக் கொண்டாடறதுக்கெல்லாம் நான் பயப்பட

மாட்டேன்.. இது பனங்காட்டு நரி.. சலசலப்புக்கு அஞ்சாது..”

“நீ நரிங்கிறதுதான் இந்த மதுரைக்கே தெரியுமே.. மதுரையில பிறந்தவன் சிங்கமா இருக்கனும்.. உன்னப் போல ஒளிஞ்சு நின்னு போட்டுக் கொடுக்கிற நரியா இருக்கக் கூடாது..”

“ஓ.. அப்புடியா..? நான் நரி.. அந்த அர்ஜீன் பய சிங்கமா..? அந்தச் சிங்கம்தான் உங்கிட்ட பணப் பொறுப்ப ஒப்படைக்கிறதப் போல ஒப்படைச்சிட்டு.. சரியா.. ஒன்னாந்தேதியன்னைக்கு செக் பண்ண வந்து நின்னுச்சு...”

“என்ன சொல்ற...?”

“அந்த சிங்கம் உன்ன நம்பலன்னு சொல்றேன்.. ஒன்னாந் தேதியன்னைக்கு நீ ஒழுங்கா பணத்த பட்டுவாடா பண்றயா இல்லையான்னு பாக்க ஓடி வந்து நின்னுச்சுன்னு சொல்றேன்...”

“உளராதே...”

“இப்ப இது உளரலாத்தான் இருக்கும்.. ஒரு நா நீ இதைப்பட்டுப் பார்ப்ப பாரு.. அப்ப இந்த தேவராஜன் உண்மையைத்தான் சொல்லியிருக்கான்னு உனக்கு உறைக்கும்...”

“நீ பெரிய உண்மை விளம்பிதான் வழியவிடு...”

காவ்யா வண்டியை விலக்கி ஓட்டினாள்.. தேவராஜன் பேசிய வார்த்தைகள் காற்றில் கலந்து வந்து அவள் காதுகளில் எதிரொலித்தன...

“போ காவ்யா.. அந்த அர்ஜீன் பணவிசயத்தில உன்னச் சந்தேகப்பட்டான்.. இதுதான் உண்மை.. இத மழுப்பப் பார்க்காதே...”

அன்று முழுவதும் அந்த வார்த்தைகளே அவள் மனதில் சுற்றிச் சுழன்றன.. அவளுடைய அர்ஜீன் அவள்மீது சந்தேகப் பட்டானா..? பணவிசயத்தில் அவளை நம்பவில்லையா..?

‘இருக்காது...’

என்னதான் மனதுக்குள் அதை உருப் போட்டுக் கொண்டாலும்.. அவள் முதன்முதலாக பேங்கிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு வந்தபோது சென்னையிலிருந்து திடிர் பயணமாக சொல்லாமல் கொள்ளாமல் அர்ஜீன் வந்து இறங்கியிருந்தான் என்பது அவள் நினைவில் உழன்றது...

விரட்டியடித்தாலும் விலகிச் செல்லாமல் சில சந்தேகங்கள் மனதில் தங்கி விடுவதுண்டு.. காவ்யாவின்

மனதிலும் அதுபோல அர்ஜீனைப் பற்றிய அந்தச் சந்தேகம் விதையாய் விழுந்து விட்டது...

**பா**ர்த்த சாரதியினால் தன் காதுகளில் விழுந்த துரியோதனின் குரலை நம்ப முடியவில்லை...

"முதல்ல நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன் பார்த்தா..."

துரியோதனின் 'பார்த்தா..' என்ற அழைப்பில் பள்ளிப் பருவத்திற்கு திரும்பிச் சென்றார் பார்த்தசாரதி...

"விடு துரி.. பழசையெல்லாம் இப்ப எதுக்கு கிளறனும்..."

பெருந்தன்மையாய் பள்ளிப் பருவத்தில் 'துரி' என்று அழைத்ததைப் போலவே அழைத்துப் பதில் சொன்னார் பார்த்தசாரதி...

"இல்லப்பா.. நான் செஞ்சது மன்னிக்க முடியாத குத்தம்தான்..."

"அதப் பேசி இப்ப என்னவாகப் போகுது...?"

"நீ பழசையெல்லாம் மறந்திரனும்..."

"எப்பவோ மறந்திட்டேன்.. நீ எப்படி இருக்க..? எத்தனை குழந்தைகள்..?" பார்த்தசாரதி நலம் விசாரிப்பதில் இறங்கினார்...

துரியோதனனுக்கு அதுதானே வேண்டும்..? அவர் அதற்காகத்தானே காத்திருந்தார்..? பார்த்தசாரதியின் நல விசாரிப்பை இறுக்கிப் பிடித்துக் கொண்டார்...

“குழந்தைகளா..? புள்ளைக ரெண்டும் கல்யாண வயசில நிக்குதுகப்பா.. மூத்தவன் தேவராஜன்.. ஜவுளிக் கடையைப் பார்த்துக்கிறான்.. அடுத்தவ தேன்மொழி.. டிகிரி படிச்சிருக்கா.. அவங்க அம்மா ஜாடையில அழகா அம்சமா குத்துவிளக்கப் போல இருப்பா.. அவளுக்குத்தான் மாப்பிள்ளை தேடிக்கிட்டிருக்கேன்...”

“ஃஸிட்..? கல்யாணத்தை முடிவு பண்ணின உடனே இன்விடேசன் அனுப்பு.. கட்டாயம் கல்யாணத்தில வந்து கலந்துக்கறேன்...”

“என்னப்பா இப்படிச் சொல்லிப்புட்ட..? நீ பொண்ணுப் பாக்க வர்றேன்னு சொல்லுவன்னு பார்த்தா.. மூனாம் மனுசனப் போல கல்யாணப் பத்திரிக்கையை அனுப்பி வைய்யின்னு சொல்ற..? ஏன்.. உன் மகனுக்கு என் பொண்ண கட்டிக்க மாட்டியா..?”

துரியோதனன் கேட்டு விட்டார்.. பார்த்தசாரதியின் தாடை இறுகியது.. அவர் இதை எதிர்பார்த்திருக்கவில்லை..

பள்ளிப் பருவத்து சிநேகிதன்.. பழைய காலத்தில் நடந்து போன நிகழ்விற்காக மன்னிப்புக் கேட்கிறான் என்று நினைத்து நான்கு வார்த்தைகள் பேசினால்.. துரியோதனன் உடனே தன் பெண்ணுக்கு அவர் மகனை மாப்பிள்ளை கேட்பார் என்று அவர் கனவா கண்டார்..?

'எப்படித் தட்டிக் கழிப்பது..?'

பார்த்தசாரதி யோசித்தார்.. இது முள் மீது கிடக்கும் துணியை கவனமாக எடுக்க வேண்டியதைப் போன்றது...

பார்த்தசாரதியின் வார்த்தைகள் துரியோதனனைக் காயப்படுத்தி விடக்கூடாது.. ஏற்கனெவே துரியோதனன் சின்னஞ்சிறு வயதில் சொல்லிய ஒற்றை வார்த்தைக்காக அவரைக் காயப்படுத்தி.. அவரது கடையையே விலைக்கு வாங்கி பாடம் கற்பித்தாகி விட்டது.. இனியும் அது தொடரக்கூடாது.. பார்த்தசாரதியின் உயரத்திற்கு அது அழகில்லையென்று அவர் நினைத்தார்...

துரியோதனனின் மனதைக் காயப் படுத்தாமல் அவரது பெண்ணை மறுக்க வழியொன்றைக் கண்டு பிடித்தார் பார்த்தசாரதி..

"அர்ஜின் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான் துரி..."

பார்த்தசாரதி என்னவோ.. நேகாவை மனதில் வைத்துக்கொண்டுதான் அந்த வார்த்தைகளைச் சொன்னார்.. அவருக்குத் தெரியும்... அர்ஜீன் நேகாவை விரும்பவில்லை என்பது.. அவன் கனடாவிலிருந்து வந்ததும் ஆனந்தியின் மூலமாக அவனை வழிக்கு கொண்டு வந்து விடலாம் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தார்.. அதனால்தான் அப்படியொரு காரணத்தைச் சொன்னார்...

பொய்யானதொரு காரணத்தைச் சொல்லித் தப்பிக்கப் பார்த்த பார்த்தசாரதிக்கு உண்மை தெரியாது.. அவர் சொன்னதைப்போலவே அவர் மகன் காதலில் ஆழ்ந்திருக்கிறான் என்பது.. அவன் மதுரைக்கு அடிக்கடி செல்வது அந்த மண்வாசனையை நுகர்வதற்காக மட்டுமில்லை.. அந்த மண்ணின் மகளின் தலையில் சூடியிருக்கும் மல்லிகையின் வாசனையை நுகர்வதற்காக என்பதை அவர் அறியமாட்டார்...

“அந்தப் பெண்ணைத்தான் அவன் கல்யாணம் செய்துக்கிறதா வாக்குக் கொடுத்திருக்கிறானாம் துரி.. அவனுக்காக நான் பெண் பார்த்தப்ப அவன் தன்னோட காதலைச் சொன்னான்.. நானும் ஓகேன்னு சொல்லிட்டேன்.. அவன் விருப்பம்தான் எனக்கு முக்கியம்

துரி.. உன்கூட சம்பந்தம் பண்ணிக்கனும்னு எனக்கும் ஆசைதான்.. ஆனா.. அவன் மனசில வேற ஒரு பெண் இருக்கே துரி...”

அர்ஜீனின் காதலை அறியாமலே அவன் காதலைக் காட்டி பார்த்தசாரதி துரியோதனனின் மகளை மறுத்து விட்டார்.. விவரமறிந்த தேவராஜனின் மனதில் வெற்றிப் புன்னகை வந்தது.. அவன் நினைத்தது நடந்துவிட்டது..

# 64

*என் மனதில் உன் மனது...*
*இணைந்து விட ஆசைகொண்டேன்..*

**எ**து நடந்ததோ அது நன்றாகவே தேவராஜனுக்கு நடந்தது...

அவன் எதை நினைத்து துரியோதனனை தூண்டி விட்டு அர்ஜீனை மாப்பிள்ளை கேட்க வைத்தானோ அந்தக் காரியம் வெற்றிகரமாக முடிந்து விட்டது..

அவனுக்கு அர்ஜீனின் காதலைப் பற்றி மிக நன்றாகவே தெரியும்.. அதேபோல அர்ஜீன் காதலில் இருந்து பின்வாங்க மாட்டான் என்பதும் அவனுக்குத் தெரியும்...

இருந்தும் அவன் துரியோதனனை முடுக்கி விட்டான்.. தங்கையின் மனதில் ஆசை வளர்ந்து விட்டால் என்ன செய்வது என்ற நினைவின்றி விபரீத விளையாட்டில் அவன் இறங்கினான்.. அவனுக்கு அவனுடைய ஆசை நிறைவேற வேண்டும்.. அது மட்டுமே அவனுக்கு முக்கியம்.. தேன்மொழியின் மனதில் ஆசையின் விதை ஊன்றி விடுவதைப் பற்றி அவனுக்கு யாதொரு கவலையும் இல்லை...

துரியோதனன் மகளுக்காக அர்ஜீனை மாப்பிள்ளை கேட்க வேண்டும்.. பார்த்தசாரதி அதை மறுக்க வேண்டும்.. அந்த மறுப்பினால் கோபம் கொள்ளும் துரியோதனனின் மனதை தேவராஜனின் விருப்பப்படி அவன் திருப்பி விட வேண்டும்...

"அப்படியாப்பா அந்த ஆளு சொன்னாரு..." அவன் கவலையுடன் கேட்பதைப் போல அவன் நடித்தான்...

"ஆமாண்டா மகனே.. உன் மகளைக் கட்டிக்க முடியாதுன்னு அவன் சொல்லிட்டாண்டா.." துரியோதனனின் வார்த்தைகளில் புறக்கனிப்பின் வலி தெரிந்தது...

செல்விக்கு பற்றிக்கொண்டு வந்தது.. இது நடக்காது என்றுதானே அவள் படித்துப் படித்துச் சொன்னாள்.. அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் மகன் கொடுத்த சாவியில் பொம்மை போல ஆடிவிட்டு.. இப்போது பெண் கொடுக்கறேன் என்று போனேன்.. அவர்கள் மாட்டேன் என்று சொல்லி விட்டார்கள் என்று முகத்தை சுணங்கிக் கொண்டிருக்கும் புருசனின் முதுகில் நான்கு போடு போட்டால் என்ன என்று அவளுக்குத் தோன்றியது...

"என்னக்கு நல்லாத்தான் வருது வாயில.." என்று அவள் ஆரம்பித்தாள்...

"செல்வி.. நீயுமாடி.." என்றார் துரியோதனன்..

"பேசாதீங்க.. தங்கம் போல புள்ளயப் பெத்து வைச்சுக்கிட்டு சாதி விட்டு சாதி இவரு மாப்பிள்ளை கேட்கப் போனாராம்.. அன்னைக்கே தலைப்பாடாய் அடிச்சுக்கிட்டேன்.. இது வேணாம்ன்னு.. கேட்டிங்களா..?"

"நம்ம பொண்ணு தங்கம்.. அவங்க தவ்விக்கிட்டு வந்துருவாங்கன்னு நினைச்சேண்டி.."

"என்மக தங்கம் தான்.. மகனத்தான் பித்தளையா பெத்து வைச்சிருக்கேன்.. அன்னைக்கே என் மக சொன்னா.. இது நடக்காதும்மான்னு.."

“அவ மனசில ஆசையை வளர்த்துட்டனே...”

“ஒரு மண்ணும் இல்ல.. அவ புத்திசாலி.. உங்களப் போல புத்தியக் கடன் கொடுத்திட்டு நிக்கல.. இதப் பத்திப் பேசினாலே போம்மா.. நீயும் அப்பாவப் போல காமெடி பண்ணாதேன்னு சொல்லிருவா.. அந்த மட்டிலும் நான் பொழைச்சேன்..”

செல்வியின் பேச்சில் யோசிக்க ஆரம்பித்த துரியோதனனை கவலையுடன் பார்த்தான் தேவராஜன்...

‘ஆஹா.. இந்த மனுசன் யோசிக்க ஆரம்பிக்கிறாரே.. இவரு யோசிக்க கூடாதே...’

அவசரமாக அவன் களம் இறங்கினான்..

“சும்மாயிரும்மா.. உனக்கு ஒன்னும் தெரியாது...”

“அதான் மெத்தப் படிச்ச மேதாவி நீயிருக்கியல்ல.. உனக்குத் தெரிஞ்சதே இந்தக் குடும்பத்துக்கு ஒரு தலைமுறைக்கும் போதும்.. இதில நான் வேறத் தெரிஞ்சுக்கனுமாக்கும்..?”

“ஆம்பளைக பேசறப்ப ஊடே பேசாதம்மா...”

“இதப்பாருடா.. என் இளந்தாரி மகன் பேசறத.. இன்னைக்குத்தாண்டா ஆம்பளையா லட்சணமா நீ

பேசியிருக்க.. இத்தனை நாளும் உங்கப்பா முதுகுக்கு பின்னாலயில்ல ஒளிஞ்சுக்கிட்டு இருந்த...”

“அப்பா.. அம்மா பேசறத காதில போட்டுக்காதீங்க.. இது உங்க கெளரவப் பிரச்னை...” தகப்பனாரை தூண்டி விட்டான்...

“அதைத் தாண்டா நானும் நினைக்கிறேன்..” பழையபடி மகனின் வலையில் விழுந்தார் துரியோதனன்..

“அவனுகள பழிவாங்க சூப்பர் யோசன ஒன்னு என்கைவசம் இருக்குப்பா...”

பழைய துரியோதனனாக இருந்தால் மகனை இகழ்ச்சியாக ஒரு பார்வை பார்த்து...

“சூப்பர் யோசனையா..? உனக்கா..?” என்று கேட்டிருப்பார்...

இப்போதைய துரியோதனன்தான் அப்படியில்லையே.. எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில் அவர் பார்த்த சாரதியின் குடும்பத்தைப் பழிவாங்க வழி தேடிக் கொண்டிருந்ததால் அவர் பரபரப்பாக...

“சொல்லு.. சொல்லு...” என்றார்...

“அந்த அர்ஜீன் பயபுள்ள யாரைக் காதலிக்கிறான்னு எனக்குத் தெரியும்...” மர்மக் குரலில் சொன்னான்..

“இதப்பாருடா.. அந்தப் பயபுள்ள யாரைக் காதலிக்கிறான்னு உனக்கு எப்படிடா தெரியும்..?”

துரியோதனன் சுவராஸ்யமாக கேட்க... செல்வியும், தேன்மொழியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்...

“தெரியும்ப்பா.. நம்ம கடையில வேல பாக்குதே.. காவ்யா காவ்யான்னு ஒரு புள்ள...”

“நம்ம கடையில காவ்யான்னு யாரும் வேல பாக்கலியே...”

“நம்ம பழைய கடையிலப்பா...”

“அது இப்ப நம்ம கடையில்லடா மகனே...”

‘இப்ப அதான் ரொம்ப முக்கியம்..’ பல்லைக் கடித்தான் தேவராஜன்...

கடையை விற்று விட்டவரே இப்படிச் சொன்னால் அதில் வேலை பார்க்கிறவர்கள் சொல்ல மாட்டார்களா என்றிருந்தது அவனுக்கு...

“சரிப்பா.. அது ஊரான் கடைன்னே வைச்சுக்குவோம்..”

“ஊரான் கடைதாண்டா...”

“அந்த ஊரான் கடையில் காவ்யான்னு ஒரு புள்ள வேல பாக்குதா.. இல்லியா..?”

“பாக்குது.. அதுக்கென்ன இப்ப..?”

“அந்தப் புள்ளயத்தான் இந்த பயபுள்ள காதலிக்குது..”

இது துரியோதனனுக்கு மட்டுமல்ல.. செல்விக்கும் தேன்மொழிக்குமே ஆச்சரியத்தைத் தரும் புதிய செய்தியாக இருந்தது...

“நிசமாவாடா சொல்ற..? அந்தக் கண்ணதாசனோட தங்கச்சியையா அவன் காதலிக்கிறான்..?”

“ஆமாம்பா...”

“சிவதாணு பெத்த மகளையா காதலிக்கிறான்..?”

“ஆமாம்பா.. ஆமாம்..”

“அன்னபூரணி வயித்தில பொறந்த பொண்ணையா காதலிக்கிறான்..?”

தேன்மொழிக்கே தகப்பனாரின் கேள்விகளில் சிரிப்பு வந்துவிட்டது.. செல்வியோ.. கேள்வியின் நாயகனின் பாடு.. அவனைப் பெற்ற தந்தையின் பாடு என்று நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தாள்...

தேவராஜனுக்குத்தான் தாங்க முடியவில்லை.. ஒருத்தி மீது ஆசைப்பட்டு விட்ட பாவத்திற்காக அவன் என்னவெல்லாம் கேட்க வேண்டியிருக்கிறது..?

"ஏம்பபா.. நீங்க கேட்ட அத்தனையும் ஒன்னுதான..?"

"அதுக்கில்லடா தேவா.. அந்த சிவதாணு கோவக் காரனாச்சேடா.."

"கோவக்காரர்தான்..."

"கண்ணதாசன் ரோசக்காரனாச்சே..."

"ரோசக்காரன்தான்..."

"அந்த அன்னபூரணி.. இந்த ரெண்டையும் சேத்துக் கரைச்சுக் குடிச்சவளாச்சே.. எப்புடிடா தைரியமா அந்தப் பொண்ணு காதலிக்குது...?"

துரியோதனன் வன்மத்தை மறந்து கதை கேட்பதில் இறங்கிவிட தேவராஜன் பல்லை நறநறத்தான்.. இப்படியாகப் பட்ட தகப்பனை என்ன செய்தால் தகும் என்ற கோபம் அவனுக்கு..

"ஏம்பபா.. இப்ப அதுதான் நமக்கு முக்கியமா..? அந்தப் புள்ளையோட தைரியத்த மெச்சறத விட்டுப்புட்டு

உங்க சபதத்தில ஜெயிக்கிறது எப்புடிங்கிறதப் பத்தி மட்டும் யோசிங்க...”

“நான் எப்ப சபதம் போட்டேன்..?” குழம்பிப் போன துரியோதனன் செல்வியைப் பார்த்து...

“ஏண்டி நான் சபதமா போட்டேன்..?” என்று கேட்டு வைத்தார்...

தேன்மொழிக்கு தகப்பனாரின் நிலையைக் காணப் பரிதாபமாக இருந்தது.. ஆனாலும் அவளால் அதை வாய் விட்டுச் சொல்லிவிட முடியாது.. தேவராஜன் சண்டைக்கு வந்து விடுவான்.. அதற்கு முன்பென்றால் துரியோதனன் மகளின் பக்கம் நிற்பார்.. இப்போதுதான் அவர் மதில் மேல் பூனையாக மாறிவிட்டாரே...

ஆகையால் அவள் மௌனம் சாதித்தாள்.. செல்வி அப்படியல்ல.. அவளுக்கு மௌனம் சாதிக்க வேண்டிய அவசியமில்லையே.. கணவனை நறுக்குத் தெறித்ததைப் போல நான்கு கேள்விகள் கேட்க வேண்டும் என்று அவள் துடித்தாள்...

“பேசாதீங்க.. எதையாச்சும் சொல்லிப் புடுவேன்...”

“என்னத்தடி சொல்லுவ...?”

“நீங்க சபதம் போட்டிங்களோ இல்லையோ.. இன்னும் கொஞ்ச நேரத்தில அதை உங்க மகன்

தொண்டைக் குழியில இருந்து தோண்டியெடுத்து உங்க முன்னால கடை பரப்பப் போறான்.. வீனா என்னத்துக்கு என்கிட்ட வம்பைக் கட்டி இழுக்கறிங்க...?"

செல்வி மகனை முறைத்தாள்...

'ஆனாப்பட்ட அப்பாவாலாயே என் தகிடுதத்தத்தை கண்டுபிடிக்க முடியல.. இந்த அம்மா மட்டும் எப்படிக் கண்டு பிடிக்குது..?' தேவராஜனின் மனதில் கேள்வி முளைத்தது...

அதையெல்லாம் கண்டு கொண்டிருந்தால் அவனுக்கு வேலைக்கு ஆகுமா..? அதனால் அவன் செல்வி சொன்னதைப் போல துரியோதனனின் தொண்டைக் குழியிலிருந்து சபதத்தை தோண்டி யெடுக்கும் வேலையில் ஈடுபட்டான்...

"என்னப்பா நீங்க.. இதயெல்லாம் போயி அம்மாகிட்டக் கேட்டுக்கிட்டு.. பொம்பளகளுக்கு என்னப்பா தெரியும்..?"

"ஆஹா.. வாடா மகனே.. இப்பத்தான் நீ உன் ஆம்பளப் புத்தியக்காட்டியிருக்க.. இத்தன நாளா இது எனக்குத் தெரியாமப் போச்சே.. தெரிஞ்சிருந்தா நீ செஞ்சு

வைச்ச ஒவ்வொரு வேலைக்கும் உன்னைத் தூக்கிப் போட்டு மிதிக்கனும்னு உங்க அப்பா சொன்னப்ப எட்டி நின்னு வேடிக்கை பார்த்திருப்பேனே.. அதவிட்டுப்புட்டு பெத்த மகனாச்சேன்னு ஊடாலே புகுந்து உனக்கு விழுந்த அடியையெல்லாம் எம் முதுகில தாங்கியிருக்க மாட்டேனே.. என்னைக்காவது ஒரு நாளைக்கு திருந்திப்புடுவான்னு சொல்லி அவரு கையில எடுக்கற அருவாளைப் புடுங்கி வைப்பேனே.. அப்பல்லாம் பொம்பளகளுக்கு என்னப்பா தெரியும்ன்னு நீ சொல்லலையே சாமி...”

மதுரைப் பெண்களுக்கேயான வாக்குச் சாதுர்யம் அந்த மீனாட்சி தந்த வரம்.. மதுரை வட்டாரப் பெண்களைப் பேசி ஜெயித்துவிட முடியாது.. அவர்கள் மீனாட்சியின் ஆட்சியில் வாழ்ந்து பழகியவர்கள்.. பேச்சென்று வந்து விட்டால்.. விவகாரத்தின் வேர்வரை போய் அலசி ஆராய்ந்து அக்குவேறு ஆணி வேறாக பிட்டுப் பிட்டு வைத்து விடுவார்கள்...

அந்தப் பெண்களில் ஒருத்தியான செல்வி.. பொம்பளைகளுக்கு என்ன தெரியும் என்ற கேள்வி காதில் விழுந்தால்... அந்தக் கேள்வியைக் கேட்டவன் பெற்ற

மகனேயானாலும் சும்மா விட்டு விடுவாளா..? அவள் தேவராஜனை பிலுபிலுவென்று பிடித்து உலுக்கி எடுத்து விட்டாள்...

“பொறுடி.. அவன் என்னதான் சொல்றான்னு கேப்போமே...”

துரியோதனன் தலையிட்டு தேவராஜனை தப்பிக்க வைத்தாரோ.. அவன் பிழைத்தானோ..

தேன்மொழிக்கும் அதே எண்ணம்தான்...

“ஏம்மா.. பூனைக்குட்டி வெளியில வரனும்கிற எண்ணமே உனக்கு இல்லையா..? இந்த அண்ணன் எதுக்காக இந்த வேசம் கட்டுதுன்னு உனக்கும் எனக்கும் தெரிய வேணாமா..? பொறுமையா இரும்மா...” தாயின் காதுகளில் அவள் கிசுகிசுத்தாள்...

“என்னப் பேச்சுப் பேசறான்.. இவனத் துவைச்சு தோரணம் கட்டினாத்தான் என் மனசு ஆறும்டி...” செல்வி பொருமினாள்...

“அதுக்குன்னு ஒருநாள் வரும்.. இப்ப அடக்கிவாசி.. அப்பா அண்ணன் பக்கம் சாஞ்சிருக்கார்.. இப்ப என்ன நடக்கப் போகுதுன்னு நமக்குத் தெரிஞ்சாகனும்...” தேன்மொழி எடுத்துச் சொல்லி செல்வியை மலையிறக்கினாள்...

# 65

*நீ போகும் பாதையிலே...*
*என் முகம் தெரிய ஆசைகொண்டேன்..*

**செ**ல்வியின் தற்காலிக போர் நிறுத்தத்தில் பேச வாய்ப்புக் கிடைத்த தேவராஜன் வாய் திறந்தான்..

"அந்தக் காவ்யாப் புள்ளய அந்த அர்ஜீன் பய உசிருக்குசிரா காதலிக்கிறான்ப்பா..."

"அந்தக் கழுதைய எதுக்காகடா திருப்பித்திருப்பிச் சொல்ற..? என் வயிறு எரியுது.."

"நீங்க நினைச்சா அவன் வயிற எரிய வைக்கலாம்..."

"எப்புடி..?"

"அவன் ஆசைப்படற பொண்ண நீங்க உங்க வீட்டுக்கு மருமகளாக்கிக்கிட்டா..?"

தேவராஜன் கேள்வி கேட்டு விட்டு.. 'எப்புடீ..' என்ற பார்வையை பார்த்து வைத்தான்...

“யம்மோவ்.. இதுதான் பூனைக்குட்டி..! வெளியில ஓடி வந்துருச்சு.. பிடிச்சு வைச்சுக்க...” தேன்மொழி தாய்க்கு மட்டும் கேட்டும்படியாக முணுமுணுத்தாள்...

“அடக் கடன்காரா.. அந்தப் புள்ளய புடிச்சிருக்குன்னா அதைச் சொல்லி கட்டி வைய்யின்னு கேக்க வேண்டியதுதான..? அத விட்டுப்புட்டு கொக்கு தலையில வெண்ணையை வைச்சு.. எட்டுச் சுத்துச் சுத்தி.. முகத்த வளைச்சு மூக்கைத் தொடறானே.. ஏண்டி தேன்மொழி.. இவன் ஆசைக்கு உன்னப் பொண்ணு கட்டச் சொல்லி அந்த பார்த்தசாரதிகிட்ட கேளுன்னு முடுக்கி விட்டுத்தான் காரியத்த சாதிக்கனுமா..? கொஞ்சமாச்சும் தங்கச்சிங்கிற நினப்பு இவன் மனசில இருக்காடி..?”

“விட்டுத்தள்ளும்மா.. அண்ணன் குணத்த இன்னைக்குத்தான் புதுசாக் கண்டியா...? நான் அப்பவே சொல்லலை.. இதில ‘உள்குத்து..’ இருக்குன்னு...”

“ஆமாண்டி மகளே.. அந்தக் குத்து இந்தக் குத்தா இருக்கும்ன்னு.. எனக்குக் கூடத் தெரியாம போச்சேடி...”

“இது மனசில என்ன ஓடுதுன்னு யாருக்குத் தெரியும்..? பாவம் அந்தக் காவ்யா.. இது கண்ணில பட்டுத் தொலைச்சிருக்கே...”

துரியோதனன் யோசிக்க ஆரம்பித்தார்.. அவருக்கு இதுகூட நல்லாயிருக்கே என்று தோன்றிவிட்டது.. அதை அவர் முகம் உணர்த்த.. தேவராஜன் தன் பங்குக்கு இன்னும் கொஞ்சம் உருவேற்றி விட்டான்...

“நீங்களே யோசிச்சுப் பாருங்கப்பா.. உங்களத் தோற்கடிச்ச அந்த அர்ஜீனோட அப்பன நீங்க தோற்கடிக்க இதுதான் சரியான சமயம்.. அந்தக் காவ்யா புள்ள நம்ம சாதி சனம்.. நீங்க மதுரையில கடை கண்ணின்னு வாழறவரு.. நீங்க பொண்ணுக்கேட்டா காவ்யாப்புள்ள வீட்டில பொண்ணுத் தரமாட்டேன்னு சொல்லிப் புடுவாங்களா..?”

“மாட்டாங்கதான்...”

“அப்புடி அந்தப் புள்ளய நம்ம வீட்டுக்கு மருமகளாக்கிப்புட்டா அந்த பார்த்தசாரதி முகத்த எங்க கொண்டு போயி வைச்சுக்குவான்..? அந்த அர்ஜின் பயதான் மதுரப் பக்கம் தல வைச்சுப் படுப்பானா....?”

“ஆமாண்டா மகனே.. நீ சொல்றதும் வாஸ்தவமான பேச்சுத்தான்...”

“அவனுகளத் தோக்கடிக்க இதுதான் சரியான வழிப்பா...”

“அவனுகளத் தோக்கடிக்கனும்டா...”

“நம்ம தேன்மொழியவா வேணாம்ன்னு சொன்னாங்க.. நம்ம தங்கச்சிய வேணாம்ன்னு சொன்னவனுக்கு அவன் ஆசைப்பட்ட பொண்ணு கிடைக்கக் கூடாதுப்பா..”

அது நேரம் வரை அவனை பேசவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த செல்வி இந்தப் பேச்சைக் கேட்டதும் விறகுக் கட்டையைத் தூக்கி விட்டாள்...

“நானும் பெத்த மகனாச்சேன்னு பொறுமையாப் போகலாம்ன்னுதான் பாக்குறேன்.. நீ விட மாட்டேன்னு வினையைக் கட்டியாடா இழுக்கிற...?”

“அம்மா...”

“என்னத்த நொம்மா..? உந்தங்கச்சிக்கு பேரு கட்டிவிடத்தான் நீ அண்ணன்காரன்னு அவ கூடப் பொறந்தியா..? உனக்கும் உங்கப்பனுக்கும் எம்மகன்னா அம்புட்டு இளக்காரமா போயிருச்சாடா..? நான் தலப்பாடா அடிச்சுக்கிட்டேன்.. பொண்ணு கொடுக்கறேன்னு வலியக்கப் போயி பேசாதீங்கன்னு.. கேக்காம ஆட்டம் போட்டுட்டு.. இப்ப அவனுக் எம் மகள கட்டிக்கலைன்னு

கதையா கட்டி விடறிங்க...! உன்ன மட்டும் சாத்தக் கூடாதுடா.. இதுக்குத் துண போகிற உங்கப்பனையும் நாலு சாத்து சாத்தனும்.. அப்பத்தான் என் மனசு ஆறும்...”

“செல்வி விறகுக் கட்டய கீழே போடு சொல்றேன்..”

“மாட்டேன்...”

“யாருடி இவ.. இப்ப என்ன நடந்து போயிருச்சுன்னு இந்தக் குதி குதிக்கிறவ...?”

“அடப்பாவி மனுஷா..! நல்லாத்தான இருந்தீங்க.. இந்தப்பய மந்திரிச்சுக் கிந்திரிச்சு விட்டுட்டானா..? பெத்த மகளுக்கு ஒத்தச் சொல்ல வாங்கிக் கொடுத்துப் புட்டோம்கிற குத்த உணர்ச்சி உங்க மனசில வரலையா...?”

“அதுக்குப் பழிதீக்கத்தானடி அவன் ஆசைப்பட்ட பொண்ணகட்ட விடாம செய்யப் போறோம்...?”

“அது அவன் ஆசைப்பட்ட பொண்ணில்லய்யா.. உங்க மகன் ஆசைப்பட்ட பொண்ணு...”

“இருக்கட்டுமே.. அந்தப் புள்ள மேல அந்தப் பயபுள்ளக்கும் ஆசையிருக்குள்ல..? எனக்கு அதுதான் வேணும்...”

செல்வி திகைத்து விட்டாள்.. இனி அவள் தடுத்தாலும்.. ஏன் தேவராஜனே தடுத்தாலும்

துரியோதனன் நிற்க மாட்டார் என்று அவளுக்குப் புரிந்து விட்டது.. அவள் கண்களில் நெருப்புப் பொறிபறக்க மகனைப் பார்த்தாள்...

‘இந்தப் பயபுள்ளய என்னமோன்னு நினைச்சோமே.. இவன் எதையும் செய்யத் துணிஞ்சவன்.. ஆசைப்பட்டவ கிடைக்கனும்கிறதுக்காக கூடப் பிறந்த தங்கச்சியை கட்டிக்க மாட்டேனுட்டான்னு அந்த அர்ஜீன் பயமேல பேருகட்டி விட்டவன்.. பகையைத் தீர்க்கப் போன்னு பெத்த தகப்பனுக்கே கொம்பு சீவி விடறவன்.. இவனெல்லாம் ஆம்பளையா...?’

செல்வியின் பார்வையில் எதைக் கண்டானோ.. தேவராஜனுக்கு குலை நடுங்கியது...

“என்னம்மா..?”

“தூ... தைரியமிருந்தா நீ அந்தப் புள்ளயத் தூக்கிக்கிட்டு வந்து தாலி கட்டியிருக்கனும்.. அப்ப நீ எனக்கு மகன்.. அதை விட்டுட்டு உந்தங்கச்சிய கட்டிக்கன்னு எவேனா ஒருத்தன கேக்க வைச்சு.. அவன மாட்டேன்னு சொல்ல வைச்சு.. அதுக்குப் பழியெடுக்க நீ ஆசைப்படறவள பொண்ணக் கேளுன்னு உங்கப்பன தூண்டி விடறயே.. நீயாடா எம்மகன்..?”

"செல்வி.. சும்மாயிரு..."

கொதித்துக் கொண்டிருந்த செல்வியை அதட்டி அடக்கினார் துரியோதனன்... அவர் முகத்தில் கண்டிப்பிருந்தது...

"எனக்கும் தெரியும் செல்வி.. இவன் சொன்னான்ங்கிறதுக்காக நான் அந்த அர்ஜீன் பயல மாப்பிள்ளை கேட்கல.. அவன் கோடிஸ்வரன்.. வெளிநாட்டுப் படிப்ப படிச்சாலும் அந்த மமதையில்லாம அடக்கி வாசிக்கிறவன்.. இத்தனக்கும் மேலா சுயமா கோடி கோடியா சம்பாதிக்கத் தெரிஞ்சவன்.. அந்த பார்த்தசாரதிக்கு கட்டுப்படாதவன்.. அவன எம் மாப்பிள்ளையாக்கி.. அவன் மூலமா அந்த பார்த்த சாரதியோட கண்ணில விரல விட்டு ஆட்டனும்னு நான் நினைச்சேன்.. எப்ப அது நடக்கலையோ.. அப்பவே அந்த அர்ஜீன் பய நினைக்கிறதும் நடக்கக் கூடாது..."

"நீங்க நினைக்கிறதும்.. உங்க மகன் நினைக்கிறதும் மட்டும் நடந்துருமா..?"

"நான் நடத்திக்காட்றேண்டி..."

"எப்படி நடக்கும்..? நீங்க கேட்டவுடனே இந்தாய்யான்னு அவங்க புள்ள கையப் புடிச்சுக்

கொடுத்துரப் போறாங்களா..? தெரியாமத்தான் கேக்கறேன்.. நம்ம தேன்மொழிய இப்படி ஒரு வில்லங்கம் புடிச்ச பயலுக்கு வெட்டியா ஊர் சுத்தற பொறம்போக்குக்கு.. படிக்காத கூதரைக்கு.. புத்தியேயில்லாத தற்குறிக்கு பொண்ணுக் கேட்டா நாம கொடுத்துருவோமா..?"

செல்வி கேட்டாலும் கேட்டாள்.. ஆணி அடித்ததைப் போல அருமையான கேள்விகளை கேட்டு வைத்தாள்.. சந்தடி சாக்கில் அவள் தேவராஜனைத் திட்டித் தீர்ப்பதை அவனும் புரிந்துதான் இருந்தான்.. இருந்தும் அவனால் வாய் திறக்க முடியுமா..?

"ஏண்டி.. விட்டா நீயே போயி அந்தக் கண்ணதாசனுக்கு சொல்லிக் கொடுத்துட்டு வந்துருவ போல இருக்கே..."

"முடிஞ்சா அதையும் செய்வேன்.. ஏங்க.. நீங்களே நினைச்சுப் பாருங்க.. அந்தக் காவ்யா புள்ளயோ.. நம்ம தேன்மொழி மாதிரி டிகிரிப்படிப்ப படிச்ச புள்ள.. அந்தப்புள்ள எப்புடி படிக்காதவனக் கட்டிக்க சம்மதிக்கும்..?"

"அத அந்தப் புள்ள வீட்டில சொல்லட்டும்..."

"சொல்லிட்டா..?"

"அப்புறமில்ல இருக்கு..."

"என்னத்த செய்வீங்க..? எரிச்சுப் புடுவீங்களோ..."

"அதத்தாண்டி செய்வேன்.. கொழுத்திப் போடுவேன்.."

"அடப்பாவி மனுசா..! எம்புருசன் குணசாலின்னு நினைச்சு இத்தன வருசமா உங்ககூட குடும்பம் நடத்தி குப்பை கொட்டினேனே.. கடைசியில நீங்க இந்த அளவுக்கா இறங்கனும்..? சின்னஞ்சிறுசுக காதலப் பத்த வைக்கிற அளவுக்கா போகனும்..?"

"எனக்கு அதெல்லாம் தெரியாதுடி.. எம்மகளக் கட்டிக்க மாட்டேன்னு சொன்ன அந்த அர்ஜீன்பய மட்டும் ஆசைப்பட்டவளக் கட்டிக்கலாமா..? ஒருநாளும் அதுக்கு நான் விடமாட்டேண்டி..."

"இந்தாப் பாருங்க.. நீங்க கொளுத்திப் போடுவீங்களோ.. இல்ல.. பத்த வைப்பீங்களோ எனக்கு அது தெரியாது.. இன்னொரு தடவ எம் மகள எவனும் கட்டமாட்டேன்னு சொல்லிட்டான்னு பேரு கட்டினீங்க.. நான் சும்மாயிருக்க மாட்டேன்.. சொல்லிட்டேன்..."

விட்டால் வீச்சரிவாளை எடுத்து விடுபவளைப் போல அவள் மிரட்டிய தோரணையில் வாயை மூடிக் கொண்டார் துரியோதனன்..

தேவராஜன் இதைப் பற்றியெல்லாம் கவலைப்பட வில்லை.. அவன் கவலையே வேறு..

“அசரப்பட்டு பத்த வைக்கிறதில இறங்கிடாதீங்கப்பா..”

“ஏண்டா..? நமக்கு பழிவாங்கறதுதான முக்கியம்..?”

“அதுக்கு அந்தப் புள்ள கழுத்தில நான் தாலியக்கட்டி பழி வாங்கனும்பா...”

“எல்லாம் ஒன்னுதானடா..?”

“இல்லப்பா.. நீங்க சொல்றத விட.. நான் சொல்றதுக்கு எபெக்டு ஜாஸ்தி...”

“அடேய் மகனே..! உனக்கு சிவதாணுவப் பத்தித் தெரியாது.. கண்ணதாசன் கூட தங்கச்சி மேல பாசம் காட்டி அவ காதலப் பத்தி யோசிப்பான்... சிவதாணு அப்படியில்ல... மகளோட காதல் விவகாரம் காதில விழுந்தா அடுத்த நிமிசமே திருக்குறள தூங்க வைச்சுட்டு மகளுக்கு நம்ம சாதி சனத்தில மாப்பிளயப் பாத்துக் கல்யாணத்த பண்ணி வைச்சுட்டுத்தான் வேற வேலைபார்ப்பான்..”

"அந்த மாப்பிள்ளை நானாய் இருக்கனும்பா..."

"பொண்ணப் பெத்தவன் பொண்ணக் கொடுக்கனுமே..."

"மாட்டேன்னா நீங்க விட்டுறுவீங்களா..?"

"அதெப்படி விடுவேன்..?"

துரியோதனனின் கேள்வியில் 'அப்பாடி..' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட தேவராஜன்.. அவர்

"அதான் கொழுத்திப் போடுவேன்னு சொன்னேனில்ல.. கவலைப்படாதேடா மகனே பத்த வைச்சிரலாம்.." என்று சொன்னதும் காற்று இறங்கிய பலூனைப் போல ஆனான்...

தேன்மொழிக்கு சிரிப்புத்தான் வந்தது.. அவள் சிரிப்பில் கோபமான செல்வியின் கழுத்தைக் கட்டிக் கொண்டவள்...

"ஆக.. அண்ணன் ஆசைப்பட்ட காவ்யாவப் பொண்ணு கேக்க வைக்கிறதுக்காக.. அப்பாவத் தூண்டி விட்டு எனக்காக மாப்பிள்ள கேக்க வைச்சிருக்கு.. தங்கச்சிக்கு சீர் செய்கிற அழகர் இருக்கிற ஊரில இப்படியும் ஒரு அண்ணன்.. ம்ஹீம்..." என்று கண்ணடித்தாள்...

# 66

## தென்றலாக நீயும் வந்து...
## என் சேலைதொட ஆசைகொண்டேன்..

“எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு...”

**ச**ப்தமாக திருக்குறளைச் சொல்லிக் கொண்டிருந்தார் சிவதாணு.. இட்லியைப் பிய்த்து சட்னியில் தோய்த்து வாய்க்குள் தள்ளிக் கொண்டிருந்த கண்ணதாசன் நிமிர்ந்து சிவதாணுவை மௌனப் பார்வை பார்த்து விட்டு வேலையைத் தொடர்ந்தான்...

“இதுக்குப் பொருள் என்னன்ன தெரியுமோ...”

தொடர்ந்த சிவதாணுவை சுடச்சுட ஆவி பறக்கும் இட்லிகளுடன் வந்த அன்னபூரணி அதட்டினாள்..

“ஆரம்பிச்சாச்சா..? பாடம் எடுக்கணும்னா அதுக்கொரு காலம் இருக்கு.. இடம் பொருள் ஏவல்ன்னு இருக்கு.. இப்புடியா புள்ளைக சாப்பிட்டுக்கிட்டு இருக்கிறப்ப

அதுகளத் துரத்தராப்புல பாடம் எடுக்கறது..? நீங்க செய்யற வேலைக்கு திருவள்ளுவருக்கே கோபம் வந்து ஓலைச் சுவடியால உங்கள மொத்து மொத்துன்னு மொத்தப் போறாரு…"

"அதுக்கில்லடி அன்னபூரணி.. மத்த நேரத்தில இதுக ரெண்டையும் புடிக்க முடியுதா..? ஆளுக்கொரு திசையில ஆளாப் பறந்துக்கிட்டு ஓடிப் போயிருதுக.. சாப்பிடற நேரத்திலதான எம்புடுதுக.."

"எம்புட்டா.. நீங்க குறளச் சொல்லி விரட்டியடிப் பீங்களா..? பேசாம சாப்பிடற சோலியப் பாருங்க.. திருக்குறள் எங்கேயும் ஓடிப் போயிராது.. அது காலா காலத்துக்கும் நிலைச்சு நிற்கும்.. அதனால அத நிப்பாட்டறேன் பேர்வழின்னு புள்ளகள துரத்தியடிக்காம சாப்பிட விடுங்க.."

"என்னடி நீ…"

முணுமுணுத்தபடி இட்லிகளை சாம்பாரில் குளிப்பாட்டினார் சிவதாணு.. அவர் பக்கமிருந்த சாம்பார் கிண்ணத்தை நகர்த்தி வைத்தாள் அன்னபூரணி…

"ஒரு சட்டி சாம்பாரையும் உங்க ஒருத்தருக்காக மட்டும் வைக்கல.. மத்தவங்களுக்கும் கொஞ்சம் மிச்சம்.. மீதிய வையுங்க…"

“யாருடி இவ.. சாப்பிட்டாலும் குத்தம்ங்கிறா.. சாப்பிடலேன்னாலும் குத்தம்ங்கிறா..” முணுமுணுத்தார் சிவதாணு...

“அதுக்காக இப்புடியா..? சாம்பாரத் தொட்டுச் சாப்பிடக் கண்டோம்.. இப்புடிக் குளம் கட்டிக் குடிக்கவா கண்டோம்..?”

அன்னபூரணி நொடித்துக் கொண்டிருக்கும் போது.. வாசலில் அழைப்புமணி அலறியது...

‘யாரா இருக்கும்..?’

அன்னபூரணி யோசனையுடன் மகனைப் பார்த்தாள்.. அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்த கையுடன் எழுந்து கொள்ளப் போனான்..

“பொறுப்பா.. நான் பாக்கறேன்...”

அன்னபூரணி வாசலுக்கு விரைந்தாள்.. கதவைத் திறந்தாள்..

“என்ன தங்கச்சி.. எப்புடியிருக்கிற..?” வாய் நிறைய சிரிப்புடன் துரியோதனன் நின்று கொண்டிருந்தார்...

அன்னபூரணிக்கு அவரைத் தெரியும்தான்.. ஆனாலும் அவருடன் சகஜமாக பேசிப் பழகும் அளவிற்கு அவரை

அவளுக்குத் தெரியாது.. பெரியப்பாவின் சித்தப்பா பேத்தியோட கொழுந்தனாருக்கு.. நாத்தனா மகனோட ஒன்னு விட்ட தம்பிக்கு ரெண்டு விட்ட சகலை என்ற ரீதியில் சுற்றி வளைத்து துரியோதனின் குடும்பம் சிவதாணுவின் குடும்பத்திற்கு வெகு தூரத்துச் சொந்தமாக கணக்கில் வந்தது.. அந்த ஒரு காரணத்துக்காகவே காவ்யாவிற்கு துரியோதனனின் கடையில் வேலை செய்ய அனுமதி தந்திருந்தாள் அன்னபூரணி...

வராத விருந்தாளி வந்திருப்பதில் அவள் முகத்தில் யோசனை வந்தாலும்.. வந்தவரை வரவேற்க வேண்டிய பண்பாட்டின்படி..

“வாங்கண்ணே..” என்று சொல்லி வைத்தாள் அன்னபூரணி...

“எங்கேம்மா... மச்சானயும்.. மாப்பிள்ளையையும் காணோம்.. வெளியே போயிட்டாங்களா..?” சுவாதீனமாக கேட்டபடி உள்ளே வந்தார் துரியோதனன்...

‘என்னடி இது.. இந்தாளு புதுசா மாமன் மச்சினன் உறவு கொண்டாடறாரு.. காரணமில்லாம இந்த ஆளு.. சொந்தம் சொல்ல மாட்டாரே...’

மனதுக்குள் தோன்றியதை மறைத்துக் கொண்டு..

“எங்கயும் போகலண்ணே.. உள்ளதான் சாப்பிட்டுக்கிட்டு இருக்காங்க.. நீங்களும் வாங்க.. சாப்பிடலாம்..” என்று ஒப்புக்கு அழைத்தாள் அன்னபூரணி..

“சாப்பாட்டுக்கென்னம்மா.. இன்னொரு நாளைக்கு விருந்தே ஆக்கிப் போடு.. சொந்த பந்தத்தோட உக்காந்து சாப்பிட்டுட்டுப் போறேன்.. உன் கைச்சாப்பாடு எங்கே ஓடிறப் போகுது..? என்னதான் இருந்தாலும்.. நாமள்ளாம் ஒன்னுக்குள்ள ஒன்னாச்சே...”

அன்னபூரணி உட்காரச் சொல்லாமலே ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து கால்மேல் கால் போட்டுத் தோரணையாக சாய்ந்து கொண்டார் துரியோதனன்..

‘இந்த ஆளு எதுக்கு வந்திருப்பாரு..?’ என்ற யோசனையுடன்

“இருங்கண்ணே.. தம்பிய வரச்சொல்றேன்...” என்றாள் அன்னபூரணி...

“அப்புடியே மச்சானையும் வரச் சொல்லும்மா...” என்று சொன்னார் துரியோதனன்..

‘சொல்லிட்டாப் போச்சு..’ என்ற நினைவுடன் சிரிப்பதைப் போல பாவனை செய்துவிட்டு டைனிங் ஹாலுக்கு விரைந்தாள் அன்னபூரணி...

“யாரும்மா..?” என்று கேட்டான் கண்ணதாசன்..

“காவ்யா வேல பாக்கிற கடையோட பழைய முதலாளி வந்திருக்காருடா தம்பி..” என்று சொன்னாள் அன்னபூரணி..

“யாரு..? துரியோதனனா வந்திருக்கிறாரு..?”

கண்ணதாசன் கேட்ட அந்த நொடியில் நிமிர்ந்து பார்த்த காவ்யாவின் முகத்தில் தெரிந்த கலவரத்தை இனம் கண்டு கொண்டவனின் புருவங்கள் சிந்தனையுடன் சுருங்கின...

“என்ன விவரம்ன்னு கேட்டியாம்மா..?”

“கேக்கலைப்பா.. வந்தாரு.. தங்கச்சின்னு பாசமழையைப் பொழிஞ்சாரு.. மச்சானும்.. மாப்பிள்ளயும் எங்கேன்னு உறவு கொண்டாடிக்கிட்டு உக்காந்திருக்காரு..”

“இதென்னம்மா புதுசா இருக்கு..?”

“எனக்கும் அதுதாண்டா தம்பி.. ஒரு வேள.. இப்படியிருக்குமோ..?”

“எப்படி..?”

“இவரு மக நம்ம காவ்யாவப் போல டிகிரி படிச்சுருக்கு.. பாக்கறதுக்கும்.. மூக்கும்.. முழியுமா லட்சணமா இருக்கும்.. அந்தப் பொண்ண உனக்குக்

கொடுக்கனும்னு கேக்க வந்திருப்பாரோ... அந்தப் பொண்ணு பேரு கூட தேன்மொழியோ.. என்னவோன்னு சொல்லுவாங்க.. நான் கேட்டுக்கிட்டதில்ல...”

“இப்ப இது தேவையாம்மா..?” எரிச்சலுடன் தாயை அதட்டினான் கண்ணதாசன்...

காவ்யாவின் முகம் மாறியதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.. வந்திருப்பவரின் வரவுக்கும்.. காவ்யாவின் பதட்டத்திற்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கிறது என்று அவன் மனதில் ஒர் பறவை கூவியது..

“என்னையெதுக்குடா தம்பி கோவிச்சுக்கற..? அப்படி இருந்தாலும் பொண்ணு வீட்டாளுக.. நேரடியா வர மாட்டாங்களே.. ஊடே யாரையாச்சும் தூதுதான விடுவாங்க..?” அன்னபூரணி நெற்றிப் பொட்டை ஒற்றைவிரலால் தட்டினாள்...

அங்கே அப்படியொரு வட்டமேஜை மாநாடு நடந்து கொண்டிருக்க.. அதைப்பற்றிய கவலையே இல்லாமல்... ஒரு கையில் திருக்குறள் புத்தகத்தைப் பிடித்துப் படித்தபடி மறுகையில் இட்லியை சட்னி.. சாம்பாரில் குளிப்பாட்டி உள்ளே தள்ளிக் கொண்டிருந்தார் சிவதாணு...

"இந்த மனுசனப் பாத்தியா..?" எரிச்சலுடன் அவர் கையிலிருந்த திருக்குறள் புத்தகத்தைப் பிடுங்கினாள் அன்னபூரணி...

"என்னடி..?" என்றவரிடம்..

"என்னத்த நொன்னடி..? திருக்குறளு எங்கேயும் ஓடிப்போயிராதுன்னு இப்பத்தான சொன்னேன்..? சுத்தி என்ன நடக்குதுன்னு கவனிக்காம அதென்ன.. குறளுக்குள்ளயே புதைஞ்சு கிடக்கறிங்க.. நீங்கதான் குறள நட்டமா நிப்பாட்டப் போறிங்களா..? அது ஏற்கனெவே உங்களுக்கு எட்டாத உசரத்தில நிமிந்து நிக்குது.. நீங்க பொறுப்பான ஆம்பளயா.. குடும்பத்தில என்ன நடக்குதுன்னு காது கொடுத்துக் கேட்டுப் பழகுங்க.." என்று சீறினாள்..

"என்னடா கண்ணா.. எதுக்காக உங்க அம்மா காளிவேசம் கட்டறா..?" மகனிடம் வினவினார் சிவதாணு..

"ம்ப்ச்.. என்னப்பா நீங்க.. துரியோதனன் வந்திருக்காராம்..."

"அது யாரு..?"

"இது வேறயா..? காவ்யா வேலை பாக்கிற கடையோட பழைய முதலாளி..."

“அந்தாளா..? அவரு எதுக்காக நம்ம வீட்டுக்கு வந்திருக்காரு..?”

“நாம போயி கேட்டாத்தான தெரியும்..?”

“அதுக்குத்தான் உங்கம்மா கோவிச்சுக்கிறாளா..?”

“ஆமாம்பா.. ஆமாம்.. தட்டில தளும்பற சாம்பாரக் குடிச்சு முடிச்சிட்டிங்கன்னா.. போயி.. என்ன ஏதுன்னு விசாரிக்கலாம்.. அம்மா..”

“நீ உங்க அப்பாவ இழுத்துட்டுப் போடா தம்பி... நீங்க முன்னால போனா.. நானு பின்னால காபித்தம்ளரோட வந்து நிக்கறேன்..”

அன்னபூரணியின் புரிந்து கொள்ளலில் நிம்மதியானான் கண்ணதாசன்.. எப்படித்தான் இப்படியாகப் பட்ட அம்மாவிற்கு.. அவனுடைய அப்பாவைப் போலக் கணவன் வந்து வாய்த்தானோ என்றிருந்தது அவனுக்கு.. இறைவன் போடும் முடிச்சைப்பற்றி யோசித்துக் கொண்டே கை கழுவ எழுந்தான் கண்ணதாசன்...

அங்கே கை கழுவுவதைப் போல நின்று குழாயைத் திறந்து விட்டு.. அதில் கொட்டும் நீரில் கை நனைக்க மறந்து போனவளாக முன்னறையை பயத்துடன் பார்த்துக்

கொண்டிருந்த காவ்யாவைக் கண்டதும் அவன் விழிகளில் சந்தேகம் வந்தது..

குழாயை மூடி.. கொட்டும் நீரை நிறுத்தியவன் தங்கையைப் பார்த்தான்..

“என்ன விசயம்..?” என்றான்..

“ஒன்னுமில்லண்ணே...” அவள் தடுமாறினாள்..

“ஒன்னுமில்லைன்னு சொன்னாத்தான் அதில ஓராயிரம் விசயமிருக்கும்.. என்னன்னு சொல்லு...”

“எதுவுமில்லண்ணே...”

கண்ணதாசன் தங்கையை உற்றுப் பார்த்தான்.. அவள் விழிகளில் தெரிந்த சஞ்சலத்தில் அவன் மனம் துணுக்குற்றது.. குழாயைத்திறந்து விட்டான்.. நிறுத்திய தண்ணீர் கொட்டியது.. கைநீட்டி கை கழுவியவன்.. காவ்யாவின் உணவுத் துகள் ஒட்டிய காய்ந்த கையைப் பார்த்தான்.. அவன் பார்வையில் அவசரமாக தண்ணீரில் கை நீட்டினாள் காவ்யா...

“அந்தாளப் பாத்து நீ எதுக்காக பயப்படற..? இப்ப அவரு உன் முதலாளியில்ல.. யாரோ.. எவரோ.. அவரப் பாத்து நீ பயப்படறதுக்கு என்ன காரணம்..?”

காவ்யாவினால் மறைக்க முடியவில்லை.. மனதில் உள்ள பயத்தையும்.. பாரத்தையும்.. அவளுடைய அண்ணிடம் இறக்கி வைக்காமல் யாரிடம் அவள் இறக்கி வைப்பாள்..?

"அண்ணே..." அவள் சொல்லத் தயங்கி மென்று விழுங்கினாள்..

"சொல்லு.." தாழ்ந்த குரலில் தங்கையை ஊக்கப் படுத்தினான் கண்ணதாசன்...

"அது வந்துண்ணே.." ஆரம்பித்தவளுக்கு அவளின் பயத்தை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை...

"சொல்லும்மா.. நீ சொன்னாத்தான்.. என்னன்னு எனக்கும் தெரியும்..? நானும் அதுக்குத்தக்கன தயாராகிக்கனுமில்ல..?"

"பழைய முதலாளி வந்திருக்காரில்ல..."

"ஆமா.. அவருக்கென்ன...? இந்தாளு தங்கமான மனுசனாச்சே.."

"இவரப்பத்தி ஒன்னுமில்லண்ணே.. இவரு மகன்தான்..."

காவ்யா இழுக்க.. கண்ணதாசன் முகம் மாறினான்..

“யாரு..? அந்த தேவராஜனையா சொல்ற..?” கடுமையாகக் கேட்டான்...

“ஊம்...”

“அவன் என்ன பண்ணினான்..?”

“ரொம்ப நாளாவே.. என்னச் சுத்திச்சுத்தி வாராண்ணே..”

“ரொம்ப நாளாவேண்ணா..?” துருவினான் கண்ணதாசன்...

“நான் கடையில வேலைக்குச் சேர்ந்தப்பலயிருந்தே..”

“ஏன் எங்கிட்டச் சொல்லல...?”

“சொன்னா நீ வேலைக்கு அனுப்ப மாட்ட.. அந்த பயம்தான்..”

கண்ணதாசன் இமைக்காமல் காவ்யாவையே முறைத்தான்.. அவள் தலை கவிழ்ந்தாள்..

“போனத விடு.. இப்பத்தான் கடை கை மாறிருச்சுல்ல..”

“ஆனாலும் அவன் அடிக்கடி வர்றான்..”

“உன் புதுமுதலாளி ஏன்னு கேக்கறதில்லயா..?”

அர்ஜீன் கேட்காமல் இருக்க மாட்டானே என்பது கண்ணதாசனின் எண்ணமாக இருந்தது.. அவனுக்கு அர்ஜீனைத் தெரியும்.. அவனாவது.. காவ்யாவிடம் கடலை போட நினைக்கிறவனை விட்டு வைக்கிறதாவது...

“அவர் இல்லாதப்பதான் இவன் வருவான்...”

‘அதானே பார்த்தேன்...’ கண்ணதாசனுக்கு ஏனோ அந்தப் பதிலில் திருப்தி வந்தது.. அர்ஜீன் காவ்யாவைக் காவல் காக்கிறான் என்பதில் அவனுக்குள் நிம்மதி வந்தது..

“எங்கிட்டச் சொல்லிட்டல்ல.. இனிமே நான் பார்த்துக்கிறேன்..”

“அண்ணே..”

“சொல்லு...” கண்ணதாசன் தூண்டினான்..

“அவன் புதுசா ஒரு பிரச்னையைக் கிளப்பறாண்ணே...”

காவ்யாவின் குரல் நடுங்கியது.. அதில் அந்த தேவராஜனின் மீது கண்ணதாசனுக்குள் கோபம் பீறிட்டு எழுந்தது...

# 67

## என்னவென்று நான் சொல்லிடாமல் –நீ எனையுணர ஆசைகொண்டேன்...

'**எ**ன்ன தைரியமிருந்தா அவன் எந்தங்கச்சிகிட்ட வாலாட்டுவான்...'

தேவராஜனை வாங்கு... வாங்கென்று வாங்கிவிட வேண்டுமென்ற வேகம் கண்ணதாசனுக்குள் எழுந்தது.. எதையும் சொல்ல முடியாமல் தவித்து நின்ற காவ்யாவைப் பார்த்தபோது அந்த வேகம் அவனுக்குள் அதிகரித்தது...

"புதுசா ஒரு பிரச்னையைக் கிளப்பறான்னு சொல்லிட்டு பேசாம இருந்தா என்னம்மா அர்த்தம்..? என்னன்னு சொன்னாத்தானே தெரியும்..?"

கண்ணதாசன் அதட்டினான்.. காவ்யா மருண்டு விழித்தாள்.. அவளுடைய காதலை தேவராஜன் கண்டுபிடித்து வைத்து மிரட்டுகிறான் என்பதை கண்ணதாசனிடம் அவள் எப்படிச் சொல்வாள்..?

"கண்ணா..."

காபித் தம்ளர்களுடன் சமையலறையை விட்டு வெளியே வந்த அன்னபூரணி வியப்புடன் அழைத்தாள்.. வாஷ்பேசினில் அருகே நின்று ரகசியம் பேசிக் கொண்டிருந்த அந்த அண்ணன்.. தங்கையை பார்த்து அவளது புருவங்கள் உயர்ந்தன...

"இங்கே என்னப்பா பண்ணிக்கிட்டு இருக்க..?"

"ஒன்னுமில்லம்மா.. தங்கச்சிகூடப் பேசிக்கிட்டு இருக்கேன்..."

"உந்தங்கச்சி கிட்ட பாசப்பயிர வளக்க நல்ல நேரம் பார்த்தபோ.. திருக்குறள விட்டுப் பிரியாத உங்கப்பாவே அத விட்டுப் பிரிஞ்சு வந்திருக்கிற மனுசன்கிட்டப் பேசப் போயிட்டாரு.. நீ என்னடான்னா உந்தங்கச்சியை விட்டுப் பிரிய மாட்டேங்கிற.. போப்பா.. போயி என்ன ஏதுன்னு கேளு.. உங்கப்பாவுக்கு என்ன தெரியும்..? இவரு பாட்டுக்கு அந்த மனுசன்கிட்ட திருக்குறளுக்கு அர்த்தம் சொல்ல ஆரம்பிச்சிரப் போறாரு.."

சிவதாணு அப்படிப்பட்ட ஆள்தான் என்பதால் தங்கையை மறந்து முன்னறைக்கு ஓடினான் கண்ணதாசன்.. அதிசயத்திலும் அதிசயமாக சிவதாணு

திருக்குறளை மறந்துவிட்டு.. பொதுவான குடும்ப நிலவரங்களை துரியோதனனிடம் பேசிக் கொண்டிருந்தார்..

“பொண்ணு படிச்சு முடிச்சிருச்சில்ல...”

“முடிச்சிருச்சு மச்சான்.. மேல படிக்கனும்ங்குது.. நான்தான் வேண்டாம்ன்னுட்டேன்.. இந்தப் படிப்புக்கு மாப்பிள்ள தேடவே தரிங்கினத்தோம் போடனும்.. இதில மேல படிக்கவைச்சா அம்புட்டுத்தான்..” என்று விளக்கம் சொன்னார் துரியோதனன்..

“அதுசரி.. அதுசரி.. அதனாலதான் நாங்களும் எங்க காவ்யாவ டிகிரி படிக்க வைச்சதோட நிறுத்திட்டோம்..” என்றார் சிவதாணு...

தானாகவே காவ்யாவிடம் பேச்சு வந்து நின்று விட்டதில் உற்சாகமாகி விட்டார் துரியோதனன்.. போதாக் குறைக்கு கண்ணதாசனும் வந்து அவனுக்குப் பின்னாலேயே காபித்தம்ளரோடு அன்னபூரணியும் வந்து விட்டதில் அவருக்கு பரிபூரண திருப்தி...

‘குடும்பத்தில இருக்கிற பெரிய மனுசங்களும்.. குடும்பத்த நடத்தறவனும் இருக்காங்க.. இனிமே விசயத்த போட்டு உடைச்சிர வேண்டியதுதான்..’ மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டவராக அவர் பேச்சை ஆரம்பித்தார்..

“அதில பாரு தங்கச்சி.. இந்த மாதிரி விசயங்களப் பேசறப்ப வீட்டுப் பொம்பளய கூப்பிட்டுக்கிட்டுத்தான் வரனும்.. செல்விக்கும் வரனும்கிற எண்ணம்தான்.. திடிர்ன்னு அவளோட சித்தப்பன் பேத்திக்கு மஞ்சள் நீராட்டு விழான்னு தகவல் வந்துச்சு.. நீங்க கிளம்பறதுன்னு முடிவாகிருச்சு.. அதனால கிளம்பினது கிளம்பினதாவே இருக்கட்டும்.. நா மட்டும் போயிட்டு வந்துர்றேன்னு சொல்லிட்டு ஊருக்கு கிளம்பிட்டா.. அவ அந்தப்பக்கம் போறா நா இந்தப் பக்கம் வர்றேன்...”

செல்வி எந்தப் பக்கமும் போகவில்லை.. வீட்டில் தான் இருந்தாள்.. இதுபோன்ற தகிடுதத்தங்களுக்கு துணை வரமாட்டேனென்று உறுதியாகச் சொல்லி விட்டாள்.. வேறு வழியின்றி.. ஒற்றை மனித ராணுவமாக தனியே கிளம்பி வந்த துரியோதனன்.. சரமாரியாக கதை பிணைந்தார்..

‘எந்த மாதிரியான விசயம்..? இவரு எதுக்காக அந்தப் பக்கமா பொண்டாட்டிய அனுப்பிட்டு இந்தப் பக்கமா இங்க வந்தாரு...?’

விவரம் புரியாத அந்த மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

கண்ணதாசன் துரியோதனனை பேச விட்டுக் கேட்டுக் கொண்டிருக்க.. ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக.. சிவதாணு பட்டென்று கேட்டு விட்டார்..

“இந்த மாதிரி விசயம்ன்னா.. எந்த மாதிரி விசயம்..? புரியலயே…”

கண்ணதாசன் இமை கொட்டி அன்னபூரணியைப் பார்க்க.. அவளும் அதைப் போலவே மகனைப் பார்த்தாள்..

இதுபோன்ற அதிசயத்தை இதற்கு முன்னால் அந்தக் குடும்பம் பார்த்ததில்லை.. சிவதாணுவாவது.. பொறுப்பான குடும்பத் தலைவனாக ஒரு கேள்வியைக் கேட்டு விடுவதாவது.. அதுவரை அவர் அதுபோலக் கேட்டதில்லை.. கண்ணதாசன் கெஞ்சிப் பார்ப்பான்…

“சொன்னாக் கேளுங்கப்பா.. என்னதான் நான் வீட்டுக்கு மூத்தமகனா இருந்தாலும்.. குடும்பத் தலைவன்னு என்னைச் சொல்ல மாட்டாங்க.. உங்களத்தான் சொல்லுவாங்க.. நீங்தான் இந்தக் குடும்பத்தோட தலைவர்.. அதுக்குத்தான் கெஞ்சறேன்.. வீட்டு விசயத்தில தலக் கொடுங்க…”

“அதுக்குத்தான் நீ இருக்கியேப்பா…”

இப்படிச் சொல்லிக் கழண்டு கொள்கிற சிவதாணுதான் அருமை.. பெருமையாக.. அர்த்தம் பொதிந்த அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தார்...

“இதென்ன மச்சான் இப்புடிக் கேட்டுப் புட்டிங்க..?” பெரிதாக சிரித்தார் துரியோதனன்...

மற்ற மூவரும் சிரிக்கவில்லை.. உன்னிப்பாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.. அவர்களுக்கு சிரிப்பில் கலந்துகொள்ளும் உத்தேசமில்லை என்பதைப் புரிந்து கொண்டவராக துரியோதனன் சிரிப்பதை நிறுத்தி விட்டு பேச்சைத் தொடர்ந்தார்..

“நம்ம ரெண்டு பேரு வீட்டிலயும் கல்யாணவயசில புள்ளைக இருக்கு.. பொண்ணக் கொடுத்து.. பொண்ணக் கட்டிக்கிற சொந்தமும் இருக்கு.. இத்தன விசயம் இருக்கிறப்ப.. என்னவிசயம்ன்னு கேக்கறிங்களே..”

‘சொன்னேனே.. கேட்டியா..’ அன்னபூரணியின் விழிகள் கண்ணதாசனிடம் கேட்டன...

“கண்ணதாசன் கல்யாணத்தப் பத்தி இப்ப பேசறதா இல்ல.. தங்கச்சி கல்யாணம் முடியாம அவன் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னு சொல்லிட்டான்...”

இதையும் சிவதாணுதான் சொன்னார்.. எள் என்று நினைக்கும் முன்னால் எண்ணையாக நிற்கும் கணவரின் மீது காதல் பெருகியது அன்னபூரணிக்கு...

‘இந்த மனுசனுக்கு இப்படிக்கூடப் பேசத் தெரியுமா..?’ அவள் புல்லரித்துப் போய் விட்டாள்...

“அப்படித்தான் இருக்கனும்...” என்று துரியோதனன் பாராட்டியதில் அவர்கள் மூவருக்குமே தூக்கிவாரிப் போட்டது...

‘என்னடா... இது...’

திரும்பவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

பெண் கொடுக்கவென்று வீடு தேடி வந்துவிட்டு.. அந்த மாப்பிள்ளை திருமணத்தைத் தள்ளிப் போட்டிருப்பதை பாராட்டிப் பேசினால் அவர்கள் என்னவென்றுதான் நினைப்பார்கள்...?

“என்னடா கண்ணா.. இந்த மனுசன் இப்படிச் சொல்றாரு..?” அன்னபூரணி முணுமுணுத்தாள்...

“எனக்கும் அதுதாம்மா புரியல...” கண்ணதாசன் பதிலுக்கு முணுமுணுத்தான்...

சிவதாணுதான் அந்த முணுமுணுப்பிற்கெல்லாம் அப்பாற்பட்டவராயிற்றே.. அவர் வினோதமாக துரியோதனனைப் பார்த்தபடி...

“அப்படித்தான் இருக்கனும்னு பாராட்டறவரு.. எதுக்காக பொண்ணு கொடுக்கிறதப் பத்திப் பேசனும்னுதான் புரியல..” என்று சொல்லி விட்டார்...

“பொண்ணு கொடுக்கனும்னு வந்திருக்கேனா..?”

அப்போதுதான் கண்ணதாசனை மாப்பிள்ளை என்ற கோணத்திலேயே யோசித்தார் துரியோதனன்.. மாநிறமாக.. கம்பீரமாக இருந்தவனைப் பார்க்கும் போது...

‘இது கூட நல்ல பேச்சாயிருக்கே...’ என்று அவருக்குத் தோன்றியது...

‘இத எப்படி யோசிக்காம விட்டேன்..?’

கண்ணதாசனின் படிப்பும்... பதவியும் அவரை ஈர்த்தன.. அப்படிப்பட்ட மாப்பிள்ளையைத் தேடிப் பிடித்துக் கொண்டு போனால் செல்வி அவருக்கு பாத பூஜையே பண்ணி விடுவாள்தான்.. ஆனால் அவர் வந்த நோக்கம் வேறாயிற்றே...

“நீங்க தப்பாப் புரிஞ்சுக்கிட்டிங்க மச்சான்.. நான் சம்பந்தம் பேச வந்திருக்கிறது என்னவோ உண்மைதான்..

ஆனாப் பொண்ணு கொடுக்கறேன்னு கேட்டு வரல.. பொண்ணுக் கொடுங்கன்னு கேட்டு வந்திருக்கேன்...”

“யாருக்கு...?”

கடுமையான முகபாவத்துடன் இந்தக் கேள்வியையும் சிவதாணுதான் கேட்டார்...

“வேற யாருக்கு..? என் ஒரே மகன் தேவராஜனுக்குத் தான் உங்க மக காவ்யாவ பொண்ணுக் கேட்டு வந்திருக்கேன்...”

தேங்காயை உடைத்ததைப் போல துரியோதனனும் பதிலைச் சொல்லி விட்டார்.. கண்ணதாசனின் தாடை இறுகியது.. அன்னபூரணி கொதித்து விட்டாள்.. அவள் அந்த தேவராஜனைப் பார்த்திருக்கிறாள்.. அவனைப் பற்றிக் கேள்வியும் பட்டிருக்கிறார்...

‘படிக்காத கூதர.. ஊர் வம்ப விலைக்கு வாங்கிட்டு வர்ற ரௌடி.. திரும்புன பக்கமெல்லாம் கடன வாங்கி வைச்சு.. அப்பன் ஆரம்பிச்ச கடய விக்க வைச்ச ஊதாரி.. அந்தத் தறுதலக்கு பொண்ணுக் கொடுக்கத்தான் எம்புள்ளய வம்பாடுபட்டு பெத்து.. வளத்து.. படிக்க வைச்சு.. ஆளாக்கி வைச்சிருக்கேனா..?’

அவளின் கோபத்தை வெளிக்காட்ட வகையாக ஹாலின் டெலிபோன் அடித்தது.. எடுத்து காதுக்கு கொடுத்தவள் சரமாரியாக பொரிய ஆரம்பித்து விட்டாள்...

“அதுக்குத்தான காத்திருக்கேன்..? உனக்கு என்னப் பாத்தா எப்புடித் தோணுது.. கூறுகெட்ட கூதரைன்னு தோணுதா..? ஆகாவழிப் பேச்ச பேசிக்கிட்டு இருக்க.. ஆருகிட்டப் பேசறன்னு யோசிச்சுத்தான் பேசறயா.. நீ கெட்ட கேடுக்கு உம்மனசில இம்புட்டுப் பெரிய நினைப்பு இருக்கா..? அடச்சீ.. போன வைய்யி...”

அவள் போனை வைத்த வேகத்தில் அது உடையாமல் தப்பிப் பிழைத்தது.. துரியோதனனின் முகத்தில் ஈயாடவில்லை.. இப்படிப்பட்ட எதிர் தாக்குதலை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை..

‘என்னடா இது.. இங்கயும் ஒரு செல்வி இருக்கு..’

மதுரை மாநகரில் வீட்டுக்கு வீடு செல்வி இருப்பார்கள் என்று தெரிந்து வைத்துக் கொண்டே அவர் அந்தக் கேள்வியை கேட்டுக் கொண்டார்...

“யாரும்மா அது..?” அறியாதவனைப் போல வினவினான் கண்ணதாசன்..

“அந்த அச்சுக் கெட்ட மகாராணிதான் போன் பண்ணியிருந்தா...”

“அண்ணியவா சொல்றீங்க..?”

“அவளத்தான் சொல்றேன்.. எங்க அக்காவ சொல்லனும்.. இவளயெல்லாம் பேச விட்டு வேடிக்க பார்க்கக் கூடாது கண்ணதாசா.. இழுத்துப் போட்டு நாலு மிதி மிதிக்கனும்.. அப்பத்தான் அடங்கும்ங்க.. எங்கே.. உங்க பெரியம்மா மகனுக்குத்தான் அந்த தைரியம் வல்லயே...”

அன்னபூரணி ஜாடையாக கணவரைப் பார்த்தாள்.. எடுத்துக் கொடுக்க வேண்டிய அவசியமின்றி அவர் மகா தைரியத்துடன்தான் இருந்தார்.. துரியோதனனை நேருக்கு நேராகப் பார்த்து...

“உங்களுக்கும் ஒரு மக இருக்கா துரியோதனன்.. உங்க மகனப் பத்தி நான் சொல்ல வேண்டாம்.. ஊருக்கே அது தெரியும்.. உங்களுக்கும் அது தெரியும்.. என் கேள்வியே வேற.. இது போல ஒரு மாப்பிள்ளைக்கு உங்க மகளைப் பொண்ணு கேட்டா.. நீங்க கொடுத்துட்டுத்தான் வேற சோலி பாப்பீங்களா..?”

செல்வி கேட்ட கேள்வியை சிவதாணு கேட்டு விட்டார்.. துரியோதனனுக்கு எங்கே முகத்தைக் கொண்டு போய் வைத்துக்கொள்வது என்று தெரியவில்லை.. ஆனாலும் அவர் தழைந்து பேசாமல் ஓங்கியே பேசினார்..

"என்ன பேசறிங்க சிவதாணு.. எம் மகனுக்கென்ன குறைச்சல்..? தோட்டம்.. துரவிருக்கு.. போதாக்குறைக்கு.. கடைத்தெருவில பெரிசா ஜவுளிக்கடையிருக்கு.. சொந்த வீடிருக்கு.. இப்படியாப்பட்ட மாப்பிள்ள உங்களுக்குத் தேடினாலும் கிடைக்குமா..?"

கண்ணதாசன் மௌனத்தை கலைத்து விட்டான்.. எவ்வளவு நேரம்தான் அவனும் பொறுமை காப்பான்..? குடும்பத் தலைவராய்.. லட்சணமாய் சிவதாணுதான் வாங்கு வாங்கென்று வாங்கிக் கொண்டிருக்கிருந்தாரே.. அதனால் அவன் மௌனம் சாதித்தால் துரியோதனன் வீட்டுக் கொடுக்காமல் பேசிக் கொண்டே போவதா..?

"நாங்க தேடலை துரியோதன் சார்..." அவன் அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்...

"உங்க மகனைப் போல மாப்பிள்ளய நாங்க தேடலை.. என் தங்கைக்கு நாங்க பார்க்கப் போகிற மாப்பிள்ள படிச்சிருப்பார்.. பண்பானவரா இருப்பார்... குடிக்க மாட்டார்.. குணசாலியா இருப்பார்.. அவர் சம்பாத்தியத்தில பெண்டாட்டியை வாழ வைக்கிற ஆம்பளயாய் இருப்பார்.. அப்படிப்பட்ட மாப்பிள்ளயத்தான் நாங்க தேடிக்கிட்டு இருக்கோம்.. படிக்கலன்னா கூடப் பரவாயில்ல.. நான் சொன்ன மத்த குணங்கள் உங்க

மகன்கிட்ட இருந்தா.. நீங்க பொண்ணு கேட்டு வந்ததில ஒரு அர்த்தமிருக்கு.. அதெல்லாம் உங்க மகன்கிட்ட இல்லேன்னு உங்களுக்கே நல்லாத் தெரியும்.. இருந்தும் எங்கவீட்டு படியேறி வந்து பொண்ணு கேட்கறிங்கன்னா.. இது நல்லாயில்லங்க அவ்வளவுதான் நான் சொல்லுவேன்..”

கண்ணதாசன் கண்டிப்பான தொனியில் மறுத்து விட்டான்...

# 68

*கடல்தாண்டி நீயிருந்தாலும் – என்*
*கனவில் நீவர ஆசைகொண்டேன்..*

**து**ரியோதனன் வெகுண்டார்... என்னதான் தேவராஜன் கண்ணதாசன் சொல்வதைப் போல கண்டபடி அலைகிற புறம்போக்கு போக்கிரியாக இருந்தாலும்.. பெண்கேட்டு வந்தவரிடம் இந்த அளவுக்கு கண்ணதாசன் பேசியிருக்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் அவர் நினைத்தார்...

‘என் மகன் உதவாக்கரைன்னு.. இவன் எப்படிச் சொல்லலாம்...?’

துரியோதனன் பற்ற வைக்கத் தயாரானார்..

“தப்புத்தான் சிவதாணு.. எம்மகனுக்கு உங்க மகளக் கேட்டது தப்புத்தான்.. அதிலயும்.. அரசல் புரசலா ஆயிரம் விசயங்க காதில விழுந்தும்.. துணிஞ்சு நான் பொண்ணு கேக்க வந்தது தப்புத்தான்.. மனசுக்குள்ள அர்ச்சுன மகராசன் போல மாப்பிள்ள வருவான்னு ஆசையிருக்கத் தான் செய்யும்.. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவு.. உள்ளேயிருக்குமாம் ஈரும்பேனுன்னு.. உள்ளார நுழைஞ்சு பார்த்தாத்தான் எல்லாம் வெட்டவெளிச்சமா தெரியும்...”

துரியோதனன் பேசப்பேச.. கண்ணதாசனின் கண்கள் மின்னின.. அவன் லேசாக தலையைத் திருப்பி வீட்டுக்குள் பார்த்தான்.. காவ்யாவின் முகத்தில் பதட்டம் வழிந்தது.. கண்ணதாசன் புரிந்து கொண்டான்..

‘ஓ.. அப்பனும்.. புள்ளயும்.. அர்ஜீன் விவகாரத்த இழுக்கப் பாக்கறானுகளா..? அதான் எந்தங்கச்சி இந்த பயம் பயப்படுதா..’ பல்லைக் கடித்தான்..

“என்னது..?” சிவதாணு புருவங்களை உயர்த்த.. அவரைப் பேச விடாமல் ஊடே புகுந்தான் கண்ணதாசன்..

“இவ்வளவுதான் உங்களுக்கு மரியாதை.. கிளம்புங்க...” என்று அதட்டினான்..

“இருப்பா.. இவரு என்னவோ சொல்ல வர்றாரே.. என்ன சொல்றாருன்னுதான் கேப்போமே..” என்றார் சிவதாணு...

“சொல்லுவாருப்பா.. சுரைக்காய்க்கு உப்பில்லன்னு ஆயிரம் சொல்லுவார்.. அத ஊம் போட்டுக்கேக்க.. நாம ஒன்னும் சேலயக்கட்டி வளயல மாட்டியிருக்கல.. எந்தங்கச்சியப் பத்தி நாக்கு மேல பல்லப்போட்டு எவன் பேசினாலும்.. அவன் நாக்க இழுத்து வைச்சு நறுக்கிருவேன்.. யாருன்னு நினைச்சாங்க.. இவரு மகன் எந்தங்கச்சிட்ட வாலாட்டறானாம்.. இத்தன நாளா இந்த விசயத்த காவ்யா எங்கிட்டச் சொல்லலைப்பா.. இந்தாளு தலயக் கண்டதும் சொல்லுது.. முதல்லயே தெரிஞ்சிருந்தா அந்த தேவராஜனை தூக்கிப் போட்டு மிதிச்சிருப்பேன்.. இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகல.. இனிமே எந்தங்கச்சிகிட்ட உங்க மகன் வால ஆட்டிப் பாக்கட்டும்.. குடல உறுவி மாலபோடலேன்னா.. என்னன்ன கேளுங்க...”

சிவதாணுவிடம் ஆரம்பித்து துரியோதனனிடம் முடித்தான் கண்ணதாசன்.. பேச்சு திசை திரும்பி..

தேவராஜன் காவ்யாவிடம் வாலை ஆட்டுவதில் முடிந்து விட்டதில் துரியோதனன் என்னசொல்ல வந்தார் என்பதையே அன்னபூரணியும்.. சிவதாணுவும் மறந்து விட்டார்கள்.. அவர்கள் மகளிடம் தேவராஜன் வம்புக்குப் போனான் என்பது மட்டுமே அவர்கள் நினைவில் நின்றது...

“ஆத்தி.. இந்தக் கொடும எத்தன நாளா நடக்குதாம்...?”

“எனக்கே தெரியாதும்மா.. இப்பத்தான் காவ்யா சொல்லுச்சு...”

“யாரு வீட்டு புள்ளகிட்ட யாரு வாலாட்டறது..? ஏன்ய்யா.. நீங்களும் ஒரு பொண்ணப் பெத்த புண்ணியவான்தான.. உங்க மககிட்ட ஒருத்தன் இப்படி வம்பு பண்ணினா சும்மாயிருப்பீங்களா..?”

“இருந்தாலும் இருப்பார்.. யாரு கண்டது..?”

“வேண்டாம் கண்ணதாசன்.. வாய் நீளுது..”

“உனக்கு மட்டும் வாய் நீளலையோ..? என் மகனுக்கு மட்டும்தான் நீளுதோ..? இந்த சிவதாணுக்கு திருக்குறளயும் தெரியும்.. திருப்பாச்சி அருவாளயும் தெரியும்.. உன்ன மாதிரிதான் நானும்.. சண்டைன்னு

வந்துட்டா புழுதியில பொறள தயங்க மாட்டேன்... என்ன தெனாவெட்டு இருந்தா என் முன்னாடியே என் மகன கைநீட்டிப் பேசுவ..?"

"விவரம் புரியாம பேசாத சிவதாணு..."

"எல்லாம் புரிஞ்சுதான் பேசறேன்ய்யா.. போக்கத்தவனுக்குப் பொண்ணு தரத்தான் நாங்க பொண்ணப் பெத்து வளத்து வைச்சிருக்கோமா..? உம்மகன் ஆசைப்பட்டா நீயில்ல எடுத்துச் சொல்லியிருக்கனும்..? அத விட்டுப்புட்டு அந்த வெம்போட்டுப் பய பேச்சக் கேட்டு பொண்ணுக் கேட்டு வந்தியாக்கும்..? அறிவில்ல..?"

"இந்தாளுக்கா அறிவில்ல..? அது கடல் போல இருக்குப்பா.. எத.. எங்கே.. எப்படிக் கொளுத்திப் போடனும்கிற சூட்சுமப் புத்தி படைச்சவரில்ல இவரு... அந்த வித்தாரத்தனத்த கண்ணதாசன் கிட்டக் காட்ட வேணாம்ன்னு சொல்லி வையுங்க.. என் குணத்தக் காண்பிச்சேன்னு வையுங்க.. இந்த ஆளு தாங்க மாட்டாரு.."

அவர்கள் மூவரும் மாறிமாறிப் பேசியதில் ஓடி வந்தவர்தான்.. வீட்டுக்குள் நுழைந்து கதவைத் தாழிட்ட பின்புதான் ஓட்டத்தையே நிறுத்தினார் துரியோதனன்...

குழம்புக்காக வெங்காயத்தை உரித்துக் கொண்டிருந்த செல்வி கணவரை விசித்திரமாகப் பார்த்தாள்...

“என்னாடி தேனு.. உங்கப்பா இந்த ஓட்டம் ஓடி வர்றாரு... பொண்ணு கேக்கப் போன இடத்தில நாளக்கே கல்யாணத்த வைச்சுக்கலாம்ன்னு சொல்லிப் புட்டாங்களா.. அதுக்குத்தான் இந்த ஓட்டமா..?” என்று கிண்டலாக மகளிடம் கேட்டாள்..

“யம்மோவ்.. இந்த விளையாட்டுக்கே நான் வரலை.. அப்பாகிட்ட பேசனும்னா நேரடியாப் பேசு.. ஊடாலே என்ன இழுக்காத.. அதுக்கு நான் ஆளில்ல...”

“உங்கப்பாகிட்ட நேரடியாப் பேசிட்டாலும்...”

செல்வி நொடித்தபடி விட்ட வேலையைத் தொடர்ந்தாள்.. தகப்பனாரின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்த தேவராஜன் தடதடவென்று மாடிப்படிகளில் இறங்கி வந்தான்...

“என்னப்பா ஆச்சு..?” என்று பரபரப்பாக கேட்டான்..

“உங்க ஆசைமகன் கேக்கறானில்ல.. சொல்லுங்க..” இடக்காக சொன்னாள் செல்வி..

“அவனுக பொண்ணுதர மாட்டேனுட்டாங்கடா..” ஆத்திரத்துடன் பேசினார் துரியோதனன்..

தேவராஜனின் முகம் மாறியது.. அவன் துரியோதனனின் செல்வாக்கில் நம்பிக்கை வைத்திருந்தான்.. எதுவந்தாலும் பூர்விக சொத்தில் கைவைக்காத மனிதர் அவர்... தோப்பும்.. வயலும்.. தோட்டமும்.. காடுமாக.. துரியோதனனுக்கு கிராமத்தில் இருந்த சொத்து பத்துக்கள் ஏராளம்.. ஊருக்கே பெரிய வீடு.. இவர் மதுரையில் கடைவைத்தபின்பு.. அண்ணா நகரில் பெரிய பங்களாவைக் கட்டியிருந்தார்.. கம்யூட்டர்களை கொள்முதல் செய்து விற்கும் கடையை விற்றிருந்தாலும்.. புதிதாக ஜவுளிக்கடையை திறந்திருப்பவர்.. இத்தனை வசதிகளிருக்கும் துரியோதனனின் மகனுக்கு பெண் தர மாட்டேனென்று சொல்லி விட்டார்களா..?

மறந்தும் தேவராஜன் தன் தகுதியை நினைத்துப் பார்க்கவில்லை... அவனுக்கென்று சொல்லிக் கொள்ளும்படி தனியான தகுதிகள் எதுவும் இல்லையென்பதை அவன் அறிவான்...

“நீங்க கேட்டுமா மாட்டேன்னு சொன்னானுக..?” அவன் ஆத்திரத்துடன் கேட்டான்...

“கேட்டுக்கடி தேன்மொழி.. உங்கப்பா என்னவோ குணசாலின்னு சொன்னியே.. அவருக்கு இந்த வயசில ரெண்டாம் தாரமா பொண்ணு வேணுமாம்..” செல்வி நொடித்தாள்..

“ஏய்ய்..” துரியோதனன் பல்லைக்கடித்தார்..

“எங்கிட்ட என்னத்துக்கு முறைக்கறிங்க..? இந்த முறைப்பயெல்லாம் உங்க மகன்கிட்டக் காட்டுங்க.. அவன்தானே சொன்னான்..?”

“என்னடி சொன்னான்..?”

“நீங்க கேட்டுமா அவங்க பொண்ணு தர மாட்டேன்னு சொல்லிட்டாங்கன்னு சொன்னானா இல்லியா..?”

“அவன் அப்படிச் சொல்லலைடி.. அவனுக பொண்ணு தர மாட்டேன்னு சொன்னானுகன்னுதான் சொன்னான்..”

“இதில்ல முக்கியம்..! நல்லாச் சேர்ந்திருக்கீங்க பாருங்க.. அப்பனும்.. மகனும் கூட்டணி போட்டுக்கிட்டு.. என்னத்தையோ பண்ணித் தொலைங்கன்னு பேசாம இருக்கவும் முடியல.. நம்ம தகுதிக்கு... ஊருப்பக்கம் பொண்ணத் தேடினா.. சொத்து பத்தோட.. நூறுபவுன்

நகையைப் போட்டே பொண்ணைக் கொடுப்பாங்க.. அத விட்டுட்டு நடக்காதுன்னு தெரிஞ்சும் அவங்க வீட்டுக்கு பொண்ணு கொடுன்னு ஏன் போகனும்..?”

“காரணமாத்தான் போனேன்னு உனக்குத் தெரியாதா..?”

“எனக்கு நல்லாத்தான் வந்திரும் வாயில.. இவரு காரணத்தில தோரணம் கட்டினவரு.. இந்த எடுபட்டபய ஆட்டி வைக்கறான்.. நீங்களும் ஆடறிங்க...”

“அம்மா பேசறத காதில போட்டுக்காதீங்கப்பா..”

“ஆமடா.. இப்படி உங்கப்பனுக்குச் சொல்லிக் கொடுக்கத்தான் உன்னை பத்து மாசம் வயித்தில சுமந்து பெத்துப் போட்டேன்..”

“இதுக்கு வேற வேலயே இல்ல...”

“உனக்கு என்ன வேலயிருக்குடா சாமி..? நான் வேல நிறுத்தம் பண்ணினேன்னு வைய்யி.. இந்தக் குடும்பம் மொத்தமும் ஓட்டலுக்கு படையெடுத்தாகனும்.. அத நினப்பில் வைச்சுக்க...”

“எப்பப் பாத்தாலும் இப்படியே பேசிக்கிட்டிருக்கும்..”

“அந்தப் பேச்சக் கேட்டதாலதான் உங்கப்பா உருப்பட்டாரு.. இப்ப புதுசா உன் பேச்சைக் கேட்டதுக்கு பலனப் பாத்த பின்னாலயுமா இப்புடிப் பேசற..?”

“பொறும்மா.. அவரு போயிட்டு வந்த கதையத்தான் சொல்லட்டுமே...”

“சொல்லுங்க.. மகன் கேக்கறானில்ல..”

“அதையேண்டா கேக்கற.. அவனுக முதலில நாம பொண்ணுக் கேட்டுப் போயிருக்கோம்ன்னே நினைக்கலடா...”

“அப்புறம்..?”

“பொண்ணு கொடுக்க வந்திருக்கோம்ன்னு நினைச்சுப் புட்டானுக...”

இந்தவார்த்தையில் தேன்மொழி நிமிர்ந்தாள்.. அவள் விழிகள் ஒளிர்ந்தன.. அவளுக்கு கண்ணதாசனைப் பிடிக்கும்.. சொந்த பந்தங்களின் விசேசங்களுக்குப் போகும்போது சில தருணங்களில் கண்ணதாசனை அவள் பார்த்திருக்கிறாள்.. அவனது தோற்றத்திலும்.. நடவடிக்கைகளிலும் மனது ஈர்க்கப்படுவதை உணர்ந்திருக்கிறாள்...

'அவனை மாப்பிள்ளை கேட்கப் போனாருன்னு நினைச்சிட்டாங்களா..?'

அவள் மனதை மயிலிறகு வருடிச் சென்றது.. அதைச் செல்வியால் புரிந்து கொள்ள முடிந்தது...

"ஆனமான அப்பன்னா அதைச் செஞ்சிருப்பாரு.. இந்த அப்பன்தான் புத்தியக் கடன் கொடுத்திருக்காரே..." என்று ஆற்றாமையுடன் சொல்லி வைத்தாள்...

"யாருடி இவ.. அவனுக சொன்ன பின்னாலதான் என்புத்திக்கே அது உறைச்சுச்சு.. தேடினாலும் கண்ணதாசனப் போல ஒரு மாப்பிள்ள கிடைக்க மாட்டான்தான்.. இனிமே அதுக்கு வழியில்லாம போயிருச்சு செல்வி..."

தேன்மொழியின் முகம் இருண்டது.. அவள் வேதனையுடன் கையிலிருந்த புத்தகத்தில் பார்வையைப் பதித்தாள்.. அதைப் பார்த்த செல்வியின் மனம் சங்கடப்பட்டது...

'இப்புடியும் ஒரு மனுசன் இருப்பாரா.. யாராச்சும் கையில வெண்ணய வைச்சுக்கிட்டு நெய்யத் தேடி அலைவாங்களா...' என்று ஆற்றாமைப்பட்டாள்...

"முதல்லயே இந்தப்புத்தி இருந்திருக்கனும்.. கண்ணுக்கு முன்னால பெரிய படிப்பை படிச்சு..

கவர்ன்மெண்டில பெரிய உத்தியோகம் பார்க்கிற மாப்பிள்ளை இருக்கிறப்ப.. என்ன அலுவலுக்கு அந்தப் பார்த்தசாரதிக்கு போனப் போட்டிங்க..? இந்த நினப்பு முதல்லயே இருந்திருக்க வேணாமா..? புத்தியைக் கடன் கொடுக்கலாமா..?"

"யாருடி இதயெல்லாம் நினைச்சா..?"

"நீங்க தானாய் நினைக்கலிங்க.. இந்தத் தறுதலப்பய நினைக்க வைச்சான்.. தேன்மொழிக்கு கண்ணதாசன பாக்கலாம்ன்னு உங்கள நினைக்க வைக்கிறதுக்குப் பதிலா.. அந்த அர்ஜீனை பாக்கலாம்ன்னு சொல்லிக் கொடுத்தான்.. அவங்க மாட்டேன்னதும் அதுக்குப் பழி தீர்க்க இவனுக்கு காவ்யாவ பொண்ணு கேக்கலாம்ன்னு சொல்லிக்கொடுத்தான்.. ரெண்டுமே ஆகாத சோலிக.. மறந்தும் ஆகற சோலியப் பத்தி இவன் சொல்லிக் கொடுக்கலியே..."

துரியோதனனுக்குப் அது புரிந்துதான் இருந்தது.. காலம்கடந்த ஞானோதயத்தால் யாருக்கு என்ன பலன் கிடைக்கப் போகிறது.. அத்துடன் அவருக்கும்.. கண்ணதாசனின் குடும்பத்திற்குமான போர் ஆரம்பமாகி விட்டது... இனிமேல் எதைப் பற்றியும் பேசிப் பிரயோஜனம் இல்லையே...

“நான்கூட நினைச்சேண்டி.. அவனுக பொண்ணைக் கொடுத்தா நாமளும் தேன்மொழிய கண்ணதாசனுக்கு பேசி முடிச்சிரலாம்ன்னு நினைச்சேன்...”

“அந்த நினப்புனாலதான் இத்தன பாடும்..? பட்டும் புத்தி வரலையே..”

“பொண்ணு கொடுத்து பொண்ண எடுத்தா சொந்தம் பலப்படுமில்ல...”

“நாம பொண்ண எடுக்கனும்னு சொன்னால அவங்க வீடுகட்டி அடிப்பாங்க.. இந்த லட்சணத்தில பொண்ணைக் கட்டிக்கன்னு எந்த மூஞ்சிய வைச்சுக்கிட்டு கேக்கறது..? சொந்தம் பலப்படுமாமில்ல.. இந்த தறுதலபேச்சக் கேட்டா இருக்கிற சொந்தமும் இல்லாம போகும்..”

“விடுடி.. இனிமே அதப் பேசி ஆகப் போகிறதென்ன..?”

“நீங்க கொளுத்திப் போடனும்னு சொன்னது என்னாச்சுப்பா..?”

பேச்சின் திசையை மாற்றினான் தேவராஜன்.. அவனுக்கு பேச்சுப் போகும் திசையே பிடிக்கவில்லை.. கண்ணதாசனை மாப்பிள்ளை கேட்க வேண்டுமென்று அவன் கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை.. அந்த வீட்டில் காவ்யாவைத் தவிர.. வேறு யாரும் அவன் கவனத்தில் பட்டதே இல்லை...

அவனுக்கு தேன்மொழி என்றொரு தங்கை இருக்கிறாள் அவளுக்கும் மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு வந்ததில்லை.. அதைப் பற்றி யோசிக்க வேண்டுமென்ற கடமை அவனுக்கில்லை.. துரியோதனனுக்குத்தான் இருக்கிறது என்ற எண்ணமுடையவன் அவன்...

அவன் திசை திருப்பி பாதையில் பேச்சைத் திருப்பினார் துரியோதனன்..

“அதத்தான் ஆரம்பிச்சேன்.. அந்த கண்ணதாசன் பய விடலையே...”

“என்னப்பா சொல்றீங்க..?”

“நான் பத்த வைக்கிறதுக்குள்ள.. அவன் உன்னப்பத்தி பத்த வைச்சிட்டான்.. நீ அந்தக் காவ்யாப் பொண்ணுகிட்ட வம்பு வளர்க்கிறன்னு சொன்னான்.. நீ சிக்கினா பின்னிப் பெடலெடுத்திருவான்னு சொன்னான்.. அதக் கேட்டதும் மொத்தக் குடும்பமும் என்ன மொத்த ரெடியாகிட்டானுக.. ஏண்டா.. நீ அந்தப் புள்ள கிட்ட வாலாட்டினயா..?”

“சேச்சே.. இல்லவே இல்லப்பா..”

“இத நம்பச் சொல்றியா..? என் கடையில ரொம்ப நாளா அந்தப்புள்ள வேல பாக்குது.. தங்கமான புள்ள.. யாரையும் நிமிர்ந்துகூடப் பாக்காது.. இந்த அர்ஜீன்

பய விவகாரத்தக்கூட நீதான் சொல்ற.. என்னால நம்ப முடியல.. அந்தப் புள்ளகிட்ட வாலாட்டியிருக்கயே.. உன்ன என்னதாண்டா செய்யறது..?”

துரியோதனனின் கோபத்தில் தேவராஜன் ஆடிப்போய்விட்டான்..

# 69

*நீயிருக்கும் நிலாவெளியில்...*
*நான் உலவ ஆசைகொண்டேன்..*

**கா**வ்யாவின் மீதான துரியோதனனின் அபிமானத்தில் கதிகலங்கிப் போனான் தேவராஜன்.. கடையை விற்பதற்கு முன்னால் அவன் கடைக்குப் போனால் காவ்யாவிடம் நெருங்கக்கூட துரியோதனன் அவனை அனுமதித்ததில்லை.. அந்த அளவுக்கு காவ்யாவின் மீது மதிப்பும்.. அக்கறையும் வைத்திருந்தவர்...

“உன் பேச்சைக் கேட்டு அந்த வீட்டுக்கு போனதுக்கு என் மரியாதை குறைஞ்சதுதான் மிச்சம்.. இதுக்கு முன்னாலே அந்தக் குடும்பமே என்னப் பாத்தா அம்புட்டு

மரியாதை கொடுக்கும்.. என் கடைங்கிறதாலதான் கண்ணதாசன் அவன் தங்கச்சியை வேலைக்கே அனுப்பினான்.. நான் கடையை வித்துட்டேன்னு தெரிஞ்சவுடனே அவன் தங்கச்சிக்கு வேற வேலை பார்த்துக் கொடுத்தவன்தான் அவன்.. காவ்யாதான் இன்னும் கொஞ்ச நாளக்கி இந்தக் கடையிலயே இருக்கிறேன்னு சொல்லியிருக்கு...”

“அதானே... அர்ஜீன்பய கடய விட்டு அவ போவாளா..?”

“அவ.. இவன்ன.. பல்லக் கழட்டிருவேன்.. படவா ராஸ்கல்.. அந்தப் பொண்ணுதான் இல்லேன்னு ஆகிப் போச்சே.. இன்னும் எதுக்காகடா உரிமை கொண்டாடிப் பேசற..? நீ நினக்கிறாப்புல எல்லாம் ஒன்னுமில்ல.. அர்ஜீனுக்கு ஆயிரம் வேல.. இந்தக் கடையை அவங்கப்பன் ரோசத்துக்கு வாங்கிப் போட்டிருக்கான்.. மத்தபடி.. இந்த வருமானத்த எல்லாம் அவங்க பெரிசா நினைக்க மாட்டாங்க..”

“இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க..?”

“மதுரையைப் பத்தியும் கடையோட கணக்கு வழக்கப் பத்தியும் அர்ஜீனுக்குத் தெரியாது... அது அத்தனையும் தெரிஞ்ச ஒரே ஆளு காவ்யாதான்.. இத நான்தான் அர்ஜீன்கிட்டயே சொன்னேன்...”

“உங்களுக்கு இது தேவையாப்பா...”

“தேவைதாண்டா.. என் கடையில இருக்கிறவங்கள்ள.. வேலை தெரிஞ்சவங்களா.. நேர்மையான வங்களா.. அதே சமயம் நம்பிக்கைக்கு உரியவங்களா யாரிருக்காங்கன்னு அர்ஜீன் கடையை வாங்கின சமயத்தில கேட்டான்.. அப்ப அவன் பார்த்தசாரதியோட மகன்னு எனக்குத் தெரியாது.. கேட்டதவிட அதிகமா பணம் கொடுத்திருந்தானே.. அந்த நன்றிக்கடனில காவ்யாவ அடையாளம் காட்டினேன்.. அர்ஜீன் கேட்ட அத்தனையும் அந்தப்புள்ள கிட்டத்தான் இருந்துச்சு...”

‘அப்படியா..? அவன் கேட்ட.. நம்பிக்கை.. நாணயம்.. நல்லதரமெல்லாம் இவகிட்டத்தான் இருக்குதா.. இத வைச்சே நான் விளையாடிக் காட்டறேன்.. நான் காட்டற ஆட்டத்தில... அவளும் அவனும் ஆடிப் போயிரனும்..’ மனதுக்குள் கருவினான் தேவராஜன்...

“அதனால அந்தப்புள்ள வம்புக்குப் போகாம விலகியிருக்கிற வழியப்பாரு...”

“பயப்படறிங்களாப்பா..”

“இது பயமில்லடா.. தற்காப்பு.. அந்த சிவதாணுக்கு ஆள்பலம் ஜாஸ்தி.. அவன் பங்காளிக ஒன்னு கூடினாங்கன்னு வைய்யி... நம்ம ஊரு மந்தை கொள்ளாது.. பத்தாததுக்கு அந்தக் கண்ணதாசன் கவர்ன்மெண்டில பெரிய ஆபிசரு.. அவன்கூட மோதறதுங்கிறது நல்லதில்ல...”

“அப்பா...”

“எனக்கு ஆயிரம் சோலி இருக்கு.. இதுல பகையைத் தீர்க்கிறேன்னு சண்டை போட்டுக்கிட்டு இருந்தா இருக்கிறதயும் காப்பாத்த முடியாது.. ஜவுளிக்கடையில இப்பத்தான் வியாபாரம் சூடு பிடிச்சிருக்கு.. இதைக் கெடுத்துக்க நான் தயாரா இல்ல...”

“அதுக்காக விட்டுக் கொடுக்கறிங்களாப்பா..?”

“எதடா விட்டுக் கொடுக்கிறேன்..? அந்த பார்த்தசாரதி என்ன எனக்கு மாமனா.. இல்ல மச்சானா..? இந்த சிவதாணுதான் சொந்த மச்சினனா..? ரெண்டும் இல்ல... அவன் கிட்ட பொண்ணக்கட்டுன்னும் கேட்டிருக்கக் கூடாது... இவன்கிட்டப் பொண்ணு கொடுன்னும் சொல்லியிருக்கக் கூடாது... ரெண்டையும் செஞ்சுட்டு.. கடப்பாறையை விழுங்கிட்டு.. ஜீரணமாகலன்னு வயித்தப் பிடிச்சா... யாரு என்ன பண்றது..?”

துரியோதனன் எளிதாக கழண்டு கொண்டார்... அவர் விவரமானவர்... பார்த்தசாரதியின் மீதிருந்த வன்மத்தினாலும்.. அர்ஜீனின் பண வசதியின் மேலிருந்த மோகத்தினாலும் தேவராஜன் சொன்னதற்கு காது கொடுத்து விட்டார்.. அது நிறைவேறாத கோபத்தில் காவ்யாவைப் பெண் கேட்க கிளம்பி விட்டார்.. அங்கும் அடி விழுகவும் விழித்துக் கொண்டார்...

அவருக்கு அவருடைய மரியாதையும்.. உயரமும் கீழே இறங்குவதில் கொஞ்சம் கூட உடன்பாடில்லை.. பெரிய வீடு என்று அவருடைய கிராமத்தில் அடையாளம் சொல்லும் அளவிற்கு வாழ்ந்து கொண்டிருப்பவர் அதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்பதில் கவனமாக இருந்தார்...

“உங்க அம்மா சொல்றதுதான் சரி.. உனக்கு பொண்ணு கொடுக்க ஆயிரம் பேரு இருக்காங்க.. நம்ம தேன்மொழிக்கு மாப்பிள்ளை தேடினாலும் ஆயிரம் பேர் கிடைப்பாங்க... இதுதான்னு எதையும் குறிச்சு வைச்சு அதில இறங்கி என் நேரத்த விரயம் பண்ண முடியாது.. எனக்கு வயசும் திரும்பல.. சம்பாதிச்சுப் போடறதுக்கு என்ன விட்டா இந்தக் குடும்பத்தில யாருமில்ல...”

துரியோதனன் மறைமுகமாக தேவராஜனை தண்டச் சோறு என்று சுட்டிக் காட்டி விட்டதில் அவனுக்கொன்றும் ரோசம் வந்து விடவில்லை... அதை விட்டுவிட்டு.. அவனுக்குப் பெண் கொடுக்க ஆயிரம் பேர் வருவார்கள் என்று சொன்னதில்தான் அவனுக்கு கோபம் வந்தது..

அவனே ஐந்தாம் கிளாஸ்.. அவனுக்கு பெண் கொடுப்பவர்கள் கைநாட்டுப் போடும் பெண்ணைத்தானே கொடுப்பார்கள்..? அவள் கழுத்து நிறைய நகையும்.. மஞ்சக் காணி நிலமுமாக வந்தாலும் காவ்யாவுக்கு இணையாவாளா..?

“வேற எவ வருவா..?” என்று வெடுவெடுத்தாள் செல்வி...

“உங்கிட்ட இருக்கிறதுதான உனக்கும் கிடைக்கும்.. அந்தக் கண்ணதாசன் சொல்லுச்சாமில்ல.. படிக்காட்டியும் பரவாயில்ல.. கட்டின பெண்டாட்டிய வாழ வைக்கிற அளவுக்கு சம்பாத்தியமும்.. நேர்மையும் இருந்தாப் போதும்.. அது உங்க மகன்கிட்ட இருக்கான்னு கேட்டுச்சாமே...”

“ஏம்மா.. ஊரில சொத்திருக்கு.. மதுரையில ஜவுளிக்கடையிருக்கு.. இது போதாதா..?”

“இதெல்லாம் உன் சம்பாத்தியமா..? ஊரில இருக்கிறது உன் பாட்டன் சொத்து... அதில உக்காந்து சாப்பிட உங்கப்பாவுக்கு தெரியாதா..? அவரு ஏன் உழைச்சுச் சம்பாதிச்சாரு.. மதுரையில வீட்டைக்கட்டி கடையை ஆரம்பிச்சாரு..? நீயும் அதப் போல எதையாவது செஞ்சிருந்தா நம்பிப் பொண்ணக் கொடுப்பாங்க.. நீ அதையும் செய்யாம.. ஊரு பூராவும் கடன வாங்கி வைச்சு.. உங்க அப்பா ஆரம்பிச்ச கடையவுமில்ல விக்க வைச்ச.. உன்ன நம்பி யாரு பொண்ணக் கொடுப்பாங்க.. பேசாம வாயடக்கி.. கையடக்கி கொஞ்ச நாளைக்கு இருந்தீன்னா ஊருப்பக்கம் பொண்ணத் தேடலாம்...”

“எனக்கு பட்டிக்காட்டுப் பொண்ணு வேணாம்...”

“இவரு பெரிய பட்டணத்து துரை.. போடா.. போயி ஆகற சோலியப் பாரு..”

செல்வி கோபத்துடன் அகன்று விட்டாள்.. வாழ்நாளில் வாங்காத பேச்சுக்களை பெற்ற மகன் வாங்கிக் கொடுத்து விட்டானே என்ற கோபத்துடன் தனிமையை நாடி துரியோதனன் மாடிக்குச் சென்று விட்டார்.. உன்னால்தானே இவ்வளவும் என்ற முறைப்புடன் தேன்மொழி விலகிச் சென்றுவிட்டாள்.. தனிமையில் உட்கார்ந்து நகத்தைக் கடித்துத் துப்பியவனுக்குள் கோபம் கொந்தளித்தது..

‘சோலியப் பாக்கிறதா..? இனிமே என் சோலியே.. அந்த அர்ஜீனையும்.. காவ்யாவயும் பிரிக்கறதுதான.. எனக்கு அவ கிடைக்கலேன்னாலும் பரவாயில்ல.. அந்த அர்ஜீன் பயலுக்கு மட்டும் கிடைக்கக் கூடாது.. அவ காதலிச்சவனோட வாழவே கூடாது.. காலம் பூராவும் ஆசைப்பட்டவனை கட்டிக்க முடியலேன்னு மறுகி.. மறுகி.. அவசாகனும்.. என்ன அவகட்டிக்க மாட்டாளா..? அவ ஆசைப்பட்டவன எப்படிக் கட்டிக்கிறான்னு நானும் பாக்கறேன்...’

அடுத்து வந்த நாள்களில் தேவராஜன் கடைப் பக்கமே போகாமல் தங்கராஜை மட்டும் இரவு வேளைகளில் கடைப்பக்கம் தள்ளிக் கொண்டு போனான்.. அவன் செய்து கொடுத்த தாகசாந்தியிலும்.. வாங்கிக்

கொடுத்த புரோட்டாவிலும் மனம் மயங்கிப்போன தங்கராஜ்.. போதையில் உளறிய விவரங்களை சேகரித்துக் கொண்டான்..

தேவராஜன் வலையை பின்னிக் கொண்டிருப்பதை அறியாதவளாக காவ்யா உற்சாகத்துடன் இருந்தாள்.. தேவராஜனுக்கு அவளுடைய காதலைப் பற்றிய விவரம் தெரிந்து விட்டதே என்று அவள் பயப்படவேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டதில் மகிழ்ச்சியாக இருந்தாள்.. வீட்டுக்கு வந்து தேவராஜனுக்காக அவளைப் பெண்கேட்ட துரியோதனன் கொளுத்திப் போட முயன்ற போது... அதை முறியடித்து பதிலுக்கு கொளுத்திப் போட்டு மிரட்டி அனுப்பி விட்ட கண்ணதாசனின் பராக்கிரமத்தில் அவள் நிம்மதியாக இருந்தாள்...

“நானிருக்கேன்.. பயப்படாதே...”

அவளுடைய அண்ணன் அவளுக்குத் தைரியம் கொடுத்திருந்தான்... ஒருவார்த்தைகூட... துரியோதனன் என்ன சொல்லவந்தார் என்று அவன் தங்கையிடம் விசாரிக்கவில்லை...

அந்த அவனின் பாசத்தில் காவ்யா நெகிழ்ந்து போயிருந்தாள்...

அர்ஜீன் அவளுக்கு போன் செய்து கொண்டிருந்தான்.. கடையில் இருக்கும் போது அவள்

குறிப்பிட்ட நேரத்தில் ஏதோ வேலையிருப்பதைப் போல அவனது அலுவலக அறைக்குள் போய் விடுவாள்.. அவனது டேபிளின் மீதிருக்கும் லேன்ட் லைன் போனின் மணியொலிக்கும்.. எடுத்துக் காதில் வைத்துக் கொள்வாள்..

“மணிக்கணக்கா யாருகூடடி செல்போனில பேசற..?”

பாவனா ஒருமுறை கண் சிமிட்டிக் கேட்டதால் அர்ஜீன் சொல்லிக் கொடுத்த வழியிது...

“நீ ஆபிஸ் ரூமுக்குப் போ.. லேன்ட் லைனில கூப்பிடறேன்.. அப்ப கடைவிவகாரம்ன்னு நினைச்சுக்குவாங்க..”

காதல் ஒளிந்து கொள்ள ஆயிரம் வழிகளைக் கண்டு பிடித்துக் கொடுக்கும்.. சுகமான ஒளிதல்களும்... இன்பமான தேடல்களும் காதலில் மட்டுமே சாத்தியமானவை...

“காவ்யா...”

“ம்ம்ம்...”

“என் நினைப்பிருக்கா...?”

அவன் கேட்கும் போது இதமான இம்சை அவள் வயிற்றில் பரவும்.. அதன் கிளர்ச்சியில் அவள் தவித்து சிடுசிடுப்பாள்...

“இல்ல.. போதுமா..?”

வெடுக்கென்ற பதிலில் அவன் உல்லாசமாக சிரிக்கிறபோது அவள் மனம் அந்தச் சிரிப்பை என்று பார்ப்போமோ என்று ஏங்கும்...

“இதை நம்பச் சொல்றியா..?”

“ஏன்.. ஏன்.. ஏன்..?”

“எதுக்கு இத்தனை ஏன்..?”

“ஏன் நம்ப மாட்டிங்க..?”

“போடி.. உன்னை எனக்குத் தெரியாதா..?”

அவனின் சிரிப்பில் திரும்பவும் அவள் மனம் ஊஞ்சலாடும்... அவன் அருகிலிருக்க.. அவன் மார்பில் சாய்ந்து கொள்ள வேண்டும் போல உடலும் மனமும் பரபரக்கும்...

“என்ன தெரியுமாம்..?” அவள் சிணுங்குவாள்...

“உனக்கு என்மேல் ஆசையிருக்குன்னு தெரியும்..” அவன் மீண்டும் சிரிப்பான்...

‘சிரிக்காதே...’ அவள் தவித்துப் போவாள்..

“எனக்கொன்னும் யார்மேலயும் ஆசையில்ல...”

“நான் யாரையும் சொல்லலையே.. என்மேல உனக்கு ஆசையிருக்குன்னுதான் சொன்னேன்..”

அவன் பேச்சில் வல்லவனாக இருந்தான்.. யாராலும் ஜெயிக்க முடியாத காவ்யாவின் மனதை அவன் ஜெயித்தான் அதனால் பேச்சிலும் அவனே ஜெயித்தான்.. எவரையும் எதிர்பேச்சு பேச விடாத காவ்யா.. அவன் பேச்சுக்கு எதிர் பேச்சைப் பேச முடியாமல் மௌனமானாள்...

மௌனமான அந்த நேரங்களில் அவர்களின் நெஞ்சங்கள் பேசிக் கொண்டன.. பகல் பொழுதுகளில் கடையில் உள்ள போனுக்கு அழைப்பவன்.. இரவு வேளைகளில் அவளின் செல்போனில் அழைத்தான்..

அவன் அருகேயில்லாத வெறுமையான பொழுதுகளை அவனுடைய பேச்சு இட்டு நிரப்பிக் கொண்டிருந்தது...

எங்கிருந்தோ வந்த ஆசைகளால் அலைபாய்ந்த அவள்மனது அவன் பேச்சுக்களால் சமனப்பட்டுக் கொண்டிருந்தது..

அந்தப் பேச்சுக்களின் ஊடே தேவராஜனைப் பற்றி அவள் அர்ஜீனிடம் சொல்லியிருக்கலாம்... ஆனால் அவள் அதைச் சொல்லவில்லை...

அவனுக்கும் அவளுக்குமான இனிமையான அந்தப் பொழுதுகளில் தேவராஜனைப் பற்றிப் பேச அவள் விரும்பவில்லை.. அந்தத் தருணங்களின் இனிமையை அது கெடுத்து விடும் என்பது மட்டுமல்ல.. வெளிநாட்டில் இருக்கும் அர்ஜீனுக்கு தேவையில்லாத மன உளைச்சலைக்

கொடுக்க வேண்டாம் என்ற நினைவினாலும் தான் அவள் அதைச் சொல்லாமல் விட்டாள்..

அவளுக்கு அர்ஜீனைப் பற்றித் தெரியும்.. அவளின் நிழலைக் கூட வேறு யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதில் அவன் கவனமானவன்.. அப்படியிருக்கும்போது அவன் இல்லாத நேரத்தில் காவ்யாவிடம் தேவராஜன் வம்புக்கு வருகிறான்.. மறைமுகமாக மிரட்டுகிறான்.. பெண் கேட்கும் அளவிற்கு போய் விட்டான் என்பதை அவனால் தாங்கிக் கொள்ள முடியாது.. போன வேலையை விட்டு விட்டு அடுத்த விமானத்தைப் பிடித்துக் கிளம்பி வந்தாலும் வந்து விடுவான்.. காவ்யாவுக்கு அதில் விருப்பமில்லை...

அவளைக் காவல் காக்க அவள் அண்ணன் இருக்கும் போது அர்ஜீனை எதற்காக தொந்தரவு செய்ய வேண்டும்? அவன் கனடாவிலிருந்து திரும்பி வந்ததும் பேசிக் கொள்ளலாம் என்று அதைச் சொல்லாமல் விட்டு விட்டாள்..

ஒருவேளை அவள் அதைச் சொல்லியிருந்தால் அர்ஜீன் உடனடியாக கனடாவிலிருந்து திரும்பியிருப்பான்.. அவளைத் திருமணமும் செய்து கொண்டிருப்பான்.. அப்படியில்லாமல் அவன் வரவேண்டிய நாளில் வந்தபோது.. காவ்யாவும் அவனும் பிரிகின்ற சூழ்நிலை வந்து நின்றது...

- மூன்றாம் பாகத்தில் தொடரும் -


லட்சுமி பாலாஜி பதிப்பகம்